
மறவர் சீமை மாவீரன்
மயிலப்பன்
Dr.S.M.கமால்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

திருவேகாளத்தன்
3-03-2002

# மறவர் சீமை மாவீரன் மயிலப்பன்

இந்திய விடுதலை இயக்கத்தின் முன்னோடியாக விளங்கும் மறவர் சீமையின் முதலாவது மக்கள் கிளர்ச்சி பற்றிய முழுமையான வரலாற்று ஏடு

ஆசிரியர்

டாக்டர் **S.M. கமால்**

வெளியீடு

**சர்மிளா பதிப்பகம்,**

21, ஈசாபள்ளி வாசல் தெரு,

இராமநாதபுரம் - 623 501.

## Bibliographical Data


| | | | |
|---|---|---|---|
| 1. | Title | : | Maravar Cheemai<br>Maaveeran Mailappan |
| 2. | Author | : | Dr. S.M. Kamal<br>Ramathapuram-623 501. |
| 3. | Language | : | Tamil |
| 4. | Edition | : | First edition - December 2001 |
| 5. | Copy right | : | Author |
| 6. | size of the Book | : | 21.5 X 14 cms |
| 7. | Type used for Text | : | Sindhu/Thamarai |
| 8. | Pages | : | 240 |
| 9. | No.of Copies | : | 1200 |
| 10. | Printers | : | Arun Offset Printers,<br>Ramanathapuram. 623 501. |
| 11. | Publishers | : | Sharmila Publishers,<br>21, Esa Pallivasal Street,<br>Ramanathapuram-623 501. |
| 12. | Price | : | 75 /- |
| 13. | Subject | : | Summary of the first Mass Movement led by Mailappan the commander of the Sethupathy King during 1799 to1802 AD in Marawa country against the English rule. |

## காணிக்கை

சேதுபதி சீமையின் தன்னரசு நிலையை மீண்டும் பெறுவதற்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் தங்களது இன்னுயிரை ஈந்து மகிழ்ந்த நூற்றுக்கணக்கான மறவர் சீமை விடுதலை வீரர்களது நினைவிற்கு இந்த சிறிய நூல் காணிக்கை

# பதிப்புரை

அஞ்சா நெஞ்சத்துடன் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிய மறவர் சீமையின் மகத்தான வரலாற்று ஏடுகள் கால நீட்சியில் மறைந்து மக்களது சிந்தனையினின்றும் அந்நியப்பட்டு நிற்கின்றன.

நமது நாட்டின் பெருமையையும், புகழையும் கூறும் அந்த வரலாற்று ஏடுகளைத் தொகுத்து மக்களுக்கு வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள நாங்கள் விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளான முத்துராமலிங்க சேதுபதி மன்னர், மாவீரன் மருதுபாண்டியர் ஆகிய மாபெரும் தியாகிகளின் வீரவரலாற்றை ஏற்கனவே வாசகர்களுக்கு வழங்கியுள்ளோம். இப்பொழுதும் இந்திய விடுதலை இயக்கத்தின் முன்னோடி நிகழ்ச்சியான மறவர் சீமையின் மக்கள் கிளர்ச்சி பற்றிய இந்த நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

வாசகர்கள் இந்த நூலையும் விரும்பிப் படித்துப் பயன் பெற வாழ்த்துகிறோம்.

—சர்மிளா பதிப்பகத்தார்.

## நெஞ்சம் நிறைந்த நன்றி

கடல் கடந்து மலேயா நாட்டின் பெட்டாலிங் ஜெயாவில் வாழ்ந்தாலும், கன்னித் தமிழ்நாட்டின் கவின்மிகு பெருமையையும், புகழையும் காலமெல்லாம் பறைசாற்ற வேண்டும் என்ற பெரு விருப்புடன் இந்த நூலின் ஆக்கத்திற்கு பெரிதும் உதவிய அல்ஹாஜ் கரீம் கனி அவர்களுக்கும்,

சேதுநாட்டின் வீர வரலாற்றை வகைப்படுத்தி முறையாக தொகுத்து வெளியிட வேண்டும் என்ற முயற்சியில் எனக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்து வரும் முன்னாள் வட்டாச்சியரும், தமிழக அரசின் சமுதாய ஒற்றுமைக்கான விருது பெற்றவருமான திரு. எஸ். துரைராஜ் அவர்களுக்கும்,

இந்நூலை எழுதத் துணை புரிந்த சென்னை ஆவணக் காப்பகப் பணியாளர்களுக்கும் குறிப்பாக ஆராய்ச்சி அலுவலர் திரு.M.S. பாண்டியன் அவர்களுக்கும்,

இந்த விடுதலை வரலாற்றின் தட்டச்சுப் படிகளையும், அச்சுப் பிரதிகளையும், அக்கறையுடனும், பொறுமையுடனும் சரிபார்த்து மெய்ப்புக்களை திருத்தி உதவிய இராமநாதபுரம் தமிழ்ப் பேராசிரியர் மை. அப்துல் சலாம் அவர்களுக்கும், பேராசிரியர் க. ஜீவானந்தம் அவர்களுக்கும்,

இந்த நூலின் கையெழுத்துப் பிரதிகளைப் படியெடுத்து உதவிய செல்வி ஆர்.சுமதி, செல்வி எஸ். கவிதா ஆகியோருக்கும்,

இந்த நூலினை குறித்த காலத்திற்குள் செம்மையாக அச்சிட்டு வழங்கிய இராமநாதபுரம் அருண் ஆப்செட் அச்சகத்தாருக்கும்,

எனது நெஞ்சம் நிறைந்த நன்றிப் பெருக்கினை இங்கு புலப்படுத்திக் கொள்கிறேன்.

**Dr. S.M. கமால்**

30 டிசம்பர் 2001

பாண்டிச்சேரி
30.12.2001

முனைவர் கோ. விசய வேணுகோபால்
முதுநிலை ஆய்வாளர்,
பிரெஞ்சு இந்தியவியல் ஆய்வகம்.

## அணிந்துரை

கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டம் ஆங்கிலேயரின் கை ஓங்கத் தொடங்கிய காலம். சிற்றரசுகளிடையே பிளவும் மக்களிடையே ஒற்றுமைக் குறைவும் நாடு அடிமைப்படக் காரணங்களாக அமைந்தன.

ஆங்கிலேயர் தமது பிரித்தாளும் சூழ்ச்சி எனும் உத்தி வழி மெல்ல மெல்ல நாட்டைத் தங்கள் வசம் மேற்கொள்ளும் பணி தொடர்ந்து கொண்டிருந்தது. இருப்பினும் தென்னகத்தே விடுதலை உணர்வும் ஆங்கிலேய எதிர்ப்பும் ஆங்காங்கே உருவாகி நாடு கொந்தளிப்பான, சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது

இராமநாதபுரம், பாஞ்சாலங்குறிச்சி சிவகங்கைச் சீமைகளில் இச்சூழ்நிலையைக் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் காண்கிறோம். இராமநாதபுரம், சேதுபதி மன்னர் சிறை வைக்கப்பட்டு இருந்தார்.

இக்காலகட்டத்தே சேது சமஸ்தானப் பகுதிகளில் ஆங்கிலேய எதிர்ப்பைத் தெரிவிக்கும் முயற்சியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மறவர் சீமையைச் சேர்ந்த மயிலப்பன் என்பவரின் தனித்த முயற்சியுடன் தென்பாண்டிச் சீமை போராட்ட வரலாறு இந்நூலில் நண்பர் எஸ்.எம்.கமால் அவர்களால் விளக்கப்பட்டுள்ளது. கி.பி.1799-1802 ஆண்டுகளில் நடந்த நிகழ்ச்சிகளையும், போராட்டங்களையும்

இறுதியில் நாடு ஆங்கிலேயர் வசம் வீழ்ந்ததையும் ஆசிரியர் கோர்வையாக, நிரல்படத் தக்க ஆதாரங்களுடன் எழுதியுள்ளார்.

மன்னர்களைப் பற்றியே எழுதிவந்த நண்பர் கமால் அவர்கள் சாதாரண ஆனால் பொறுப்புள்ள குடிமகன் ஒருவரின் போராட்ட வாழ்க்கையை உணர்ச்சி பொங்க எழுதியுள்ளார். சில இடங்களில் நாம் வரலாற்றைப் படிக்கிறோமோ அல்லது வரலாற்றுப் புதினத்தைப் படிக்கிறோமோ என்ற உணர்வு தோன்றத் தக்க வகையில் ஆசிரியர் நூலைப் படைத்துள்ளார்.

மயிலப்பனின் இலட்சியம் சிறப்பானதாக இருந்தாலும் அடிப்படைக் கட்டுமான வசதிகள் இல்லாநிலையில் அவரது போராட்டம் அவல முடிவுக்கு வந்து விடுகிறது. இம்முடிவுக்கு அவரின் மாமனாரே காரணம் என அறிகிறபோது நாம் துடித்துப் போகிறோம். “பணம்” என்னவெல்லாம் செய்யும் என்பதற்கு இவ்வரலாறு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

கண்கள் பழுதுற்ற நிலையிலும், உடல்நிலை செம்மையாக இல்லாத நிலையிலும், நண்பர் கமால் அரிதின் முயன்று இந்நூலை எழுதியிருக்கிறார். அனைவரும் இந்நூலை வாங்கிப் படித்துப் பயனடைவதோடு ஆசிரியரைப் பாராட்டி ஊக்குவிக்க வேண்டும் என்பது என் அவா. விரைவில் நல்ல குணம் பெற்று ஆசிரியர் மேலும் பல நூல்களை எழுத வேண்டுமென வாழ்த்துகிறேன்.

கோ. விசயவேணுகோபால்.

# உள்ளே...


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | வரலாற்றுப் பின்னணி | 1 |
| 2. | புரட்சிப்பொறி | 9 |
| 3. | புதிய பாதை | 15 |
| 4. | மீண்டும் சிறை | 23 |
| 5. | மக்களை எதிர்த்து | 32 |
| 6. | எதிர் தாக்குதல்களில் | 35 |
| 7. | தலைக்கு விலை | 41 |
| 8. | எதிர்பாராத நிகழ்வுகள் | 47 |
| 9. | சிவகங்கைச் செய்தி | 53 |
| 10. | பரங்கியருடன் மோதல் | 64 |
| 11. | கிளர்ச்சிகளின் தொடர்ச்சி | 73 |
| 12. | தலைக்குமேல் வெள்ளம் | 76 |
| 13. | மயிலப்பன் வாக்குறுதி | 85 |
| 14. | மற்றொரு முயற்சி | 90 |
| 15. | மீண்டும் கமுதிக் கோட்டையில் | 96 |
| 16. | இறுதித் தாக்குதல் | 106 |
| 17. | சூலை மாதத்துச் சூறாவளி | 112 |
| 18. | காளையார்கோவில் போர் | 126 |
| 19. | குழம்பிய நிலையில் மயிலப்பன் | 134 |
| 20. | ஆங்கிலேயர்களின் அட்டூழியம் | 142 |
| 21. | மயிலப்பனைத் தேடி | 151 |
| 22. | பிரியா விடை | 155 |
| 23. | பொறியில் அகப்பட்ட எலி | 165 |
| 24. | பாளையங்கோட்டைச் சிறை | 170 |
| 25. | போராட்டத்திற்குப் பரிசு | 173 |
| 26. | நிறைவு வரிகள் | 205 |
| | வட்டார வழக்குகள் | 207 |
| | இந்த நூலின் வரைவிற்கு ஆதாரமாக அமைந்த நூல்களும் ஆவணங்களும் | 212 |
| | இணைப்பு - I தியாகிகள் பட்டியல் | XI |
| | இணைப்பு - II போர்க்களங்கள் பட்டியல் | XV |
| | இணைப்பு - III மயிலப்பன் சென்றுவந்த கிராமங்கள் | XVI |
| | இணைப்பு - IV பெயர் சொற்கள் தொகுப்பு | XVII |

# வரலாற்றுப் பின்னணி

பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கம், தமிழக வரலாற்றில் மிகப்பெரிய திருப்பத்தைஏற்படுத்தியது. சங்ககாலம் முதல் தமிழகத்தின் முடியுடை மூவேந்தர்களில் ஒருவராக விளங்கிய பாண்டியர்கள் வீழ்ச்சியுற்றனர். தில்லி சுல்த்தான் அலாவுதீன் கில்ஜியின் ஆட்சியில் அவரது பதினேழு மாகாணங்களில் ஒன்றாகப் பாண்டிய நாடும் இணைக்கப்பட்டது. அடுத்து பாண்டிய நாடு விஜய நகரப் பேரரசின் பகுதியாக கி.பி.18ஆம் நூற்றாண்டு வரை அடிமைப்பட்டுக் கிடந்தது. இந்தக் கால கட்டத்தில் தொல்குடியினரான பாண்டியர்கள் இராமநாதபுரம், தஞ்சாவூர், திருச்சி, தென்காசிப் பகுதிகளில் வலிமையும், வளமையும் குன்றிச் சாதாரண பாளையக்காரர்களைப் போல் வாழ்ந்திருந்து வரலாற்றிலினின்றும் மறைந்து விட்டனர். பாண்டியர்களது ஆட்சியில் சிறப்பான பணிகளில் இருந்த மாவலி வானாதிராயர்களும், சோழர்களது இராணுவச் சேவைகளிலிருந்த செம்பி நாட்டு மறவர்களும் தன்னாட்சி நிலை பெற்றனர்.

பாண்டிய நாட்டின் கீழைக்கடற்கரைப் பகுதியின் மன்னர்களாகத் தங்களை

பிரகடனப்படுத்திக் கொண்டனர் செம்பி நாட்டு மறவர்களின் மூத்த குடியினர். இவர்களது ஆட்சிப்பரப்பு மறவர் சீமை என்றும், இவர்களது தலைவர்கள் சேதுபதிகள் என்றும் அழைக்கப்பட்டனர். இராவண சம்ஹாரத்திற்காக இராமபிரானால் அமைத்ததாகக் கருதப்படும் சேது அணையை உள்ளடக்கியதாக இந்தப் பகுதி அமைந்திருப்பதால், இதனைச் சேதுநாடு என்றும் இலக்கியங்களில் குறிக்கப் பெற்றது. ஏற்கனவே இந்தப் பகுதியில் பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்த ஏனைய ஆறுபிரிவு மறவர்களை[1] விட இந்த செம்பி நாட்டு மறவர்கள் ஆற்றலிலும், அதிகாரத்திலும் (நிர்வாகத்திலும்) சிறந்து விளங்கியதால், இவர்களது தலைமையை இங்குள்ள மறவர்கள் தமது மூத்த குடியினராக ஏற்றிப் போற்றி வந்தனர். இந்த மரபினர் கி.பி.15ஆம் நூற்றாண்டு முதல் தமது தாய்மொழியான தமிழ் வளர்ச்சிக்குத் தாளாதுதொண்டாற்றினர். வடுகர்களது ஆட்சியில் வறுமையுற்று வாடிய தமிழ்ப்புலவர்களுக்கு வான்மழைபோல் அமைந்து பொன்னும், பொருளும் ஊரும் பேரும் வழங்கி உதவினர். இவர்களது தமிழ்க் கொடையினை விஞ்சியவர்கள் இன்றுவரை யாரும் இல்லை. இதனைப் போன்றே மடங்களையும், அன்ன சத்திரங்களையும் ஆங்காங்கு நிறுவி பயணிகளது பசிப்பிணியையும், தளர்ச்சியையும் நீக்கி வந்தனர். பொதுவாக மழைவளம் குன்றிய இப்பகுதியில் காலத்தே கிடைக்கும் மழைப் பொழிவினை அக்கறையுடன் அணைகளில் தேக்கி வைத்து, அவைகள் காலமெல்லாம் வேளாண்மைக்குப் பயன்படும் வண்ணம் கண்மாய்களையும், கால்வாய்களையும் அமைத்து வரலாற்றுப் புகழ் பெற்றனர்.

இவைகளுக்கெல்லாம் மேலாக இகத்திற்கும், பரத்திற்கும் ஏற்ற இறை பக்தியில் திளைத்து நின்று பல கோவில் பணிகளையும் செய்துள்ளனர். தேவார காலம் முதல் சின்னஞ்சிறு கற்றளிகளாக இருந்த இராமேஸ்வரம், திரு உத்திரகோச மங்கை, திருச்சுழியல், திருப்பத்தூர், திருவாடானை, காளையார்கோவில் ஆகிய திருத்தலங்களில் சிறந்த கோயில் கட்டுமானங்களை அமைத்தும், திருக்கோட்டியூர், திருப்புல்லணை, திருமருதூர்,

1.ஆப்பநாடு, உப்புக்கோட்டை, ஓரிக்கோட்டை, கொண்டயங்கோட்டை, அகத்தா, குறிச்சிக்காடு
Raja Ram Rao - Manual of Ramnad Samasthanaarm 1891-Page No 33

நாட்டரசன்கோட்டை ஆகிய ஊர்களில் பொன்றாத புகழ் பெற்றனர். இக்கோயில்களில் அன்றாட வழிபாடு, சிறப்புக் கட்டளைகள், ஆண்டு திருவிழாக்கள் ஆகியவை முறையாக நடைபெறுவதற்கு உதவும் வகையில் தகுந்த வருவாய்களை அளிக்க வல்ல பல ஊர்களையும், இந்தக் கோயில்களின் கைங்கரியங்களுக்காகவே சர்வமான்யமாக வழங்கியுள்ளனர்.

இத்தகைய சீரும், சிறப்புமிக்க சேதுபதி மன்னரது நல்லாட்சி மேலும் தொடர முடியாதபடி கி.பி.1795-ல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியரது தலையீடு ஏற்பட்டது. அப்பொழுது மன்னராக இருந்த முத்து ராமலிங்க விசயரகுநாத சேதுபதி என்ற இளம் மன்னரைத் தங்களது சூழ்ச்சியினால் கைது செய்து, திருச்சிக் கோட்டையில் அடைத்து விட்டு, மறவர் சீமையின் ஆட்சியை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கும்பெனியார் ஏற்றனர். அப்பொழுது, தென்னகம் முழுவதற்கும் ஆட்சியாளராக இருந்த கர்நாடக நவாப் வாலாஜா முகமது அலியின் முகவர்களாக மதுரை, நெல்லை சீமைகளின் குடிகளிடமிருந்து தீர்வை வசூல் செய்யும் அதிகாரம் பெற்றிருந்த வெள்ளையர்களுக்கு இச்சேதுபதி மன்னர் மறவர் சீமையில் வணிகம் நடத்த வழி கொடுக்காததுடன், அவர்களது ஏகபோகக் கைத்தறிக் கொள்முதலையும் அனுமதிக்கவில்லை. ஆகவே மன்னரைச் சிறைப்படுத்துவதற்கு இவை அடிப்படைக் காரணங்களாக அமைந்தன.

மன்னரைச் சிறையிலிட்டபின், ஆங்கிலக் கம்பெனியாரே மறவர் சீமையின் நிர்வாகத்தை மேற்கொண்டு நடத்தினர். குடிமக்களிடம் கெடுபிடி வசூல் செய்து மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டனர். மன்னரில்லாது மயங்கிய இக்குடிகளுக்கு வழிகாட்ட முன்வந்தார் இளைஞர் ஒருவர். இவர் மறவர் சீமையின் தென்பகுதியான ஆப்பனூர் நாட்டைச் சேர்ந்த சித்திரங்குடி என்ற கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சேதுபதி மன்னரது சேவையில் சிறப்பாக விளங்கியதால் விரைவிலேயே ஒரு படை

அணியின் தலைவராக, சேர்வைக்காரராகப் பதவி உயர்வு பெற்றார். இதனால் மக்கள் இவரைச் சித்திரங்குடி சேர்வைக்காரர் என்ற காரணப் பெயரால் அழைத்து வந்தனர். இன்னும் சிலர் இவரது பொது நலப்பணியில் இருந்த ஆர்வத்தைக் கண்டு இந்தப் பெயர் அவரின் இயற்பெயரல்ல. இவர் முதலில் சேதுபதி மன்னரைத் திருச்சிக் கோட்டையிலிருந்து தப்புவிக்கும் முயற்சியில் முனைந்து தோல்வியுற்றார். ஆதலால் முதுகளத்தூர் பகுதிக்கு திரும்பி வந்து, வெள்ளைக்காரரது ஆட்சிக்கு எதிராக எதிர்ப்பணி ஒன்றை ஊர் ஊராகச் சென்று திரட்டினார். இராஜ விசுவாசத்திலும், மன்னர் மீது உள்ள பாசத்தினாலும், உள்ளத்தைப் பறிகொடுத்த மக்கள் அனைவரும் இந்த அணியில் ஒன்று திரண்டனர். முதலில் இவர்கள் பரங்கியருக்குத் தீர்வை செலுத்துவதற்கு ஒட்டுமொத்தமாக மறுத்தனர். 1798ல் குடிமக்களிடமிருந்து தீர்வையைக் கூடுதலாக விதிப்பதற்கு நில அளவை செய்யும் அவர்களது பணிகளுக்கு ஒத்துழைக்க மறுத்தனர். இதனால், வெகுண்டெழுந்த கம்பெனி நிர்வாகம் பாளையங்கோட்டையிலிருந்த இராணுவ அணியைப் பயன்படுத்தி இந்த மக்களது முயற்சிகளை முறியடித்தனர்.

இராமனில்லாத அயோத்தி போலாகிவிட்ட மறவர் சீமையில் கும்பெனியார் கும்மாளமடிக்கத் தொடங்கினர். ஏற்கனவே, மதுரை, திண்டுக்கல் சீமைகளில் நடத்திய அதிகாரக் கொள்ளையினால் தெம்பு பெற்ற அவர்கள், இடைத்தரகர்களாகப் பாளையக்காரர்கள் எவரும் இல்லாததால் மறவர் சீமைக்குடிகளைப் பதம்பார்க்கத் தொடங்கினர். சேதுபதி மன்னர் இல்லாத நிலையில் குடிகள் தங்களது குறைகளுக்குத் தீர்வு பெற இயலாத வேதனை அடிக்கடி வந்து வளமையைக் குறைக்கும் வறட்சி, பல பற்றாக்குறைகள், இந்த அவலச் சூழ்நிலை பற்றிக் கும்பெனியார் அலட்டிக் கொள்ளவில்லை. மாறாக எரிந்த வீட்டில் கிடைத்தது ஆதாயம் எனக் கிடைத்த வரை குடிகளை வருத்திக் கொள்ளையைத் தொடர்ந்தனர். ஏற்கனவே, மறவர் சீமையில் உள்ள 739 கிராமங்களுக்கான கி.பி.1797-98க்கு விளைச்சல் மதிப்புக்கான முறைப்படி 53,560/- ஸ்டார் பக்கோடா பணம்[2] என மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால், இந்த விளைச்சலுக்கு

2. ஆங்கிலேயர் பொற்காசு

விவசாயி செலுத்த வேண்டிய தீர்வை எவ்வளவு தெரியுமா? 71,629/- ஸ்டார் பக்கோடா பணம் தான்ய விளைச்சல் மதிப்பீட்டில் ஒன்றரை மடங்கு கூடுதலான தொகை கம்பெனிக்குச் செலுத்த வேண்டிய தீர்வை உழுதவன் செலவு கணக்குப் பார்ப்பதற்கு முன்னமேயே விளைச்சல் அனைத்தையும் கும்பெனி கைக்கூலிகள் கொள்ளை கொண்டனர். பாக்கி வரித்தொகைக்குக் குடிகளது உழவு மாடுகள், தட்டுமுட்டுச் சாமான்களையும் பறித்துக் கொண்டனர். எந்த நாட்டிலும் நடக்காதது இந்தக் கொடுமை. முதுகளத்தூர் பகுதிகளில் பசிக் கொடுமையால் காய்ந்த சாவிப்பயிர் போல மக்கள் மடிந்து செத்தனர்.

எஞ்சியவர்கள் வடக்கே பஞ்சம் பிழைக்க உயிரைப் பிடித்துக் கொண்டு தஞ்சை, மதுரைப்பகுதிக்கு ஓடினர்.[3]

மேலும், கமுதி, அபிராமம், மண்டல மாணிக்கம், பரளாச்சி, பரமக்குடி, எமனேஸ்வரம் ஆகிய ஊர்களில் கணிசமான மக்கள் கைத்தறி நெசவுத்தொழிலில் ஈடுபட்டு இருந்ததும், கும்பெனிக் கொள்ளையர்களின் கண்களில் பட்டது. நெசவான ஒவ்வொரு மடித்துணிக்கும் தீர்வை செலுத்த வேண்டும் எனக் கும்பெனியார் நெசவாளர்களைக் கட்டாயப்படுத்தினர். மேலும், அவர்கள் நெசவு செய்த அனைத்துத் துணிகளது மடிகளுக்குரிய சுங்கம் செலுத்தி வருகிறார்களா என்பதைச் சரிபார்க்க அடிக்கடி அவர்களது குடியிருப்பில் நுழைந்து அடாவடியாக சோதனைகள் நடத்தி அவர்களைத் துன்புறுத்தி வந்தனர்.[4] நெசவாளர்களுக்கு இழைக்கப்பட்டு வந்த இத்தகைய இடர்ப்பாடுகளால், நெசவு உற்பத்தி பாதிக்கப்பட்டவுடன், கைத்தறித்துணிகள் விற்பனையையும் பாதித்தது[5] வறட்சி தொடர்ந்ததால் மக்கள் பஞ்சத்திலும், பசியிலும் நலிந்து அழிந்தனர்.

தங்களது கையில் உள்ள பணத்தைக் கொண்டு தானியங்களை வாங்க விரும்பியவர்களுக்குச் சந்தையில் கூட தானியங்கள் கிடைக்கவில்லை. மதுரை, தஞ்சை போன்ற ஊர்களில் இருந்து வியாபாரிகள் வாங்கி வந்து விற்பதையும் அப்பொழுது இருந்த

3. Revenue consultations vol 21 /1410 1798 pp 4440 - 45
4. Commercial Despatch English vol - IV pp. 37-39
5. Ncc vol 49 / 13-10-1789 p.p.354

கலெக்டர்கள் பவுனியும், ஜாக்சனும் தடுத்தனர். மாற்றாக அவர்களது கிட்டங்கிகளில் இருப்பு வைத்து பல ஆண்டுகளாக மடித்துப் போன தானியங்களை விற்பதற்கு தகுந்த தருணமாக அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தினர்.[6] இவ்வாறு குடிமக்களுக்கு விரோதமான வகையில் மறவர் சீமையின் கிராமப் பொருளாதாரத்தையும் சமூக அமைதியையும் குலைத்து தங்களது கொள்ளையைத் தடையின்றி நடத்தி வந்தனர். வணிகம் செய்து லாபம் தேட வந்தவர்கள்தானே இந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார், வங்க மாநிலத்திற்கு அடுத்தபடியாக இந்தியப் பெருநாட்டில் தங்களது கால்களை வலுவாக ஊன்றுவதற்கும் ஆற்காடு நவாபிடமிருந்து அரசியல் சலுகைகளை அவர்கள் தமிழ்நாட்டிலும் பெற்று இருந்ததால், மறவர் சீமையில் கிடைத்துள்ள வாய்ப்பைத் தங்களது பகல் கொள்ளைக்கு ஏற்ற களமாகப் பயன்படுத்தினர். கதிரவன் ஒளி காயும் பொழுதே தானியத்தை உலர்த்தி வைத்துக் கொள்ளவேண்டும் என்ற உண்மையை நன்கு அறிந்தவர்கள் அவர்கள்.

இந்தக் கொள்ளை வியாபாரிகளது ஆட்சி, மறவர் சீமையில் மேலும் ஒருமரபு வழியிலான நியாயம் வழங்கும் முறையையும் அடியோடு களைந்து விட முயன்றனர். ஊர்ப் பஞ்சாயத்தில் மக்கள் தீர்ப்பு வழங்கும் முறையை மாற்றி அவர்களுக்கு அவர்களது நாட்டு தண்டணை முறைச் சட்டத்தையும் இங்கு அமுல்படுத்தினர்.[7] புல்லர்ட்டன் போன்ற தளபதிகளின் இத்தகைய கடும் விமரிசனங்களை கூறியும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் விளைவுகளைச் சுட்டிக்காட்டியும் கூட கும்பெனித் தலைமை தனது அதிகார மமதையில் இருந்து விடுபடவில்லை. விளைவு?

மக்கள் இத்துணை இன்னல்களையும் எத்தனை நாட்களுக்குத்தான் பொறுத்துக் கொள்வார்கள். தாயற்ற குழந்தைகளாக எவ்வளவு காலம்தான் தேம்பித் தேம்பி அழுது கொண்டு இருக்க முடியும்? இயல்பாகவே இந்த மக்களது இரத்தித்தில கலந்துள்ள தன்னிச்சையான உணர்வுகள், அடக்கு

6. Board of Revenue Proceedings vol 192 of 26-01-1798 p.565
7. Military Consultation vol 251. 27-03.1799 pp 1445

முறைகளுக்கும் பணியாத நியாயமான நிலை அவர்களது வெம்பிய உள்ளங்களில் வீறு கொள்ளச் செய்தது. புரட்சிக்கான கருக்கள் தமிழகத்தில் - ஏன் இந்திய மாநிலத்தில் எங்கும் அமையாத நிலை, மகத்தான கிளர்ச்சி, மக்களது எழுச்சி சேதுபதிச் சீமையில் அப்பொழுது எழுந்தது. நமது நாட்டின் ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிரான முதல் விடுதலை இயக்கமாக, மறவர் சீமையில் மறவர்கள் தங்களது இரத்தத்தையும் இன்னுயிரையும் சிந்தி, பொன்னெழுத்துக்களால் பொறித்த புதிய வரலாறு வரையும் காலமும் கனிந்து வந்தது.

இம்மக்கள் ஒரு புதிய வரலாறு ஒன்றைப் படைத்தனர். அந்தக் கால கட்டமாகிய 18ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் உலக வரலாறு இரண்டு மாபெரும் புரட்சிகள் ஏற்பட்டதைச் சுட்டிக் காட்டுகின்றது. முதலாவதாக கி.பி.1776-ல் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட அமெரிக்கக் கண்டத்தில் குடியேறிய ஆங்கில, பிரஞ்சு, ஸ்பானிய வம்சா வழியினரை இங்கிலாந்து நாட்டின் மூன்றாவது ஜார்ஜ் மன்னரது அரசாங்கம் வரிக்கொடுமைகளினால் வாட்டியபோது அந்த மக்கள் கிளர்ந்தெழுந்து அமெரிக்கக் குடியரசினைக் கண்டனர்.

இரண்டாவதாக கி.பி.1789ம் ஆண்டு பஞ்சத்திலும், பசியிலும் வாடிய பிரெஞ்சு நாட்டு மக்களைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் ஆடம்பரத்திலும், அதிகார மமதையிலும் வாழ்ந்த பிரெஞ்சு நாட்டு மன்னர் 14ம் லூயியை மக்கள் எதிர்த்து கிளர்ச்சி செய்து அந்த மன்னரைக் குடும்பத்துடன் அழித்தனர்.

இந்த இரு புரட்சிகளும் அவர்களது முடியாட்சி மன்னர்களை வீழ்த்துவதற்காக ஏற்பட்டவை ஆகும். ஆனால் அதே காலகட்டத்தில் இங்கே சேதுபதிச் சீமையில் மறவர் குடியின் மூத்த குடி மகனான சேதுபதி மன்னரைச் சிறையிலிட்டு மறவர் சீமையை ஆக்கிரமித்திருந்த வெள்ளை ஏகாதிபத்தியத்தினரை எதிர்த்து மன்னருக்காக மக்கள் கொடுத்த இந்திய நாட்டின் முதல் விடுதலைப்

போர் இதுவே ஆகும். 23.04.1799இல் தொடங்கிய மக்கள் கிளர்ச்சியின் விபரங்களை இனிப் பார்ப்போம்.

# 2.புரட்சிப் பொறி

வைகைறைப் பொழுது:

கிழக்கு வானில் வண்ணக்கலவையினூடே பகலவனது ஒளிப் பாய்ச்சல் பிரகாசம் பெறவில்லை. சுருக்கமாகச் சொன்னால் இன்னும் நிலம் தெளியவில்லை.

சேதுபதிச் சீமையின் உட்பகுதியான ஆப்பனூர் நாட்டு முதுகளத்தூர் அப்பொழுதுதான் விழித்தது.

வேப்ப மரங்களிலும், உசிலை மரங்களிலும் தொகுதி, தொகுதியாக அமர்ந்து இருந்த கரிச்சான் என்ற வால் நீண்ட கரிக்குருவிகள், சாம்பல் நிறச் சிட்டுக்கள், கரு நிற காக்கைகள் அனைத்தும் உறக்கம் கலைந்து ஒரே சுதியில் கூச்சலிட்டுக் கொண்டிருந்த இரைச்சல் மட்டும் தெளிவாக ஒலித்துக் கொண்டு இருந்தது. புலரும் காலைப் பொழுதிற்கு பூபாளம்பாடி வரவேற்பது போல்.

வடக்கூர் குடியிருப்பில் இருந்து மக்கள் ஒன்றிரண்டு, நான்கு ஐந்து பேர்களாக தெற்கே சுப்பிரமணியசாமி ஆலயத்திற்கு அண்மையில் உள்ள கச்சேரித் திடல் நோக்கி வந்துகொண்டு இருந்தனர்.

இப்பொழுது நன்கு விடிந்துவிட்டது.

கச்சேரித் திடலில் மக்கள் பத்துநூறு பேர்களாகக் கூடி நின்றனர். கிழக்கு வான முகட்டில் சூரியன் முகம் தெரிந்தது. கூடிநின்ற மக்களிடையே ஒரு சலசலப்பு, ஆரவாரம்.

பதினைந்து இருபது பேர் அடங்கிய குழு ஒன்று நாட்டுத்துப்பாக்கியுடன் அங்கு வந்தனர். நொடி நேரத்தில் அவர்கள் வானை நோக்கிச் சுட்டனர். டப்... டப்... டப்...

மக்களிடையே மகிழ்ச்சி ஆரவாரம். அனைவரும் துப்பாக்கி ஏந்திய இளைஞர்களுடன் கும்பெனியரது கச்சேரிக் கட்டிடத்திற்குள் புகுந்தனர். அங்கே ஆறுதலாகப் படுத்தும், அமர்ந்தும் இருந்த சிப்பாய்களையும், வெள்ளைக்காரத் தளபதிகளையும், பதட்டத்துடன் எழுந்து அவர்களது துப்பாக்கிகளை எடுத்து, மருந்து போட்டு இடித்துக் கட்டுவதற்குள் கூட்டத்தினர் அவர்களைப் பற்றி பிடித்து அங்குள்ள தூண்களில் சேர்த்துப் பிணைத்தனர். அவர்களது துப்பாக்கிகளையும் பறித்துக்கொண்டு இடுப்பில் இருந்த குத்து ஈட்டி, தோட்டாக்களையும் கைப்பற்றினர்.

அடுத்து கச்சேரித் திடலில் இருந்த சேகரம் பட்டறையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த கும்பெனியரது நெல் களஞ்சியங்களைச் சூறையாடினர். சிறிது நேரத்தில் நெல் முழுவதும் அகற்றப்பட்ட அந்த பட்டறைகள் பரிதாபமாகக் காட்சியளித்தன.

"சரி நேரமாகிறது புறப்படுங்கள், அபிராமம் செல்லலாம்"

இந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய மறத்தலைவரது கம்பீரமான குரல் அது.

துப்பாக்கி தாங்கிய வீர இளைஞர்களும அந்தக் கூட்டத்தின்

ஒரு பகுதியினரும் வடமேற்கே அபிராமம் செல்லும் கீரனூர் பாதையில் சென்றனர்.

கிளர்ச்சிக்காரர்களின் கூட்டம் அபிராமம் சென்றடைந்ததும் அங்குள்ள கச்சேரியைத் தாக்கி, சிப்பாய்களது துப்பாக்கிகளைப் பறித்தனர். வீணாகக் கிளர்ச்சிக்காரர்களுடன் மோதிய ஒரு சிப்பாய் மட்டும் கொல்லப்பட்டார். அங்குள்ள கும்பெனியாரது கைத்தறித்துணிகள் கிட்டங்கியை அவர்கள் தாக்கினர். கூட்டத்தினரின் ஆவேசத்தைக்கண்டு அஞ்சியவாறு கிட்டங்கிக் காவலாளி ஓட்டம் பிடித்தான். தங்களுக்குத் தேவையான துணிகளை எடுத்துக் கொண்டு கிளர்ச்சிக்காரர்கள் கிட்டங்கிக்குத் தீ வைத்து அழித்தனர். பின்னர் அவர்கள் அங்கிருந்து தெற்கே நான்கு கல் தொலைவில் உள்ள கமுதிக்குச் சென்றனர்.

கமுதிப் பேட்டையில் இருந்த கும்பெனியாரது கச்சேரியைத் தாக்கியதுடன் கும்பெனியாரது தானியக் களஞ்சியங்களையும் சூறைபோட்டனர். கச்சேரியின் பொறுப்பில் இருந்த தாசில்தார் கும்பெனியாரது விசுவாசத்துடன் சற்றுக் கடுமையாக நடந்து கொண்டதால், கிளர்ச்சிக்காரர்கள் அவரைக் கைது செய்தனர். இந்தக் குழப்பத்தினூடே அகப்பட்டுக் கொண்ட தாசில்தாரது மருமகனுக்கும் அடிவயிற்றில் ஈட்டிக்காயம் ஏற்பட்டது. கச்சேரியில் இருந்த அனைத்து ஆயுதங்களும் கிளர்ச்சிக்காரர்கள் வசமாயின. கிளர்ச்சிக்காரர்களது இந்த நடவடிக்கை அடுத்தடுத்த நாட்களில் பல கிராமங்களுக்கும் பரவின. முதுகளத்தூர் கச்சேரி தாக்குதலில் ஈடுபட்ட கிளர்ச்சிக்காரர்களது அணியில் துப்பாக்கி, வாள், வேலுடன் கலந்து கொண்ட எண்ணிக்கையினர் முன்னூறு பேர் மட்டுமே.

ஆனால், இப்பொழுது பாப்பான்குளம், பள்ளிமடம் குண்டுக்குளம், பேரையூர் எனப் பல கிராம மக்கள் மிகுந்த ஆர்வத்துடனும், நாட்டுப்பற்றுடனும் கும்பெனியாருக்கு எதிரான இந்த ஆயுதக் கிளர்ச்சியில் தாங்களாகவே முன்வந்து சேர்ந்து கொண்டனர்.

கிளர்ச்சி தொடங்கி இருபது நாட்களில் இந்தக் கிளர்ச்சிக்காரர்களது எண்ணிக்கை பதினாராயிரத்துக்கும் மிகுதியாக அதிகரித்துவிட்டது.[8] முதுகளத்தூர், கமுதி, திருச்சுழிப் பகுதியில் கும்பெனியாரது நிர்வாகம் தடைப்பட்டு ஸ்தம்பித்தது. இந்தப் பகுதியில் இருந்த கும்பெனி அலுவலர்களும், இராமநாதபுரத்தில் இருந்த கும்பெனி கலெக்டரும் தொடர்பு கொள்ள இயலாத நிலை. கும்பெனிக் கலெக்டரது ஓலைகளுடன் முதுகளத்தூர் பகுதிக்கு வந்த ஏவலர்களைக் கைப்பற்றியதுடன், அந்த ஏவலர்களின் சீருடைகளையும் பறித்துக் கொண்டு, அவர்கள் அணிந்திருந்த கோவணத்துடன் திரும்பி ஓடுமாறு விரட்டி அடித்தனர்.[9] கும்பெனியாரது கொத்தடிமைகளாகவும், தொங்கு சதைகளாகவும் செயல்பட்ட அந்த கோழைகளுக்கு நாட்டுப்பற்றுக் கொண்ட மக்கள் உணர்ச்சி வசப்பட்டுக் கொடுத்த தண்டனை அது.

மக்கள் திரண்டு கும்பெனியாரது கச்சேரிகளைச் சூழ்ந்து, கும்பெனி சிப்பாய்களது ஆயுதங்களை ஏன் பறித்தனர்?

இந்த நிகழ்ச்சியைத் தலைமை தாங்கி நடத்திய வீர மறவன் யார்? இந்த வினாக்களுக்கு ஓரளவு பதில் வழங்கும் வகையில் இராமநாதபுரம் சீமை கும்பெனிக் கலெக்டர் சென்னைக் கோட்டையில் உள்ள கும்பெனி கவர்னருக்கு அனுப்பிய கடிதவாசகம் இதோ[10].

'........குடிமக்களுக்கு எந்தவித குந்தகமும் விளைவிக்காமல் திடீரென்றும், பரவலாகவும் ஏற்பட்டுள்ள இந்தத் தாக்குதல் ஒரு சாதாரணக் கொள்ளை அல்ல என்ற முக்கியமான செய்தியை சுட்டுவதாக உள்ளது. அதாவது நமது கச்சேரியில் உள்ள துப்பாக்கிகளையும், வெடிமருந்தையும் மட்டும் கைப்பற்ற வேண்டும் என்ற ஆர்வத்தைக் குறிப்பிடுவதாக உள்ளது. இதனைப்பற்றி தளபதி மார்டின்ஸ-டன் தீவிரமாக ஆலோசித்த பிறகு இந்த எழுச்சிக்கு காரணம் பதவி நீக்கம் பெற்ற மன்னரது தூண்டுதல்தான் என்பதும் இதனை விரைந்து சமாளிக்காவிட்டால் மிகவும் கெடுதலான நிலைமை

8. Madurai District Record - vol - 1139
9. Collector Lusington Letter dated 30-04.1799
10. Madurai Collectorate Records - vol 1157 p 70

எட்டிவிடும்...."

27.04.1799 தேதியிட்ட இன்னொரு கடிதத்தில் கலெக்டர் குறிப்பிட்டிருப்பது. "........இந்தக் கிளர்ச்சியினைத் தலைமை தாங்கி நடத்தியவன் சேதுபதி மன்னரிடம் முன்னர் அரண்மனைப் பணியிலிருந்தவன். எனக்குக் கிடைத்த உளவுச் செய்திகளின்படி அவன் ஏற்கனவே பலமுறை திருச்சிராப்பள்ளிக்குச் சென்று இருக்கிறான். சேதுபதி மன்னரிடம் ஆலோசனை கலப்பதற்கு பதினைந்து நாட்களுக்கு முன்னர் அவன் இராமநாதபுரத்திற்கு வந்து இருக்கிறான். சேதுபதி மன்னரது ஒப்புதலுடன்தான் இந்த நடவடிக்கைகளில் இறங்கி இருப்பதாக இங்குள்ள குடிகளை நம்ப வைத்து இருக்கிறான். மேலும், மிகுந்த அடாவடித்தனத்துடன் நாட்டுப்புற மக்களுக்கு ஓலைகள் அனுப்பிக் கும்பெனியாரது தொடர்புகளில் இருந்து நீங்குமாறும் தவறினால், தக்க தண்டனைகள் வழங்கப்படும் என்றும் எச்சரிக்கை செய்துள்ளான்.

"........மிகவும் நீண்ட காலம் ஆற்காட்டு நவாபின் நிர்வாகத்தில் இருந்த இந்தச் சீமையை கி.பி.1780ல் எழுந்த மக்கள் புரட்சியின் காரணமாக அப்பொழுது திருச்சியில் கைதியாக இருந்தமன்னர் விடுதலை பெற்றுப் பதவியில் மீண்டும் அமர்த்தப்பட்டார் என்று சொல்லப்படுகிறது. ஆதலால், இப்பொழுதும், அத்தகைய கிளர்ச்சியின் மூலம் தனது காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் அவன் ஈடுபட்டுள்ளான்........."[11].

சென்னைக்கு இராமநாதபுரம் கும்பெனிக் கலெக்டர் அனுப்பிய இந்தக் கடிதங்களில் முதுகளத்தூரில் மயிலப்பன் சேர்வைக்காரரினால், புரட்சிப் பொறி தூண்டி விடப்பட்டு முதுகளத்தூர் பகுதி எங்கும் பரவி மக்களிடையே அந்நிய ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வுகளை மலரச் செய்துவிட்டது என்ற உண்மையை யாரும் எளிதில் புரிந்து கொள்ளத் தக்கதாகும்?

11. Madurai Collectorate Records - vol 1157 pp 75-78

"........தற்பொழுது கலவரம், முதுகளத்தூர், அபிராமம், கமுதி பாப்பான்குளம் தாலுக்காக்களில் நீடிக்கிறது. குடிமக்களைக் கிளர்ந்து எழுமாறும், இணங்காதவர்களது ஊர்களைக் கொளுத்துவதும் தொடர்கிறது. நமது கைத்தறிக் கிட்டங்கியை அழிவில் இருந்து ஆர்த்திதேவன் ஓரளவு காப்பாற்றி உள்ளான். இராமநாதபுரம் உதவிக் கலெக்டர் கிரீம்ஸ் காமன்கோட்டை வழியாக முதுகளத்தூர் செல்கிறார்........"

"முதுகளத்தூர் தாலுகாவில் உள்ள சித்திரங்குடி, ஆப்பனூர், பேரையூர் ஆகிய நாடுகள், அடர்த்தியான காட்டுப்பகுதிகளாக இருப்பதாலும், இங்குள்ள மறவர்கள் கள்ளர்களை விட மிகவும் கொடுமையானவர்களாக உள்ளனர். இவர்கள் சுமார் பதினாயிரம் பேர் இருப்பார்கள். கி.பி.1772ஆம் ஆண்டுப் போருக்குப் பின்னும், கி.பி.1781ல் மிகப்பெரிய விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். அதற்கு உரிய பலனும் இருந்தது........"12.

இந்த மயிலப்பன் யார். அவர் இந்தக் கும்பெனியாருக்கு எதிராக மக்களை அணி திரட்டி, ஆயுதபாணிகளாக்கிக் கும்பெனியாரது ஆயுதங்களைப் பறித்து, நெல் களஞ்சியங்களையும், கைத்தறித் துணிக் கிட்டங்கிகளையும் சூறையாடியதற்கான பின்னணி என்ன?

12. Collector Lussington's letter dated 06.05.1799

# 3. புதிய பாதை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே இந்த இராமநாதபுரம் பகுதி பாண்டியர்களது பேரரசின் ஒரு பகுதியாக இருந்து வந்தது. கடைச் சங்கப் புலவர்களான மாங்குடி மருதனாரும், பிசிராந்தையாரும், அல்லூர் நல்லந்துவனாரும், உப்பூரி குடிக்கிழாரும் இந்தப் பகுதியில்தான் வாழ்ந்து சிறந்தனர். பிற்காலப் பாண்டியப் பேரரசு பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிதைந்து வானாதிராயர் போன்ற தன்னரசு மன்னர்களும், சேதுபதிகள் என்ற மறவரின் மூத்தகுடி மகனும், இந்தப் பகுதியின் சுயேட்சை பெற்ற மன்னர்களான பொழுது இந்தப்பகுதி, மறவர் சீமை அல்லது சேதுநாடு என வரலாற்றிலும் இலக்கியங்களிலும் இடம் பெற்றன.

என்றாலும், தில்லி சுல்த்தான் அலாவுதீன் கில்ஜி காலத்தில் அவரது தளபதி மாலிக்காபூர், கி.பி.1311ல் இராமேசுவரம் வரை மின்னல் படையெடுப்பு ஒன்றினை நடத்தி தில்லி திரும்பியபொழுது மதுரைக் கோட்டையில் ஒரு நிலையான படையணிஎய நிறுத்திச் சென்றான். அன்றிலிருந்து இந்தப் பகுதி " கடந்து செல்லும் பகுதி" என்று பொருள்படும் அரபிச் சொல்லன "மாபார்" என்ற பெயரில் வழங்கப்பட்டது. கி.பி.13ஆம் நூற்றாண்டில் கிழக்குக் கடற்கரைக்கு வந்த

அரபி வணிகர்ளது இந்த வழக்கு குளச்சல் முதல் நெல்லூர் வரையான கிழக்குக் கடற்கரைப் பகுதியைக் குறிப்பதாயிற்று. மாபார் என்ற பாண்டிய, சோழ மண்டலப் பகுதிகள் தில்லிப் பேரரசின் ஒரு அங்கமாகப் பெயரளவில் அப்பொழுது கருதப்பட்டது.[13] அதனையடுத்து முகலாயப் பேரரசர் ஆட்சியின்பொழுது கி.பி.1691 - 95ல் செஞ்சிக் கோட்டைப் போரில் முகலாயப் பேரரசு பெற்ற வெற்றி மூலம் தமிழக அரசியலில் தில்லியின் ஆதிக்கம் உறுதிப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக தில்லிப் பேரரசின் தக்காணப் பிரதிநிதியான நிஜாமிற்கு செஞ்சி, தஞ்சை, மதுரை நாயக்கர் மன்னர்கள் திறை செலுத்தி வந்தனர். இந்தத் தொகையை வசூலிக்கும் பணியை நவாப் என்ற பட்டத்துடன் நிஜாமின் பணியாளர் ஆற்காட்டில் நிலைகொண்டார். அவரது பெயர் ஜுல்பிகார் அலிகான் என்பது. அவருக்குப் பின்னர், நவாப் பதவி பரம்பரைப் பதவியாக மாறியது. ஒரு காலக்கட்டத்தில் ஆற்காட்டு நவாப் பணிக்கு வாரிசு இல்லாத நிலை ஏற்பட்டபொழுது, அதற்கு ஆற்காட்டு நவாப் தோஸ்து அலி மருகர் சந்தா சாகிபும் ஆற்காட்டில் இருந்த நிஜாமின் அலுவலர் அன்வர்தீன் என்பவரும் போட்டியிட்டனர். பத்து ஆண்டுகள் தொடர்ந்த இந்த போட்டியில் கி.பி.1751ல் அன்வர்தீன்கான் மகன் வாலாஜா முகம்மது அலி இறுதி வெற்றி பெற்று ஆற்காடு நவாப் ஆனார்.[14]

ஆனை மீது அமர்ந்து செல்ல ஆசை? ஆனால், உந்தி ஏறி உட்காரத் திராணி வேண்டுமே! வாலாஜா முகம்மதலி நவாப் ஆகிவிட்டார். ஆனால், கொங்கு நாட்டில் இருந்து நாஞ்சில் நாடு வரை இருந்த எழுபத்தி இரண்டு பாளையக்காரர்களும் முன்னர் மதுரை நாயக்க மன்னருக்குக் கொடுத்து வந்த கப்பத்தொகையை நவாப்பிற்குக் கொடுக்க வேண்டுமே! அப்பொழுது இருந்த குறுநில புதுக்கோட்டை, தஞ்சை மன்னர்கள் நவாப்பின் மேலாதிக்கத்தை மதித்து நடக்க வேண்டுமே! நவாப் பதவிப் போட்டியில் வெற்றி பெற ஆங்கிலேயரின் கிழக்கிந்திய கும்பெனியாரது கூலிப் படைகள்தான் பெற்றுத்தந்தது. மீண்டும் மீண்டும் அவர்களை நம்பித்தான் நவாப்

13. Eswari Prasad - History of medieval India
14. Sathianathaier - History of madurai Nayakas 1927

பதவி அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும். நவாப் முகம்மது அலியின் இந்த முடிவைத் தொடர்ந்து நவாப்பிற்கும் சென்னைக் கோட்டையில் இருந்து ஆங்கிலக் கவர்னருக்கும் இடையில் பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.[15]

மதுரை, நெல்லைச் சீமைப் பாளையக்காரர்களிடமிருந்து கப்பத் தொகையை வசூலிப்பதற்கு நவாப் முகம்மது அலி தமது தமையனார் மாபூஸ் கானை மதுரை, நெல்லைச் சீமைகளின் ஆளுநராக கி.பி.1752ல் நியமித்தார். இவர் நிர்வாகப் பணியைப் பொறுத்தவரைதான் ஆளுநர். ஆனால், ஆண்டுக்குப் பதினைந்து லட்ச ரூபாய்களை இந்தச் சீமைகளில் குத்தகைப் பணமாக நவாப்பிற்கு செலுத்த வேண்டிய குத்தகைதாரரும்கூட. இந்தக் குத்தகைப் பணத்தில் பாதித்தொகையை நவாப்பிற்கும், பாதித் தொகையைக் கும்பெனியாருச்சகும் செலுத்த வேண்டும் என்ற ஏற்பாடு. ஆனால், மாபூஸ்கான் திருநெல்வேலிச் சீமையை மட்டும் பதினைந்து லட்ச ரூபாய்களுக்கு உட்குத்தகைக்கு விட்டார். ஆனால், பாளையக்காரர்களிடமிருந்து பணம் வசூலிப்பது கல்லில் நார் உறிப்பது போன்று இருந்தது. ஆடிக் கறக்க வேண்டிய மாட்டை ஆடிக் கறக்க வேண்டும். பாடிக் கறக்க வேண்டிய மாட்டை பாடிக் கறக்க வேண்டும் என்ற. பாவனையில் மாபூஸ்கான் பலவிதமாகப் பொறுமையுடன் முயன்றார். மதுரைக் கள்ளர்கள், இராமநாதபுரம், சிவகெங்கை மறவர்கள், இவர்களைச் சமாளிக்க வேண்டும். மதுரை நாயக்க அரசு ஆட்சி, திருச்சியில் ராணி மீனாட்சியின் தற்கொலையுடன் கி.பி.1736ல் முடிவடைந்த பிறகு ஏறத்தாழ இருபது ஆண்டுகள் யாருக்கும் கட்டுப்படாத "சுயேட்சை மன்னர்களாக" விளங்கியவர் அல்லவா இந்தப் பாளையக்காரர்கள்.

இதனால் பொறுமையிழந்த ஆற்காட்டு நவாப் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கும்பெனியாருடன் பல உடன்படிக்கைகளைச் செய்துகொண்டு அவர்களது கூலிப்படையை பாளையக்காரர்களிடம் வசூல் செய்வதற்குப் பயன்படுத்தினர். கி.பி.1755ல் ஜெனரல்

15. Dr. Rajayyan- History of Madurai 1972.

ஹெரான், பின்னர் ஜெனரல் லாரன்ஸ், அடுத்து தளபதி காலியாத், கி.பி.1756ல் கான்சாகிப் என்ற முகம்மது யூசுப்கான் இப்படி அணியணியாக வெள்ளைக்காரப் பட்டாளங்கள் நெல்லைச் சீமையில் குறுக்கும் நெடுக்குமாக அணிவகுத்து வலம் வந்தன. நெற்கட்டும் செவ்வல் பூலித்தேவர், பாஞ்சை கட்டபொம்மு நாயக்கர், எட்டயபுரம் கம்பளத்தார், சிவகிரி வன்னியன் போன்ற பிரதான பாளையக்காரர்களிடம் மோதிப் பலப்பரீட்சை நடத்தினர். கப்பத்தொகை வசூல், பரங்கிப்படையின் தீனிக்குக்கூடப் போதுமானதாக இல்லை. உழுதவன் கணக்குப்பார்த்த கதையாக கும்பெனியாரது கணக்கில் நவாப்பின் பற்றுத் தொகையாகக் கடன் ஏறிக்கொண்டு வந்தது. வேறு வழியில்லாமல் கும்பெனியாரது (கணக்கில் நவாப்பின் பற்றுத் தொகையாகக் கடன்) கணக்கைத் தீர்க்கும் முயற்சியில் கும்பெனி கவர்னருடன் ஆற்காடு நவாப் மேலும் சில உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டுக் கொடுத்தா.

இந்த ஒப்பந்தங்கள் விரைவில் தென்னகத்தின் ஆட்சியாளர்களாக கும்பெனியாரை நிலை நிறுத்திவிடும் என்ற தொலைநோக்கு நவாப்பின் சிந்தனையில் துளிர்க்கவில்லை. மாறாக அவரது அன்றைய கடன் தொல்லைகளுக்கு அவை தீர்வாகவும் அவரது வாழ்வின் தொடர்ச்சிக்குத் துணையாகவும் அமைந்துவிடும் என்ற தவறான எண்ணம் அவரிடம் மேலோங்கி இருந்தது. இதன் காரணமாக கி.பி.1787, 1790, 1792 ஆம் ஆண்டுகளில் கும்பெனியாருடன் ஏற்பட்ட ஒப்பந்தங்கள்[16] ஆற்காட்டு நவாப்பின் ஆதிக்கத்தையும் அதிகார வரம்பையும் சிறிது சிறிதாக அரித்து, அழித்து இரும்பை அரிக்கும் கறல்போல அமைந்துவிட்டன. தமிழகத்தின் சில பகுதிகளில் கும்பெனியார் ஆற்காட்டு நவாப்பிற்காக வரி வசூல் பணியை மேற்கொண்டனர். பின்னர் அந்த வசூல் தொகையில் ஒரு பகுதியை நவாப்பின் பாக்கிக்காக வைத்துக் கொண்டனர். அடுத்து தமிழ்நாட்டுப் பாளையக்காரர்களது கோட்டை கொத்தளங்களைப் பராமரிக்கும் பணியையும், படைவீரர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொறுப்பையும் கும்பெனியார் ஏற்றனர். இன்னும் மோசமானதொன்று,

16.Dr. Rajayyan - History of Madurai 1972.

பாளையக்காரர்கள் நவாப்பிற்கு செலுத்தும் வருடக் காணிக்கையையும், பரங்கியரே பெற்றுக் கொள்ளத்தக்க உரிமை.[17] அதாவது தனது தலையைமட்டும் கூடாரத்திற்குள் நீட்டி வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட ஒட்டகம், பின்னர் கூடாரம் முழுவதையும் தன்வசப் படுத்திக்கொண்ட கதைதான் கும்பெனியாருடையதும். தனது இயலாத் தன்மையை நன்கு உணர்ந்த நவாப் வாலாஜா முகமது அலி வேறு வழியில்லாமல் கும்பெனியாரது நிபந்தனை எதுவாக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொண்டு, அவரது ஆடம்பர வாழ்க்கைக்குக் குந்தகம் ஏற்படாமல் பார்த்துக் கொண்டார்.

இவ்விதம் கும்பெனியார்களது கூலிப்படையைக் கொண்டு மதுரை, நெல்லை சீமைப் பாளையங்களை அடக்கி ஒடுக்கி கிஸ்திப் பணத்தை வசூலித்து முடித்தபொழுதும், இதுவரை யாருக்குமே கப்பம் கட்டாமல் மூன்று தன்னரசுகள் தமிழ் மண்ணில் இருந்து வருவதை நவாப் உணர்ந்தார். அவை மறவர் சீமை இராமநாதபுரம் சேதுபதி, சிவகெங்கைச் சீமை உடையாத் தேவர், கள்ளர் சீமை புதுக்கோட்டை தொண்டைமான். இவர்களில் புதுக்கோட்டைத் தொண்டைமானுக்கு இராமநாதபுரம், சிவகெங்கை அரசர்கள் உறவினராக இருந்தும்கூட, அவர்களிடம் நேச முறையில் நடந்து கொள்ளாமல் அந்நியர்களான ஆற்காட்டு நவாப், வெள்ளைக்கும்பெனியார்களது தொடர்பையும், அவர்களுக்குத் தொண்டு செய்வதையே உயர்வாகக் கருதியதால், அவரைப் பாக்கிதாரர் பட்டியலில் இருந்து நீக்கிவிட்டு, சேதுபதி சீமையையும், சிவகெங்கைச் சீமையையும் ஆயுத பலத்தைக் கொண்டு அடக்கி கப்பம் வசூலிக்கத் திட்டமிட்டார் நவாப். தொடக்கத்தில் ஒத்துழைக்க மறுத்த கும்பெனியார், அக்கினியில் வெந்தது போக, கிடைத்தது ஆதாயம் என்று மறவர் சீமை மீது படை நடத்த சம்மதித்தனர்.[18]

திருச்சியிலிருந்த கும்பெனி தளபதி ஜோஸப் சுமித் நவாப்பின் மகன் உம்தத்துல் உம்ரா ஆகியவர்களது கூட்டுத் தலைமையில் இராமநாதபுரம் நோக்கிப் படைகள் புறப்பட்டன. கி.பி.1772ஆம் ஆண்டு மே மாதக் கடைசியில் இராமநாதபுரம் கோட்டையை இந்தப்

17. Dr. Rajayyan- History of Madurai 1972.
18. VIBART - Lt. col. History of Madras Engineers

படைகள் சூழ்ந்து கொண்டன.[19] அப்பொழுது மறவர் சீமையின் மன்னரான முத்து இராமலிங்க சேதுபதி பன்னிரெண்டு வயது இளைஞராக இருந்ததால், அவரது பிரதிநிதியான அவரது தாயார் முத்து திருவாயி நாச்சியாருடனும் பிரதானி தாமோதரன் பிள்ளையுடனும் நவாப்பின் மகன் பேச்சுகளைத் தொடர்ந்து, நவாப்பிற்கு கப்பத் தொகையைச் செலுத்துமாறு தெரிவித்தார். ராணி மறுத்த காரணத்தினால் 1.6.1772ம் தேதி, காலையில் கோட்டையைச் சுற்றி நிறுத்தப்பட்ட ஆக்கிரமிப்பாளரது பீரங்கிகள் குண்டுகளை வெடித்துப் பயங்கரமாக நெருப்பைக் கக்கி, இராமநாதபுரம் கோட்டை மதிலைத் துளைத்தன.[20] இரண்டாவது நாள் பீரங்கித் தாக்குதலினால் கிழக்கு மதிலில் ஏற்பட்ட பிளவின் வழியாகக் கும்பெனிப் படைகள் கோடடைக்குள் புகுந்தன. ஆவேசமாக எதிர்த்தாக்குதல் மேற்கொண்ட மறவர்கள் மூவாயிரம் பேரை இழந்த சேதுபதி ராணிக்கு தோல்வி ஏற்பட்டது. அவரையும் இளவரசரையும் அவரது தமக்கையையும் கைது செய்த பரங்கியர் அவர்களைத் திருச்சிக்ள கோட்டைக்கு அரசியல் கைதிகளாக அனுப்பி வைத்தனர்.[21] சேதுபதி சீமை ஆற்காட்டு நவாப்பின் ஆட்சியின் கீழ் வந்தது.

ஏறத்தாழ பத்து ஆண்டுகள் இராமன் இல்லாத அயோத்தி போல மறவர் சீமை மாற்றாரது ஆட்சியில் சீரழிந்தது. என்றாலும், மார்ச் 1781ல் இளைய சேதுபதி மன்னரைத் திருச்சிக் கோட்டையில் இருந்து விடுத்த ஆற்காட்டு நவாப், சேதுபதியுடன் சேதுநாட்டின் வடக்கே கோட்டைப்பட்டினத்தில் சமரச உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டார்.[22] இதன்படி ஆற்காட்டு நவாப்பின் மேலாண்மையை மதித்து ஆண்டுதோறும் ரூபாய், இரண்டரை லட்சம் அன்பளிப்பு தொகை சேதுபதி மன்னர் நவாப்பிற்குச் செலுத்த வேண்டும். மறவர் சீமை வரலாற்றில் இது ஒரு கரும்புள்ளி. ஆனால், அன்றைய அரசியல் சூழ்நிலையில் சேதுபதி மன்னரைவிட பெரிய அரசர்களான திருவாங்கூர், தஞ்சாவூர், மதுரை அதிபர்களே இத்தகைய நிபந்தனையை ஏற்றிருந்தனர், என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்த பதினான்கு ஆண்டுகள் சேதுபதி மன்னரது ஆட்சி தொடர்ந்தது.

---

19. VIBART - Lt. col. History of Madras Engineers
20. Dr. Rajayyan - History of Madras Engineers
21. Military Consultations vol. 03-06-1772
22. Military Consultations vol. 74 30-04, 1981 p 1076

தம்மையும், தமது தாயார், தமக்கையாரைத் திருச்சிச் சிறையில் அடைத்துக் கொடுமைப்படுத்தி சேதுபதிகளது பரம்பரைக்கு இழுக்கை ஏற்படுத்திய கும்பெனியாரையும் நவாப்பையும் இளம் மன்னர் மறந்துவிடவில்லை. தமக்குத் தொல்லை கொடுத்தவர்களை யானை எப்பொழுதாவது மறந்தது உண்டோ? இல்லை. புனித சேது மண்ணில் இருந்து அந்நியப் பூண்டுகளை அடியோடு அகற்றுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டார். முன்னர், திருப்புல்லாணியில் புதிய கோட்டை ஒன்றை அமைத்து பாதுகாப்பைப் பலப்படுத்தினார். அப்பொழுது சேதுநாட்டில் கைத்தறித் துணிகள், தானியங்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வணிகத்தில் ஈடுபட்டிருந்த டச்சுக்காரர்களுடன் தொடர்புகொண்டு பெரிய பீரங்கிகளைத் தயாரிக்கும் பணியில் முனைந்தார்.[23] இவருக்கு முன்னரும் அரசு கட்டிலில் இருந்த முத்து விஜய ரகுநாத சேதுபதி டச்சுக்காரர் உதவியுடன் பீரங்கிகளைப் பெற்று தஞ்சைப் போரில் அவைகளைப் பயன்படுத்தி இருந்தார். அன்றைய சூழ்நிலையில் வீரத்தையும், வல்லமையையும் நிலைநிறுத்த வெடிமருந்து ஆயுதங்களான துப்பாக்கிகளும், பீரங்கிகளும் தவிர்க்க முடியாத போர்க் கருவிகளாக விளங்கின.

இது ஒரு புறமிருக்க, ஆற்காட்டு நவாப்பின் பிரதிநிதிகள் என்ற முறையில் கும்பெனியார் சேதுபதிச் சீமையில் வணிகம் செய்ய சிறப்பான சலுகைகளையும், கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்வதில் ஏகபோக உரிமையையும், பாம்பன் கால்வாயில் அவர்களது கப்பல்களைத் தணிக்கையில்லாமலும் தாமதமில்லாமலும் செல்வதற்கான முன்னுரிமையையும் சேதுபதி மன்னரிடமிருந்து எதிர்பார்த்து ஏமாந்தனர். இதற்கும் மேலாக இராமநாதபுரம், சிவகெங்கை சீமை எல்லைப் பிரச்சினைகளில் தீர்ப்பு வழங்கும் நடுவராக இருக்கவும் முனைந்தனர். இவையனைத்தும் மறவர் சீமை மன்னரது சுய ஆதிக்கத்தன்மைக்கு, சுதந்திரச் செயல்களுக்கு

23. Military Consultations 1795

முரணானது என்று முடிவு செய்த சேதுபதி மன்னர், கும்பெனியாரது கோரிக்கைகளைப் புறக்கணித்து வந்தார். சர்வ வல்லமையுள்ள கும்பெனியாரது ஒவ்வொரு கோரிக்கைக்கும் உதவ மறுக்கும் மனிதர் தமிழகத்தில் ஒருவர் இருக்கிறாரா?..... இருக்கிறாரே! ஹும், இருக்கவே கூடாது! சென்னைக் கோட்டையில் உள்ள கும்பெனி ஆளுநரும், கல்கத்தா கோட்டையில் உள்ள கும்பெனித் தலைமையும் ஒரு மனதாக முடிவு செய்தன.[24] சேதுபதி மன்னரது ஆட்சியை அகற்றிவிட வேண்டும் என்பதே அந்த முடிவு. கி.பி.1794ம் ஆண்டில் மிகவும் கடுமையான வறட்சி மறவர் சீமையில் நிலவியதால், கும்பெனியார் தங்களது திட்டத்தைச் செயல்படுத்தாமல் தக்க வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்து இருந்தனர்.

24. Military Consultations vol. 1794.

# 4. மீண்டும் சிறை

புத்தாண்டு பிறந்து விட்டது. தங்களது இரகசியத் திட்டத்தை நிறைவேற்றாமல் மேலும் தாமதப்படுத்த கும்பெனியாருக்குப் பொறுமை இல்லை. பிப்ரவரி மாதம் 7ம் தேதி வைகறை நேரம். இன்னும் நிலம் தெளியவில்லை. இராமநாதபுரம் கோட்டை அரண்மனைக் காவலில் ஈடுபட்டிருந்த சேர்வைக்காரர்களது கண்களில் உறக்கம் ஒட்டிக்கொண்டு இருந்தது. கோட்டையின் தெற்குப் புறத்தில் ஒருவிதமான ஆரவாரம். சிறிது நேரத்தில் புற்றீசல் போல ஒரு பெரும்படை கோட்டைக் காவலைத் தகர்த்து விட்டு உள்ளே நுழைந்தது. அரண்மனையையும் விரைவில் சூழ்ந்து கொண்டது. விழித்து எழுந்த முத்துராமலிங்க சேதுபதி மன்னரைக் கும்பெனித் தளபதி சந்தித்து இராமநாதபுரம் கோட்டையைக் கைப்பற்றக் கும்பெனித் தலைமை அளித்துள்ள ஆணையைக் காண்பித்தார். சேதுபதி மன்னர் மீண்டும் பாதுகாப்புக் கைதி ஆக்கப்பட்டார். வீரர்களது பாதுகாப்பு அணியுடன் திருச்சிக் கோட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இளமைக் கனவுகள் போல தமது திட்டம் தவிடு பொடியானது பற்றி சிறைக் கதவுகளின் பின்னே இருந்த மன்னருக்குப் பட்டது.

இராமநாதபுரம், இராமலிங்க விலாசம் அரண்மனை கலெக்டர் பவுனி துரையின்

அலுவலகமாக மாறியது. சேது நாட்டில் கும்பெனியாரது ஆட்சி நடைபெற்றது. மக்கள் வெஞ்சினம் கொண்டனர். அவர்களது மூத்த குடிமகனைத் தண்டனைக் கைதி போல திருச்சிக் கோட்டைச் சிறையில் அடைத்துவிட்டார்கள் என்ற செய்தி காட்டுத் தீ போல மறவர் சீமையெங்கும் பரவியது. கொடிய பஞ்சத்தினின்றும் விடுபடாத நிலையில். எவ்வித தீவிர நடவடிக்கையிலும் ஈடுபட இயலாத உறுதியற்ற நிலை குடி மக்களுக்கு.

நாட்கள் மெதுவாக உருண்டோடின. மறவர் சீமை மக்கள் சேதுபதி மன்னரை எப்படி விடுவிப்பது? மானமும் வீரமும் செறிந்த மறவர் சீமை மண்ணில் இருந்து அந்நிய மண்புழுக்களை எவ்விதம் அழித்து ஒழிப்பது? விடைகாண இயலாத இந்த வினாக்கள் அனைத்துக் குடிமக்களது சிந்தனையிலும் சுழன்று கொண்டே இருந்தன. ஆனால், சித்திரங்குடி சேர்வைக்காரன் என்பவனது சிந்தனைதான் செயல்திறன் மிக்கதாக் இருந்தது. இவர் சேதுபதி மன்னரது கோட்டைக்காவல் பணியை மேற்கொண்டு இருந்தவர். பிறந்த மண்ணின் பெருமையை உணர்ந்த பேராண்மையாளர். இறை பக்திக்கு அடுத்து ஏற்றமிகு மன்னர் மீது மாளாத பற்றும் விசுவாசமும் மிக்க இளைஞர். மன்னர் திருச்சிக் கோட்டையில் சிறை வைக்கப்பட்ட நாளிலிருந்து மன்னரது விடுதலையை எவ்விதம் பெறுவது என்ற கவலையில் காலத்தைக் கழித்தவர்.

தம்மைப் போன்று விசுவாசமிக்க ஒரு சிறு அணியுடன் திருச்சிராப்பள்ளி சென்றார். கோட்டைக்குள் பாதுகாவலில் இருக்கும் சேதுபதி மன்னரைத் தப்புவித்து இராமநாதபுரம் அழைத்து வருவது எனத் திட்டமிட்டு அதற்கான முயற்சியில் ஈடுபட்டார். சில நாட்கள் மிகுந்த துணிச்சலுடன் முயன்றும், பரங்கியரின் கடுமையான கோட்டைப் பாதுகாப்பு அவரது திட்டத்தை நிறைவேற்ற இயலாமல் செய்தது. இதனால் சோர்வடையாது ஊர் திரும்பியதும் கும்பெனியாரது கொடுமைகளுக்கு எதிராக மக்களைத் திரட்டினார். குடிமக்கள் செலுத்தி வந்த நிலத் தீர்வை குறைவாக இருப்பதாகக்

கருதி, அவர்களது நிலங்களை அளவை செய்து கூடுதல் தீர்வை விதிக்க கும்பெனியார் அப்பொழுது முற்பட்டனர். இந்த முயற்சிக்கு குடிமக்கள் ஒத்துழைப்பு நல்காமல் பார்த்துக் கொண்டார். தொடர்ந்து தாங்க முடியாத நிலத் தீர்வையை விதித்து, அதனை அக்கிரமமான முறையில் வசூலிக்க முயன்ற கும்பெனி அலவலர்கள் வயிறு வளர்க்க எதையும் செய்ய முற்படும் கைக்கூலிகளது முயற்சிகளுக்கு எதிராகக் குடிகள் அணி திரண்டு, அமைதியாகத் தங்களது எதிர்ப்பினைத் தெரிவிக்குமாறு செய்தார்.

இந்த இயக்கம் சித்திரங்குடி சேர்வைக்காரர் எதிர்பார்த்தபடி தக்க இழப்பினைக் கும்பெனியாருக்கு ஏற்படுத்தியதை மதுரை மானுவலில் இவ்விதம் குறிப்பிடப்பட்டுள்ளது.[25]

"சீமையின் வருமானம் பெருத்த அளவில் குறைந்தது. கி.பி.1795-96ம் ஆண்டில் ரு.1,37,207 ஆகவும், கி.பி.1796-97ல் ரூ.1,33,391/-ஆகவும், இருந்த வருமானம் ரூபாய். 94,882/- ஆகவும், கி.பி.1798-99ல் ரூ.65,127/- ஆகவும் குறைந்து விட்டது. சிறையில் அடைபட்டுள்ள சேதுபதி மன்ரை மீண்டும பதவிக்கு கொண்டு வரவேண்டும் என்ற இலக்கில் 23.7.1797ல் தொடக்கம் பெற்றது போன்ற புதிய கிளர்ச்சி கும்பெனியாருக்கு எதிராக உருவாகியது.[26]

மேலும், இந்தக் கிளர்ச்சி பற்றித் திருநெல்வேலி சீமைச் சரித்திரத்தில் "................. இராமநாதபுரம் சீமையில் கலகமொன்று கி.பி.1797ல் நிகழ, அக்காலத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள பாளையக்காரர்களில் பெரும்பாலோர் பாஞ்சாலக் குறிச்சியாரின் சொல்லுக்கிணங்கி, கலகத்துக்குக் காரணமாக நின்ற இராமநாதபுரத்தாருடன் சேர்ந்துகொண்டு செலுத்த வேண்டிய கிஸ்தியை கவர்மெண்டுக்குச் செலுத்த மறுத்து விட்டனர்........."[27]

ஆனால், இவையனைத்திலும் பின்னணியாக அமைந்து இருந்த நியாய உணர்வுகளை சிறிதும் மதிக்காது மமதையுடன் தங்களது

25. Madurai Manual prtv - ch VII - p-155.
26. Manual of Ramnad Samasthanam 1891.
27. திருநெல்வேலிச் *சீமைச் சரித்திரம்* - 1928 பக் 214.

ஆயுத வலிமையைக் கொண்டு குடிகளை அடக்கி ஒடுக்கி அவர்களுக்கு வேண்டிய பொருளையும், பணத்தையும் வரி வசூல் என்ற பெயரில் கொள்ளையிட்டுக் குவித்தனர். இந்நிலையில் பரங்கியரது கொடுமைகளை களையும் கடைசி ஆயுதம் வன்முறையில் கிளர்ச்சி ஒன்றுதான்! முதுகளத்தூர் நாடு, ஆப்பனூர் நாடு, வேம்பு நாடு, அளற்று நாடு, கிடாத்திருக்கை நாடு, கமுதை நாடு, கருநீலக்குடி நாடு, பருத்திக்குடி நாடு, வடதலைச் செம்பி நாடு, வெண்பாநாடு, பொலியூர் நாடு, ஆகிய பகுதிகளில் நாட்டுத் தலைவர்களைச் சந்தித்துத் தமது திட்டத்திற்கு ஒத்துழைப்புக் கோரினார், சித்திரங்குடி சேர்வைக்காரர். அதனது தொடர்ச்சிதான் முன்னர்கண்ட முதுகளத்தூரில் தொடங்கப்பெற்ற மக்கள் கிளர்ச்சி.

இளவேனில் காலத்தின் வெம்மை மெதுவாகப் பரவிக் கொண்டிருந்தது. முந்தைய மார்கழி, தை மாதங்களில் வறட்சி காரணமாக பயிர்கள் தீய்ந்து போய் அறுவடை இல்லாத காரணத்தினால் பெரும்பாலான குடிமக்கள் பயிர்த் தொழிலில் ஈடுபட இயலாமல் முழங்காலைக் கட்டிக் கொண்டு தங்களது வீட்டு முன்திண்ணையில் முடங்கியவாறு பல பேச்சுக்களையும் பேசிப் பொழுது போக்கி வந்த நேரம். இந்தச் சமயத்தில் சித்திரங்குடி சேர்வைக்காரரது சாதனைகளைக் கேள்விபட்டுப் பிறந்த மண்மீது கொண்ட பற்றும், சேதுபதி மன்னர் மீது வைத்துள்ள ராஜ விசுவாசமும் உந்தித்தள்ள அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பொங்கி எழுந்தனர். சிறு துளிகள் பெரு வெள்ளமாவது போல முதுகளத்தூர் கிளர்ச்சி மிகப் பெரிய மக்களது சக்தியாக உருவெடுத்தது. காலம் காலமாகக் கட்டுப்பட்டுக் கிடக்கும் கடல் தனது எல்லையான கரையைக் கடந்து விட்டால்........! அவ்வளவுதான் எங்கும் பேரழிவு!

அதுதான் முதுகுளத்தூர் வட்டாரக் கிளர்ச்சியாக திகழ்ந்தது. சேது நாட்டின் புனித மண்ணை மாசுபடுத்தி, மக்களைக் கொடுமைப்படுத்திப் பணம் பறித்த பரங்கிகளை விரட்ட வேண்டும். திருவணை அமைத்த இராமநாதசாமிக்கு அடுத்த படியாக

தலைமுறை, தலைமுறையாக அவர்களது இதயக் கோவிலில் இடம் பெற்றுள்ள மறவர்குடியின் மூத்த தலைமகன் சேதுபதி ஆட்சியை மீண்டும் நிலை நிறுத்த வேண்டும். இந்த இரு பெரும் இலக்குகளை எய்த ஆயுதமேந்திச் சித்திரங்குடி சேர்வைக்காரர் தலைமையில் போராடப் புறப்பட்டு விட்டனர்.

முதுகுளத்தூர் கச்சேரியில் துப்பாக்கிக்குண்டு வெடித்து இருபத்துஐந்து நாட்களாகிவிட்டன. கும்பெனிப் பிரதிநிதியான இராமநாதபுரம் கலெக்டரும், அவரது எடுபிடிகளும் எந்த வழியிலும் முதுகளத்தூர் வட்டார நாடுகளுக்குள் நுழையவே முடியாத நிலை. கிளர்ச்சிக்காரர்களது நிலையைத் தெரிந்துகொள்ள மாறுவேடங்களில் சென்ற கலெக்டரது ஏவலர்களும் கிளர்ச்சிக்காரர்கள் கையில் அகப்பட்டு மானபங்கப்படுத்தப்பட்டுத் திரும்பினர். இதனால், பெரிதும் கவலையுற்ற இராமநாதபுரம் கலெக்டர் பாளையங்கோட்டையில் அப்பொழுது நிலை கொண்டிருந்த இராணுவ அணிகளை அவசரமாக அனுப்பி வைக்குமாறு பாளையங்கோட்டை ராணுவ மையத்தில் இருந்த ஆங்கில அலுவலரைக் கோரினார்.

முதுகளத்தூர், கமுதி, அபிராமம், தாக்குதல்களின்பொழுது சித்திரங்குடி சேர்வைக்காரர் இருநூறு பேர் மட்டும்தான் இருந்தனர். அறுபது துப்பாக்கிகளும், நாற்பது வெடிகளும் மற்றும் ஈட்டிகள், வாள்களும்தான் இருந்தன. இப்பொழுது அவரது அணியில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இருந்தனர். பள்ளிமடம், மற்றும் அதன் சுற்றுப்பகுதி மக்களும் கிளர்ச்சியில் பங்குகொண்டனர். இவ்விதம் பரங்கியருக்கு எதிராக கிளர்ச்சியில் மிகுந்த ஈடுபாட்டுடன் மக்கள் கலந்து கொண்ட விபரம் இராமநாதபுரம் கலெக்டரது கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. சித்திரங்குடி, பேரையூர் ஆப்பனூர் நாடுகளில் மிகவும் அடர்த்தியான காடுகள் சூழ்ந்து இருப்பதாலும், இங்குள்ள மக்கள் கள்ளர்களை விடப் பன்மடங்கு கொடூரமான குணமுள்ளவர்களாக இருப்பதாகவும், தன்னிச்சை

28. MDR vol 1157 Collector Letter 06.05.1799.

மிகுந்தவர்களாகவும், இந்த அணி இப்பொழுது பதினாயிரம் பேருக்கும் அதிகமான எண்ணிக்கையில் உயர்ந்து இருந்தது.[28]

பதவி நீக்கம் செய்யப்பட்டு சிறையில் உள்ள சேதுபதி மன்னருக்கு ஆதரவாக இவர்கள் அனைவரும் இயங்குவதால் இவர்கள் திருச்சிராப்பள்ளிக்கும் சென்று சேதுபதி மன்னரைத் தப்பிவிக்கும் முயற்சியில் ஈடுபடலாம். ஆதலால், மன்னரை வடக்கே வெகுதூரத்தில் உள்ள நெல்லூர் போன்ற இராணுவப் பாசறைக்கு மாற்றப்படவேண்டும் என்றும் கும்பெனித் தலைமையைக் கேட்டுக் கொண்டார்[29] இராமநாதபுரம் சீமை கலெக்டர்.

அத்துடன், மீண்டும் நான்கு கள்ளர்களை முதுகளத்தூர் பகுதி குடியானவர்களைப் போல மாறுடையில் முதுகளத்தூர் பகுதிக்கு அனுப்பி வைத்தார் கலெக்டர். உண்மையான நிலவரத்தை அறிந்து வர அவர்களில் ஒருவர் மட்டும் கிளர்ச்சிக்காரர்கள் பற்றிய சில தகவல்களை இராமநாதபுரத்திற்கு அனுப்பி வைத்தான். நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. நிர்வாகம் செயல்படவில்லை என்பதைக்கண்டு உணர்ந்த உளவாளி கலெக்டருக்கும் தகவல் அளித்தான். தாம் கலெக்டராகப் பணியேற்று மூன்று மாதங்களுக்குள் தமது நிர்வாகத்திற்கு இத்தகைய சோதனையும், நெருக்கடியும் ஏற்படும் என கலெக்டர் லூஷிங்டனால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. மிகவும் பதட்டத்துடன் செயல்பட்டார்.

முதுகளத்தூர் பகுதியில் தெற்குப் பகுதியை ஒட்டியுள்ள திருநெல்வேலிச் சீமையைச் சேர்ந்த காடல்குடி, நாகலாபுரம் எட்டயபுரம், பாஞ்சாலக்குறிச்சி பாளையம் மக்களும், மறவர் சீமை மக்களுக்கு ஆதரவாகவும், பரங்கிகளுக்கு எதிராகவும் செயல்பட்டனர். 23.04.1797ல் மறவர் சீமையில் தொடங்கிய வரி கொடா இயக்கத்தின் பொழுதும் மறவர் சீமை மக்களுக்குத் துணை நின்றவர்கள் இந்த பக்கத்துச் சீமை பாளையக்காரர்கள்தான்.

29. Dr. K.Rajayyan - History of Madurai 1972.

பாஞ்சைப் பாளையக்காரரது குடிகள் கீழக்கரை வட்டாரத்தில் கொள்ளை நடத்தினர். நாகலாபுரம் பாளையத்தைச் சேர்ந்தவர்கள் அருப்புக்கோட்டை கோபாலபுரம் ஊர்களில் தங்களது கைவரிசையைக் காட்டினர். இந்தத்தாக்குதலை நடத்தியவர் நாகலாபுரம் பாளையக்காரரது தம்பி சின்ன நாயக்கரும் அவரது ஆட்களுமாவர்.

இவரும் பாஞ்சாலக்குறிச்சி பாளைய மக்களும் இணைந்து, சிவகிரியில் இருந்து பெருநாழி வழியாக இராமநாதபுரம் சென்று கொண்டிருந்த, கும்பெனியாரது கிஸ்திப் பணம் கொண்ட பொக்கிஷ வண்டியை வழிமறித்துத் தாக்கினர். சிறந்த போர் வீரர்களைக் கொண்ட கும்பெனியாரது அணியின் துப்பாக்கிச் சூட்டை இவர்களால் சமாளிக்க முடியவில்லை.

இன்னும் ஒரு துணிகரமான முயற்சியைக் கிளர்ச்சிக்காரர்கள் மேற்கொண்டனர். இராமநாதபுரம் கோட்டைக்கு எதிர்புறம் தென்கிழக்கில் அமைந்து இருந்த இராமநாதபுரம் சீமைக் கலெக்டரது மாளிகையைத் தாக்கிக் கலெக்டரைக் கொல்ல முயன்றன அதிர்ஷ்டவசமாகக் கலெக்டர் உயிர் தப்பினார். கிளர்ச்சியாளரது முயற்சி பயனற்றுப் போய்விட்டது.

இதற்கிடையில் முதுகளத்தூர் பகுதி "கலகங்களில்" ஈடுபட்டவர்களுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டாமென்றும், "கலகத்தை" அடக்க உதவுபவர்களுக்கு (அதாவது கிளர்ச்சிக்காரர்களைக் காட்டிக் கொடுப்பவர்களுக்கு) கும்பெனி அரசாங்கம் ஐநூறு சக்கரம் பணம் அன்பளிப்பு அளிக்க இருப்பதாகவும் குடிமக்களுக்கு விளம்பரம் செய்தார்.

நாட்டுப் பற்றும், ராஜ விசுவாசமும் பொங்கிப் பரிணமித்து பரங்கியர் எதிர்ப்பாக அசுர வடிவுடன் சீமையெங்கும் ஆல விருட்சமாகப் பரந்து நின்ற நிலையில், சுய நலமும் பேராசையுங்கொண்ட "சில பிறவிகள்" இந்தப் புனித சேது பூமியில்

அப்பொழுதும் இருந்து வந்தன என்பதைத்தான் கலெக்டரது விளம்பரம் தெரிவிக்கிறது. இதற்குத் தக்க பலனும் விளைந்தது.

ஆப்பனூர் நாட்டு மறவர்களில் சிலரும் சித்திரங்குடி ஊர் மக்களில் சிலரும், மக்கள் கிளர்ச்சியில் கொண்டிருந்த பிடிப்பைத் தளர்த்தியவர்களாகப் பரங்கியர் அணிப்பக்கம் தங்கள் பார்வையைத் திருப்பி, என்ன ஆதாயம் கிடைக்கும் எனச் சிந்திக்கத் தொடங்கினர், மனிதாபிமானமற்ற பிறந்த மண்ணின் மீது சிறிதும் பாசம் இல்லாத சுயநலப்பிண்டங்கள்.

மதுரையில் இருந்து பள்ளிமடத்திற்கு தனது படைகளுடன் வந்த லெப்டி கர்னல் டிக்பர்ன் கிளர்ச்சிக்காரர்களைப் பற்றி உளவு அறிவதில் மிகுந்த ஈடுபாடு காட்டினார். முதுகளத்தூர் கிளர்ச்சிக்காரர்களுடன் நாகலாபுரம், எட்டையாபுரம் பாளையங்களில் இருந்து வந்த இருநூறு பேர் இணைந்துகொண்டு செயல்படுகின்றனர் என்ற செய்தி அவருக்குக் கிடைத்தது. தம்முடன் கொண்டு வந்த பதினெட்டுப் பேரல் (பீப்பாய்) வெடி மருந்து முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ எதிரிகள் கையில் சிக்கி விட்டால் ஆபத்தாகி விடுமே என்ற கவலை அவருக்கு அடுத்துக் கிடைத்த தகவல்.

இராமநாபுரம் சேதுபதி மன்னரது அமைச்சராக இருந்த முத்தையா பிள்ளையின் சகோதரர் முதுகளத்தூர் முத்துக் கருப்பப் பிள்ளைக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. இந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள சித்திரங்குடி சேர்வைக்காரர் மற்றும் சிங்கன் செட்டி ஆகியவர்களைவிட கும்பெனியாரது மிகவும் கடுமையான பலமான எதிரி அவர் எனத் தெரிகிறது.

இன்னொரு செய்தி, நேற்று இரவு பத்து மணிக்கு மேல் கிடைத்த ஓலைச் செய்திப்படி ஐநூறுக்கும் அதிகமான போராளிகள் வெள்ளக்குளம் அருகே தங்கி இருக்கின்றனராம். கமுதிக்

கோட்டையையும் கோட்டைக்கு எதிரே ஆற்றின் எதிர்க்கரையில் உள்ள பேட்டையையும் தாக்கும் திட்டத்துடன் இருந்தனர். ஆனால், அன்று முற்பகல் வரை எவ்விதத் தாக்குதலும் கமுதியில் ஏற்படாததால், அவர்களைத் தொடர்ந்து அன்று பிற்பகலில்தான் நகரத்தார் குறிச்சிக்கும், பின்னர் வெள்ளக்குளத்திற்கும் செல்லப் போவதாக கலெக்டருக்குத் தெரிவித்தார்.

இராமநாதபுரம் கலெக்டர் உடனடியாக எட்டயபுரம் பாளையக்காரர்களுக்கு கடிதம் அனுப்பி, அவரது குடிமக்கள் யாரும் முதுகளத்தூர் போராளிகளுடன் ஒத்துழைக்காமல் பார்த்துக் கொள்ளுமாறு செய்தார். அத்துடன், தளபதி டிக்பர்ன் கோரியவாறு பிடிக்கப்பட்ட போராளிகளை இராமநாதபுரம் சிறையில் வைக்க ஏற்பாடு செய்ததுடன், கண்டி மடத்துக்கு பத்து பேரல் வெடிமருந்தும், பதினைந்து கலம் அரிசியும் அனுப்பி வைத்தார். அன்றைய நிலையில் சுதேசிச் சிப்பாய்கள் நாளொன்றக்கு இரண்டு வேளையும் நல்ல சாப்பாடு சாப்பிட்டால்தான் நன்றாக சண்டையிட முடியும். இத்துடன் இந்தச் சோற்றில்அவர்கள் அறிந்து கொள்ள இயலாத வகையில் போதைப் பொருளான கஞ்சாவையும், கலந்தால் மூர்க்கமாக சண்டையிடுவதற்கு உதவும் என்பது பரங்கிகள் அறிந்து இருந்த ரகசியம்.

# 5. மக்களை எதிர்த்து

மதுரைக்கும் பாளையங்கோட்டைக்கும் கலெக்டரது அபயம் கோரிய கடிதங்களை அவசர தூதவர்கள் பெற்று எடுத்து விரைந்தனர். பாளையங்கோட்டையிலும் மதுரையிலும் உள்ள கும்பெனியாரது தளபதிகள் கும்பெனிப் பட்டாளங்களை முதுகளத்தூர் பகுதிக்கு அனுப்பி வைக்க இசைந்தனர். இதற்கிடையில் இராமநாதபுரம் கோட்டைத் தளபதி மார்டின்ஸ் தலைமையில் ஒரு பட்டாளமும் முதுகுளத்தூர் சென்றது. இந்தத் தளபதி பொறுப்பில் இருந்து வந்தவர், சேதுபதி சீமையின் மூலை முடுக்கு மட்டுமல்லாமல், இந்தச் சீமை மக்களது பலதிறப்பட்ட மனோபாவங்களையும் பழக்க வழக்கங்களையும் நன்கு அறிந்தவர். இதற்கெல்லாம் மேலாகச் சுறுசுறுப்பாகவும் தந்திரமாகவும் செயல்படுபவர். இவரது அணியினரைக் கிளர்ச்சிக்காரர்கள் கடம்போடை என்ற இடத்தில் மறைவில் இருந்து தாக்கி பின் வாங்குமாறு செய்தனர். இந்தத் தாக்குதலில் ஐந்து பரங்கி வீரர்கள் கொல்லப்பட்டனர். இதனையறிந்த கலெக்டர் லூஷிங்டன், மற்றொரு அணியை தளபதி கிரிம்ஸ் தலைமையில்

முதுகளத்தூருக்கு சுற்றுப் பாதையில் அனுப்பி வைத்தார். இந்த அணி, இராமநாதபுரத்தில இருந்து தென் மேற்காகச் செல்வதற்குப் பதில் வடமேற்காகக் காமன்கோட்டை என்ற ஊருக்குச் சென்று அங்கிருந்து தெற்காக முதுகளத்தூர் சென்றது. கிளர்ச்சிக்காரர்கள் கண்ணில்படாமல் இருக்க. ஆனால் இந்தத் திட்டத்தையும், கிளர்ச்சிக்காரர்கள் நிலை குலையச் செய்தனர். இந்த அணியினர் எடுத்துச் சென்ற ஐம்பது துப்பாக்கி மற்றும் முன்னூறு ஈட்டிகளில் பெரும்பாலானவற்றைக் கிளர்ச்சிக்காரர்களிடம் பறிகொடுத்துவிட்டு அவர்கள் இராமநாதபுரம் திரும்பினர். இப்படை தோற்கின், பின் எப்படை வெல்லும்?..... இதுதான் கலெக்டர் லூஷிங்டனது கவலை.

இதற்கிடையில் மதுரையில் இருந்து வந்த கும்பெனித் தளபதி டிக்பர்ன் தலைமையில் வந்த அணியினர் கொண்டுவந்த இரண்டு 1.1/2 பவுண்டர் பீரங்கிகள் பழுதடைந்து பயனற்ற நிலையில்இருந்ததால், நன்கு இயங்கக்கூடிய பீரங்கிகளுடன் வேறு அணியொன்றை பாளையங்கோட்டையில் இருந்த தளபதி பானர்மேன் திருச்சியில் உள்ள ராணுவத் தலைமைக்குத் தகவல் கொடுத்துவிட்டு அவரது அணியுடன் மதுரை வழியாகப் பள்ளிமடம் அடைந்தார். அங்கிருந்த தளபதி டிக்பர்னின்அணியையும் இணைத்துக்கொண்டு, 24.05.1799 பழமானேரிக்கும், பின்னர் 26.05.1799ம் தேதி கமுதிக் கோட்டைக்கும் வந்த இந்த அணியில் மூன்று பவுண்டு பீரங்கிகள் கொண்ட தனிப்படைதான் கும்பெனியாரது உயிர் நாடியாக விளங்கியது.[30]

இதிலிருந்து ஒரு அணி பிரிக்கப்பட்டு, வீரசோழனுக்கு அனுப்பப்பட்டது. கிளர்ச்சிக்காரர்கள் ஏராளமாக அங்கு நிலைகொண்டு இருப்பதாகக் கிடைத்த தகவலில் அவர்கள் பயங்கரமாக ஆயுதபாணிகளாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்தக் கிளர்ச்சிக்காரர்களை எவ்விதம் சமாளிப்பது என்ற திட்டமும் உடனே வரையப்பெற்றது. கும்பெனிப் படைகள் மூன்று அணிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒரு அணி நேரடியாக வீரசோழன் ஊருக்குச் செல்லவேண்டும். மற்ற இரண்டு அணிகளும் ஊரின்

30. MD 253A / 72 dated 17.05.79. P 3426 dated 29.05.79.
பானர்மேன் கடிதம் 29.05.79. P 3246.

வலது, இடது புறங்களில் முன்னேறிக் கிளர்ச்சிக்காரர்களைப் பக்கவாட்டில் நெருங்கித் தாக்கவேண்டும். அவர்களது இந்தத் திட்டம் நூற்றுக்கு நூறு வெற்றியளித்தது. கிளர்ச்சிக்காரர்களுக்கு மிகுந்த சேதம். வேறு வழியில்லாமல் அவர்கள் கிழக்கு நோக்கி பின் வாங்கினர். என்றாலும் கும்பெனியாரின் "மறவர் அணி" அபிராமத்திலும் முதுகுளத்தூரிலும் நிலை கொண்டது. தளபதி டிக்பர்ன் கமுதிக் கோட்டைக்குத் திரும்பினார்.

# 6. எதிர்த்தாக்குதல்களில்

தளபதி பானர்மேன் தலைமையில் பெரும்படை ஒன்று புறப்பட்டு வந்துவிட்டது என்ற தகவல் கிடைத்த பிறகுதான் கலெக்டர் லூஷிங்டனுக்கு நிம்மதி ஏற்பட்டது. மதுரைக் கோட்டையில் இருந்து தளபதி டிக்பர்ன் தலைமையில் இன்னொரு சிறிய அணியும்வந்து 16.05.1799ம் தேதியன்று பள்ளிமடத்தில் இணைந்து கொண்டது. இங்கே இந்த அணிகளைத் தனித்தனி அணிகளாகப் பிரித்து கிழக்கே கமுதி, ஆப்பனூர் குமாரக்குறிச்சி ஆகிய ஊர்களுக்குத் தளபதி பானர்மேன் அனுப்பி வைத்தார். பரங்கிப்படை வருகையை உளவாளிகள் மூலம் தகவல் அறிந்த சித்திரங்குடி சேர்வைக்காரர் முதுகளத்தூர் பகுதி நாடுகள் அனைத்திற்கும் ஓலைகள் அனுப்பி இறுதி போராட்டத்திற்கு ஆயத்தமாக இருக்கும்படி அறிவுறுத்திவிட்டு, கமுதிக்கோட்டையை நோக்கி விரைந்தார்.

முதுகளத்தூர் நோக்கி வந்த பரங்கிப் பட்டாளத்தைக் கிளர்ச்சிக்காரர்கள் கிடாத்திருக்கை அருகே வழி மறித்தனர். நானூறு பேர்களைக் கொண்ட அந்த அணியில் ஒரு சிலரிடம் மட்டும் துப்பாக்கிகளும் மேட்ச் லாக்குகளும் இருந்தன. ஏனையவர்களிடம் மறவர்களுக்குரிய வாள், வேல், வளரி, ஈட்டி ஆகியவைகள் இருந்தன. கோடைக்காலச் சூரியனின் ஏறு வெய்யில், கொடுமையைச்

சிறிதும் கருதாமல் மிகுந்த ஆவேசத்துடன் பரங்கிகளைத் தாக்கினர்.[31] ஊருக்கு மேற்கே நடந்த இந்தப் போரில் பரங்கியர்களது துப்பாக்கிகள் படபடவென தொடர்ந்து வெடித்தன. ஏதோ கோவில் திருவிழாவில் நடக்கும் வானவேடிக்கையாக நினைத்து இந்தத் துப்பாக்கிச் சூடுகளைப் புறக்கணித்து எதிரிகளை வெட்டிச் சாய்த்தனர். சேதுபதி மன்னரது முன்னாள் பிரதானி முத்துக்கருப்பப்பிள்ளை, அவருக்கே இயல்பான முறையில் கறுப்புக் குடையை கையில் பிடித்தவாறு கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆணைகள் பிறப்பித்து போராளிகளுக்கு உற்சாகம் ஊட்டியும் வந்தார். தமது கறுப்புக் குதிரையில் அமர்ந்து இங்கும் அங்குமாகச் சென்று போராளிகளுக்கு ஆர்வம் ஊட்டி வந்தார். பரங்கி அணியின் துப்பாக்கிச் சூட்டிற்கு ஈடு கொடுக்க முடியாத கிளர்ச்சிக்காரர் அணி, பக்கத்தில் உள்ள காட்டிற்குள் பின் வாங்கியது. எவ்வளவுதான் உக்கிரமாகப் போரிடுவதற்கு உள்ளத்தில் உறுதியும் உடம்பில் தெம்பும் இருந்தாலும் எதிராளியின் அசுர தாக்குதலைச் சகித்துக் கொள்ள உடல் வலு உதவ வேண்டுமல்லவா?

இன்னும் ஆப்பனூர், குமாரக்குறிச்சி ஆகிய ஊர்களில் பரங்கிப் படையினருடன் சிறு சிறு மோதல்கள், அவைகளைப் பரங்கித் தளபதி கிரிப்ஸின் தலைமையிலான அணி எளிதாக முறியடித்து கிளர்ச்சிக்காரர்களைத் துரத்தியடித்தது. ஆனால், அதே நேரத்தில் உண்மையான போர் கமுதிக் கோட்டையைச் சுற்றித்தான் நடந்தது. சித்திரங்குடி சேர்வைக்காரரும், அவரது துணைவர்களான சிங்கன் செட்டியும், பொட்டூரும் பரங்கிப் படைகளுடன் அவர்களது வீர மரணப்போரை இந்தக் கோட்டையில்தான் தொடங்கினர். பிறந்த மண்ணைக் காக்க எழுந்த பெரும் போர், சங்ககால மறவனது வீரத்தையும் வெறியாட்டத்தையும் நினைவுபடுத்தும் பேராண்மைப் போர்.

கி.பி.1710 முதல் 1726 வரை இராமநாதபுரம் மன்னராக இருந்த மன்னர் முத்து விஜய ரகுநாத சேதுபதிதான், இந்தக் கோட்டையை அமைத்தார். வரலாற்றில் பொன்றாத புகழுடன் விளங்கும் இந்தப்

31. Ramnad Collectorate vol 95A / 09.05.79 pp 998-1000.

புனித மன்னர், பிரெஞ்சுநாட்டுப் பொறியாளரது திட்டப்படி குண்டாற்றின் வடக்குக் கரையில் இயற்கையான பாறைகள் நிறைந்த தளத்தில் மூன்று சுற்று மதில்களுடன் வட்ட வடிவில் அமைத்தார். கி.பி.1770ம் வருட ஆங்கிலேயரின் ஆவணத்தில், இந்தக் கோட்டை இராமநாதபுரம் மன்னருக்குச் சொந்தமான எட்டுக்கோட்டைகளில் ஒன்றாகவும், இராமநாதபுரம் கோட்டைக்கு அடுத்த நிலையில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டு இருப்பதுடன், குண்டாற்றுப் போக்கிற்கும் மிகவும் அடர்த்தியான காட்டுப் பகுதிக்கு நடுவில் அமைந்து இருப்பதாகவும் வரையப்பட்டுள்ளது. இந்தக் கோட்டையை நன்கு வலிமைமிக்க அமைப்பாக பரங்கியர் மாற்றியிருந்தனர். அவர்களது சிறந்த அரண்களான பாளையங்கோட்டைக்கும், இராமநாதபுரத்திற்கும் இடையில் முதுகளத்தூர் கிளர்ச்சி தொடங்கிய பிறகு கடந்த மூன்று வாரங்களாக இந்தக் கோட்டைப் பாதுகாப்பை உடைத்துக் கும்பெனி அணியினை அழித்து ஒழிப்பதற்கான திட்டத்தைச் சித்திரங்குடி சேர்வைக்காரர் வரைந்து இருந்தார். ஆதலால், சண்டை கடுமையாக நடந்தது. இரு தரப்பினரும், மிகுந்த உத்வேகத்துடனும் தாக்குதலில் ஈடுபட்டனர் உச்சிவேளை தாண்டி பிற்பகல் நெருங்கிக் கொண்டு இருந்தது. கிளர்ச்சிக்காரர்களது துப்பாக்கிச் சூட்டினை கோட்டைக்குள்ளிருந்து புறப்பட்டு வந்த பீரங்கிக் குண்டுகள் வாயடைத்து விடுமாறு செய்தன. கிளர்ச்சிக்காரர்கள் களைத்துச் சோர்ந்து விட்டனர். அடுத்து என்ன செய்யலாம் என்று பேசி முடிவு எடுத்துக் கொண்டிருக்கும்பொழுது மேற்குத் திசையில் ஓர் ஆரவரம் கேட்டது. படையணி ஒன்று நாராயணபுரம் அருகே கும்பெனிக் கொடிகளுடனும், ராணுவ வாத்திய ஒலியுடனும் கோட்டையை நோக்கி வருவதும் தெரிந்தது.

ஆம், அது கும்பெனியாருடைய படை அணிதான். கமுதிக் கோட்டையை நெருங்கி வந்தபொழுது அந்த அணியினரைப் பற்றி முழுமையாக அறிய முடிந்தது. அணிக்குத் தலைமைபெற்று வருபவர் கலெக்டர் லூஷிங்டன். ஒரு சில வெள்ளைக்காரர்களைத் தவிர மிகப் பெரும்பாலானவலர்கள் மறவர்கள், கள்ளர்கள். ஆம். சிவகெங்கைச்

சீமை குடிமக்கள். என்ன கொடுமை! மண்ணின் மாண்பை, மகத்தான பெருமையைக் காப்பாற்ற மறவர்சீமை மக்களது மூத்தகுடிமகனான சேதுபதி மன்னருக்கு ஏற்பட்ட இழிவைப் போக்க தங்களது உதிரத்தைக் கொட்டி உயிரைக் கொடுததுப் போராடிக் கொண்டிருக்கும்பொழுது மறவர் சீமை மக்களுக்கு இப்படி ஒரு இடைஞ்சலா? தம்முடன் இணைந்து நின்று போராட வேண்டிய நமது இனத்தவர், குலத்தவர், சகோதரர்கள் மான, நாண உணர்வுகள் இல்லாமல் வெள்ளைப் பரங்கியரின் பின்னே வழி நடந்து வருகின்றனர்! நம்மை அழிக்க!! ஒரு கணம் இப்படித்தான் சித்திரங்குடி சேர்வைக்காரரும், அவரது கூட்டாளிகளும் நினைத்தனர். ஆச்சரியத்தால் அதிர்ந்து போயினர். இதைப்பற்றிக் கவலைப்பட்டு பயன் இல்லை. வெள்ளம் தலைக்கு மேல் ஓடுகிறது. நீரும், காற்றும் போல நிச்சலனமாக சுதந்திரத்தினை அதே மண்ணுக்கே உரிய தன்னுரிமையை, நமக்கு முன்னால் வாழ்நது முடிந்த முந்தையோரது வழிவந்த பெருமையை நிலைநாட்ட இறுதிச்சொட்டு இரத்தம் உள்ளவரை போராட வேண்டியது தான். எதிர் அணியினர் யாராக இருந்தால் என்ன? இந்த அணியைப் பொருத என்ன உத்தி?

வெறுப்பு நிறைந்த அவர்களது இதயத்தைப் போல வெஞ்சினத்தால் அவர்களது வாயிதழ்கள் துடித்தன. கரங்களிலும், கால்களிலும் ஒரு புதிய தெம்பு. போர்களத்தில் ஒப்பாரியா? எதிரிகள் நம்மவர்கள் இல்லை. அவர்கள் எதிரியின் கைப்பாவைகள். எதிரிகள், நம்மை அழிக்க வருபவர்கள். நம்மவர்களாக இருக்க முடியுமா? அல்ல. பகைவர்களின் கூட்டாளிகள். அவர்களைப் பொருதி, அழிப்பதுதான் நமது தர்மம். அடுத்த கணம் மறவர்களுக்கே உரிய போர் முழக்கம். கிளர்ச்சிக்காரர்களது உள் வயிற்றினின்றும் வெளிவந்து ஒரே குரலில் ஒலித்தது. விண்ணை முட்டும் பயங்கரமான அந்தப் போர் முழக்கத்தில் மறவர் சீமையின் பேரும், புகழும் மறவ இனத்தின் மான உணர்வும் எதிரொலித்தன. நாள் முழுவதும் போராடித் தளர்ந்தவர்கள் வீறு பெற்றனர். "வெட்டுங்கள்! குத்துங்கள்!" போர் மீண்டும் உக்கிர நிலையை அடைந்தது. உடலில் தெம்பு இல்லை. ஆனால்,

உள்ளத்தில் ஊறிய உணர்வு பகைவரை அழிக்க வேண்டும் என்ற உந்துதல். கிளர்ச்சிக்காரர்கள் போராடினர். உக்கிரமமாகப் பலன் இல்லை. கமுதிக்கு வடகிழக்கே உள்ள கீழ்க்குளம் காட்டை நோக்கி சண்டையிட்டவாறு பின்வாங்கினர். சிவகெங்கைப் பிரதானி சின்னமருது சேர்வைக்காரர் மகனது தலைமையில் சிவகெங்கைச் சீமைப் போர் வீரர்கள் அணி மூர்க்கமாகப் போரிட்டது. தறிபட்டுஓடும் முயல்களை, வெறிகொண்ட ஓநாய்கள் விரட்டித் தாக்குவது போல். ஏற்கனவே, போராடிக் களைத்துப் போயிருந்த கிளர்ச்சிக்காரர்களால் அவர்களது தாக்குதலைச் சமாளித்து நிறுத்த இயலவில்லை. வழியெங்கும் பிணக்காடு. கல், தச்சனது சிற்றுளியில் சிதைந்து பின்னப்பட்ட கவின்மிகு சிற்பங்கள் போல, ஆங்காங்கு போர் வீரர்களின் சடலங்கள். இவர்களில் முப்பது சடலங்கள் மட்டும் கிளர்ச்சிக்காரர்களது. ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் பலத்த காயத்துடன் கீழ்க்குளம் நோக்கிச் சென்றனர். நாற்பது பேர் எதிரியின் பிடியில் அகப்பட்டுத் தவித்தனர். சிங்கன் செட்டி தலைமையில் நின்று கோட்டை அருகே போராடிய அணி முழுமையாகப் பரங்கிப் படைகளால் அழிக்கப்பட்டு விட்டது. அவர்களது தலைகளைத் தனியாக வெட்டி எடுத்து நீண்ட வேல் கம்புகளின் நுனியில் சொருகியவாறு சில கிராமங்களில் நட்டு வைத்தனர். அதனைப்பார்த்துப் பயந்த மக்களைக் கிளர்ச்சிக்காரர்களிடமிருந்து தனிமைப்படுத்த பயமுறுத்தும் திட்டமாகும்.

தோல்வியினால் ஏற்பட்ட வேதனையுடன் தனது வலது கை போன்று இந்தக் கிளர்ச்சியில் வீராவேசத்துடன் இயங்கிய சிங்கன் செட்டியின் வீர மரணத்தையும எண்ணி, எண்ணி வருந்தியவாறு சித்திரங்குடி சேர்வைக்காரர் தனது பரிவாரங்களுடன் கிழக்கே காக்கூர் நோக்கிச் சென்றார்.

மறவர் சீமையின் வெள்ளைப் பரங்கி நிர்வாகத்தை நாற்பத்து இரண்டு நாட்கள் பயங்கரமாக உலுக்கிய இந்த மக்கள் கிளர்ச்சி தோல்வியுற்றது. இந்தச் சீமை மறவர்கள் கொட்டிய இரத்தம், வீர

வழிபாடாக விளங்கிய உயிர்க் காணிக்கை அனைத்தும் வீணா? அல்ல!

காலச் சுழற்சியின் சுவடுகளில் அநீதி, அக்கிரமம், அரசியல் கொடுமைகள் மட்டுமல்லாது நாட்டுப்பற்று, சமூக நீதி, நியாய உணர்வுகள் ஆகியவைகளும் கூட நசுங்கி மண்ணோடு மண்ணாகக் கலந்து விடுகின்றன. இதில் கொட்டப்பட்ட குருதி, கண்ணீர், மக்கி மறைந்த தியாகம் ஆகியவை மீண்டும் நரகாசுரனைப்போல நாளையே உயிர்த் தெழுவதுடன் மக்களின் மகத்தான வெல்லும் சக்தியாக மறு உருப் பெறுவது நிச்சயம்!

காடுகள் அழிந்துதான் நாடுகளாகி இருக்கின்றன. வீடும், வயலும், தோட்டமும், துரவும் ஒருநாளில் ஏற்பட்டவை அல்லவே! எத்துணையோ நாட்கள், எத்துணையோ பேர் தொடர்ந்து செய்த உழைப்பு எய்திய பெரும் இழப்புகள்!

முன்னிருந்தவர்கள் மறைய, பின் வந்தவர்கள் முன்னவர் பணியை, பெருமையைப் போற்றி உரிமை பெறுகின்றர். சாதனை படைக்கின்றனர். சரித்திரத்தில் நிற்கின்றனர்.

இதற்கு இடர்ப்பாடு எழும்பொழுது எல்லாம் மக்கள் சக்தி திரண்டு. மகோன்னத உருப் பெறுகிறது.

பகலவன் வெளிச்சம் குறையும்பொழுது இருட்டு, எப்பொழுதுமே இந்த இருட்டு பூமியைப் பற்றிக் கொண்டு நிற்பதில்லையே! ஒரு சில மணிநேரம் கழித்து மீண்டும் கதிரவனின் கவின் ஒளி உலகு முழுமையும் ஒளி வெள்ளத்தில் மிதக்கச் செய்கிறது.

காலத் திசையில் சில கீறல்கள், வேதனையும், விரக்தியும் விரவிய பயணம். ஆம், நாளை அவைதானே வரலாறு! அந்த யுகப் பிரளயம் அப்பொழுது முதுகளத்தூர் சீமையில் நிகழ்ந்து கொண்டிருந்து......

# 7. தலைக்கு விலை

குமாரக்குறிச்சி, முதுகளத்தூருக்குத் தென்கிழக்கே உள்ள சிற்றூர். மிகவும், அமைதி நிறைந்த குடியிருப்பு. இருபது, முப்பது வீடுகளும், ஒரு மடமும் அங்கிருந்தன. வழிப்போக்கர்கள் போல சித்திரங்குடி சேர்வைக்காரரும், அவரது தோழர்களும் அங்கு தங்கி இருந்தனர்.

கமுதிக் கோட்டைப் போரில் ஏற்பட்ட தோல்வி. சிவகெங்கைச் சீமை மறவர்களது சகோதரத் துரோகம், சிங்கன் செட்டியின் தியாகம், கீழ்க்குளம் காட்டுப்போரில் சிவகெங்கை மறவர்களும் கும்பெனியாரும் நடத்திய பச்சைப் படுகொலை இவையனைத்தும் மாறி, மாறிச் சித்திரங்குடி சேர்வைக்காரரது மனத்தை அரித்துக்கொண்டு இருந்தன. அடுத்து என்ன செய்யலாம்? என்ன செய்ய வேண்டும்? என்ற வினாக்களுக்கிடையிலான முடிவடையாத திகைப்பு, அவரது மன திட்பத்தையும், சிந்தனைத் திறனையும் அலைக்கழித்துக் கொண்டிருந்தன.

போதாக் குறைக்கு, முதுகளத்தூர் சென்று வந்த நண்பர்கள் தெரிவித்த செய்திகள் வெந்த புண்ணில் வேல் உருவுவது போன்ற வேதனைச் சுமையை மிகுதிப் படுத்தின. பேரையூரில்,

கள்ளக்குளத்தில், உலகனோடையில், ஆனையூரில் கும்பெனிப்படைகள் குடிமக்களை இம்சித்த நிகழ்ச்சிகள். குண்டுகுளம், பாப்பான்குளம் ஆகிய ஊர் மக்கள் இன்னும் முந்தைய வெறியுணர்வுடன் கும்பெனிக் கூலிகளைத் தாக்கியதில், அந்தப் பகுதி முழுதும் கும்பெனிப்படை தாக்கியவர்களைத் தேடும் முயற்சியாக ஊர்மக்கள் அனைவரையுமே இழிவுபட நடத்தி, தலைகுனிய வைத்த தகாத அக்கிரமங்கள். தங்கு தடையின்றி மேற்கொண்ட பரங்கிகளைத் தட்டிக் கேட்கும் திராணி யாருக்குமே இல்லை. நியாய உணர்வு பெற்ற நெஞ்சங்களிலும், நீதி மறைந்து விட்டது.

அடுத்து முதுகளத்தூரைச் சுற்றிலும் பலமான கோட்டை ஒன்றை அமைக்க கும்பெனித் தளபதி பானர்மென் சென்னையில் உள்ள கவர்னருக்கு ஆலோசனை அளித்து இருப்பதாகவும், முதுகளத்தூரில் கும்பெனியாரது படையணி நிரந்தரமாக நிலை கொள்ளும் நிலையான பாசறை ஒன்று அமைக்கப் போவதாகவும் சொல்லிக் கொண்டனர்.

இன்னொரு செய்தி, கமுதிக் கோட்டைச் சண்டையிலும், கீழ்க்குளம் காட்டுச் சண்டையிலும் கும்பெனியாருக்குப் பக்கபலமாக நின்று போரிட்டு கிளர்ச்சிக்காரர்களைஅழித்த சிவகெங்கைச் சீமை சின்ன மருது சேர்வைக்காரரின் பிரதானி மகனுக்கு சென்னைக் கோட்டையில் கும்பெனிக் கவர்னர் பாராட்டு விழா நடத்த இருப்பதாகவும், போரில் பங்கு கொண்ட சிவகெங்கை வீரர்களுக்கு கூடுதல்படி அன்பளிப்பாக வழங்க இருப்பதாகவும் பேசிக்கொண்டனர். தியாகிகளைவிட துரோகிகளுக்குத்தானே பாராட்டும், புகழ்ச்சியும அதிகம்! நாட்டுப் பற்று அற்ற அந்தக் கூலிகள்தான் ஏகாதிபத்திய வாதிகளின் ஏறுபடிகள்!

அதற்கு மேலும், குமாரக்குறிச்சியில் தங்கி இருக்க மனம் ஒப்பாமல் சித்திரங்குடி சேர்வைக்காரர் அங்கிருந்து மேற்கு நோக்கிப்

புறப்பட்டார். முதுகளத்தூர் செல்லாமல் சித்திரங்குடி செல்லும் வழியில் இளஞ்செம்பூரில் அந்த ஊர்த் தலைவர் பண்டாரத் தேவரது மகனைச் சந்தித்தார். அப்பொழுது அவர் தெரிவித்த செய்தி இன்னும் அதிர்ச்சி அளிப்பதாக இருந்தது. நடைபெற்று முடிந்த கிளர்ச்சியில் பங்குகொண்ட அனைத்து குடிமக்களுக்கும் ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக கும்பெனியார் பொது மன்னிப்பு வழங்கி இருப்பதாகவும், மக்கள் கும்பெனியாருடன் ஒத்துழைத்து நாட்டில் அமைதி நிலவ உதவவேண்டும் என்ற அறிவிப்புகள் முதுகளத்தூர் சந்தையில் ஒட்டடப்பட்டிருப்பது இன்னும் சுற்று வட்ட ஊர்களிலும் பறை கொட்டி இந்த விபரத்தை தெரிவித்தும் வருகின்றனர் என்ற செய்திதான் அது. மேலும், இந்தப் பொதுமன்னிப்பு சித்திரங்குடி சேர்வைக்காரருக்கும், முதுகளத்தூர் முத்துக் கருப்ப பிள்ளைக்கும் ஏற்புடையது அல்ல என்றும் அதில் குறிப்பிட்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.[32]

சேர்வைக்காரருக்குப் புரிந்து விட்டது. பாம்பு காலைச் சுற்ற ஆரம்பித்து விட்டது. அது கடிக்காமல் விடாது! ஆதலால், சொந்த ஊருக்குச் செல்வது அங்கே காத்திருக்கும் கும்பெனிக் கூலிகள் விரித்து வைத்துள்ள வலையில் சிக்கிக் கொள்வதாக முடியும், வேறு வழி இல்லை! அப்படியானால் அடுத்துச் செய்ய வேண்டியது என்ன? நிதானமாக - ஆறுதலாக முடிவு செய்ய வேண்டியதொன்று. ஆதலால் முதுகளத்தூர் பகுதியின் தென்பகுதியில் உள்ள காடல்குடி பாளையத்திற்குக் கடலாடி வழியாகச் சென்றார். அதுவும் அண்மைக் கிளர்ச்சியில் கும்பெனியாருக்கு எதிராகக் கலகக்கொடி உயர்த்திய ஊர். அங்கும் அதிக நாட்கள் தங்க இயலவில்லை. அங்கிருந்து பிள்ளையார் குளத்திற்கும், பின்னர், பாஞ்சாலக் குறிச்சியைச் சேர்ந்த வில்லார்குளத்திற்கும் சென்றார். அங்கும் ஒரு வாரம். அப்பொழுது ஒரு முடிவுக்கு வந்தார். மறவர் சீமையை விட்டுச் சென்று சிலகாலம் பஞ்ச பாண்டவர்களைப் போன்று "தலைமறைவு வாசம்" மறைந்து வாழ்வது. கும்பெனியார் தம்மை ஓரளவு மறந்து தமது சீமை மக்களுக்கு இழைக்கும் கொடுமைகளை நிறுத்திக் கொள்வார்கள்

2. MDR 1139 / 1802 p.p. 45-55.

அல்லவா?

மீண்டும் சேர்வைக்காரர் காடல்குடிக்கு வந்து அங்கிருந்து கமுதியையும், மண்டலமாணிக்கத்தையும் சுற்றிக்கொண்டு சிவகெங்கைச் சீமை நெட்டூர் வழியாக தொண்டிக்கும் பின்னர், வடக்கே சோழ நாட்டிற்கும் சென்றார். திருநெல்வேலிச் சீமையிலிருந்து ஒரு நெடுஞ்சாலை. மறவர் சீமையின் திருச்சுழியில் பார்த்திபனூர், காளையார்கோவில், தொண்டி, சுந்தரபாண்டியன்பட்டினம் வழியாகக் கிழக்குக் கடற்கரையை ஒட்டி சோழ நாட்டிற்கு ஒரு வழி இருந்தது. இதனையே வணிகர்கள் தங்கள் வியாபாரப் பொருட்களை எடுத்துச் செல்லப் பயன்படுத்தினர். இந்த வழியில்தான் மயிலப்பன் சேர்வைக்காரரும் ஒரு இடையரைப்போல தலையில் முண்டாசும், இடையில் வேட்டியும், தோள்களைச் சுற்றிக் கம்பளப் போர்வையும், ஒரு கையில் ஆடு விரட்டும் கம்புமாக மாறுஉடையில் சென்றார். யாரும் சந்தேகப் படாதவாறு நடந்து சென்றார். அங்கு வெள்ளான்குண்டு என்ற சிற்றூரில் தங்கினார்.

மறக்குடித்தலைவர் இடைக்குடி மகனாக மாறுவேடம் புனைந்து சென்றதற்குக் காரணமும் இருந்தது. மறவர் சீமையின் தென்பகுதியில் உள்ள இடைக்குடி மக்கள், இளவேனிற் காலமாகிய சித்திரை, வைகாசி மாதங்களில் தங்களது ஆட்டுக்கிடைகளை மேய்த்தவாறு சோழச் சீமைக்குச் செல்வார்கள். அவர்களில் தெற்கத்தியர், நாட்டு இடையர், சிவிகையர், சிறுதாலி கட்டி என்று பலவகைப் பிரிவுகள் இருந்தாலும், அவர்கள் "பெண்டுக்கு மேக்கி" என்று அழைக்கப்பட்டனர். இதனால் "ஆட்டை மேய்த்ததும் ஆயிற்று, அண்ணனுக்கு பெண்ணு பார்த்ததும் ஆச்சு" என்ற வழக்கு ஏற்பட்டது. சோழ நாட்டு வடபகுதிவரை சென்றுவிட்டு, ஆங்காங்கு வயல்களில் கிடைகளை அடைய வைத்தற்கான கூலி நெல்லையும் பெற்றுக் கொண்டவர்களாக, ஆடி பதினெட்டாம் பெருக்கிற்கு முன்னர் ஊர் திரும்பி விடுவர். சித்திரைக்கும், ஆனி மாதங்களுக்கும் இடையில் நூற்றுக் கணக்கில் செம்மறி ஆட்டுக் கிடைகள் வடக்கு நோக்கிச் சோழ நாட்டிற்குச்

சென்று பின்னர் திரும்புவதுமாக இருக்கும். இந்தப் பழக்கம் இன்றும் தொடர்கிறது. இராமநாதபுரத்திற்கு தெற்கே உள்ள இடைக்குடி மக்கள் செம்மறி ஆட்டுக் கிடைகளை சோழ நாட்டிற்கு ஆண்டுதோறும் ஓட்டிச் சென்று வருகின்றனர்.

சோழ சீமை வெள்ளான்குண்டில் தங்கி இருந்த சித்திரங்குடி சேர்வைக்காரர் விவசாயக் கூலியாக வேலை பார்த்து, அதில் கிடைக்கும் ஊதியத்தில் வாழ்க்கையைக் கழித்து வந்தார். என்றாலும், இரவு நேரங்களில் அவரால் உறங்க முடியவில்லை. பிறந்த மண்ணின் சிந்தனைகள் அவரது உறக்கத்தை ஓட்டிவிடும். சேதுபதி மன்னரோ சிறையில் வாடிக் கொண்டிருக்கிறார். இந்த அவலநிலையை மாற்றி மன்னரை விடுதலை செய்யுமாறு நிர்பந்திக்கத் திரட்டப்பட்ட மக்கள் கிளர்ச்சி, துரோகத்தின் முன்னால் கும்பெனியாரது வெடி மருந்துத் திறனை வெற்றி கொள்ள முடியாமல் தோல்வியைத் தழுவி விட்டது. அடக்கு முறையிலும் பலவித இழப்பீடுகளிலும் தளர்ந்து போன மக்களை மீண்டும் திரட்டுவது எப்படி? திரட்டிய மக்களைக் கொண்டு கும்பெனி நிர்வாகத்திற்கு எவ்விதம் கடைசி மரணஅடி கொடுப்பது? அதற்குரிய உத்திகள் எவை?

இத்தகைய சிந்தனைகளில் அவரது இரவு நேரம் முழுவதும் கழிந்து விடும். விடியலுக்கு கோழி அடுத்தடுத்து கூவும் ஓசை. அத்துடன் அன்றைக்கு மேற்கொள்ள வேண்டிய வேலைகளின் நினைவு அவரைப் படுக்கையை விட்டு எழுந்து விடச் செய்யும். இவ்விதம் இரண்டு மாதங்கள் ஓடி மறைந்து விட்டன.

இவ்விதம் உறக்கமே இல்லாமல் எத்தனை இரவுகளைக் கழிப்பது? அந்த இரவுகளில் மூலை முடுக்குகளில் ஒளிந்து கொண்டிருக்கும் இருளின் பரந்த கரங்களைப் பற்றி எத்தனையோ சிந்தனைகள். மறவர் சீமையின் எதிர்காலம் பற்றிய கனவுகள். என்ன பயன்? இவைகளுக்குக் கிடைத்துள்ள பரிசு குடிமக்களுக்கு ஏற்பட்ட

சொல்லொணாத் துயரங்கள். இழப்புகள். சிங்கன் செட்டி போன்ற சிறந்த மக்கள் தலைவர்களைக் கிளர்ச்சியிலே களபலி கொடுத்தது. இந்த நிலையை எவ்விதம் மாற்றுவது? அல்லது மக்களை மீண்டும் திரட்டிக் கும்பெனி நிர்வாகத்துடன் இறுதியாக மோதுவது! (கொரில்லாப் போர்) மறைந்திருந்து தாக்கும் முறைகளில் அவர்களை அவர்களது சொத்துக்களை, அவர்களது சாதனங்களை அவர்களது கைக்கூலிகளை அழிதது வெற்றி பெறுவது, அல்லது அந்தப் போரிலே - வெள்ளைப் பரங்கிகள் ஒருவேளை மீண்டும் வெற்றி பெற்றுவிட்டால்.... சங்க காலம் தொட்டு வேங்கை மார்பன், உக்கிரப் பெருவழுதியும், பசும்பூண் பாண்டியனும் மாற்றாரை எதிர்த்துப் புறமுதுகு இடச் செய்த இந்தப் புனித மண்ணில் தமது உயிரை மாய்த்துக் கொண்டு மறக்குடியின் மானத்தைக் காப்பது!

ஆம்! இதவே சரியான வழியாகும். எத்தனை நாட்களுக்கு மாற்றுடையில் அன்னியச் சீமையில் கோழை போல மறைந்து வாழ்வது? சீச்சீ..... மறவன் கோழையா? இல்லை. எப்பொழுதுமே இல்லை. அவன் கோழையாக வாழ்ந்து இருந்தால், சோழப் பேரரசும் பாண்டியப் பேரரசும் தோன்றி இருக்குமா? அவர்களது புலிக்கொடியும், மீன் கொடியும் புவி முழுவதும் பறந்ததுடன் இமயத்தை எட்டி இருக்குமா? ஆயிரக்கணக்கான மறவர்கள் பல போர்க் களங்களில் சாய்ந்து மடிந்த பிறகுதானே! இந்தத் தியாகச் சின்னமான வெற்றிக்கொடிகள் கங்கைச் சமவெளியிலும் கடாரத்திலும் பட்டொளி வீசிப் பறந்தன. தமிழனது பேராண்மையும், போர்த் திறனும் கலங்கரை விளக்காகப் பளீச்சிட்டு வரலாறு படைத்தன.

தலைமறைவாகவே பொழுதைப் போக்கினால், என்றும் நிரந்தரக் கோழையாக அல்லவா மாறிவிட நேரிடும். இது மறப்பண்பு அல்லவே! ஒருவகையாகச் சித்திரங்குடி சேர்வைக்காரர் மறவர் சீமை திரும்ப முடிவு செய்து விட்டார்.

# 8. எதிர்பாராத நிகழ்வுகள்

நெட்டூர்,

சின்னமறவர் சீமையான சிவகெங்கைச் சீமையின் தென்பகுதியில் உள்ள சிற்றூர். பெரிய மறவர் சீமையின் வடமேற்கு எல்லையை ஒட்டியமைந்திருந்தது. ஆனால், வரலாற்று புகழ் மிக்கது. பாண்டிய இளவல்கள் விக்கிரம பாண்டியனும், வீரபாண்டியனும், மதுரை அரியாசனத்துக்குத் தங்களுக்குள் போட்டியிட்டபொழுது மூன்றாவது குலோத்துங்க சோழன் விக்கிரம பாண்டியனுக்காக வீரபாண்டியனுடன் போராடி அவனை இந்த ஊரில் நடந்த போரிலதான பொன்முடியைப் போட்டுப் புறமுதுகிட்டு ஓடும்படி செய்தான். பாண்டியனது முடித்தலைக் கொண்டு வெற்றி வாகைசூடிய ஊர். பாண்டியன் முடித்தலை கொணட போா.

இங்குள்ள சத்திரத்தில் சோழ நாட்டில இருந்து வந்த சித்திரங்குடி சேர்வைககார சிலநாட்கள் தங்கி இருந்தார். மறவர் சீமை நிலைமை பற்றிய நடபபுகளை சேகரித்துக்கொண்டு இருந்தார். இநதச செய்தி, சிவகெங்கையில் உள்ள பிரதானி பெரிய மருது சேர்வைககாரருககு எட்டிவிட்டது. உடனடியாக பெரிய மருதவின தூதுவர் நெட்டூர் வந்து சிததிரஙகுடி சேர்வைக்காரரைச் சந்தித்தார். இன்னும் ஒரு

கிழமையில் பெரிய மருது சேர்வைக்காரரர் வந்து சந்திப்பாகவும், அதுவரை நெட்டூரில் அவர் தங்கி இருக்குமாறும் கேட்டுக் கொண்டார். அவரது உபயோகத்திற்காக பன்னிரண்டு கலம் அரிசி/வரத்து வண்டிகளில் வந்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்துச் சென்றார்.

சித்திரங்குடி சேர்வைக்காரருக்கு சிவகெங்கைப் பிரதானி பெரிய மருது அனுப்பிய செய்தி மிகுந்த வியப்பை அளித்தது. மூன்று மாதங்களுக்கு முன் முதுகளத்தூர் வட்டார மக்களது கிளர்ச்சியை படுதோல்வி அடையச் செய்து பரங்கிகளுக்கு பக்கபலமாக இருந்த சிவகெங்கைப் பிரதானிகளுக்கு இப்பொழுது திடீரென என்ன ஏற்பட்டது? ஒருவேளை தனது தலைக்கு விலை வைத்துள்ள கும்பெனியாருடன் தம்மைப் பிடித்து ஒப்படைக்கும் சூழ்ச்சியாக இருக்கலாமோ என்று கூட சேர்வைக்காரர் எண்ணினார். சிவகெங்கைப் பிரதானியார், மீனுக்குத் தலையும், பாம்புக்கு வாலுமாக கும்பெனியாரிடமும் நம்மிடம் இரட்டை வேடம் போட்டுக் காண்பிக்கிறாரா.....? வஞ்சகம் சூழ்ச்சி எதுவாக இருந்தால் என்ன?

இத்தகைய சிந்தனையில் ஆறு நாட்கள் ஓடிவிட்டன.

பெரிய மருது சூடியூர் சத்திரத்திற்கு வந்தவுடன் தமது பல்லக்கை நெட்டூருக்கு அனுப்பிச் சித்திரங்குடி சேர்வைக்காரரை அழைத்து வருமாறு செய்தார். இருவரும் நேருக்கு நேர் முதன்முறையாகச் சந்தித்துக் கொண்டனர். அந்தச் சந்திப்பில் இருவரும் பல செய்திகளை - இராமநாதபுரம் சீமை, சிவகெங்கைச் சீமை நிலைமைகளுடன் பக்கத்தில் உள்ள நெல்லை, மதுரை, திண்டுக்கல் சீமை பாளையக்காரர்கள் கும்பெனி நிர்வாகத்திற்கு எதிராகக் குமுறி எழுந்துள்ள குடிகளது நிலைமைகளையும் பரிமாறிக் கொண்டனர். இவைகளுக்கெல்லாம் மேலாக, அடுத்து மறவர் சீமையில் மீண்டும் குடிமக்களைக் கும்பெனியாருக்கு எதிராகத் திரட்ட வேண்டியதன் அவசியத்தையும் பெரிய மருது சேர்வைக்காரர்

விளக்கியதுடன் கமுதிக்கோட்டை, கீழ்குளம் போரில் உண்மையான நிலையைப் புரிந்து கொள்ளாமல், கலெக்டர் லூஷிங்டனது வஞ்சகப் பேச்சை நம்பிப் பரங்கிகளுக்குப் படை உதவி செய்ததற்கான ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

அதுவரை பெரிய மருது சேர்வைக்காரரது பேச்சை மிகவும் அக்கரையுடன் கேட்டு வந்த சித்திரங்குடி சேர்வைக்காரரது உள்ளத்தில் சிவகெங்கைப் பிரதானியது உண்மையான பரங்கி எதிர்ப்பு உணர்வுகளை எளிதாக உணர்ந்தார். நடந்து முடிந்த கோரமான நிகழ்வுகைளக் கெட்ட கனவு போல மறந்து விட்டு தனது இரு பெரும் இலட்சியங்களில் ஒன்றாகிய வெள்ளைப் பரங்கிகளை அழித்து ஒழிப்பதற்குச் சிவகெங்கைப் பிரதானியிடம் நேசக்கரம் நீட்டினார், சித்திரங்குடி சேர்வைக்காரர். மிகுந்த மன நிறைவுடன் பெரிய மருது சேர்வைக்காரர் சிவகெங்கை திரும்பினார்.

அவர் அறிவுறுத்திய பிரகாரம் சிறிது காலம் ஓய்வாக நெட்டூரில் இருப்பதென்று சித்திரங்குடி சேர்வைக்காரர் முடிவு செய்தார். ஆனால், அவரால் அமைதியாக இருக்க முடிந்ததா? இல்லை.... எங்கே அமைதி? சேதுபதி மன்னர் சிறைக் கம்பிகளை உடைத்து வெளியேறும் வரை.... மறவர் சீமை மண்ணில் இருந்து மக்களது எதிரிகளான பரங்கிப் புழுக்களை அள்ளி அப்புறப்படுத்தும் வரை.... அமைதி எங்கே?

சிவகெங்கையில் இருந்து அடிக்கடி ஓலைகள் வந்தன. கட்டபொம்மனது பாஞ்சாலக்குறிச்சி கோட்டை மீது கும்பெனியாரது போர்.

கட்டபொம்மனது கூட்டாளிகளான நாகலாபுரம், ஏழாயிரம் பண்ணை, கோலார்பட்டி, காடல்குடி, குளத்தூர் பாளையக்காரர்களையும் ஒடுக்கத் திட்டம்.[33]

33. Ramnad Collecterate vol 89 / p 3721.

தோல்வியுற்ற கட்டபொம்மன் சிவகெங்கைக் காடுகளில் அபயம் பெற்றது. பின்னர், தவறுதலாக புதுக்கோட்டைத் தொண்டமானது காளாப்பூர் காட்டுப் பகுதிக்குள் சென்றதும், தொண்டைமான் கட்டபொம்மனைப் பிடித்து கும்பெனியாரிடம் ஒப்படைத்தது.

தளபதி பானர்மென் ராணுவ விசாரணை என்ற நாடகம் நடத்தி கட்டபொம்மனைக் கயத்தாறில் தூக்கில் ஏற்றியது.[34]

கட்டபொம்மனது உறவையும், கிளைகளையும் கீழ்த்தரமான முறையில் நடத்தி அவர்களைக் குற்றவாளிகளைப் போல பாளையங்கோட்டையிலும் பூந்தமல்லியிலும் சிறையில் தள்ளியது.

கட்டபொம்மனது பாஞ்சைப் பாளையத்தைச் சிதைத்து, அழித்ததுடன் அல்லாமல் அவரது கூட்டாளிகளான குளத்தூர், காடல்குடி, நாகலாபுரம், கோல்வார்பட்டி, ஏழாயிரம் பண்ணைப் பாளையங்களையும் பிரித்துப் பரங்கியர்களது கூலிக்காரர்களான மேலமாந்தை, மணியாச்சி, எட்டயபுரம், பாளையக்காரர்களுக்குப் பரிசாக வழங்கியது. கைக்கூலிகளுக்கும், துரோகிகளுக்கும் பரிசுகள் கிடைக்கத்தானே செய்யும்.

கட்டபொம்மனது சகோதரர் ஊமைக்குமாரசாமியையும் பாளையங்கோட்டை சிறையில் அடைத்தது.

இவைகளுக்கெல்லாம் மேலாக, மைசூர் தளபதி தூந்தியாவாக் என்ற மாலிக் ஜஹான்ஷா என்ற தேசபக்தர், தென்னகத்து மக்கள் அனைவரையும் திரட்டி வெள்ளை ஏகாதிபத்தியத்தற்கெதிராக ஒரே நாளில் அனைத்துப் பகுதியிலும் (01.06.1800ம் தேதியன்று) ஆயுதக் கிளர்ச்சியை நடத்துவதற்காக விரைவு நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பது. இந்தக் கிளர்ச்சிக்கான பொறுப்பை தமிழ்நாட்டில் விருப்பாட்சி பாளையக்காரர் ஏற்றுக் கொண்டிருப்பது.[35]

34.Ramnad Collecterate vol 98 / 17.10.1799 p.2877-2884.
35. Dr. K. Rajyaiyam - History of Madurai 1972.

இந்தச் செய்திகள் அனைத்தையும் அறியும்பொழுது தமது மறவர் சீமை மக்கள் மட்டுமல்ல. தென்னகம் முழுவதும் பரங்கிகளுக்கு எதிராகக் கச்சை கட்டிக்கொண்டு களத்தில் இறங்கி விட்டார்களே என்று வியப்பும், களிப்பும் அடைந்தார் சித்திரங்குடி சேர்வைக்காரர். ஆம், மக்களது அவலங்களை உணராத மக்களிடத்தில் அனுதாபமும் அன்பு சிறிதும் கொள்ளாத புதிய ஆளவந்தார்களான வெள்ளைப் பரங்கிகளின் கருணை இல்லாத ஆட்சி கடுகி ஒழிந்திடுதல் இயல்புதான்.

இத்தகைய அரசியல் நிகழ்வுகளை இப்பொழுது இவ்வளவு உன்னிப்பாகக் கவனித்து வருகிற சிவகெங்கைப் பிரதானிகளுக்கு ஆறு மாதங்களுக்கு முன்வரை மறவர் சீமை மக்களது ஆவேசமான நாடு தழுவிய இயக்கத்தைப் பற்றி ஒரு தீர்க்கமான முடிவிற்கு வர முடியாமல் போனதைக்கூட ஒரு வகையில் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், அதற்கு ஒருபடி மேலாக அல்ல, மிக மோசமாகக் கும்பெனியாருடன் கைகோர்த்து, மறவர்சீமை மக்களது கிளர்ச்சி மண்ணோடு மண்ணாய் மறைந்து போவதற்கு அவர்கள் துணை நின்றதை அப்பொழுதுகூட அவரால் மறக்க முடியவில்லை! சித்திரங்குடி சேர்வைக்காரரது சிந்தனையில் மீண்டும் கமுதிக்கோட்டை, வெள்ளக்குளம், கீழ்க்குளம் போர்களின் பிரதிபலிப்பு நிழலாடியது.

சித்திரங்கடி சேர்வைக்காரரது சிந்தனை இவ்விதம் பின்னோக்கிச் சுழன்று கொண்டே இருந்தது.

அவருக்குள் எவ்வளவுதான் ஆறுதலும், தேறுதலும், சமாதானமும் சொல்லிக் கொண்டாலும், கமுதிக் கோட்டைப் போரையும், அதில் ஆர்வத்துடன் பங்குகொண்டு, மறவர் சீமையின் மானத்தைக் காக்கப் போரிட்ட தியாகிகளான அவரது நண்பர்கள் சிங்கன் செட்டியையும், ஏனைய சேர்வைக்காரர்களையுமு அவரால் எளிதில் மறக்க முடியவில்லை!

உள்ளத்தில் குமுறிக் கொந்தளித்துத் தானே அடங்கிவிடும் மன உளைச்சல் அவரது உடல் நலத்தை மிகவும் பாதித்தது. ஆறு, ஏழு மாதங்கள் நடமாட முடியாமல் படுக்கையில் படுத்தே கிடந்தார். அது ஒருவகையான ஓய்வு! ஏறத்தாழ ஓராண்டு காலம் ஓடி விட்டது. மெதுவாக அவரது உடலில் தெம்பும் சேர்ந்தது. கைகளும், கால்களும் மீண்டும் வலுப்பெற்றன. அவர் நினைத்தவாறு அடுத்த போராட்டத்திற்கு - இறுதிப் போருக்கு - ஆயத்தமாகி விட்டது போன்ற பிரமை! விரைவில் அந்தப் போரைச் சந்திப்போமா?.... பிறந்த மண்ணில் புகுந்துள்ள வெள்ளை வெறி நாய்களை விரட்டியடித்து வாகை சூடிச் சிறைக் கம்பிகளுக்கு அப்பால் உள்ள சேதுபதி மன்னரை அழைத்து வந்து இராமலிங்க விலாசம் சேது பீடத்தில் அமர்த்தும் அரிய காட்சியைப் பார்க்க முடியுமா? அல்லது அவர் இளைஞராக இருக்கும்பொழுது இராமநாதபுரம் கோட்டையைக் கைப்பற்ற கும்பெனியாரும், ஆற்காட்டு நவாப்புமான கூட்டுப் படைகளின் தாக்குதலை எதிர்த்துப் போரிட்டு இராமநாதபுரம் கோட்டை வாசல் போரில் தியாகிகளான மூவாயிரம் வீர மறவர்களில் ஒருவரான தமது தந்தையைப் போலத் தாமும், இராஜ விசுவாசத்துடனும் நாட்டுப் பற்றுடனும் போராடி தியாகியாகி விடுவோமா?....

இதில் எது நடந்தாலும் சரி. ஆனால், உடனே நடக்க வேண்டும். தாமதம் இல்லாமல், இவ்விதம் உந்தி எழுந்த உணர்ச்சிகளின் உத்வேகத்தில் சிறிது நேரம் உறைந்து இருந்தார். இவ்விதம் அந்த இனிய நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சித்திரங்குடி சேர்வைக்காரருக்கு சிவகெங்கையிலிருந்து அவசரச் செய்தியொன்று வந்து சேர்ந்தது. அது என்ன செய்தி?..................

# 9. சிவகங்கைச் செய்தி

பாளையங்கோட்டை.

திருநெல்வேலி நகரை வளைத்துச் செல்லும் தாமிரபரணி நதியின் எதிர்க்கரையில் இருந்த பழையன்கோட்டை என்ற பகுதி நாளடைவில் பெருங்குடி இருப்பாக மாறியது. மதுரை மண்டலத்தில் உள்ள தென்பாண்டி நாட்டுப் பாளையக்காரர்களை வெடிமருந்து ஆற்றல்கொண்டு அடக்கி ஆற்காட்டு நவாப்பிற்குரிய கிஸ்தித் தொகையை வசூலிப்பதற்கு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கும்பெனியாரின் கூலிப் படைகளின் நடமாட்டம் கி.பி.1755க்குப் பிறகு அங்கு அதிகமாகியது. அப்பொழுது இந்தக் கோட்டையை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கும்பெனியார், பலப்படுத்தியதுடன் இதனை மதுரைக்கு அடுத்த பெரிய படைத்தளமாகவும், மாற்றினர். சிறைப் பிடிக்கப்பட்ட பாளையக்காரர்களையும் பாதுகாப்புக் கைதிகளாக அடைத்து வைத்தனர்.

பாஞ்சாலக்குறிச்சிப் போர் தோல்வியில் முடிவுற்றதால் [36] பாஞ்சைப் பாளையக்காரர் வீரபாண்டியக் கட்ட பொம்முவும், அவரது உறவினர் தோழர்களும் கோட்டையினை விட்டு ஓடிவந்து சிவகெங்கைச் சீமைக்காடுகளில் தஞ்சம் புகுந்தனர். தொடர்ச்சியாக தொண்டைமான்

36. Dr. K. Rajaiyan - History of Madurai 1972.

சீமைக்காட்டில் கும்பெனியாரது ஆணைக்கு அடி பணிந்து கட்டபொம்மனை புதுக்கோட்டைத் தொண்டைமான் பிடித்துக்கொடுத்ததும் பாஞ்சைப் பாளையக்காரரைக் கயத்தாற்றில் தூக்கில் போட்டு அவரது சகோதரர்கள் சிவத்தையாவும், ஊமைக்குமாரசாமியையும் பாளையங்கோட்டையில் அடைத்து வைத்தனர்.[37] அவரது உறவினர் சவுந்திரபாண்டியனையும், தானாதிபதி சுப்பிரமணிய பிள்ளையையும் வெட்டிக் கொன்றனர்.

பதினைந்து மாதங்களாகச் சிறையில் இருந்த இந்த சகோதரர்கள் சிறையில் இருந்து தப்பிச் செல்ல முயன்று வந்தனர். அதற்கான நேரமும், நாளும் வந்தது. அங்கிருந்த கும்பெனிப் படைகள் சங்கர நயினார்கோவில் சென்றிருந்தது. புத்தாண்டு நாளையொட்டி படைத்தலைவர் மக்காலே மாளிகையில் 2.2.1801ம் தேதி விருந்தும், உல்லாசமும் தொடர்ந்தது. கும்பெனியாரின் அலுவலர்கள் அனைவரும் தங்களது குடும்பத்தினருடன் தளபதியின் மாளிகை விருந்துக்குச் சென்றிருந்தனர். பாளையங்கோட்டை சிறைப் பகுதியிலும கண்காணிப்பில் ஓரளவு தளர்ச்சிஇருந்தது. இத்தகைய சாதகமான சூழ்நிலையை முன்னரே தெரிந்து வைத்திருந்த பாஞ்சாலக்குறிச்சியார் சாமியாடிகளைப் போலக் காவடிகளைச் சுமந்தும், விறகு வெட்டிகளைப்போல விறகுகட்டுகளுக்கிடையில் ஆயுதங்களை மறைத்துக் கொண்டும் சிறைப்பகுதிக்கு வந்தனர்.

காவடிக் குழுவினரை வணங்கி, திருநீறு பெறுவதற்காக சிறையைவிட்டு வெளியே அனுமதிக்கப்பட்ட சிவத்தையாவும், ஊமைக் குமாரசாமியும் சிறைக் காவலர்களைத் தாக்கிக் காயங்கள் ஏற்படுத்திவிட்டு மாறுவேடத்தில் வந்திருந்த குழுவினருடன் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.[38]

அவர்களைச் சேர்ந்து இருந்த மக்களிடம் புத்துணர்வு, புது தெம்பு. ஆங்கிலப் பரங்கிகளை அழிக்கப் புதிய ஆவேசம். நாடார், மறவர், தொட்டியர், பட்டங்கட்டி, பரவர், முஸ்லீம் அனைத்துச் சமுதாய

37. Dr.K.. Rajaiyan - History of Madurai 1972.
38. Welsh col Mlitary Reminiscenes - Vol 11-1868.

மக்களும் நாட்டுப் பற்றுடன் ஒரே அணியாக இணைந்து நின்றனா. கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் திரும்பி வரும்பொழுது எதிர்க்கரையான இலங்கையிலிருந்து வெடி மருந்துகளையும் துப்பாக்கிகளையும் வாங்கிக் கொண்டு வந்தனர். கிளர்ச்சிக்காரர்கள் பாஞ்சாலக்குறிச்சியில் இருந்து ஆழ்வார் திரு நகரி வளாயான் பகுதியில் பரங்கிகளது கச்சேரிகளை அழித்தனர். அங்கே மறியலில் வைக்கப்பட்டிருந்த மக்கள் தலைவர்கள் அனைவரையும் மீட்டனர். நிர்வாகம் எதுவும் செய்ய முடியாமல் தத்தளித்தது.[39] வடக்கே இராமநாதபுரம் சீமையிலும், தங்கள் கைவரிசையைக் காட்ட ஆயத்தமாயினர்.

பாஞ்சாலக்குறிச்சிக் கோட்டையும், ஆறு நாட்களில் ஏகாதிபத்திய எதிர்ப்பின் மறுவடிவாக மீண்டும் வெள்ளையரை எதிர்பார்த்து எழுந்து நின்றது. சிவத்தையா - ஊமைத்துரை ஆகியவர்களைப் பிடிக்க பாளையங்கோட்டை, கயத்தாறு ஆகிய ஊர்களில் இருந்து பாஞ்சைப் புறப்பட்டுச் சென்ற கும்பெனிப் படையணியினரின் ஒரு தளபதியான வெல்ஷு வரைந்துள்ள குறிப்புகள் சிறந்த ஆவணமாக அமைந்துள்ளது. "8.2.1801ம் தேதி தளபதி வெல்ஷு அன்று ஒட்டப்பிடாரத்தில் இருந்தபொழுது இந்தக் குறிப்புகளைப் பதிவு செய்துள்ளார்.[40]

*"வலுவுள்ளதும், அரண் வாய்ப்புள்ளதுமான அந்தக் கோட்டையைப் பட்டப்பகல் வெளிச்சத்தில் பிடிக்கச் செல்வது வீணான பைத்தியக்காரத்தனமானது என்பதைத் தெரிந்து கொண்டேன். கும்பெனி அணிகள் அங்கு சிறிது இளைப்பாறி சிற்றுண்டிகளை முடித்துவிட்டு இரண்டு வியூகங்களாகப் பிரித்து, பொழுது சாய்ந்த முன்னிருட்டு வேளையில் எதிரிகள் கண்ணுக்குத் தென்படாமல் மறைந்து இருந்து கோட்டையைத் தாக்குவதென்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், பாஞ்சைக் கோட்டைக்குச் சென்று திரும்பியிருந்த ஒற்றர்கள் அளித்த செய்தி எதிர்பாராததாக இருந்தது. கோட்டையில் ஐயாயிரம் பேருக்குக் குறைவு இல்லாமல் வீரர்கள்*

39. குருகுகதாசப்பிள்ளை - திருநெல்வேலிச்சீமைச்சரித்திரம் 1931 பக் 263.
40. welsh - col - miltary - Reminiscences - vol 11-1868.

இருப்பதாகவும், கோட்டை கொத்தளங்களில் 1500 பேர் காவல் பணியில் இருப்பதாகவும், அவர்கள் இரவு நேரத்தில் கும்பெனி சைனியத்தைத் தாக்க ஆயத்தம் செய்து வருகிறார்கள் என்பது உளவாளிகள் அளித்த தகவல். அத்துடன் ஆறே ஆறு நாட்களில், கோட்டை கொத்தளங்களுடன் 1500 பாளையக்காரர்களது வீரர்களது பாதுகாப்பில் பார்த்தவர் வெறும் பெருமூச்சுவிடும் வகையில் அந்தக் கோட்டையைப் புதிதாக நிர்மாணித்து இருந்தனர்....."[41]

ஆனால், கும்பெனியார் அடுத்தடுத்து தாக்குதல் நடத்தி கோட்டையைப் பிடிக்க முயற்சிப்பார்கள் என்பது அனைவரும் அறிந்த ரகசியம். இந்த நிலையில் வீரபாண்டிய கட்ட பொம்மனுக்கு மிகுந்த தைரியமூட்டி அவரை வெள்ளையருக்குக் கப்பம் கட்டாமல் செய்த மருது சேர்வைக்காரர்களிடம் ஆயுத உதவியை சிவத்தையாவும், ஊமைக் குமாரசாமியும் எதிர்பார்ப்பது இயல்புதான். அவரது அவசர ஓலைகளைப் பெற்ற தூதுவர்கள் சிவகெங்கைக்கு விரைந்தனர்.

பாஞ்சாலக்குறிச்சிக்குச் சிவகெங்கையில் இருந்து ஆயுத உதவி கிடைக்கும் என்ற உறுதியுடன் பாஞ்சைத் தூதுவர்கள் ஊர் திரும்பினர்.

ஆதலால், இந்த பொறுப்புள்ள பணியை மேற்கொள்ள ஆயத்தமாக இருக்குமாறு சித்திரங்குடி சேர்வைக்காரருக்கு சிவகெங்கையில் இருந்து செய்தி அனுப்பப்பட்டது.

சிவகெங்கையில் இருந்து பாஞ்சாலக்குறிச்சிக்கு ராணுவ உதவி செல்லத் தொடங்கியது. முதல் அணியில் பெரிய மருது சேர்வைக்காரரது மருமகன் ஆளஞ்சாத்தேவன், சிவத்தத் தம்பியின் அடைப்பம் பிச்சணன் சேர்வைக்காரருடன் சித்திரங்குடி சேர்வைக்காரரும் சேர்ந்து கொண்டார். இந்த அணியில் 100 வீரர்களும், பதினைந்து துப்பாக்கிகளும், எண்பத்தி ஐந்து குத்து ஈட்டிக்காரர்களும் பாதுகாப்புடன், இருபத்து ஒரு பொதி

41. welsh - col - miltary - Reminiscences - vol 11-1868.

கருமருந்தையும், பத்தாயிரம் துப்பாக்கித் தோட்டாக்களையும் எடுத்துச் சென்றனர். இது தொடர்பாக மருது சேர்வைக்காரர்களது மக்கள் சிவத்தத் தம்பியும், உடையணனும் பாஞ்சாலக்குறிச்சியில் தங்கி இருந்தனர். நட்பிற்கு புதிய இலக்கணமாக நாட்டுப்பற்று மிக்க மறவர் சீமை வழங்கிய உதவிகள் முகம் நகமாக இல்லாமல் நகமுகமாக அமைவதுதானே நட்பு என வள்ளுவம் சொல்லுகிறது.

சிவகெங்கைச் சீமையின் இந்த உதவிக்கு நன்றி கூறும் வகையில் பாஞ்சைப் பாளையக்காரர்கள் சிவகெங்கை அணியினருக்கு பட்டாடைகளும், இன்னும் பலஅன்பளிப்புகளையும் வழங்கினர். சித்திரங்குடி சேர்வைக்காரருக்குச் சிறப்பாக பொன்னாடையுடன் ஒரு ஜோடி தங்கக் காப்பும், நவகண்டி மாலை, ஒரு குதிரை ஆகியவைகளை அன்பளிப்பாக வழங்கப்பட்டன. மேலும், இன்னுமொரு இருநூறு வீரர்கள் கொண்ட அணியுடன் இராமநாதபுரம் சீமைக்குள் சென்று மக்கள் கிளர்ச்சியை முடுக்கி விடுமாறு அவரிடம் தெரிவிக்கப்பட்டது. அதாவது கும்பெனியார் பாஞ்சாலங்குறிச்சி மீது குறிவைத்துள்ளதைத் தடுத்து அவர்களது போர் ஆயத்தங்களைப் பலவகையிலும் சிதறடிக்கும் முயற்சி பாஞ்சாலங்குறிச்சி மீதான அவர்களது தாக்குதலின் உக்கிரத்தை குறைக்கச் செய்வது, வழியில் தரக்குடியில் கம்பளத்தார் அணி சிததிரங்குடி சேர்வைக்காரரது சேவையினைப் பாராட்டி பல அன்பளிப்புகளை அவருக்கு வழங்கியது. அன்று இரவு **கழுமுடியில்** தங்கிய இந்தக் கிளர்ச்சிக்காரர்கள் கமுதி, **அபிராமம்** ஆகிய ஊர்களைத் தாக்குவது பற்றித் திட்டமிட்டனர். கிளர்ச்சிக்காரர்களது நடமாட்டம் பற்றி அறிந்த **மேல்மாந்தைப்** பாளையக்காரர் பயந்து தனது குடும்பத்துடன் சாயல்குடிக்கு ஓடினார். அங்கிருந்த பரங்கியரது சிப்பந்திகளும் இன்னொருபுறம் **முதலியார் மடத்திற்கு** ஓடினர். அடுத்தநாள் கிளர்ச்சிக்காரர்கள் மேலமாந்தை தானியக் கிடங்குகளைக் கொள்ளையிட்டுக், கும்பெனி மணியக்காரரையும் சம்பிரிதியையும் கைது செய்து காடல்குடிக்கு அனுப்பி வைத்தனர். இந்த இருநூறு பேர்களில் (நூறு பேர் சிவகெங்கைச் சீமையைச் சேர்ந்தவர்கள்). ஐம்பது பேர்

பாஞ்சாலங்குறிச்சியார். எஞ்சிய ஐம்பது பேர் **சாயல்குடி** பாளையத்தைச் சேர்ந்தவர்கள் கமுதிக்குச் சென்றனர். கமுதிப் பேட்டை கொள்ளையிடப்பட்டது. அடுத்த இலக்கு கமுதி கோட்டையா? அல்லது அபிராமமா?

**அபிராமம்** முஸ்லீம் மக்கள் மிகுதியாக உள்ள ஊர். அந்த ஊர் **அம்பலக்காரர் காதர் மீரான்** என்பவர். இவர் சிவகெங்கைச் சீமையில் இருந்து அபிராமம் கண்மாய்க்கு வருகின்ற **கிருதுமால்** ஆற்றின் கால்கள் சிவகெங்கைக்காரர்களால் அடைக்கப்பட்டதை **இராமநாதபுரம்** கலெக்டருக்குப் புகார் கொடுத்து இருப்பதால் அவரைக் கொன்றுவிட வேண்டும் என்பது **சின்னமருது** சேர்வைக்காரரின் உத்திரவு. ஆதலால், அந்த அணி காதர்மீரான் அம்பலக்காரரைத் தேடிப்பிடித்துக்கொண்டு வந்தது. பிரதானி சின்னமருது சேர்வைக்காரரது உத்திரவை நிறைவேற்றுவதற்காக அம்பலக்காரரை அபிராமம் கண்மாய் கரையில் நின்ற ஒரு வேப்ப மரத்தோடு பிணைத்துக் கட்டினர். அந்த அணியினர். அடுத்து அவரைச் சுடுவதற்கு தங்கள் துப்பாக்கியில் கரு மருந்தைப் போட்டு அடைத்து ஆயத்தமானார்கள்.

அங்கு குதிரையில் வந்த **சித்திரங்குடி** சேர்வைக்காரர் அம்பலக்காரரை உற்று நோக்கினார். அம்பலக்காரரோ ஐயனார் கோவிலில் பலியிடுவதற்கு ஆயத்தம் செய்யப்பட்டுள்ள ஆட்டுக்கிடா போல பீதியுடன் விழித்துக் கொண்டிருந்தார். சேர்வைக்காரர் அம்பலக்காரரிடம் ஓரிரண்டு கேள்விகள் கேட்டார். அதற்கு அவர் அமைதியாகப் பதில் சொன்னார். அதில் இருந்து அவர் மக்கள் கிளர்ச்சிக்கு எதிரானவர் அல்ல என்பது புரிந்ததுடன், அபிராமம் கண்மாய் ஆயக்கட்டில் நூற்றுக்கணக்கான குறுக்கம் நிலத்தில் நீர் இல்லாமல் காய்ந்து கொண்டிருக்கும் நெல் பயிரைக் காப்பாற்றும் முயற்சியில் **கிருதுமால்** ஆற்றுக்காலை திறப்பதற்கு ஏற்பாடு செய்யும்படி கலெக்டருக்கு மனுச் செய்தது எந்த வகையிலும் சிவகெங்கைப் பிரதானி சின்ன மருதுவுக்கு எதிரானது அல்ல என்றும்

புரிந்து கொண்டார். உடனே அவரது கட்டுக்களை அவிழ்த்துவிட்டு அவரை வீட்டுக்கு அனுப்பி வைத்தார். என்ன இருந்தாலும் அபிராமம் முதுகளத்தூர் மண்ணைச் சேர்ந்தது. **அபிராமம்** அம்பலக்காரரும் இந்த மண்ணைச் சேர்ந்தவர். நன்கு அறியப்படாத நிலையில் ஒரு குடிமகனது உயிரை ஆயுத பலத்தால் அழித்து நீக்குவது பொருந்தாதுதானே!

இந்த நிகழ்ச்சி **மயிலப்பன்** சேர்வைக்காரருக்கும் சிவகெங்கைச் சேர்வைக்காரர்களுக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தின. தான் கட்டளையிட்டவாறு அபிராமம் கிராமத்திற்கு தீயிட மறுத்ததுடன் தனது எதிரியாகக் குறிப்பிட்ட நபரைக் கொல்லாமல் மயிலப்பன் சேர்வைக்காரர் அவரை விடுதலை செய்வது தவறு, தனது உத்திரவிற்கு புறக்கணிப்பு என்பது பொறுக்க முடியாதது. ஆதலால், அவரைக் கொன்று போட்டுவிட வேண்டும் என **சின்ன மருது** சேர்வைக்காரர் சினத்தால் துடித்தார்.

முதுகளத்தூர் பகுதி உள்ளிட்ட மறவர் சீமை மக்களுக்கு நன்மை செய்வதற்காகவே உயிரைப் பணயம் வைத்து, உடலை உலுக்கும் அனுபவங்களை சகித்துக்கொண்டு இந்த அக்கினிப் பரீட்சையில் இறங்கியிருக்கும் எனக்கு இந்தப்பகுதி மக்களில் நல்லவர், கெட்டவர் யார் யார் என்பதைப் புரிந்து கொள்ளும் உரிமை இல்லையா? இது மயிலப்பன் சேர்வைக்காரரது ஆதங்கம்.

தனது கட்டளையை மீறிய **சித்திரங்குடி சேர்வைக்காரரை** கொன்றுவிட வேண்டும் என்ற நிலையை நாளடைவில் சின்னமருது சேர்வைக்காரர் ஒருவகையாக மாற்றிக்கொண்டார். கட்டுப்பாட்டைக்கருதி, இயக்கத்தின் தலைமை முடிவிற்கு இனிமேல் உடன்படுவதாக மயிலப்பன் சேர்வைக்காரரும் இணக்கம் தெரிவித்தார். இயக்கத்திற்குள் தொடக்க நிலையில் தலைவர்களிடையே ஏற்பட்ட இத்தகைய கருத்து வேறுபாடுகள் நல்ல வேளையாக நலிந்து மறைந்தன.

அடுத்து மயிலப்பன் சேர்வைக்காரரும் அவரது குழுவினரும் கொடுமலூரில் கும்பெனியார் நெல்லைக்குவித்து வைத்துள்ள சேகரம் பட்டறைகளைத் தாக்கி அழிக்கும் இலக்குடன் புறப்பட்டனர்.

சித்திரங்குடி சேர்வைக்காரரது செயல்களினால் கும்பெனி நிர்வாகம் கலகலத்துத் திணறியது. தெற்கே ஊமைத்துரையும், சிவத்தையாவும், பாளையங்கோட்டைச் சிறையை உடைத்துப் பாஞ்சாலங்குறிச்சிக்குத் தப்பியோடி அந்தக் கோட்டையைப் போருக்கு ஆயத்தப்படுத்தியது. வடக்கே சிவகெங்கைச் சீமையில் இருந்து பாஞ்சைக்கு வெடிமருந்தும், ஆயுதங்களையும் இரகசியமாக இரவோடு இரவாக சிவகெங்கைப் பிரதானிகள் அனுப்பிக் கொண்டு இருந்தனர்.

இடையில் இராமநாதபுரம் சீமையில் சித்திரங்குடி சேர்வைக்காரரது கிளர்ச்சி கும்பெனியாரது சொத்துக்களுக்குச் சேதம். அடுத்தடுத்து மிட்டாதார்கள் அமில்தார் மயிலப்பனது கிளர்ச்சி பற்றிய அறிக்கைகள். இவைகளைச் சமாளிப்பது இராமநாதபுரம் சீமை கலெக்டருக்கு பெரும் தலைவலியாக இருந்தது.

மயிலப்பன்..........................மயிலப்பன்

தமது அலவலகத்தில் அமர்ந்து அவரது ஊழியர்களான அமில்தார்களும், மிட்டாதார்களும் அனுப்பியிருந்த அறிக்கை ஓலைகளைப் படித்து முடிக்க கலெக்டர் லூசிங்டனது சிந்தனையில் மீண்டும் மீண்டும் எதிரொலித்தது சித்திரங்குடி சேர்வைக்காரரது பெயர்..................... மயிலப்பன்.

அரசியல் தெளிவும், நிர்வாகத் திறனும் மிக்க கும்பெனியாரது செயலராகப் பல ஆண்டுகள் சென்னைக் கோட்டையில் பணிபுரிந்த இந்த கலெக்டரது பணிக்கு மிகப் பெரிய சவாலாக அமைந்த பெயர்

மயிலப்பன். தன்மான உணர்வுகளும், தன்னாட்சியின் பெருமையும் ஒன்று சேர்ந்த இளம் சேதுபதி மன்னரையே மிக எளிதாக, ஒரு சொட்டு இரத்தம் சிந்தாமல் ஒரு துப்பாக்கி வெடிகூடச் சுடாமல், மிகுந்த சூழ்ச்சியுடன் கெட்டா பள்ளத்தில் யானையை விழச்செய்து பிடிப்பது போல கைது செய்த கும்பெனியாரது செயலாக்கத்திற்கு இந்த மயிலப்பன் எம்மாத்திரம்? தமக்குத்தாமே ஆறுதல் சொல்லிக்கொண்டார் கலெக்டர்.

ஆயிரம் பேரானாலும், நேருக்கு நேர் போர் புரிந்தால், எதிரியை எளிதாக வென்று விடலாம். வெடி மருந்திற்கு எதிராக வாளும், வேலும் வெற்றிபெற முடியுமா?

ஆனால், மயிலப்பனது உத்திகள் அனைத்தும் மறைவாக இருந்து தாக்குதல், கும்பெனியாரது ஊழியர்களை ஈவு இரக்கமில்லாமல் கொன்று அழித்தல், கும்பெனியாரது சொத்துக்களைச் சிறிதும் தயக்கமில்லாமல் தீயிட்டு அழித்தல் இவைகளைத் தடுத்து வெற்றி கொள்ளுதல் எப்படி? இவைகளை நிகழவிடாமல் செய்யும் வழிவகைகள் எவை? இவைதான் கலெக்டரது கற்பனையில் கவர்ந்து நின்றன.

ஆனால், இந்தப் புத்தாண்டு (கி.பி.1801) தொடங்கியதும் கலெக்டரது இந்தச் சிந்தனைகளுக்குப் புதிய பரிணாமமும், கவலைகளும் புதிய வடிவாக எழுந்தன. மயிலப்பனுக்கும், சிவகெங்கைச் சீமை பிரதானிகளுக்கும் நெருக்கமான தொடர்பும் தோழமையும் உள்ளன என்பதைத் தெரிவிக்கும் செய்திகள். அத்துடன் இந்த இருவரது கூட்டுடன் பாஞ்சாலங்கறிச்சிக்கும் தொடர்பு இருப்பது துலக்கமாகத் தெரிந்தன. இதோ அந்தச் செய்திகள்....

*"................. எட்டையாபுரம் பாளையத்துக்கு அண்மையில் அமைந்துள்ள காடல்குடி பாளையத்தைச் சேர்ந்த*

மாவிலோடையில் மயிலப்பன் சேர்வைக்காரரும் அவரது நண்பர் இபுறாகிம் சாகிபும் தங்கியுள்ளனர். நாகலாபுரத்தைக் கொள்ளையடிப்பதற்கு............"

"சிவகெங்கையைச் சேர்ந்த அய்யாவுத் தேவன் மற்றும் சேர்வைக்காரர்களும், நாகராஜ் மணியக்காரர், இபுறாகிம் சாகிபும், நூறு வீரர்களும் காடல்குடிக்கு வந்துள்ளனர்".

"............... கமுதி அமில்தாரது செய்தியின்படி, மயிலப்பன் முன்னூறு வீரர்களது அணியுடன் அங்கே தங்கியுள்ளார். பீதியடைந்துள்ள பரளாச்சிகுடிகள், பாதுகாப்பிற்காக நீராவி, செவ்வல்காடு நோக்கி தங்களது கால்நடைகளுடன் போய்க்கொண்டு இருக்கின்றனர்........."

"...............காடல்குடி, பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர்களது உதவிக்காக மயிலப்பன் சேர்வைக்காரர் அனுப்பப்பட்டு இருக்கிறார். மண்டல மாணிக்கத்தில் சிவகெங்கை சுப்பையர் தங்கி இருக்குமாறும் செய்யப்பட்டுள்ளனர். இவருக்கு உதவியாக ஆறு சேவகர்களும், பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரும் உள்ளனர். சிவகெங்கைக்கும், பாஞ்சைக்கும் செய்திப் போக்குவரத்தைத் தொடர்வதற்காக மருது சேர்வைக்காரர்கள் ஏற்பாடு இது".

"...............பாஞ்சாலக்குறிச்சிக்கு சென்றுவந்த காடல்குடி வீரர்கள் குளத்தூர் பாதுகாப்பிற்கு அனுப்பப்படுகின்றனர். இவர்களில் ஒரு அணி சாயல்குடிக்கு அனுப்பப்பட உள்ளது. அங்கு புகலிடம் பெற்றுள்ள மேலமாந்தை பாளையக்காரரைப் பிடித்துவர, மேலமாந்தை சேகரம் பட்டறையில் இருந்த நெல் கொள்ளையிடப்பட்டுப் பாஞ்சாலக்குறிச்சிக்கும், காடல்குடிக்கும் எடுத்துச் செல்லப்பட்டு விட்டன. அங்கிருந்த மேலாளரும், சம்பிரிதியும் தப்பிச் சென்றவர்களைப் பிடித்து வந்துள்ளனர். எல்லாம் மயிலப்பன் சேர்வைக்காரரது நடவடிக்கைகள்......."

"............. கமுதிப் பேட்டையைச் சூறையிட்ட போராளிகள் அபிராமம் சென்று, அங்கிருந்து கும்பெனி பேஷ்காரரிடமிருந்து நூறு சக்கரம் பணத்தைப் பறித்துக்கொண்டு கொடுமலூர் சென்றுள்ளனர். [42]

43. Madurai District Records vol 1133(29.03.1801)Page19

# 10. பரங்கியருடன் மோதல்

எத்தனை நாட்களுக்கு இரகசியமாக இந்தச் செய்திகளை இதயத்திற்குள் அமுக்கி வைத்துக் காத்து வருவது, சித்திரங்குடி சேர்வைக்காரர் - அவரது நடவடிக்கைகள் அனைத்திற்கும் பக்கபலமான உதவியும், பாதுகாப்பும் மறைமுகமாக வழங்கிவரும் **சிவகெங்கைப்** பிரதானிகள் அவர்களை நேரடியாகக் கேட்டு விட்டால் என்ன? **கலெக்டர் லூசிங்டன்** சிவகெங்கைப் பிரதானிக்கு அவசரக்கடிதம் ஒன்றை தூதுவர் மூலம் அனுப்பி வைத்தார்.[43] இதோ அந்தக் கடிதத்தின் தமிழ் மொழியாக்கம்.

*"..................நாள்தோறும் எனக்குக் கிடைத்து வரும் அறிக்கைகள் அனைத்தும், கும்பெனியாருக்கு எதிராகக் கலகக் கொடிபிடித்துள்ள கிளர்ச்சிக்காரர்களுக்கு நீர் ஆதரவு அளித்து வருவதைச் சுட்டிக் காட்டுகின்றன. முதலில், இவைகளை நான் நம்பவில்லை. உமது செல்வாக்கை மக்களது ஆதரவைக் குலைப்பதற்காக, உமது எதிரிகளது ஏற்பாடு என்றுதான் கருதினேன். ஆனால், இப்பொழுது **லெப்டினென்ட் மில்லர்** மூலம், **மயிலப்பன்** சிவகெங்கைச் சீமையில் தஞ்சம் பெற்று இருப்பது உறுதியாகி விட்டது. நமது விசுவாசத்தைப் பொய்மைப் படுத்தும் வகையில் பகிரங்கமாக மீறும் இந்தக் குற்றத்தின் கொடூரத்தை*

43. Madurai District Records vol 1133/30.03.1801/p.p 200-203.

*எவ்விதம் சகித்துக் கொள்வது என்பதை என்னால் சிந்தித்துக்கூடப் பார்க்க முடியவில்லை.*

*அரசாங்கத்தினரது வெறுப்பிற்கு ஆளாகியுள்ள மயிலப்பனையும் அவனது கூட்டாளிகளையும் கைப்பற்றி ஒப்படைக்குமாறு கோரி இருந்தேன். இதுவரை எந்தப் பதிலும் வரப்பெறவில்லை. இப்பொழுதும், அதே கோரிக்கையை உமக்கு நினைவுறுத்தும் நிலையில்தான் உள்ளேன். இந்தக் கட்டளையை இப்பொழுதும் மதிக்காவிட்டால் அல்லது மதித்து நிறைவேற்றி அரசாங்கத்தின் திருப்தியைப் பெறாவிட்டால், கும்பெனியாரது பாதுகாப்பு உமக்கு எப்பொழுதும் இருக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.*

*உண்மையில் உம்மிடம் பணிந்து நடந்துகொள்ளும் மனோபாவம் இருந்தால், உமக்குப் பாதுகாப்பான வழியொன்று உள்ளது. அதாவது கொடுமை, சூழ்ச்சி ஆகியவற்றைப் பற்றிப் பிடித்தவர்களாக உம்மை வழி நடத்துபவர்கள் பலவீனமான ஆலோசனைப்படி நடந்துகொள்வதில் இருந்து நீங்கிக் கொள்ளவும். ஏனெனில், அவை உம் மீது வெறுப்பைத்தான் வளர்க்கும் கட்டனூரில் நாம் சந்தித்தபொழுது, உமக்கு ஒத்துழைப்பும், ஆதரவும் அளிப்பதாக உறுதி கூறினேன். கும்பெனியாருக்குப் பணிந்து கடமைகளை நிறைவேற்றும்வரை அந்த உறுதிமொழிக்கு மாறுபாடு இல்லை. அதனை நிரூபிக்கும் வாய்ப்பு இப்பொழுது எழுந்துள்ளது. உமக்குத் தேவையானது துரைத்தனத்தாரின் சலுகையா அல்லது சீற்றமா என்பதை இப்பொழுது தேர்வு செய்து கொள்ளும்".*

**கலெக்டர் லூஷிங்டனது** கடிதம் **சிவகெங்கைப்** பிரதானியிடம் எவ்வித சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. நெல்லுக்குள் அரிசி என்ற இந்த ரகசியம் அவருக்குத் தெரியாதது அல்ல. இது எதிர்பார்த்த ஒன்றுதான் என்றாலும், துலாக்கோலைப் பிடித்து வணிகம் செய்ய

வந்த இந்த குள்ள நரிகளின் சலசலப்பிற்குப் பனங்காட்டு நரிகள் பயப்படப் போவதில்லை. என்றாலும், அவர்களுக்கு மரண அடி கொடுத்து மாய்க்க வேண்டிய முடிவு காலம் நெருங்கி வரும்வரை பொறுமையுடனும், அரசியல் நாகரீகத்துடனும் நடந்து கொள்வது தவிர்க்க முடியாதது அல்லவா?

சிவகெங்கைப் பிரதானி **சின்னமருது சேர்வைக்காரர்** கலெக்டரது மடலுக்கு இயல்பான முறையில் எழுதும் பதில்போல ஓலை ஒன்றை வரைந்து அனுப்பி வைத்தார். இறுதி நேரம் வரை பரங்கிகள் தம்மைச் சந்தேகம் கொள்ளாதவகையில் நடந்துகொண்டால் அது மறவர் சீமையில் கருக்கொண்டுள்ள பரங்கி எதிர்ப்புக் கிளர்ச்சிகளுக்குப் பயனுள்ளதாக அமையும் என்பது சிவகெங்கைப் பிரதானிகளின் சிந்தனையாக இருந்தது. இதோ அவர் **கலெக்டர் லூஷிங்டனுக்கு** அனுப்பி வைத்த ஓலையின் தமிழாக்கம்.[44]

"................23.03.1801 தேதியிட்ட கடிதம் கிடைத்தது. அதன் அடக்கத்தைப் புரிந்து கொண்டேன். கடந்த சில காலமாகக் கும்பெனியாருக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, இங்கு அடைக்கலம் அளித்து வருவதாகவும், மீண்டும் அராஜகத்தில் ஈடுபட்டுள்ள மயிலப்பனுக்கு ஆதரவு அளித்து வருவதாகவும், அவனைப் பிடித்துக் கொடுக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கும்பெனியாருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்பவர்களுக்கு நாங்கள் அடைக்கலம் அளிப்பதா? எங்களது கனவிலும் நினைக்காத ஒன்று. இவ்விதம் நிகழ்ந்து இருந்து, அதற்குரிய குற்றவாளி நாங்களாக இருந்தால், அது எங்களது பொல்லாத காலம் என்பதைத்தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?

மயிலப்பன் எங்களது சீமைக்குள் வந்தால், அவனைப் பிடித்து உடனே தங்களிடம் அனுப்பி விடுவோம்...... மயிலப்பனைப் பிடித்துக்

44. Madurai District Records vol 1133/ dated 30.08.1801/ Page 200 -203

கொடுக்குமாறு ஏற்கனவே வரப்பெற்ற கடிதத்தைப் பார்த்து, எங்களது ஆட்களை நாலாபுறமும் அனுப்பி வைத்தோம். ஆனால், எவ்வளவோ தேடிப்பார்த்தும் அவன் அகப்படவில்லை. முன்பு சிங்கன் செட்டியுடன் அவன் சேர்ந்து கிளர்ச்சிகளில் ஈடுபட்ட காட்டுப் பகுதிக்குச் சென்று அவனைப் பிடித்து வருமாறு எங்களது கோட்டைச் சேர்வைக்காரரையும், பாம்பூர் நாயக்கரையும் அனுப்பி வைத்தோம். பயன்இல்லை. மயிலப்பன் ஒரு முரடன். அவனால், எங்களுக்கு என்ன உதவி கிடைக்கும்? பயனற்ற ஒருவனுக்கு ஆதரவு அளித்து கும்பெனியாரது வீணான வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்வதா?

"நாங்கள், சிந்தனையிலும், சொல்லிலும், செயலிலும் விசுவாசத்துடன் நடந்து தங்களது சலுகைகளைப் பெறுவதற்கு இனியும் முயன்று வருவோம். அதனால், எங்களுக்கு நல்ல முன்னேற்றம் இருக்கிறது!"

"எங்களுக்கு கட்டனூரில் தாங்கள் கொடுத்துள்ள வாக்குறுதியை நினைவில் இருத்தி வைத்துக் கும்பெனியாருக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்து வருகின்றோம். எங்களைப் பற்றி இத்தகைய புகார்கள் எங்களது எதிரிகளால், எங்களுக்கு எதிராகக் கொண்டு வரப்படுவது எங்களது பொல்லாத காலம்தான்! முறையான விசாரணை பாதுகாப்பு வழங்குவீர்கள் என்று நம்புகிறோம்........."

(ஒ-ம்) சிவகெங்கைப் பிரதானி.

சிவகெங்கைச் சேர்வைக்காரரது பதில் கலெக்டருக்குச் சற்று குழப்பத்தைக் கொடுப்பதாக இருந்தது. என்றாலும், தொடர்ந்து கும்பெனி ஒற்றர்கள் திருவாடனை, ஓரியூரில் இருந்தும், சிவகெங்கை பட்டமங்கலத்தில் இருந்தும் கலெக்டருக்கு அனுப்பிய ஓலைகள், சிவகெங்கைப் பிரதானியான மருது சேர்வைக்காரர்கள், பாஞ்சாலக்குறிச்சிக் கோட்டைக்கு ஆயுதங்களையும், மயிலப்பன் பொறுப்பில் அனுப்பி வருவதையும், காளையார்கோவில் காட்டில்

கும்பெனியாருக்கு எதிரான போர் ஆயத்தங்கள் நடைபெறுவதையும் உறுதி செய்தன, சிவகெங்கைப் பிரதானிகள் கும்பெனியாரது நண்பர்களாக இருந்த காலம் மலையேறி விட்டது. நேரிலும், கடிதங்களிலும் அவர்கள் முன்பு நண்பர்களாகக் காட்டிக் கொள்வதெல்லாம் வெறும் பாவனை! பாம்புக்கு வாலும், மீனுக்குத் தலையைக் காண்பிக்கும் ஏமாற்று வேலை. கலகக்காரன் **மயிலப்பன்** சேர்வைக்கும் **சிவகெங்கைக்கும்** சம்பந்தம் இல்லாதது போன்ற பொய்த் தோற்றத்தை **மருது சகோதரர்களே** அவனுக்கு ஆதரவும், உதவியும் அளித்து வருகின்றனர்............. இப்பொழுது கும்பெனியாரது எதிரி மயிலப்பன் சேர்வைக்காரர் மட்டுமல்ல! சிவகெங்கைப் பிரதானிகள் மருது சேர்வைக்காரர்களும்தான்.

அடுத்து என்ன செய்ய வேண்டும்?

தனது விபரமான அறிக்கையை கலெக்டர் சென்னைக் கோட்டையில் உள்ள தலைமைக்கு அனுப்பி வைத்தார்.

தமிழ்நாட்டில் கும்பெனியாருக்கு நேர்முக எதிரி **பாஞ்சாலக்குறிச்சி** பாளையக்காரர் **ஊமைத்துரையும்**, மறவர் சீமை மயிலப்பன் சேர்வைக்காரரும். மறைமுக எதிரி சிவகெங்கைப் பிரதானிகள். முதலில் பாஞ்சாலக்குறிச்சி பாளையக்காரரை அழிப்பது, அவர்களது மானப் பிரச்சினை. அவர்களது அரசியல் ராஜ தந்திரத்திற்கும், ஆயுத வலிமைக்கும் ஏற்பட்டுள்ள கடுமையான சவால். அத்துடன் மூன்று எதிரிகளையும் ஒரே நேரத்தில் சமாளிப்பதைவிட ஒவ்வொருவராக ஒழித்துக் கட்டுவதுதான் எல்லா வகையிலும் ஏற்றதாக இருக்கும் என்பது கும்பெனியாரது தலைமையின் முடிவாக இருந்தது.

பாஞ்சைக் கோட்டைத் தாக்குதலுக்கான திட்டங்கள், ஆயுத குவிப்பு, அதனை நிறைவேற்ற ஆற்றலும், சூழ்ச்சியும் மிக்க தலைமைத் தளபதி பற்றிய தேர்வு. இரகசிய முடிவுகள்.

பாஞ்சாலங்குறிச்சிப் பிரச்சினை சூடு பிடித்தது!

இதற்கிடையில் **காடல்குடி, நாகலாபுரம்** பாளையங்களில் பொருந்திய கும்பெனியாரது படைகளை **சித்திரங்குடி** சேர்வைக்காரரும், அவரது குழுவினரும் துவம்சம் செய்த செய்தி அந்த வட்டாரம் முழுவதும் பரவி கும்பெனி அலுவலர்களது உள்ளத்தில் மிகுந்த பீதியை உண்டாக்கியது. **பாப்பான்குளம்** மிட்டாதார் போன்றவர்கள் தங்கள் பாதுகாப்பிற்கு கூடுதலாக ஆயுதங்கள் கோரி அறிக்கைகள் அனுப்பி இருப்பது அவர்கள் அடைந்த கலக்கத்தை உறுதிப்படுத்தியது.[45] **இராமநாபுரம் சீமை** நிர்வாகமும், சிததிரங்குடி சேர்வைக்காரரது சித்து விளையாட்டுக்களைக் கேட்டு நடுக்கம் கொண்டது. ஏற்கனவே, அவரது தலைக்கு வைத்து இருந்த விலை 500 சக்கரத்தை[46] 1000 சக்கரம் என உயர்த்தி சீமையெங்கும் அறிவிப்புக் கொடுத்தது. பண ஆசை பிடித்த பதர்கள் சித்திரங்குடி சேர்வைக்காரரைத் தங்களிடம் பிடித்து ஒப்புவித்துவிடுவார்கள் என்ற வீண் ஆசை கும்பெனியாருக்கு!

தங்களது முயற்சியில் பலன் இல்லையென்று அறிந்த கும்பெனி நிர்வாகம், **சித்திரங்குடிக்கு** விரைந்து சென்று சித்திரங்குடி சேர்வைக்காரரது மனைவி மற்றும் அவரது சகோதரியைக் கைது செய்தது. அதேபோல், முந்தைய கிளர்ச்சியில் சித்திரங்குடி சேர்வைக்காரரது அணியில் நின்று கும்பெனிப் படைகளை எதிர்த்து **முத்தையா பிள்ளையும், பாண்டியன் பிள்யையும்** முதுகளத்தூரில் கைது செய்து இராமநாதபுரம் கோட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அதேசமயம் **பாஞ்சாலங்குறிச்சியில்** கைது செய்யப்பட்ட **கட்டபொம்மு நாயக்கரது** குடும்பத்தினர் சிலரும் பாதுகாப்புக் கைதிகளாக இராமநாதபுரத்திற்கு கொண்டு வரப்பட்டனர்.

மேலும், **கமுதிக் கோட்டைப்** பாதுகாப்பைப் பலப்படுத்த தளபதி **பிரிட்டன்** என்பவனது தலைமையில் கும்பெனியாரது முதலாவது

45. Madurai District Record vol.No 1221/2802.1801/p.p52-54.

46. சக்கரம் என்பது அப்பொழுது அந்தப் பகுதியில் செலவாணியில் உள்ள பணம்.

பட்டாளத்தின் பதினெட்டாவது பிரிவு அணி பாளையங்கோட்டையிலிருந்து கமுதி வந்து சேர்ந்தது. அத்துடன் மயிலப்பனைத் தேடிப்பிடிக்கும் பணி கயத்தாறில் இருந்து வந்த தளபதி மில்லரிடம் ஒப்புவிக்கப்பட்டது. அதேசமயம் கமுதி பாதுகாப்பு நிலைகளைத் தெளிவாக அறிந்து வருவதற்காக எட்டையபுரத்தைச் சேர்ந்த இரு உளவாளிகள் மாறுடையில் சென்று வருமாறு சித்திரங்குடி சேர்வைக்காரர் அனுப்பி வைத்தார். அவர்கள் அளித்த செய்திகளின் அடிப்படையில் அவரது அணி கமுதிக் கோட்டையைத் தாக்கப் புறப்பட்டது. இந்த அணியினர் சென்ற வழியில் உள்ள பரளாச்சி[47], பெருநாழி, குண்டுகுளம், கரிசல்குளம் ஆகிய ஊர்களில் உள்ள குடிமக்களும் அவர்களிடமிருந்த வளரி, வாள், ஈட்டி ஆகிய ஆயுதங்களுடன் அந்த அணியில் சேர்ந்து போர் முழக்கம் செய்து கொண்டே சென்றனர்.

இந்த செய்தியை அறிந்த பள்ளிமடம் கிராமக் குடிமக்கள், கிளர்ச்சிக்காரர்களது அடுத்த இலக்கு அவர்களது ஊராகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கையில் அவர்களது பொன், வெள்ளி அணிமணிகளைத் திருச்சுழியல் ஆலயத்தில் பாதுகாப்பிற்காக ஒப்படைத்துவிட்டுப் பக்கத்து கிராமங்களில் உள்ள அவர்களது உறவினர் வீடுகளில் தங்கி இருந்தனர்.[48]

அன்றைய நிலையில் மயிலப்பன் சேர்வைக்காரரது தலைமையிலான கிளர்ச்சிக்காரர்கள் சாதாரண மக்களை எவ்வித சிரமத்திற்கும் உட்படுத்தவில்லை. கும்பெனியாரது சொத்துக்கள், கும்பெனியாரது தானியப் பொதிகள் இவைகளைப் பாதுகாக்கும் கூலிகள், கும்பெனியாருக்கு விசுவாசமாகச் செயல்பட்ட பதர்கள், வியாபாரிகள் ஆகியோரைத்தான் நெருக்கினர், துன்புறுத்தினர். ஆனால், இந்த பாகுபாடுகளைப் பகுத்தறிய முடியாத பாமரமக்கள் வீணாகப் பயந்து வாழ்ந்தனர்.

அவர்களது போக்கினை மேலும், பயமுறுத்தும் வகையில்

47. Madurai District Record vol No 1131/03.03.1801 - 1806/19.03.1801
48. Madurai District Record vol No 1182/08.03.1801 pp 84-86.

இராமநாதபுரம் கலெக்டர் ஊர்களில் பிரசித்தம் செய்த அறிவிப்பும் அமைந்து இருந்தது. போராளிகளான பாளையக்காரர்கள் அல்லது அவர்களது ஆதரவாளர்களுக்கு எவ்வித உதவியும், ஒத்துழைப்பும் புகலிடமும் அளிக்கக்கூடாது. மீறினால் விசாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும் என்பது அந்த அறிவிப்பு. **நாகலாபுரத்தில்** இருந்து 12.13.1801 கமுதிக்கு வந்த **துணைக் கலெக்டர் மில்லர்** தனது போர் வீரர்களை மண்டலமாணிக்கத்திற்கு அனுப்பினான். அங்கு தங்கி இருந்த பாஞ்சை **சிவகெங்கை** கடிதப் போக்குவரத்தை நடத்தி வந்த சுப்பையரையும் அவரது ஆறு உதவியாளர்களையும் கைது செய்து இராமநாதபுரம் கோட்டையில் அடைக்குமாறு செய்தான். **நெல்லைச் சீமைச்** செய்திகளைப் பெறுவதற்கான இந்த ஏற்பாடும் செயலிழந்து போயிற்று.

இதைவிடக் கொடுமையானது சுப்பையரது வாக்குமூலம். வன்முறைக்கு ஆளான சுப்பையர் வேறு வழியில்லாது தம்மைக் காத்துக் கொள்வதற்கு வாய்விட்டு உண்மைகள் அனைத்தையும் கொட்டிவிட்டார். இராமநாதபுரம் சீமைக்கிளர்ச்சியில் பங்குபெற உள்ள **மயிலப்பன் சேர்வைக்காரரைப்** பற்றியும், அவருக்கு உதவிவரும் சிவகெங்கைச் சீமைப் பிரதானிகள் பற்றியுமான அனைத்துச் செய்திகளையும் கும்பெனியார் அறிந்துகொண்டு, தங்களது தரப்பை எதிர்நடவடிக்கைகளுக்கு எளிதாக உட்படுத்திக் கொள்ள உதவியது.

அடுத்து சித்திரங்குடி சேர்வைக்காரரது அணி கமுதிக் கோட்டையைத் தாக்கியது. துணைக் கலெக்டரது மூர்க்கத்தனமான பீரங்கித் தாக்குதல் கிளர்ச்சிக்காரர்களைத் தடுமாறச் செய்தது. பரங்கியரது கை ஓங்குவதற்கு ஏற்றாற்போல் இராமநாதபுரத்திலிருந்து வந்த புது அணியும் கோட்டைப் பாதுகாப்பிற்கு உதவியது. தங்களது திட்டத்தைக் கைவிட்டு வடகிழக்கே காட்டுப்பகுதிக்குள் பின்னடைந்து **பரமக்குடி** நோக்கிச் சென்றனர். ஆனால், **கர்னல்**

**மில்லர்** அவர்களைத் தொடர்ந்து ஓடினான். இரு அணிகளும் பரமக்குடி அருகே மோதின. **சிவகெங்கையில்** இருந்து உதவி அணி ஒன்று வந்து, மயிலப்பன் **சேர்வைக்காரருடன்** சேர்ந்து கொண்டது. கும்பெனி படை நாசமாக்கப்பட்டது. **மில்லர்** உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு **இராமநாபுரம் கோட்டைக்கு ஓடினான்.**

இவ்விதம் உயிருக்குப் பயந்து ஓடிய கோழை மில்லர். அபாயகரமான அந்த நிலையிலும் தனது பரிசுப் பொருள்போல பிடித்துவந்த **சித்திரங்குடி மயிலப்பன்** சேர்வைக்காரரது மனைவியையும், சகோதரியையும் இராமநாதபுரம் கோட்டைக்கு கைதியாகக் கொண்டு சென்றான், என்ற செய்தி[49] மிகவும் தாமதமாக **மயிலப்பன் சேர்வைக்காரருக்குக்** கிடைத்தது. அவரது உள்ளக் குமுறலையையும் கோப உணர்வுகளையும் போல கும்பெனியாரது **காட்டுப்பரமக்குடி, தெளிச்சாத்த நல்லூர்** கிராமங்களில் அவர் தீயிட்டு எரித்த சேகரம் பட்டறையில் இருந்து எழுந்த தீயின் நாக்குகளும், புகை மண்டலமும் காணப்பட்டன.[50]

அவைகளைக் கவனித்த மயிலப்பன் சேர்வைக்காரர் நடப்பது நடக்கட்டும் என்ற அமைதிச் சித்தாந்தத்துடன் தமது குதிரையைத் தட்டிக் கொடுத்தார். ஆவேசமாக வைகையாற்றின் வடகரைக்குப் பாய்ந்து சென்றது. அவரது அணியினரும் அவரைத் தொடர்ந்தனர்.

---

49. T.Rajaram Rao - Manual of Rammad Samasthanams.
50. ஆவணம் இதழ் - சூலை 1997.

# 11. கிளர்ச்சிகளின் தொடர்ச்சி

**சாலைக்கிராமம்.**

பரமக்குடிக்கு வடகிழக்கே பத்துகல் தொலைவில் அமைந்துள்ள **சிற்றூர்.** வளமையான பகுதி. சாலி கிராமம் என்ற முந்தைய பெயர் திரிந்து சாலைக் கிராமமாக மாறிவிட்டது. சாலி என்ற சொல் நெல் என்று பொருள். நெல்வயல் நிறைந்த ஊராகும். இங்கு **வரகுண ஈஸ்வரர் சுவாமிக்கு** திருக்கோவில் உள்ளதால் கி.பி.9வது நூற்றாண்டில் **மதுரை வரகுணபாண்டியன்** காலத்தில் இந்த ஊர் சிறப்புற்று இருந்தது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் இந்த ஊரில் கி.பி.10ம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[51] பாண்டியர் கால துகவூர் கூற்றத்தில் அமைந்து இருந்த ஊர். இராமநாதபுரம் மன்னரது பதினேழு வட்டங்களில் ஒன்றான **இராஜசிங்கமங்கலம்** வட்டத்தைச் சேர்ந்ததாக இருந்தது.

சேதுபதி மன்னரது ஆட்சியில் இங்கு வட்ட அலுவலகம் ஒன்று இருந்தது. அதனை அப்பொழுது கும்பெனிச் சிப்பந்திகள் நிர்வாகம் செய்து வந்தனர். **தெளிச்சாத்த நல்லூரிலிருந்து** வந்த மயிலப்பன் அணியினர் இங்குள்ள ஊர்ப்பொதுவில் தங்கினர். மறுநாள்

51. MDR Vol 1138 dated 20.03.1801.

நிலம் தெளிந்த விடியலில் அந்தக் கிராமத்தில் கும்பெனியாரது கச்சேரியை எரியூட்டி அழித்தனர். சேகரம் பட்டறையில் இருப்பில் இருந்த நெல்லையும், மற்றும் சில ஆடு, மாடுகளையும் கைப்பற்றிச் சென்றனர்.[52] அடுத்த நாள் வடகிழக்கே **ராஜசிங்கமங்கலம்** கண்மாயின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள **வரவணி, செங்குடி, கொக்கூரணி** கிராமங்களில் கும்பெனிக்கு ஆதரவாளர்களது சொத்துக்களைத் தீயிட்டு அழித்தனர். கார்த்திகை மாதம் நடத்தப்பெறும் சூரசம்ஹாரத்தின் பொழுது சுடர்விட்டு எரியும் சொக்கப்பனையாக வீடுகளும், வைக்கோல் போர்களும் சேகரம் பட்டறைகளும் எரிந்து அழிந்தன. பின்னர் மேற்கே **பரத்தைவயல்** சென்றனர். இந்த ஊர் கி.பி.1735க்கும் 1740 ஆண்டுகளில் **இராமநாதபுரத்தை** ஆட்சி செய்த **குமாரமுத்து விஜயரகுநாத சேதுபதி** என்ற மன்னரால் **நைனார் கோவிலில்** குடிகொண்டு இருக்கும் நாகநாதசுவாமியின் பெயரில் பல தனிப் பாடல்களை இயற்றிய **நல்லமுத்துப்பிள்ளைப்** புலவருக்கு சர்வமான்யமாக வழங்கப்பட்ட ஊராகும். அந்த புலவரது சமாதி அந்த ஊரின் வடமேற்கு பகுதியில் அமைந்து உள்ளது. இங்கும் கும்பெனியார் சேகரித்து வைத்து இருந்த பெருமளவிலான நெல்லைக் கொள்ளையிட்டு அதனைச் **சிவகெங்கைச் சீமையில்** பத்திரமான இடமொன்றுக்கு அனுப்பி வைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதே நேரத்தில் இன்னும் தென்மேற்கே **நெட்டூரில்** நிலைகொண்டிருந்த பரங்கியர் அணியைச் சிவகெங்கைப் பிரதானிகளது மக்கள் தலைமையிலான அணி, தாக்கி, அங்கிருந்து **பரமக்குடிக்குத்** துரத்தியடித்த செய்தியும் **சாலைக்கிராமம்** கச்சேரி மயிலப்பனால் அழிக்கப்பட்ட செய்தியும் **இராமநாதபுரம் கோட்டைக்கு** எட்டியது. **உதவி கலெக்டர் மில்லர்** புதிய அணிகளுடன் சாலைக்கிராமம் பகுதிக்கு விரைந்து வந்தான். மயிலப்பன் **இராஜசிங்கமங்கலம்** பகுதியில் **செட்டிக்கோட்டை** என்ற கிராமத்தை அழித்துக் கொள்ளைப் பொருட்களைப் பத்திரமான இடங்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கும்பொழுது மில்லரது அணி

52. Trirunelveli District Records - vol 1357 at 20.03.1801

அங்கு வந்து சேர்ந்தது. கொள்ளைப் பொருட்கள் அனைத்தும் அங்கிருந்து அகற்றப்படுவதற்கு ஏற்ற வகையில் **மயிலப்பன் அணியினர் மில்லரது** அணியுடன் பொருதி அவர்களது முன்னேற்றத்தைத் தடுத்துப் போராடினர். பின்னர் மாலை மசண்டை இருளில் திட்டமிட்டபடி **ஆனந்தூர்** திக்கில் மேற்கில் பின்வாங்கிச் சென்றனர்.[53] மயிலப்பனது அணியை இருட்டில் தொடர முடியாததால் மில்லர் **சாலைக்கிராமம்** திரும்பினான்.

53. MDR vol 1133 dated 20.03.1801.

# 12. தலைக்குமேல் வந்த வெள்ளம்

**சிவகெங்கைப்** பிரதானிகளுக்கும் **சித்திரங்குடி சேர்வைக்காரருக்கும்** இடையில் ஏற்பட்ட நல்லிணக்கத்தின் காரணமாக சேதுபதி சீமையில் கும்பெனியாருக்கு எதிரான, நாட்டுப்பற்றைச் சுட்டும் நடவடிக்கைகள் புதுப்பிக்கப்பட்டன. ஒரு பெரும் சாதனையாக இன்னுமொரு நிகழ்ச்சி, சேதுபதி மன்னர் இல்லாத குறையைத் தற்காலிகமாக நிறைவு செய்யும் வகையில், தற்காலிக மன்னரை நியமித்துத் தற்காலிக அரசு ஒன்றையும் அமைத்தது ஆகும். எவ்வளவுதான் **சித்திரங்குடி சேர்வைக்காரர்** சிறையில் உள்ள சேதுபதி மன்னரை விடுதலை செய்யும் நோக்கில் தனது சொந்தத் திறமையினாலும், செல்வாக்கினாலும், மக்களைத் திரட்டினாலும், அது முழுமையான முறையான செயலாக அமையாது என்பதை மனதில்கொண்ட **மருது சேர்வைக்காரர்களும்,** சித்திரங்குடி சேர்வைக்காரரும் சேதுபதி பீடத்தில் ஒருவரைத் தேர்வு செய்து மன்னரை நியமனம் செய்தனர் தற்காலிகமாக.

முதுகளத்தூர் வட்டத்தில் **கடலாடிக்கு** தென்கிழக்கே அமைந்து இருப்பது **மீனங்குடி கிராமம்.** இந்த கிராமத்தைச் சேர்ந்த **முத்துக்கருப்பத் தேவர், கனகசபாபதித்**

**தேவர்** என்ற சகோதரர்கள் 24.07.1799ம் தேதி முதல் நடைபெற்ற மக்கள் கிளர்ச்சியில் மிகவும் துணிச்சலாகவும் தேசபற்றுடனும் **சித்திரங்குடி சேர்வைக்காரருக்குத்** தக்க துணையாக விளங்கியவர்கள். இவர்களது குடும்பம் ஓரளவு சேதுபதி மன்னருக்கு உறவினருங்கூட **இரகுநாத கிழவன் சேதுபதி** அவருக்கு இருந்த அரசியல் எதிர்ப்புகளைச் சமாளிப்பதற்கு மறவர் சீமையின் பல நாட்டுத் தலைவர்களது மக்களுடன் திருமண உறவுகளைக் கொண்டு நாட்டின் பொது வாழ்க்கையில் அமைதியையும் சௌசன்னியம் நீடிப்பதற்கு முயன்றார். இந்த வகையில் **மீனங்குடி முத்துக்கருப்பத் தேவரது** பாட்டி ஒருவரும் (மூன்று தலைமுறைக்கு முனனர்) கிழவர் சேதுபதியின் அரச பிராட்டியாக இருந்தவர்.

இவை ஒருபுறம் இருக்க, அப்பொழுது **திருச்சிக் கோட்டையில்** கைதியாக இருந்த **முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதிக்கு** ஒரே ஒரு மகள் மட்டும் வாரிசாக இருந்தார். ஐந்து அல்லது ஆறு வயதுடையவர். இவரைத்தவிர இந்தச் சிறுமியின் அத்தை-சேதுபதி மன்னரது **தமக்கை மங்களேஸ்வரி நாச்சியார்** என்பவர் மட்டும்தான் சேதுபதி பட்டத்துக்கு உரியவராக இருந்தார். இவரும் தமது கணவருடன் சென்னை சென்று தங்கியிருந்து **ஆர்காட்டு நவாபையும்** கும்பெனிக் கவர்னரையும் பலமுறை சந்தித்து **இராமநாதபுரம் சேதுபதி** ராணியாகத் தம்மை அங்கீகரிக்க செய்யுமாறு பலவழிகளிலும் முயன்று கொண்டிருந்தார். **இராமநாதபுரம் அரண்மனையைச்** சார்ந்த அரசியல் வாரிசு வேறு யாரும் இல்லாநிலையில், **சித்திரங்குடி** சேர்வைக்காரரும் சிவகெங்கைப் பிரதானிகளும் மீனங்குடி **முத்துக்கருப்பத்** தேவரை இராமநாதபுரம் மன்னராக்க முடிவு செய்தனர். **திருவாடானைக்கு** அருகில் உள்ள **பாண்டுகுடியில்** இராமநாதபுரம் சீமை மன்னரும் அவரது அரசும் செயல்பட்டனர். இப்பொழுது பாண்டுகுடி அரண்மனை சிதைந்து விட்டது.

இராமநாதபுரம் கோட்டைக்கு வடகிழக்கே உள்ள நாடுகளில

குறிப்பாக **ராஜசிங்கமங்கலம், அறுநூத்திமங்கலம், அஞ்சுகோட்டை, அனுமந்தக்குடி,** ஒரூர் குத்தகை நாடுகளில் உள்ள மக்களைத் திரட்டி ஆங்கில ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியைப் பலப்படுத்துவது **மீனங்குடி முத்துக்கருப்பத் தேவரது** பிரதான கடமையாக இருந்தது. காரணம் **முதுகளத்தூர்** பகுதி மக்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக வெள்ளையரது நிர்வாகத்திற்கு எதிராகப் போர்க்கொடி எழுப்பி போராடிக்கொண்டு வந்தபொழுதும், இந்தப்பகுதி மக்கள் விடுதலை இயக்கத்தில் ஒரு சிறிதும் அக்கறையில்லாது இருந்து வந்தனர். இந்தப் பணியை மிகச் சிறப்பாகச் செய்து அந்தப் பகுதி மக்கள் அனைவரையும் கும்பெனியாருக்கு எதிராக வீறுகொண்டு இயங்கச் செய்தார். முழுவெற்றியும் பெற்றார் முத்துக்கருப்பத்தேவர்.

அவரது முயற்சியில் மூன்று நன்முத்துக்களாக **ராஜசிங்கமங்கலம்** பகுதியில் நாட்டுப்பற்றும், பிறந்த பூமியின் மீது மாளாது பிரியம் கொண்ட மூவர் கிடைத்தனர். அவர்கள் - **ஜகந்நாத ஐயன், குமாரத்தேவர், திருக்கண்ணத்தேவன்** என்ற மூன்று இளைஞர்கள். மிகுந்த துணிச்சலுடன் வெள்ளையருக்கு எதிரான நடவடிக்கைகளை அவர்கள் தொகுத்து பலவகைகளிலும் கும்பெனியாரது நிர்வாகத்தை நிலைகுலையச் செய்துவந்தனர். அறிவு துலக்கும் ஆகமங்களையம், நீதி நூல்களையும் படித்து மக்களுக்கு நேர்வழி காட்டும் அந்தணர் குடும்பத்தில் பிறந்த பெருமையுடன் அப்பொழுதைய விடுதலை இயக்கத்தில் மக்களுக்கு நல்வழிகாட்டும் கிளர்ச்சிக்குத் தயக்கமின்றி மக்கள் முனைந்து ஈடுபடப் பாடுபட்டவர் ஜகந்நாதஐயன். தமது **திருக்கோஷ்டியூர் நம்பி** ஆன்ம விடுதலைக்கு மட்டும் இரகசியமாக உபதேசித்த திருமந்திரத்தை அந்த ஊர் திருவிழாவில் திரண்டு இருந்த மக்களுக்கெல்லாம் திருக்கோயில் திருமதிலில் அமர்ந்து உபதேசித்த உத்தமர் **இராமானுஜர்.** அதனை அறிந்து அவரது ஆசாரிய சுவாமிகள், குரு உபதேசத்தை உதாசீனம் செய்த உனக்கு நரகம்தான் கிடைக்கும் என்று சபித்தபோது நூற்றுக்கணக்கானவர்கள் சொர்க்கம் சேரும்

வேளையில்தான் ஒருவன்மட்டும் நரகம் செல்வதில் மகிழ்ச்சிதான் என்று பதிலளித்த அந்த மகானுபாவரை போன்ற மனத்திண்மை படைத்தவர் **ஜகந்நாத ஐயர்.**

**குமாரத்தேவனும், திருக்கண்ணத்தேவனும்** இளம் விவசாயிகள். தலைமுறை, தலைமுறையாகத் தங்களது குடும்பமும், உறவினரும் வேளாண்மை செய்வதற்கு கண்மாய் அமைத்து கரை வகுத்து கால்கள் வெட்டிக்கொடுத்து கவலையில்லாமல் வாழ்வதற்கு உதவிவந்த சேதுமன்னர் திலகம் சிறையில் படும் வேதனைகண்டு விம்மி அழுததுடன் மட்டுமல்லாமல், அதற்குக் காரணமான வெள்ளைப் பரங்கிகளை அழித்துப் புனித சேதுபதி சீமை மண்ணை மீட்போம் என வீரசபதம் மேற்கொண்ட வரிப்புலிகள் அவர்கள். கும்பெனியார் வரித்தீர்வை என மக்களிடம் கொள்ளை அடித்துக் கோட்டைகளாய்க் கட்டியிருந்து சேகரம் பட்டறை **நெல்லைக்** கண்மூடி கண் திறக்கும் நேரத்தில் கொள்ளையடித்து **பாண்டு குடியில்** அமைந்துள்ள புதிய சேது ஆதினக் கருவூலத்திற்கு அனுப்பி வைப்பதில் தீரர்கள். மற்றும் கிராமங்களில் நிர்வாக அலுவலராக வருகின்ற கும்பெனி அலுவலர்களது ஆயுதங்களைப் பறித்துக் கொண்டு அவர்கள் வந்த வழியிலேயே திரும்பி ஓடுமாறு விரட்டியடிக்கும் பிள்ளை விளையாட்டில் வல்லவர்கள் இவர்கள்.

**இராமாதபுரம் சீமையில்** இந்த மூவரின் பெயரை அறியாத குழந்தைகள்கூட அப்பொழுது இல்லை என்ற அளவிற்கு மக்களிடம் அறிமுகமானவர்கள். மக்களது மட்டற்ற மதிப்பிற்குரியவர்களாக இருந்தனர். நாட்டுப்பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி நாளெல்லாம் பாடுபட்ட நல்லவர்கள். சிந்தனையிலும், செயலிலும் வல்லவர்கள். இவர்களது கடுமையான முயற்சியினால், **மீனங்குடி** முத்துக்கருப்பத் தேவர், கோரிக்கையின்படி, **இராஜசிங்கமங்கலம் அறுநூத்தி மங்கலம், அஞ்சுகோட்டை, ஓரூர், குத்தகை நாடு** மக்களிடம் வசூலிக்கப்பட்ட தொகையில் இருந்து வாங்கப்பட்ட நூறு வண்டிகளிலும் கருமருந்து ஏற்றப்பட்டு, தென்மேற்குத் திக்கில்

உள்ள **பாஞ்சாலக்குறிச்சிக்கு** அனுப்பப்பட்டன. அத்துடன், பாஞ்சைப் போரில் பங்கெடுத்துக் கொள்ள பதினைந்தாயிரம் மறவர்களும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.[54]

கும்பெனித் தலைமையுடன் கண்ணோட்டமும், சிந்தனையும் செயல்முறைகளும் **முதுகளத்தூர் பகுதி** மக்களது கிளர்ச்சியை அடக்கி ஒடுக்குவதில் மட்டும் முனைந்து இருந்ததால், **இராஜசிங்கமங்கலம்** பகுதியில் கிளர்ச்சிக்காரர்களது சித்து விளையாட்டுக்களைப் பெரிதுபடுத்திப் பார்க்கவில்லை. ஆதலால், மிகவும் தாமதமாகவே மறவர் சீமையின் தெற்கில் மட்டுமல்லாமல் வடக்கிலும் மக்கள் மதங்கொண்ட யானைகள் போல் அணி திரண்டனர் என்பதை அறிந்து பதை பதைத்தனர். கும்பெனியாரது கயத்தாறு ராணுவப் பாசறையில் பணிபுரிந்த **கர்னல்-மில்லர்** என்ற தளபதி இராமநாதபுரம் கலெக்டர் லூஷிங்டனது உதவிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இராமாநதபுரம் கோட்டையில் வடபகுதியில் அரண்மனைக்கு அருகில் இருந்த மாளிகையொன்றில்[55] தங்கியிருந்து **இராஜசிங்கமங்கலப்** பகுதி நிலைமையை நோட்டமிட்டு வந்தார் மில்லர்.

**சித்திரங்குடி சேர்வைக்காரரது** கிளர்ச்சிகளை அடக்க **பாளையங்கோட்டையில் இருந்து தளபதி பானர்மேன், தளபதி அக்னியூ** ஆகியவர்கள் அடுத்துடுத்து **முதுகளத்தூர் பகுதிகளுக்கு** அனுப்பப்பட்ட பிறகு, **தளபதி மில்லரது** முழுப் பொறுப்பில் ராஜசிங்கமங்கலம் பகுதி ஒப்படைக்கப்பட்டது. அவ்வளவுதான் நரகாசுரத்தனம், பகுமாசுரைனைப் போல தொடங்கிவிட்டது. மக்களை மக்களாக நினைக்கவில்லை. மில்லர் ஆடு மாடுகளைப் போன்ற விலங்குகளை அடித்துத் துன்புறுத்துவது போல வன்முறையைப் பயன்படுத்தி மக்களை தனது வசப்படுத்த முயன்றார்.

கிழவன் சேதுபதி ஆட்சிக் காலத்தும் **முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின்** ஆட்சியின்போதும், **சேதுபதி சீமையை**

---

54. Tirunelveli District Records - vol. No. 3579/18.03.1801. p.p 69-72

55. Military Consultaties vol. No 288/20.10.1801 p.p. 420-430

இவனது மாளிகை புளூ பாலஸ் என்ற பெயரில் இராமநாதபுர வட்டம் 4-ல் அமைந்து இருந்து சென்ற ஆண்டில் இடிக்கப்பட்டது. நகராட்சி ஆவணங்களில் இன்றும் மில்லர் பங்களா தெரு என வழங்கப்படுகிறது.

ஆக்கிரமிக்கப் படையெடுத்து வந்த, மதுரை நாயக்க, தஞ்சை மராத்திய மன்னர்களது பெரும்படைகளை அடுத்து "படைவெட்டி" என்ற விருதுகள் பெற்ற வீர மறத்தலைவர் பலரின் வழியினர்தான் அப்பொழுது அங்கு இருந்தவர்கள். பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுவதில்லை அல்லவா? அவர்கள் தொடர்ந்து கும்பெனி நிர்வாகத்திற்கு விலாப்புறத்தின் இரு பக்கங்களிலும் இணைந்த கருவை முட்கள்போல நடத்திய சாதனைகளில் சிறப்பானது சிவகெங்கையில் இருந்துவந்த அணியினருடன் இணைந்து குத்தகை நாட்டைக் கொள்ளையிட்டது ஆகும். கமுதிப் பேட்டை கொள்ளையில் கைப்பற்றிய தானியத்துடன் பெருத்த அளவு கும்பெனிப் படையார்களிடமிருந்து வெடி மருந்துப் பொருள்களும் வெற்றிப் பொருளாகக் கிடைத்தன. அவை தொண்டிக்கு எடுத்துச் செல்லப்பட்டன என்ற செய்தி இராமநாதபுரம் அமில்தார் அறிக்கையில் காணப்படுகிறது.

அறுவடை காலத்தில், வேளாண்மைக்கு ஏற்பட்ட ஏரிடுதல், உரம்தட்டல், விதைத்தல், களை பறிப்பு, கங்காணம் போன்ற செலவுகள் கணக்கிடப்பட்டு அவைகளுக்காக மதிப்பிடப்பட்ட நெல்லை ஒதுக்கி முதலில் விவசாயிக்கு கொடுத்து விடுவது உண்டு. இதற்கு பொதுச் செலவுகள் என்று குறிக்கப்பெறும். மேலும் கதிர் அறுப்பு, கதிர் அடித்தல், பிணைமாட்டுச் செலவு, களத்துப்பிச்சை போன்றவைகளுக்கு நெல்லை அளந்து கொடுத்துவிட்டு மீதமுள்ள நெல்லை சமபங்காகப் பிரித்து வேளாண்மை செய்த விவசாயியும் சேது சமஸ்தான அலுவலர்களும் எடுத்துக்கொள்வது சேது நாட்டின் அப்பொழுது இருந்த நடைமுறை.[56] ஆனால், சேதுபதி மன்னர் சிறையிலடைக்கப்பட்டு, சேதுபதி மன்னர் நிலையில்கும்பெனி நிர்வாகம் இருந்து வந்ததால், கிளர்ச்சிக்காரர்கள் சேதுபதி மன்னருக்கான அறுவடை நெல்லை கும்பெனியாருக்கு கொடுக்க மறுத்தனர். கொடுக்க வேண்டாம் என மற்றவர்களிடமும் பிரச்சாரம் செய்தனர்.

---

56. RajaRam Rao. T - Manual of Ramad Samasthanam 1895

இதனையும் மீறி, வன்முறையில் விவசாயிகளிடமிருந்து பங்குநெல்லைக் கைப்பற்றி அவர்களது சேகரம் பட்டறையில் வைத்து பாதுகாக்கப்பட்ட நெல்லை கிளர்ச்சிக்காரர்கள் கொள்ளையிட்டு கடத்திச் சென்றனர். **இராஜசிங்கமங்கலம், அறுநூத்திமங்கலம், அனுமந்தக்குடி** ஆகிய பகுதிகளில் இவ்விதம் கும்பெனியாரது சேகரம் பட்டறைகளில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட நெல்லின் மதிப்பு ஸ்டார், பக்கோடா பணத்தில் 244731.6.33 எனக் கும்பெனியாரது ஆவணம் ஒன்றிலிருந்து தெரியவருகிறது.[57] கும்பெனியாரது இழப்பிற்கு பிரதான காரணிகள் **ஜகந்நாத ஐயனும், குமாரத்தேவனும்** என்று குறிப்பிடத் தேவையில்லை. ஆதலால், **முதுகளத்தூரிலிருந்து** இராமநாதபுரம் வந்த **தளபதி மில்லரது** முதல் வேலை, இந்த இரு மக்கள் தலைவர்களையும் பிடித்து தண்டிப்பது என்பது. அதற்காக மில்லர், சாலை வசதிகள் இல்லாத இராஜசிங்கமங்கலம் பகுதிகளில், கம்பெனியாரது தொங்கு சதைகளாக விளங்கிய மக்கள் துரோகிகளுடன் குதிரைகளில் அலைந்து வந்தான். மூன்று மாதங்களுக்குப் பிறகு இந்த இரு தலைவர்களது மறைவிடங்களை **வன்னியத்தேவன்** என்ற கைக்கூலியால் காட்டிக் கொடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்[58]

இவர்களையடுத்து இன்னொரு . நாட்டுப்பற்றாளரான **திருக்கண்ணத் தேவரையும்** மிகுந்த சிரமங்களிடையே மில்லர் கைது செய்தான். இவர்கள் அனைவரும் **இராமநாதபுரம்** கோட்டையில் அடைக்கப்பட்டனர். **ஜகந்நாத ஐயனுக்கும் குமாரத்தேவனுக்கும்** நீதி விசாரணை என்ற பெயரில் தண்டனை வழங்கப்பட்டன. குற்றம் சாட்டுபவர் மில்லர், குற்றம் எனத் தீர்மானித்து நீதி வழங்கியவரும் தர்மப் பிரபு மில்லர் தலைமையிலான நீதிக் குழுதான்.[59] "யானைகளைப் பிணிக்கப் பயன்படும் கனமான இருப்பு சங்கிலிகளில் இவ்விருவரும் விலங்கிடப்பட்டிருப்பினும் இவ்விருவருக்கும் ஆயிரம் கசையடிகள் கொடுக்குமாறு உத்திரவிட்டான். ஜகந்நாத ஐயனுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்து[60] அவரை தொலைதூரத்தில் உள்ள பிணாங்கு தீவிற்கு நாடுகடத்த உத்தரவிட்டனர்.

---

57. Madurai District Records vol 1142/136 1803/108
58. Madurai District Records vol 1219/20 24.09 1801 p.p 114
59. Revenue Sundries vol 26/ 20.09.1801.
60. Revenue Consultation Vol.26/02.10.1801/18-83

ஆயிரம் கசையடி பெற்று, இரும்புச் சங்கிலியில் கட்டுண்டு கிடந்த இரும்பு மனம் படைத்த அந்த வீர இளைஞன் குமாரத்தேவன் எப்படி, எங்கே, எப்பொழுது புகழுடம்பு பெற்று தியாகியானான் என்ற செய்தி அரசு ஆவணங்களில் காணப்படவில்லை. அதேபோல மாவீரர் **திருக்கண்ணத் தேவனை கொலைகாரன் மில்லர்** எத்தகைய கொடும் துன்பத்திற்கு ஆளாக்கினான் என்ற விவரங்களையும் அறிந்து கொள்வதற்கில்லை? ஏன்? இன்னும் நாட்டு விடுதலைக்காக, அந்நிய ஏகாதிபத்திய வெறியர்களை எதிர்த்த **இளவல் முத்துராமலிங்க சேதுபதி மன்னரது** வழியில், காட்டையும், வீட்டையும் பிறந்த மண்ணின் மீது கொண்ட பற்றினால், பாசத்தினால், சொல்லில் அடங்காத துயரத்தையும், துன்பத்தையும் தாங்கியவாறு மௌனமாக தியாகிகளான வீரமறவர்களை **வரகுண வளநாடு** என்று வழங்கப்பட்ட **இராஜசிங்கமங்கலம்** வரலாறு, கண்களில் மட்டுமல்ல இதயத்திலும் இரத்தக்கண்ணீரை நிறைத்து காலமெல்லாம் நன்றிகூற கடமைப்பட்டுள்ளது.

துன்பமும், துயரமும் சூழ்ந்த அந்தப்பகுதி மக்களது தியாக வரலாறு தொடர்ந்தது. **இராமநாதபுரம் சீமை கலெக்டர்** திரட்டிய பதினாராயிரம் கூலிக்காரர்கள் கொண்ட அணிகள் இராமநாதபுரத்திற்கு வடக்கேயுள்ள நாடுகளில் புகுந்து கிளர்ச்சிக்காரர்களை அடக்கி ஒடுக்குவதில் ஈடுபடுத்தப்பட்டன.[61] அவர்களது திட்டப்படி அந்த பகுதியில் இருந்த இரண்டாயிரத்திற்கும் மிகுதியான கிளர்ச்சிக்காரர்களது குடும்பத்தினரை பலவகைகளிலும் துன்புறுத்தினர். ராஜசிங்கமங்கலம், **அறுநூத்தி மங்கலம், திருவாடனை, ஓரியூர்** ஆகிய ஊர்களில் சிலநூறு கிளர்ச்சியாளர்களை வேட்டையாடிப் பிடித்தனர்.[62] அந்தப் பகுதி முதியவர்களது நினைவிற்கு எட்டாத வகையில் **இராமநாதபுரத்திற்கும், தொண்டிக்கும்** இடைப்பட்ட நாடுகளில் கும்பெனியாரது வன்முறை தலைவிரித்தாடியது.

நெஞ்சுரத்துடனும் நேர்மைத் திறனுடனும் கும்பெனியாரத

61. Military Consultation vol - 288(A) 15.09.1801.
62. Military Consultation vol - 28 .6844-45 6967.

கொடுமைகளை எதிர்த்து ஆயுதம் தாங்கிப் போரிட்ட மறவர்களை, ஆங்காங்கு இருந்த கோழைகளால் கைக்கூலிபெறும் சுயநலமிகள் காட்டிக்கொடுத்துக் களிப்பு எய்தினர். கும்பெனியார்களிடம் சில பொற்காசுகளையும் பெற்றனர். கொடுமைகளினால் குமைந்து இரத்தம் கொட்டிய நிலையிலும், ஏசுபிரான் இறைவனிடம் வேண்டியது போல "இந்த மனிதர்கள் தாங்கள் எத்தகைய தவற்றை, பாவத்தை செய்கிறோம் என்பதை உணராமல் செய்கிறார்கள்....." என்று சொன்னது போல் இந்தக் கழிசடைகளும், தான் முளைத்து வளர்ந்த ரோஜா செடி, அந்த மண்ணின் மணத்தை, திக்கெல்லாம் வீசுவதை, அந்தச் செடிக்கு அருகில் முளைத்த முட்செடி அந்த ரோஜா செடியை அழித்து வளர்வது போல, மானமும், வீரமும் மணக்கும் சேது நாட்டின் புகழைச் சமுதாய உணர்வுடன், கொடுமைகளைக்கண்டு குமுறி எழுந்த புலிக்குட்டிகள் வேங்கையாக வளர்ந்து பாய்வதற்குள் கொன்றுவிட்டனர். தாங்கள் எத்தகைய சமுதாயக் கொடுமையைச் செய்கின்றோம் என்பதை உணராமல், இராமநாதபுரம் சீமை போன்ற இறுகலான, மிகவும் நெருக்கடியான சூழ்நிலை சிவகெங்கையிலும், முதுகளத்தூரிலும் எழுந்தன. வெள்ளம் வருவதற்கு முன்னர், தண்ணீர் வரக்கூடிய வரத்துக்கால்களைச் செம்மை செய்வது போல சேதுபதி சீமைக்குத் தெற்கில் பாஞ்சாலக்குறிச்சியிலிருந்து அபாயம் வரவிருக்கிறது என்பதை உணர்ந்து மீண்டும் முத்துக்கருப்பத்தேவர் எஞ்சியிருந்த மறவர்களைத் திரட்டிக்கொண்டு, சேதுநாட்டில் புறவாயிலாகத் திகழ்ந்த கமுதிக் கோட்டைக்கு விரைந்தார்.

# 13. மயிலப்பன் வாக்குறுதி

இளவேனில் காலத்தை நினைவூட்டும் இளம் வெய்யில் காய்ந்து கொண்டு இருந்தது. **சிக்கல்** சத்திரத்தில் இருந்து தெற்கு நோக்கிச் செல்லும் **கன்னியாகுமரி** சேது மார்க்கத்தில் புழுதியைக் கிளப்பிவிட்டு ஓடி வந்த ஐந்தாறு குதிரைகளும் வீரர்களும் கடுகுசந்தைச் சத்திரத்தில் அருகில் நின்றனர்.

சேணத்தை விட்டு இறங்கிய வீரர்கள் அவர்களது தலைவர் கூறிய உத்தரவை ஏற்று இரு வீரர்கள் சத்திரத்திற்குள் நுழைந்தனர்.

மற்றவர்கள், சத்திரத்தின் அருகில் நின்ற வாகை மர நிழலில் தங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டு இருந்தனர்.

சத்திரத்தின் பணியாள் ஒருவர் செம்பில் மோர் கொண்டு வந்து அந்தக் குழுத் தலைவரிடம் மிகவும் பணிந்து மரியாதையுடன் கொடுத்தார்.

மோரைக் குடித்துவிட்டு செம்பை அந்தப் பணியாளிடம் திருப்பிக் கொடுத்த பொழுது, சத்திரத்தின் எதிரே உள்ள குடியிருப்பில் இருந்து ஐந்தாறு பேர்களும் இளம் பெண்களும், சிறுவர்களும் - அவரை நோக்கி வருவதைக் கவனித்தார்.

வந்தவர்ளில் வயது குறைவான இளம்பெண் ஒருவர் அவர்முன் வந்து நாணத்துடன் "ஐயா! கும்பிடுகிறேன்" என்று ஒருவகையாகத் துணிவுடன் சொல்லிவிட்டு, வெட்கம் மேலிட மேலும் எதுவும் சொல்லாமல் நிலத்தை நோக்கி நின்றாள்.

"நன்றாக இரு அம்மா. என்னிடம் எதுவும் சொல்ல வேண்டுமா?" அவர் கேட்டார்.

வெட்கத்தினின்றும் விடுபடாத அந்த இளம் நங்கை மௌனம் அவருக்கும் புதிராக இருந்தது. தன்னை ஒரு வேளை வேறு ஒருவருக்குப் பதிலாக, தவறாக நினைத்துவிட்டதால், சொல்ல வந்த செய்தியைச் சொல்லாமல் இருக்கிறாளோ என்று நினைத்தவராக.

"அம்மா! முதலில் நீ சொல்லவந்த செய்தி எனக்குத்தானா?... என்னை, யார் என்று அடையாளம் கண்டு கொண்டாயா?" என்று அந்தப் பெண்ணை அவர் வினவினார். இப்பொழுது அந்தப் பெண்ணிற்கு தைரியம் வந்துவிட்டது.

"ஐயா! தாங்கள் **சித்திரங்குடி** ஐயா தானே! தாங்கள் இந்த சாலையில் பல தடவை சென்று இருப்பதை பார்த்து இருக்கிறேன். அப்பொழுது எல்லாம் எங்கள் ஊர்ப்பெரியவர்கள், தங்களை மகாபாரதத்தில் வருகின்ற, வீர அபிமன்யுவிற்கு நிகராக, தங்கள் வீர சாகசங்களைப் புகழ்ந்து சொல்லி இருக்கிறார்கள். எங்கள் ஊரைச் சேர்ந்த வாலிப மட்டங்கள், எட்டுப்பேர் தங்களது கூட்டத்தில்தான் இருந்து வருகின்றனர்" அந்தப் பெண் சொன்னாள்.

"மிகுந்த மகிழ்ச்சி. பிறகு என்ன தயக்கம் விஷயத்தை தாராளமாக என்னிடம் தெரிவிக்கலாமே!" " தங்கள் கூட்டத்தில் எட்டுப்பேர் இருக்கிறார்கள் அல்லவா! அவர்களில் எனது மாமனும் ஒருவன்" என்று சொல்லும்பொழுது நாணத்தினால் அவளது முகம்

அழகாக மலர்ந்து தோன்றியது..

"......................அவருக்கும் எனக்கும் போன வைகாசியில் கல்யாணம் நடந்து இருக்க வேண்டும். ஆனால் அவரது தகப்பனார் தங்களது அணியில் நின்று போரிட்டு **கீழ்க்குளம்** காட்டில் நடந்த சண்டையில் இறந்துவிட்டார். அதில் நின்று போன கலியாணம் நடக்கவில்லை".

அந்தப் பெண்ணின் குரலில் வேதனையும் ஏக்கமும் நிறைந்து இருந்தது. மேலும் அவள் சொல்வதைக் கேட்டு சேர்வைக்காரர் மௌனமாக நின்று கொண்டு இருந்தார்.

".................மறவர் சாதிக்கு மரணத்தைப் பற்றி பயமே கிடையாது. சேதுபதி மகாராஜாவை சிறைமீட்க ஐயா கொண்டுள்ள கொள்கை நிச்சயம் வெற்றி பெறும். ஆனால் அதற்கு எவ்வளவு நாட்கள், மாதங்கள் ஆகும் என்பது தெரியாது. ஆதலால் ஒரே ஒருநாள் எனது மாமனை இங்கே அனுப்பி வைத்தால், ஊரார் முன்னிலையில் எனக்கு திருப்பூட்டிச் சென்றுவிடுவார். அப்புறம் அவர் வருவதற்குள் நான் இறந்துவிட்டால் ஒரு சுமங்கலியாகச் சாகிறோம் என்ற ஆத்ம திருப்தி இருக்கும். ஒரு வேளை இனி நடைபெறும் போர்களில் அவர் வீரசுவர்க்கம் எய்திவிட்டால், நான் வாழக்கூடிய நிலை ஏற்பட்டால் ஒரு வீரத்தியாகியின் மனைவி என்ற மனநிறைவுடன் வாழ்வேன்......" என்று சொல்லி முடிப்பதற்குள் அவளது கண்களில் இருந்து அவளது உணர்வுகளையும் மீறி சில கண்ணீர்த் துளிகள் அரும்பி கன்னங்களில் உருண்டு உதிர்ந்தன.

"தங்கச்சி" அழலாமா? கொஞ்ச நேரத்திற்கு முனனால்தானே சொன்னாய். மறவர் சாதிக்கு மரணத்தைப் பற்றி பயமில்லை என்று. நாம் பிறந்து வளர்ந்த மண்ணைக் காப்பது அதற்காக மடிவது நமது கடமை. மரணத்தைப் பற்றி நமது முன்னோர்கள் கவலைப்பட்டு இருந்தால், நமது சீமையில் சேதுபதி மன்னர்களது நல்லாட்சி நடந்து

இருக்காது. இராமேஸ்வரம் திருக்கோயில் இந்திய நாட்டின் பெருமைமிக்க பெருந்தலமாக மாறி இருக்காது. அது சரி உனது பெயர் என்னவென்று சொல்லவில்லையே?" சேர்வைக்காரர் கேட்டார்.

"என் பெயர் **பொன் ஆத்தாள்**"

"பொன் ஆத்தாள் உன் மாமன் பெயரையும் சொல்லவில்லை. நீ சொல்லமாட்டாய்!"

சிரித்துக்கொண்டே சொன்னார் **சித்திரங்குடி சேர்வைக்காரர்**. பொன்ஆத்தாளும் வெட்கத்துடன் தன் தோழியைப் பார்த்தாள்.

"அவுக பெயர் **வீரக்காளை!** அவளது தோழி சொன்னாள் "வீரக்காளை!............வீரக்காளை!" சேர்வைக்காரர் சில நொடிகளில யோசித்தார். பிறகு வீரக்காளையைப் பற்றிய தெளிவு ஏற்பட்டவராக "ஆம் என்னிடம் நெருக்கமான தொடர்பு உடையவர். இப்பொழுதுதான் நினைவிற்கு வருகிறது. வீரக்காளை **பாஞ்சாலக்குறிச்சிக்கு** ஒரு முக்கியமான காரியமாகப் போய் இருக்கிறார். இரண்டொரு நாட்களில் திரும்பி வந்து என்னைச் சந்திப்பார்".

இதைக் கேட்ட பொன் ஆத்தாளுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. அவளது அழகிய, அகன்ற கண்கள் மேலும் அகலமாக விரிந்து சேர்வைக்காரர் முகத்தை ஆவலுடன் கவனித்தார்.

"எப்படியும் ஒரு வாரத்தில் உனது மாமனை அனுப்பி வைக்கிறேன். திருமண நிகழ்ச்சியை முடித்துவிட்டு இரண்டொரு நாட்களில் திருப்பி அனுப்பி வைத்துவிட வேண்டும். என்ன சரிதானா?"

"ஆகட்டும் அப்படியே அனுப்பி வைத்து விடுகிறோம் ஐயா"

"இல்லை கலியாணச் சாப்பாட்டில் மாப்பிள்ளை அசந்துபோய் உன்னிடமே இருந்து விடுவார்" ஆதலால் நானே வந்து அவரை அழைத்துக் கொள்வேன். புன்னகையுடன் சொன்னார் சேர்வைக்காரர்.

"திருப்பூட்டு நாளுக்கு ஐயா வந்துவிட்டால் எனக்கு மிகவும் பெருமையாக இருக்கும். அவசியம் வந்து சேருங்கள் ஐயா"

"நான் அப்பொழுது எங்கே இருப்பேன் என்று சொல்ல முடியாது. முடிந்தவரை வருவதற்கு முயற்சிக்கிறேன்."

"பிறகு நாங்கள் போய் வருகிறோம் உத்தரவு கொடுங்கள்"

"நல்லது"

பொன் ஆத்தாளும் அவள் தோழியும் அங்கிருந்து செல்வதை கூர்ந்து கவனித்துவிட்டுச் சொன்னார், "பொன் ஆத்தாள் போன்ற பெண்கள் நமது சீமையில் இருப்பதனால்தான் நமது பாரம்பர்ய வீரமும், பிறந்த மண்ணின் பாசமும் தொடர்கிறது." பிறகு வீரர்களைப் பார்த்து, "சத்திரத்திற்குள் நன்கு தேடிப்பார்த்து விட்டீர்களா? அந்தக் கோழை - நமது வீரர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டு கழுவிய மீன்களில் நழுவிய மீனைப் போல எங்கோ தப்பிச் சென்றான் எங்கே நம்மைவிட்டு போய்விடுவான். வாருங்கள் தேடிப்பார்ப்போம்" என்று குதிரை மேல் ஏறி அமர்ந்தார்.

"அந்த அம்பலக்காரன் **சூரங்குடி** சத்திரத்திற்கு போய் இருப்பான். அல்லது **செவ்வல்பட்டி ரெட்டியாரிடம்** அடைக்கலம் பெற்று இருப்பான். வாருங்கள் நாம் அங்கே செல்வோம்".

குதிரைகள் குளம்புகள் கிளறிய புழுதிப் படலத்தில் சேர்வைக்காரரும் குதிரை வீரர்களும் தெற்கு நோக்கிச் சென்று மறைந்தனர்.

# 14. மற்றொரு முயற்சி

"கொக்கரக்கோ! கொக்கரக்கோ!"

காலைப் பொழுது புலர்ந்து கொண்டிருப்பதை சேவலின் கம்பீரமான கூவல் அறிவித்தது. அடுத்து சுப்பிரமணிய சாமி கோவில் சேகண்டி தொடர்ந்து ஒலிப்பது கேட்டது.

அதுவரை சூரங்குடி சத்திரத்தில் முதல்நாள் இரவு வந்து தங்கின **சித்திரங்குடி சேர்வைக்காரரும்**, அவரது தோழர்களும் உறக்கம் கலைந்து எழுந்தனர். கை, கால், முகம் சுத்தம் செய்து கொண்டு சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்குச் சென்று வழிபாட்டில் கலந்துகொண்டு சத்திரத்திற்கு திரும்பி வந்தனர்.

குதிரைகள் பயணத்திற்கு ஆயத்தம் செய்யப்பட்டன.

சித்திரங்குடி சேர்வைக்காரர் தனது தோழர்களில் இருவரைக் குறிப்பிட்டு,

"நீங்கள் இருவரும் உச்சி நேரத்திற்கு முன்னால் **செவ்வல்பட்டி** சென்று நாம் நேற்று சந்தித்த **ராமசாமி** நாயக்கரைப் போய்ப் பாருங்கள். அவர் நமக்காக ஊரில் வசூலித்த

நன்கொடை பணத்தைக் கொடுப்பார். பெற்றுக் கொண்டு இன்று மாலைக்குள் **பேரையூர்** கண்மாய்க்கரையில் உள்ள மடத்திற்கு வந்து சேருங்கள். நாங்கள் இப்படியே **வேம்பாறு** சென்று விட்டு திரும்புகிறோம்."

"என்ன புரிகிறதா?"

"உத்தரவு ஐயா!......... செவ்வல்பட்டியில் நாயக்கர் பணம் வசூலித்துக் கொடுப்பதில் சுணக்கம் ஏற்பட்டால் நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" அந்தத் தோழர்களில் ஒருவர் கேட்டார். "செவ்வல்பட்டி **ராமசாமிநாயக்கரும்** மிகுந்த செல்வாக்கு உள்ளவர். அவரது ஊர் மக்களும் நமது போராட்டத்திற்கு மிகவும் ஆதரவாக இருப்பவர்கள். நேற்று இரவு ஊர்க்கூட்டம் போட்டு ஊர் மக்களிடம் நமக்கு உதவுவது பற்றி தெரிவித்து இருப்பார். ஆதலால் சுணக்கம் ஏற்படாது. ஒருவேளை சுணங்கினால் நீங்கள் பேரையூர் வந்துவிடுங்கள். அடுத்தவாரம் செவ்வல்பட்டி சென்று அவரைச் சந்தித்துக் கொள்ளலாம்".

**மயிலப்பன்** பதில் கூறிவிட்டு அவரும், அவரது நான்கு தோழர்களும் கிழக்கு நோக்கி வேம்பாறு புறப்பட்டனர்.

வேம்பாறு கிராமத்திற்குச் செல்லும் வழியில் **சித்திரங்குடி சேர்வைக்காரரும்,** அவரது தோழர்களும் சென்று கொண்டு இருந்தனர். தலைக்கு மேலே சூரியன் காய்ந்து கொண்டிருந்தான். வழியில் உள்ள தேரியின் மணல் பரப்பில் ஆழமாக அழுந்திய குளம்புகளை வேகமாக எடுத்து வைக்க இயலாமல் அவர்களது குதிரைகள் திணறியவாறு நடந்து கொண்டிருந்தன.

அவர்கள் வேம்பாறு கிராமத்தை அடைந்தபொழுது முற்பகல் நேரம் முடிந்து கொண்டிருந்தது.

**வேம்பாறு** என்ற அந்தக் கிராமம் **திருநெல்வேலிச் சீமையின்** வடகோடியில் கிழக்குக் கடற்கரையில்அமைந்திருந்தது. சேதுபதி சீமையின் தெற்கு எல்லையில் அமைந்திருந்த வேம்பாறு என்ற சிற்றாறின் பெயரில் இந்தக் கிராமத்திற்கு அந்தப் பெயர் வந்துள்ளது. முன்னர், இந்தப் பகுதி முழுவதும் பாண்டியரது ஆட்சிக்கு உட்பட்டிருந்ததால் பாண்டிய மன்னரது அரசர் அங்கமான வேப்ப மாலையை நினைவூட்டுவது இந்தப் பெயர்.

வேம்பாறு கிராமம் பரவர் என்ற மீனவர் இனத்தினரது சிற்றூராக அப்பொழுது விளங்கியது. சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்ற பரதவர் என்ற பெயர் பிற்காலத்தில் பரவர் எனக் குறுகிவிட்டது. குறிப்பாக பரவர் என்ற இச்சொல் திருநெல்வேலிக் கடற்கரை மீனவ மக்களை மட்டும் இப்பொழுது குறிப்பதாக உள்ளது. ஏனெனில் தொண்டை மண்டலக் கடற்கரை மீனவர்கள் செம்படவர் என்றும், பன்னாட்டா என்றும், சோழ மண்டலக் கடற்கரை மீனவர்கள் பட்டினத்தார் என்றும், சேதுபதி சீமை மீனவர்கள் வலையர், முத்தரையர், கடையர் என்றும், பட்டம் கட்டி என இப்பொழுது வழங்கப்படுகின்றனர்.

கி.பி.16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், **காயல்பட்டினக்** கடற்கரைக்கு வந்த **போர்த்துக் கீசியரும்** அவர்களைத் தொடர்ந்து அடுத்த நூற்றாண்டில் இந்தக் கடற்கரைப் பகுதி முழுவதையும் ஆக்கிரமித்திருந்த **டச்சுக்காரர்களும்,** இந்த மீனவர்களைக் கிருஸ்த்தவ சமயத்தை ஏற்குமாறு செய்ததுடன் இந்த மக்களது சமூக பொருளாதார நிலைகளில்பெரும் மாற்றத்தை ஏற்படுத்தினர். ஆதலால், இந்தக் கிராமம் நன்கு அமைக்கப்பட்ட வீடுகளும் பள்ளிக்கூடம், தேவாலயம் ஆகிய அமைப்புக்களுடன் விளங்கியது.

சேர்வைக்காரர் அந்த கிராமத்திற்குள் நுழைந்தபொழுது **ஐசக்பிள்ளை** கிராமத்தின் முகப்பில் அமைந்திருந்த தேவாலயத்தின் அருகில் நின்று கொண்டிருந்தார். குதிரைகளும் கிராமத்திற்குள்

நுழைந்ததை கவனித்த ஐசக்பிள்ளை **மயிலப்பன் சேர்வைக்காரரை** கண்டுகொண்டவராக, "ஐயா வாருங்கள்! வாருங்கள் என அழைத்தார். சேர்வைக்காரரும், வீரர்களும் குதிரையை விட்டு இறங்கி **ஐசக்பிள்ளைக்கு** வணக்கம் சொல்லினர்.

**யாழ்பாணத்திலுள்ள டச்சுக்காரர்கள்** இந்தியக்கரையிலிருந்து கைத்தறித்துணிகள், முத்து, சங்கு, தானியங்கள் உலர்ந்த மீன் (கருவாடு) ஆகிய பொருட்களைக் கொள்முதல் செய்து அனுப்புவதற்காக இரண்டு அலுவலர்களைத் தங்களது பிரதிநிதிகளாக அங்கு நியமித்து இருந்தனர். அவர்களது பணியின் நிமித்தமாக அவர்கள் ஆராய்ச்சி என அழைக்கப்பட்டனர். பொறுப்புள்ள அந்த அலுவலர்களில் ஒருவர்தான் இந்த ஐசக்பிள்ளை என்பவர். ஏற்கனவே **கமுதிக்கோட்டைப்** போர் சம்பந்தமாக **சித்திரங்குடி சேர்வைக்காரர்** இவரைப் பலமுறை சந்தித்துப் பேசியுள்ளார்.

"ஐயா ஏது இந்த வெயில் நேரத்தில்" "எல்லாம் தங்களைச் சந்திப்பதற்காகத்தான்"**மயிலப்பன்** சொன்னார்.

"விபரமாக சொல்லுங்கள்" ஐசக்பிள்ளை கேட்டார். அதற்கு சேர்வைக்கா.ரர் சொல்லிய பதில், "ஐயா எங்களுக்கு மிகவும் அவசரமாக கருமருந்து தேவைப்படுகிறது. எங்களுக்கு கிடைப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யுங்கள். இதைச் சொல்வதற்காகத்தான், நானே நேரடியாக வந்துள்ளேன்" சுமார் இருநூறு சாக்குகள் தேவைப்படுகிறது. ஒரு வாரத்தில் இங்கு வந்து பெற்றுக் கொள்வதற்கு, உடனே ஏற்பாடு செய்யுங்கள். உரிய தொகையைத் தாங்கள் வேண்டும்பொழுது கொடுத்துவிடுவோம்" என்று சொல்லியவாறு, இடுப்பில் சொருகியிருந்த இரண்டு பணப்பைகளை எடுத்து ஐசக்பிள்ளையிடம் நீட்டியவாறு மீண்டும் சொன்னார்.

"இதில் ஐநூறு பொன் இருக்கின்றன. மீதத்தொகையை அடுத்தவாரம் கருமருந்து பெற்றுக்கொள்ள வரும்பொழுது

கொடுத்துவிடுகிறேன்" "மகிழ்ச்சி ஐயா, இன்றே யாழ்ப்பாணத்திற்கு தெரியப்படுத்திவிடுகிறேன். நீங்கள் சரியாக ஒரு வாரம் கழித்து இங்கு சந்திக்கவும்."

"நன்றி ஐயா! நான் போய் வருகிறேன்." மயிலப்படனும் வீரர்களும் புறப்பட்டனர்.

வேம்பாறிலிருந்து திரும்பும் வழியில் சேர்வைக்காரரும், குழுவினரும, இளைப்பாறிச் செல்வதற்காக கன்னிராஜபுரம் சென்றனர். அந்த ஊரின் மிராசுதாரர் அப்துல்கனி சேர்வைக்காரரையும், வீரர்களையும் உபசரித்து மதிய உணவிற்கு ஏற்பாடு செய்தார். இந்த மிராசுதாரர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், சேதுபதி மன்னரால் அந்தப் பகுதியின் காவல் பணிக்கு நியமிக்கப்பட்டவர். அப்பொழுதைய சேதுபதி மன்னர் அந்தப் பகுதியில் மூவாயிரம் குறுக்கம் நிலத்தையும் அப்துல்கனி சேர்வைக்காரரது தகப்பனாருக்கு இனாமாக வழங்கியிருந்தார். அந்தப் பகுதியே அப்துல்கனி சேர்வைக்காரரது பெயரால் கனிராஜபுரம் என்ற பெயரால் வழக்குப் பெற்று, பின்னர் கன்னிராஜபுரம் என மாறிற்று.

சிறந்த சேதுபதி மன்னரது இராஜவிசுவாசியான மிராசுதார் சித்திரங்குடி சேர்வைக்காரரிடம், பரங்கியரை அழிப்பதற்கான ஆயத்தங்கள் பற்றிய விவரங்களை ஆர்வத்துடன் கேட்டு அறிந்துகொண்டார். அங்கு மதிய உணவை முடித்துக்கொண்ட சித்திரங்குடி சேர்வைக்காரரும், அவரது வீரர்களும் சிறிது நேரம் இளைப்பாறிய பின்னர் வெயில் தாழ்ந்த பிறகு விடைபெற்றுக் கொண்டு பேரையூருக்குப் புறப்பட்டனர்.

அன்று மாலை மயிலப்பன், சேர்வைக்காரரும் வீரர்களும் பேரையூர் கண்மாய்க் கரையில் உள்ள மடத்திற்குப் போய்ச் சேர்ந்தனர். ஏற்கனவே அறிவித்திருந்தபடி அங்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த நாட்டுத்தலைவர்கள் அனைவரும் கூடியிருந்தனர். மயிலப்பன்

சேர்வைக்காரர் மடத்திற்குள் நுழைந்தபொழுது, அங்கிருந்தவர்கள், எழுந்து நின்று அவருக்கு மரியாதை செய்தனர்.

"சரி! எல்லோரும் அமருங்கள். நமது திட்டத்தைப் பற்றி விரிவாக பேசலாம்" **மயிலப்பன்** சொன்னார்.

இன்னும் ஒரு மாதகாலத்தில் **கமுதிக் கோட்டையைத்** தாக்கி கைப்பற்றுவது சம்பந்தமாக ஒவ்வொரு நாட்டு தலைவர்களிடம் விவரங்களைக் கோரினார். தாக்குதலில், அவர்களது கிராமத்தைச் சேர்ந்தவர்கள், எத்தனைபேர் கலந்து கொள்வார்கள் எத்தனை பேரிடம் நாட்டுத் துப்பாக்கிகள் இருக்கின்றன. கமுதிக்கோட்டைப் போருக்கு ஊர்மக்கள் எவ்வளவு பணம் கொடுக்க முடியும். அவர்கள் கலந்து கொள்பவர்களுக்கு உணவு வழங்கவதற்காக, எத்தனை கலம் அரிசி கொடுக்கமுடியும். போரில் காயம்பட்டவர்களுக்கு வைத்தியம் செய்ய நாட்டுவைத்தியர் அல்லது குடிமகன் எத்தனை பேர் இருக்கின்றனர் என்பன போன்ற மிகவும் தேவையான விவரங்களை ஒவ்வொரு நாட்டுத் தலைவரிடம் இருந்தும் சேகரித்து ஏட்டில் பதிவு செய்து கொண்டார்.

இந்தக் கூட்டம் முடிவதற்கு நடு இரவு ஆகிவிட்டது. கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் மயிலப்பன் சேர்வைக்காரர் உற்சாகப்படுத்தியதுடன், இந்த முறை நாம் கமுதிக் கோட்டையைக் கைப்பற்றுவது உறுதி என்றும் அந்த போருக்குத் தேவையான கருமருந்து இலங்கையில் இருந்து பெறுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாகவும், இன்னும் பதினைந்து நாட்களில் கமுதிப் போருக்கான நாள் குறிப்பிடப்பட்டு, ஒவ்வொரு நாட்டுத்தலைவருக்கும் கிள்ளை இலை மூலம் தெரியப்படுத்தப்படும் என்ற விவரத்தையும் தெரிவித்தார்.

அதற்குபிறகு, அனைவருக்கும் இரவு உணவு பரிமாறப்பட்டது.

# 15. மீண்டும் கமுதிக் கோட்டையில்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் கோட்டையைக் கைப்பற்றிப் பரங்கியரை முற்றாக **முதுகளத்தூர், கமுதி** பகுதிகளில் இருந்து துரத்துவதற்குக் கிளர்ச்சிக்காரர்கள் **சித்திரங்குடி சேர்வைக்காரர்** தலைமையில் நடத்திய வீரப் போரினையும், அதன் விளைவாக மறக்குடி மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களையும் முன்பு பார்த்தோம். அந்த நிகழ்விற்குப் பிறகு கும்பெனியார் இந்தக் கோட்டையைத் தொடர்ந்து மறவர் சீமையின் வலிமைமிக்க அரணாக மாற்றி இருந்தனர்.

இந்தக் கோட்டையைக் கிளர்ச்சிக் காரர்கள் கைப்பற்ற வேண்டிய நிர்ப்பந்தம் மீண்டும் அதிகரித்தது. காரணம், **சிவகெங்கைச் சீமை** பிரதானிகளான **சின்னமருது,** பெரியமருது சேர்வைக் காரர்களைத் தங்களது நம்பிக்கைக்கு உரிய நண்பர்களாகக் கருதிய கும்பெனியார், இப்பொழுது தங்களது கணிப்புத் தவறு என்பதை உணர்ந்தனர். அவர்களுக்குப் பரம விரோதிகளான **பாஞ்சாலங்குறிச்சி** பாளையக்காரரான **ஊமை குமாரசாமி** நாயக்கருக்கு ஆயுத உதவி அளித்து வருவதையும், முதுகளத்தூர் பகுதியில்

மக்களைத் திரட்டிக் கும்பெனியாரது நிர்வாகத்திற்குக் குந்தகம் ஏற்படுத்தி, அவர்களது சொத்துக்களை அழித்து இழப்புகளை ஏற்படுத்திவரும் **சித்திரங்குடி சேர்வைக்காரர் மயிலப்பனுக்கும்** அடைக்கலம் வழங்கி ஆதரவு அளித்து வருவதையும் தெளிவாகப் புரிந்து கொண்டனர் என்றாலும் இந்த மூன்று எதிரிகளையும் ஒரே சமயத்தில் சமாளிப்பது இயலாத செயல் என்பதையும் அறிந்து முதலில் **பாஞ்சாலங்குறிச்சி** கோட்டையைக் கைப்பற்றும் பணியில் 6.2.1801ம் தேதி முதல் முனைந்து இருநதனர்.[63] சேற்றில் புதைந்து விட்ட பாரவண்டி போல, அவர்களது ராணுவ வசதிகள் அனைத்தையும் அந்தப் போரில் ஈடுபடுத்தியும், வல்லமை மிக்க கும்பெனியாரது திறமையும், சூழ்ச்சியும் அதுவரை பலனளிக்கவில்லை.

இந்த நிலையில் **சிவகெங்கைச் சீமையின்** இறுதிப் போருக்கான ஆயத்தங்களைக் **காளையார்கோவிலைச்** சுற்றி சிவகெங்கைப் பிரதானிகள் செய்து வந்தனர். மறவர் சீமையில் இல்லாத, அரிதான கருமருந்தையும் துப்பாக்கி போன்ற ஆயுதங்களையும் அண்மையில் உள்ள இலங்கையில் இருந்து பெற்று, சிவகெங்கைச் சீமைக்குள் எடுத்து வருவதற்கும், அவர்களது **தொண்டித்** துறைமுகத்தில் தக்க ஏற்பாடுகளைச் செய்து வந்தனர்.[64] இதற்கும் மேலதிகமாக **இராமநாதபுரம் சீமையில்** கடந்த மூன்று ஆண்டுகளாகக் காட்டுத் தீயைப்போல கிளர்ந்து எழுந்துள்ள பன்னீராயிரம் மறவர்களது குறிக்கோளான கும்பெனியாரை அங்கிருந்து விரட்டி அடிக்கும் மக்கள் கிளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கி வந்தனர்.[65] மேலும், **பாஞ்சாலங்குறிச்சிக்கும் காளையார்கோவிலுக்கும்** இடைப்பட்ட தொலைவில் புறக்காவல் நிலையம் போல **கமுதிக் கோட்டையும்** அங்கு குவித்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களையும் கைப்பற்ற வேண்டிய தேவையையும் உணர்ந்து இருந்தனர்.

கமுதிப் பேட்டையிலிருந்த கும்பெனி விசுவாசிகளான வணிகர்களின் பொருட்களைக் கிளர்ச்சிக்காரர்கள் கொள்ளையிட்டனர். அடுத்து கோட்டையைத் தாக்கினர். ஆனால்,

63. குருகுகதாஸ்பிள்ளை திருநெல்வேலிச் சீமைச்சரித்திரம் பக் 263
64. Millitary Consultations vol. No.284/30.05.1801 pp 420-430
65. MDR vol 1178(A) pp315-16

மிகுந்த பாதுகாப்புடன் இருந்ததில் கிளர்ச்சிக்காரர்களது முயற்சி நிறைவேறவில்லை என்றாலும், முற்றுகையை பலநாட்கள் மேற்கொண்டனர். கும்பெனியாரது பிடிப்பில் எவ்விதத் தளர்வையும் ஏற்படுத்த முடியவில்லை.

அதே நேரத்தில் **பாஞ்சாலக்குறிச்சி** கோட்டை மீது கும்பெனியார் கடுமையான தாக்குதலைத் தொடர்ந்தனர். காரணம் முந்தைய இரண்டு தாக்குதல்களிலும், 2.2.1801, 10.2.1801ம் நாட்களில் நடைபெற்ற அவர்களது தாக்குதல் பாஞ்சாலக்குறிச்சியைக் காத்துநின்ற வீரமறவர்கள் ஓட ஓட விரட்டியடித்தனர். ஆம், ஏற்கனவே நாயை முயல்கள் வீராவேசத்துடன் விரட்டியடித்த மண்ணல்லவா? பாஞ்சாலக்குறிச்சி மண். இந்தக் காட்சியை நேரில் கண்டு வீறுகொண்ட முதலாவது கட்ட **பொம்மு நாயக்கர்**, தமது கோட்டையை அந்த மகத்தான வீர மண்ணின் மீதுதானே எழுப்பினான்! ஆனால், புறமுதுகிட்டு ஓடிய பரங்கிகள் சளைத்துவிடவில்லை., பக்கத்துப் பாளையக்காரரான **எட்டையபுரத்தாரிடம்** பலமுறை ஆலோசனை கலந்து தங்களது போர் உத்திகளை மாற்றிப் புதிய தாக்குதலுக்கான திட்டமொன்றைத் தயாரித்தனர். இந்தத் திட்டத்தைவெற்றிகரமாக நிறைவேற்ற கர்நாடகம், கேரளம் ஆகிய பகுதிகளில் நிலைகொண்டு இருந்த ராணுவ அணிகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. அத்துடன் இலங்கையின் சிங்கள அணியும், மலேயா நாட்டு அணிகளும், **தூத்துக்குடி** கடல் வழியாக வரவழைக்கப்பட்டன. கூடுதலான படைகள், பீரங்கிகள், ஆயுதங்கள் பல நூற்றுக்கணக்கில்.

ஒன்றரை மாத இடைவெளிக்குப்பிறகு, 30.31801ல் பாஞ்சையின் மீது போர் தொடுக்கப்பட்டது. இதுவே இறுதிப் போராக இருக்கவேண்டும் என்ற அளவில் வேகமான உக்கிரமான போர். ஏறத்தாழ இரண்டு மாதங்கள் தொடர்ந்த போரில் நாள்தோறும் கும்பெனியாரது அணியில்தான் பயங்கரமான ஆள்சேதம். வாரந்தோறும் சென்னைக் கோட்டைக்குக் கிடைத்த

பாஞ்சாலக்குறிச்சி அறிக்கையைப் படித்த கும்பெனி கவர்னருக்கு மிகுந்த பயமும், பதட்டமும் ஏற்பட்டது. **பாஞ்சாலக்குறிச்சிப்** போரில் தோல்வி ஏற்பட்டால், அப்புறம் **முதுகளத்தூர், சிவகெங்கைப்** போர்களை எங்ஙனம் நடத்துவது? அவரால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை? இப்படை தோற்கின் பின் எப்படை வெல்லும்?

மிகுந்த ஆலோசனைக்குப்பிறகு பாஞ்சைப் போரில் ஈடுபட்டுள்ள கும்பெனித் தளபதியை மாற்றுவது தான் ஒரே வழி என கவர்னருக்குப்பட்டது. அடுத்தகணமே **கர்னல் அக்கினியூ** என்ற கொலைகாரத் தளபதி பாஞ்சாலக்குறிச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டான். ஏற்கனவே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மிகப்பெரும் எதிரியாக விளங்கிய தீரர் **திப்புசுல்தானைத்** தோற்கடிக்க ஏப்ரல் 1799ல் **சீரங்கப்பட்டிணத்திற்கு** அனுப்பி வைக்கப்பட்ட மிகச் சிறந்த தளபதி அவன்.

பாஞ்சைப் படுகளத்திற்கு 21.06.1801ம் தேதியன்று பாஞ்சைப் போரில் எதிரிகள் கையாளும் போர்முறைகளைக் கவனித்தான் தளபதி அக்கினியூ, தற்காப்பு நிலையில் நின்று கொண்டு கும்பெனியாரைத் தண்ணீர் காட்டிவரும் பாஞ்சைப் படைகளது பலத்த தற்காப்பு அரணான அந்தக் கோட்டையை உடைத்துவிட்டால்..........? அக்கினியூவின் திட்டம் அடுததநாள் நிறைவேற்றப்பட்டது. பீரங்கி வண்டிகள் மட்டும் பாஞ்சாலக்குறிச்சிக் கோட்டையைச் சுற்றி நிலைகொள்ளுமாறு செய்தான். கையில் பிடித்து இருந்து சிவப்புக் கொடியை அக்கினியூ அசைத்து தாக்குதலைத் தொடுக்க உத்தரவிட்டான். அவ்வளவுதான், பேய்வாய்ப் பீரங்கிகளது வாயில் இருந்து அக்கினிக் குண்டுகள் பயங்கர சத்தத்துடன் மதிலைப் புடைத்தன.

காலையில் இருந்து மாலைவரை வானமுகடுகள் இடிந்து விழுவது போன்ற பயங்கர ஓசை. தொடர்ந்து நான்கு நாட்கள் கோட்டையை நோக்கிக் குண்டுமழை பொழிவு. பிய்த்து எறியப்பட்ட

தூக்கணாங்குருவி கூடுபோல பரிதாபமாக காட்சியளித்தது அந்த கோட்டை. கொலைகாரன் **அக்கினியூவின்** திட்டம் நிறைவேறியது. வேறு வழியில்லாமல் **ஊமைத்துரையும்** அவரது நிழல்போன்ற வீரர்களும் தங்களது தற்காப்புப்போர் உத்திகளை மாற்றி, நேருக்கு நேர் கோட்டையின்முன் அணிவகுத்து வியூகம் அமைத்து நேரடியாகச் சாடினர். புறநானூற்றுப்பாடல்களின் இலக்கியமாக இறுதிவரை வீரத்துடன் போராடிப் புனித மண்ணில் சாய்ந்தனர். பொன்றாத புகழுடம்பு பெற்றனர். ஏகாதிபத்திய கொலைக்காரர்களது வெடிகுண்டுகள் புதைந்து தங்களது தாயகத்தின் பெருமைக்கு இழுக்கு ஏற்படுத்தி விடக்கூடாது என்பதற்காக, அவைகளைத் தங்களது இதயங்களில் தாங்கியவாறு தளர்ந்து ஒடிந்து விழுந்து மாண்டனர். பாஞ்சைக் கோட்டையின் வரலாற்று நாயகன் ஊமைத்துரை, கும்பெனியாரை நேருக்குநேர் பொருதிப் போரிட்டதில் உடல் முழுவதும் பெற்ற மரண காயங்களுடன் தரையில் சாய்ந்தார். நாட்டு விடுதலைக்கு இதற்குமேல் அவர்களால் என்ன செய்ய இயலும்?

கம்பளத்து நாயக்கர்களது தலைவரான **கட்டபொம்மு நாயக்கர்களது** தலைமையிடமாக விளங்கிய **பாஞ்சாலக்குறிச்சிக்** கோட்டை 24.5.1801ம் தேதி வீழ்ந்தது.[66] **இராமநாதபுரம், சிவகெங்கைச் சீமை** மறவர்களது உழைப்பும், உயிர்த் தியாகமும் நிறைந்த பாஞ்சாலங்குறிச்சிப் போர் இந்திய விடுதலை இயக்கத்தின் வெற்றிச் சிகரங்களில் ஒன்றாக விளங்கும், என்பதில் ஐயமில்லை. ஏகாதிபத்திய வெறியர்களது அசுரத் தாக்குதலைத் தொடர்ந்து நான்கு மாதங்கள் சமாளித்த வீரப்போர் இந்தியத் துணைக் கண்டத்தில் பாஞ்சாலங்குறிச்சியைத் தவிர வேறு எங்கும் நடைபெறவே இல்லை என்பது நமது வரலாறு சுட்டும் உண்மையாகும்.

இந்தப் போரில் ஈடுபட்ட கும்பெனித் தளபதிகளில் ஒருவரான **வெல்ஷ்** வரைந்துள்ள நாட்குறிப்புகளில் இந்தக் கோட்டையின் அற்புத அமைப்பை பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.[67]

---

66. Dr.K. Rajayyan - History of Madurai 1972.
67. Col. Welsh - Military Reminiscences 1830 vol 1 page 132- 133.

"............... வெற்றியைக் காண வேண்டும் என்ற இலட்சியத்தில், போரிட்டு மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு இருந்த நமக்கு, அந்தக் கோட்டையின் உட்பகுதியை முதன்முறையாகப் பார்த்த பொழுது, உள்ளத்தில் மிகுந்த ஆறுதல் ஏற்படுகிறது. இதனைக் கைப்பற்றுவதற்கு எவ்வளவு முயற்சிகள்! தரை மட்டத்திற்குக் கீழே, ஆபத்துக் காலங்களில் பாதுகாப்பாக மூவாயிரம் வீரர்கள் தங்குவதற்கான வசதியுடன் அமைக்கப்பட்டு இருந்தது வியப்பை அளித்தது. எதிரிகளது துப்பாக்கி, பீரங்கி, குண்டுகளது தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொள்ள இந்தக் கோட்டையின் பல பகுதிகளிலும் நரிப்பள்ளங்கள் தோண்டப்பட்டு இருந்தன. இந்தப் பள்ளங்களில் பயன்படுத்திய நீண்ட ஈட்டிகள் சரியான பலனைத் தந்தன. அந்தப் பகுதியை அடைந்த எந்த எதிரியும் உடனே அந்த ஈட்டிகளால் குத்திக் கொல்லப்படுவது உறுதி. அவர்கள் பதுங்கி இருக்கும்வரை எதிரிகள் யாரும் அவர்களை நெருங்க முடியாது.

இத்தகைய காட்டுமிராண்டித்தனமாக தற்காப்பு நிலையை அமைத்த பொறியாளர்களைப் போற்றாமல் இருக்க முடியாது. இந்தக் கோட்டை மதில் மட்டும் இன்னும் சற்று உறுதியாக இருந்து, தற்காப்பிற்காகக் . கூடுதலாகத் துப்பாக்கிகளையும் சனியன்கத்திகளையும் அவர்கள் பயன்படுத்தி இருந்ததால், நாம் இன்னும் இரண்டு மாதங்களுக்கு இந்தக் கோட்டை வாசல்முன் காத்துக்கிடக்க நேரிட்டிருக்கும்". எதிரியின் இணையற்ற பண்பைப் போற்றும் இந்த வரிகள் பாஞ்சைப் போரின் பரிணாமத்தை ஓரளவு உணர்த்துவதாக உள்ளது.

பாஞ்சாலக்குறிச்சிக் கோட்டையைப் பரங்கியர் கைப்பற்றுவதற்கான போர் நடவடிக்கைகளில் பரங்கியர் முனைந்து இருக்கிறபொழுது நமது கமுதிக் கோட்டையைக் கும்பெனியாரிடமிருந்து பறிப்பதற்கு மறவர் சீமைக் கிளர்ச்சியாளர்களும் முயன்று வந்தனர். ஆனால், இவர்களது

தாக்குதல் அவர்களது தாக்குதலுடன் ஒப்பிடும்பொழுது மிகவும் சிறிய அளவிலானது என்றுதான் குறிப்பிடவேண்டும்.

**கமுதிப் பேட்டையைத்** தாக்கிய **சித்திரங்குடி சேர்வைக்காரரது** தலைமையில் ஆயிரம் பேர் கமுதிக் கோட்டையை 8.3.1801ம் தேதியன்று தாக்கியது [68]. இந்தத் தாக்குதலினால் எந்தப் பலனும் ஏற்படவில்லை. ஆதலால் அதற்கு வடக்கே புறப்பட்டுச் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து **தளபதி மில்லரும்** புறப்பட்டார்.[69] சித்திரங்குடி சேர்வைக்காரரைப் பிடிக்கும் பொறுப்பு அவனுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அதேசமயம் சித்திரங்குடி சேர்வைக்காரரது தலைக்கு ஆயிரம் சக்கரம் அன்பளிப்பு என அறிவிக்கப்பட்டது என்றாலும், கிளர்ச்சிக்காரர்கள் கமுதிக் கோட்டையைத் தாக்கி வந்தனர். சித்திரங்குடி சேர்வைக்காரர் கமுதி **முதுகளத்தூர் இராமநாதபுரம்** பகுதிகளில் மக்களைத் திரட்டுவதிலும் அவர்களது நாட்டுப்பற்று மிக்க நடவடிக்கைகளை ஊக்குவிப்பதிலும், ஆங்காங்கு சென்று ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் கமுதிப் போரை முழுமையாக நடத்த முடியவில்லை. இன்னொரு காரணம் சிவகெங்கைச் சீமை மறவர்களும் அவர்களது ஆயுதங்களும் பாஞ்சாலங்குறிச்சிப் பாதுகாப்பு போரில் முனைந்து இருந்ததும் முக்கியமான காரணமாகும். கமுதிக் கோட்டைத் தாக்குதலில் சிவகெங்கைப் பிரதானி **சின்னமருது சேர்வைக்காரர்** அவரது மக்களும் **காடல்குடி** பாளையக்காரரும் ஈடுபட்டு இருந்தனர்.

கும்பெனி **ஒற்றன் மார்ட்டின்ஸ், இராமநாதபுரத்தில்** இருந்து நடத்திவந்த அணிகளுடன் கிளர்ச்சிக்காரர்களது நெருக்குதலை மிகவும் திறமையாகச் சமாளித்துப் போராடி வந்தான். அவர்களது உத்திகள் இராமநாதபுரம் சீமையைச் சேர்ந்த ஓராயிரம் மறவர்களது உத்வேகமான தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. அவர்களது உயிர்களைத் தற்காத்துக் கொள்ளும் தற்காப்புப் போராக மாறியது.[70] இத்தகைய ஒரு இறுக்கமான நிலையில், **பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை** வீழ்ந்த செய்தி, எதிர்பாராத

68. MDR vol 1182/08.03.1801/p.p 84-86.
69. Military Consultations vol. No.289/01.12.1801 p 3870.
70. Military Consultations vop 289/01.12.1801.

செய்தியாக கமுதிக் கோட்டைக்குக் கிடைத்தது.

சில நொடிகள் சின்னமருது சேர்வைக்காரரது சிந்தனையில் குழப்பம். ஆனால், தெளிவான முடிவை உடனே மேற்கொண்டு போரினைத் தொடருமாறு மற்றவர்களுக்கு உத்திரவிட்ட பிறகு **காளையார்கோவில்** நோக்கிப் புறப்பட்டார். ஏனெனில், கும்பெனியார் பாஞ்சையிலிருந்து அடுத்து **கமுதிக்கு** வந்தாலும் அவர்கள் இறுதிப்போர் காளையார்கோவில் கோட்டைதானே. அதனால் அங்கு மேற்கொள்ள வேண்டிய ஆயத்தங்களைக் கவனிப்பதற்கு சின்னமருது விரைந்து சென்றார்.[71]

ஆனால் கிளர்ச்சிக்காரர்கள் எதிர்பார்த்தபடி பாஞ்சாலங்குறிச்சிப்போரின் வெற்றி வீரர்களான பரங்கியர் கமுதிக் கோட்டைக்கு வரவில்லை. **தளபதி அக்கினியூ** மட்டும் ஒரு அணியுடன் **பள்ளிமடம்** வந்தான். கிழக்கே **இராமநாதபுரம்** சீமையுடனான செய்தித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு இருந்ததால் கமுதி வழியாக இராமநாதபுரம் செல்வதற்குப் பதில் **திருச்சுழியல்** வழியாகச் சென்றான். கிளர்ச்சிக்காரர்கள் பற்றிய பெரும் பீதி அங்கு நிலவியதால், கோயிலைச் சுற்றி மணல் மூட்டைகளை அடுக்கி தற்காப்பு அரண் அமைக்குமாறு செய்துவிட்டுத். **திருப்புவனம்** சென்றான்.[72]கமுதிக் கோட்டை முற்றுகை தொடர்ந்தது. சித்திரங்குடி சேர்வைக்காரரும் அவரது தோழர்களும் கமுதி, முதுகளத்தூர் பகுதிகளில் கும்பெனியாரது சொத்துக்களுக்கு அழிமானம் ஏற்படுத்தியதுடன் ஆங்காங்கு உள்ள குடிமக்களையும் திரட்டி வந்தார்கள், என்பதைப் பள்ளிமடம், **சிக்கல், இராமநாதபுரம்** அமில்தாரர்களது அறிக்கைகள் புலப்படுத்துகின்றன.

கமுதியில் உள்ள கும்பெனியாரது கச்சேரி தாக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டதுடன், கட்டிடத்திற்கு எரியூட்டப்பட்டது. கச்சேரிக்கு அண்மையில் நின்றுகொண்டு இருந்த இரு குழந்தைகளும் பரிதாபமாக தீயில் அகப்பட்டு இறந்தன.[73]

71. Madurai District Records vol No 1133/26.01.1801 p.p 22-24
72. பள்ளிமடம் மிட்டாதார் அறிக்கை 25.06.1801.
73. MDR vol No 1182 / 30.06.1801 p212.

கும்பெனியாருக்குச் சொந்தமான ஆறாயிரம் கலம் நெல்லும் தீயில் எரிந்து சாம்பலானது. **சித்திரங்குடி சேர்வைக்காரர் முதுகளத்தூரில்** இருந்த கச்சேரிக்குத் தீவைத்து முழுமையாக அழித்து விட்டார் என்றும் தெரிவிக்கின்றன அந்த அறிக்கைகள். மேலும், சித்திரங்குடி சேர்வைக்காரர் **ஆப்பனூர்** பகுதிக்குச் சென்று கும்பெனியாருக்கு எதிரான கிளர்ச்சியாளர்அணிக்குக் குடிமக்களைத் திரட்டினார் என்றும் 2.7.1801ம் தேதி கமுதிப் பேட்டையில் கும்பெனியார் இருப்பில் வைத்து இருந்த தானியங்கள் முழுவதையும் அழித்ததுடன் **திருச்சுழி, உடையார்பட்டி, தமிழ்பாடி** ஆகிய கிராமங்களில் கிளர்ச்சிக்காரர்கள் கும்பெனியாரது கூலிப்படைகளை எதிர்த்து வீரத்துடன் போரிட்டனர் என்றும், தகுந்த உதவிகளைக் கும்பெனியாரிடமிருந்து கோரப்பட்டதை பழமானேரி அமில்தாரரது அறிக்கையில் இருந்து தெரிய வருகிறது.[74] அதே அறிக்கை **முதுகளத்தூர், கமுதி, பெருங்கரை** ஆகிய ஊர்களிலும் குடிமக்கள் குமுறி எழுந்து கும்பெனிப் படைகளைத் தாக்கிய செய்தியையும் தெரிவிக்கின்றது.

கமுதிக் கோட்டையில் தற்காப்புக்காகப் போராடிக் கொண்டிருக்கும் கும்பெனி அணிகளுக்குத் தொடர்ச்சியாக ஆயுதங்களும், மாற்று அணிகளும் **இராமநாதபுரம்** கோட்டையிலிருந்து வந்து கொண்டே இருந்தன. இதனால் கோட்டை முற்றுகையில ஈடுபட்டு இருந்த கிளர்ச்சி அணியினரது தாக்குதலில் தொய்வும், தோல்விக்கான அறிகுறிகளும் தென்பட்டன. கும்பெனியாரின் புதிய அணிகளின் விறுவிறுப்பான தாக்குதலுக்கு ஈடுகொடுக்க இயலாத கிளர்ச்சிக்காரர்கள் கமுதிக் கோட்டை முற்றுகையை மெதுவாகக் கைவிட்டு கோட்டைக்கு வடக்கில் **அபிராமம்** செல்லும் வண்டிப்பாதையில் பின்னடைந்தனர். அவர்களது உள்ளத்தில் நிறைந்து இருந்த வெஞ்சினமும், வெறுப்பும் குறையவில்லை. அவர்கள் அபிராமம் கிராமத்திற்கு வந்தபொழுது அந்த உணர்ச்சிகளின் உந்துதல் பழிவாங்கும் போக்காக மாறியது.

சிலநொடிகளில் அபிராமத்தில் இருந்த கும்பெனியாரது

74. பழமானேரி அமில்தாரரது அறிக்கை 06.07.1801 / 12.07.1801

கைத்தறிக் கிடங்குகளும் சேகரம் பட்டறைகளும் நீண்டு வளர்ந்து பரந்து செல்லும் நெருப்பின் நாக்குகளினால் விழுங்கப்பட்டு சாம்பலாயின. பல ஆயிரம் பக்கோடா பணமதிப்புள்ள கைத்தறித் துணிகளும், தானியங்களும் அழிந்தன. சில வீடுகளுக்கும் இதே கதி ஏற்பட்டன. தகவல் அறிந்த இராமநாதபுரம் கலெக்டர் அபிராமம் கிராமத்திற்கு வந்து அழிமானத்தைப் பார்வையிட்டு சென்னைக்கு அனுப்பிய அறிக்கையில்

*"பயங்கரமான அழிமானத்தில சிக்கிய அபிராமம் கிராமத்தினை இன்று காலையில் பார்வையிட்டேன். முன்னூற்று ஐம்பது வீடுகள் அழிந்து குட்டிச்சுவர்களாகக் காட்சியளிக்கின்றன. இரு குழந்தைகள், கால்நடைகள், விவசாயத்திற்கான வித்துக்கள், நூல் சிப்பங்கள் ஆகியனவும் அந்த நெருப்பில் வெந்து போயின. குடிமக்களது கையிருப்பில் இருந்த தானியங்களையும் கிளர்ச்சிக்காரர்கள் கொள்ளை கொண்டு சென்றுவிட்டனர். இத்தகைய கொடூரமான செயல்களை நேற்று முன்தினம் காமன்கோட்டையிலும், இராமநாதபுரம் கோட்டைக்கு அண்மையில் உள்ள கிராமத்திலும் அவர்கள் மேற்கொண்டுள்ளனர்"*[75] என்று குறிப்பிட்டு இருந்தார்.

குடிமக்களுக்கும் கும்பெனியாருக்கும் இத்தகைய அழிமானங்களை ஏற்படுத்திய கிளர்ச்சிக்காரர்கள், கும்பெனியாருக்கு நடப்பு மாதத்திற்குச் செலுத்த வேண்டிய கிஸ்தித் தொகையையும் அவர்களே வசூலித்துச் சென்றுள்ளனர் என்ற விவரத்தையும் கும்பெனியாரிடம் அங்குள்ள மக்கள் பரிவுணர்வுடன் குதிரைகளுக்குத் தீனியும், கால்நடைகளுக்கு வைக்கோலும் வழங்கியதே கிளர்ச்சிக்காரர்களுடைய இந்த கொடுஞ்செயலுக்குக் காரணம் என்றும் இராமநாதபுரம் கலெக்டர் வரைந்து இருந்தார்.

75. Lushington's Report - 1801.

# 16. இறுதித் தாக்குதல்

இராமநாதபுரம் சீமை, சிவகெங்கைச் சீமை ஆகிய இரு மறவர் சீமைகளிலும் எழுந்து பரந்துள்ள விடுதலைஇயக்கத்தை முன்னின்று நடத்துப்பவர்களான சித்திரங்குடி சேர்வைக்காரர், மீனங்குடி முத்துக்கருப்பத் தேவர், சிவகெங்கை பிரதானிகளான சின்னமருது, பெரியமருது சேர்வைக்காரர்கள் ஒருபுறமும், கும்பெனிக் கலெக்டர், லூஷிங்டன், கும்பெனித் தளபதி அக்கினியூ இன்னொரு புறமாகத் தங்களது அணிகளை ஆயத்தப்படுத்துவதில் முனைந்து இருந்தனர்.

திருச்சுழி, திருப்புவனம், திருப்பாச்சேத்தி வழியாக இராமநாதபுரம் கோட்டைக்கு வருவதற்குள் இராமநாதபுரம், சிவகெங்கைக் கிளர்ச்சிக்காரர்கள் அக்கினியூவைப் படாத பாடுபடுத்தினர். அக்கினியூவின் பாதுகாப்பிற்காக மதுரையிலிருந்து தளபதி கிரகாம் என்பவனது தலைமையில் வந்த கும்பெனியாரது அணியைக் கிள்ர்ச்சிக்காரர்கள் திருப்புவனம் அருகே வழிமறித்துத் தாக்கினர். கடுமையாக இரு தரப்பினரும் போரிட்டனர். இருதரப்பிலும் பலத்த சேதம். தளபதி கிரகாம் மயிரிழையில் உயிர் தப்பினார். அதிலும் இன்னொரு தளபதியான ஷெப்பர்டின் சமயோசித புத்தியினால், இந்த நெருக்கடி நிலையிலும்

தொடர்ந்து பயணம் மேற்கொண்ட அக்கினியூ அணியினைத் **திருப்பாச்சேத்தி** கண்மாய் அருகே 8.6.1801ல் தாக்கினர்.[76] கிளர்ச்சிக்காரர்கள் எழுபது பேர் தியாகிகளாயினர். கும்பெனியாரது உயிர்ச்சேதம் அறியத்தக்கதாக இல்லை. இவ்விதம் அக்கினியூவின் அணிக்கு வழி நெடுக எதிர்ப்பு இருந்தும் அவர்களை முறியடித்துவிட்டு அக்கினியூ **இராமநாதபுரம்** கோட்டைக்கு வந்து சேர்ந்தான்.

இருபது நாட்கள் இராமநாதபுரம் கோட்டையில் தங்கிய தளபதி அக்கினியூ இராமநாதபுரம் சீமையின் வடக்கு, தெற்குப் பகுதிகள் மற்றும் **சிவகெங்கைச் சீமை** ஆகியவைகளின் நிலமைகளை மிகவும் தெளிவாக ஆய்வு செய்தான். இது சம்பந்தமாகப் **புதுக்கோட்டை தொண்டைமானையும்** தொடர்புகொண்டு அவரது கருத்துக்களையும் பெற்று ஒரு முடிவிற்கு வந்தான். அக்கினியூவின் சிந்தனையில் இராமநாதபுரம் சீமையை விடச் சிவகெங்கைச் சீமை பற்றிய திட்டங்கள்தான் மேலோங்கி நின்றன. **பாஞ்சாலங்குறிச்சிக்கும்** இராமநாதபுரம் சீமை கிளர்ச்சியாளர்களுக்கும் பக்கதுணையாக இருப்பவர்கள் சிவகெங்கைப் பிரதானிகள்தானே. பாஞ்சால ச பிடித்தாகிவிட்டது. எஞ்சியுள்ள சிவகெங்கை, இராமநாதபுரம் சீமைகளில் கிளர்ச்சிக்கு உயிர்நாடியாக விளங்கும் சிவகெங்கைச் சீமையைப் பிடித்து விட்டால், இராமநாதபுரம் சீமை கிளர்ச்சியாளர்களை அழித்து விடுவது எளிது.

இதுதான் அக்கினியூவின் முடிவு. ஆனால், இதனை அவ்வளவு எளிதில் நிறைவேற்றிட முடியுமா? மக்களது மனங்களில் மிகுந்த செல்வாக்குப் பெற்று இருக்கும் மருது சேர்வைக்காரர்களை வளைத்துப் பிடிக்கத் திட்டம் என்ன? பாஞ்சாலங்குறிச்சிப் போரில் கும்பெனியார் கற்றுக் கொண்ட படிப்பினை கிளர்ச்சிக்காரர்களின் தலைவர்களை எளிதில் எடைபோட்டுவிடக்கூடாது என்பதுதான். வீணாகப் பொருள் இழப்புடன் மக்களது உயிர் இழப்பும் மிகுதியாவதைத் தடுப்பது எப்படி? எல்லாவற்றிற்கும் தீர்க்கமான

76. Dr. K.Rajayyan - History of Madurai 1972.

முடிவு கண்டான் **தளபதி அக்கினியூ.** சிவகெங்கைச் சீமைப் பிரதானிகளுக்கு உதவும் கரங்களை உதவ விடாமல் தடுப்பது. அக்கினியூ தனது அறிக்கையை சென்னையில் உள்ள கும்பெனி கவர்னருக்கு அனுப்பி வைத்தான்[77]

சிவகெங்கைச் சீமையைச் சுற்றியுள்ள மேலூர் நாட்டுக்கள்ளர்கள், வடக்கேயுள்ள **திண்டுக்கல், விருப்பாட்சி** பாளையக்காரர்கள் ஆகியோர்களைச் **சிவகெங்கைச்** சீமைக்கு எந்தவித உதவியும் செய்யாமல் தடுப்பது **அக்கினியூவின்** பிரதானத் திட்டம். இன்னொரு சிறப்பான உத்தி. சிவகெங்கைச் சீமை பிரதானிகளிடமிருந்து தப்பிச்சென்று **அறந்தாங்கிக்** காட்டில் வாழும் சிவகெங்கைச் சீமை பட்டத்திற்குரிய **படமாத்தூர் ஒய்யாத்தேவர்** என்ற கௌரி வல்லபத்தேவரைத் தேடிப்பிடித்துக் கொண்டுவந்து, சிவகெங்கைச் சீமை அரசின் பொருத்தமான, நியாயமான வாரிசு எனச் சிவகெங்கையில் பகிரங்கப்படுத்துவதன் மூலம் பழமையில் நனைந்த ராஜவிசுவாசம், ஜாதி என்ற மெல்லிய இழையைப் பற்றியுள்ள பெரும்பாலான குடிமக்களை மருது சேர்வைக்காரர் அணியிலிருந்து பிரித்துவிடுவது[78] இந்த இரு உத்திகளையும் நிறைவேற்றிவிட்டு சிவகெங்கை மீது படையெடுத்தால் எளிதில் வெற்றி பெறலாம் என்பது அக்கினியூவின் தெளிவான திட்டம்.

இதனை விரைவாக நிறைவேற்றித் தமது படையெடுப்பை மேற்கொள்ள அக்கினியூ துடித்துக் கொண்டிருந்தான். இதன் முயற்சியாகக் கும்பெனியார் சிவகெங்கைச் சீமை மக்களுக்குப் பகிரங்க விளம்பரம் ஒன்றைப் பிரகடனப்படுத்தினான். இந்த அறிக்கையில்[79]

*"கர்நாடக நவாப்பான முகமது அலியுடன் 12.7.1792ம் தேதி செய்து கொண்ட உடன்பாட்டின் மூலம் தென்னகத்தில் சிவகெங்கை உட்பட, அனைத்துப் பாளையக்காரர்களிடம் கப்பத் தொகையை நிர்ணயித்து வசூலிக்கும் உரிமையைப் பெற்று*

77. Military Consultations' 1801.
78. ............. do..................
79...............do....................

இருப்பதின் மூலம் சிவகெங்கையின் கப்பத் தொகையை பெறுவதற்கும் கும்பெனியார் தகுதி பெற்றுள்ளனர். ஆனால், **நாலுகோட்டைப்** பாளையத்தின் பணியாளர்களை **வெள்ளை மருதுவும், சின்ன மருதுவும்** மேற்கொண்டுள்ள சூழ்ச்சிகளினால் இந்த உரிமையும் அதிகாரமும் தடைப்படுத்தப்பட்டுள்ளன. இந்தச் சீமையின் அரசியல் தலைமைப் பெண்ணாக இருந்த காரணத்தினால் இவர்கள், தங்களை இந்த அரசின் அமைச்சர்களாகத் தங்களை நியமித்துக் கொண்டு, அரசியார் மீதும் குடிமக்கள் மீதும் தங்களது அதிகாரப் பிடிப்பை நிலைநிறுத்தி வந்தனர்.

"நாலுகோட்டை பரம்பரையின் கடைசி வாரிசு இறந்த பிறகு **வெள்ளை மருதுவும், சின்னமருதுவும்** அதிகாரத்தினால் இந்தச் சீமை அரசியலை நடத்தி வந்தனர். இப்பொழுது கும்பெனியாரது படைகளுடன் நேரடியாக மோதல்களை ஏற்படுத்தி, **சிவகெங்கைச் சீமையைத்** தவறான திக்கில் அழிவிலும், நாசத்திலும் இட்டுச் சென்று கொண்டிருக்கின்றனர். இளவரசியை மணந்து கொண்டதன் மூலம் சிவகெங்கை மன்னராகிய வேங்கன் பெரிய உடையார் தேவரும், தம்முடைய நலன்களை இவர்களுடன் இணைத்துக் கொண்டுள்ளார்.

"இவர்களை அடக்கி, ஒடுக்கிக் கும்பெனியாரது ஆதிக்கத்தை இங்கு நிலைநாட்ட சகல அதிகாரங்களையும் பெற்ற அலுவலராக தளபதி அக்கினியூ நியமனம் செய்யப்பட்டு உள்ளார். ஆதலால், சிவகெங்கைச் சீமையில் உள்ள குடிமக்கள் பிரிட்டிஷ் அரசின் மதிப்பையும், செல்வாக்கையும் குலைக்கும் வகையில், ஆயுதம் தாங்கினால் அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும். சிவகெங்கைச் சீமை மக்கள் மருது சகோதரர்களது தொடர்பைத் தவிர்த்துத், தங்களது பாரம்பரிய ஜமீன்தாருக்கு விசுவாசங்கொண்டு தமது தொழில் முறைகளைக் கவனித்து வந்தால், அவர்களுக்கு பிரிட்டிஷ் அரசு தக்க பாதுகாப்பு வழங்கும்".

*சிவகெங்கைச் சீமை பற்றிச் சென்னைக் கோட்டையில் கல்கத்தாவில் உள்ள கும்பெனியார் கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில் வரையப்பட்டுள்ளது.*

*"இராமநாதபுரம் பாளையத்திற்கு அருகில் உள்ள சிவகெங்கை ஜமீன்தாரி பகுதிக்கு புரட்சியின் போக்குப் பரவி உள்ளது. அந்த ஜமீன்தாரின் அமைச்சர்கள் இந்த மனப்பான்மையுடன் நடந்து வருகின்றனர். நமது கும்பெனியாருக்கு எதிராக திருநெல்வேலிச் சீமையில் புரட்சியைத் தூண்டிவிட்டு, பாஞ்சாலக்குறிச்சிப் போரின் முடிவில் தறிபட்டு ஓடிவந்த அகதிகளுக்குப் புகலிடம் அளித்து, தளபதி அக்கினியூ தலைமையில் உள்ள கும்பெனி அணிகளுடன் பொருதுவதற்கு ஆயத்தம் செய்து வருகின்றனர்...... தளபதி அக்கினியூவின் போர் உத்திகளை நிலைகுலைய உறுதிபூண்ட ஆயுதந்தாங்கிய புரட்சிக்காரர்கள் ஆகிய இணக்கமற்ற சூழ்நிலைகள்..."*[80]

அடுத்து கும்பெனியாரின் குள்ளநரித் தந்திரங்கள் செயல்படத் துவங்கின. சிவகெங்கையை அடுத்துள்ள மேலூர் நாட்டு கள்ளர்களை அணுகினர். இவர்கள் ஏற்கனவே சிவகெங்கைப் பிரதானிகளுடன் நல்ல நேச தொடர்புகளை வைத்து இருந்தனர். குறிப்பாக அந்த இனத்தவரில் சிறப்பான கிடாரிப்பட்டி, குனியமுத்தூர் அம்பலக்காரர்கள் கள்ளர் இன மக்கள் தலைவர்கள் அடிக்கடி சிவகெங்கை வந்து அரசு விருந்தினர்களாக இருந்ததுடன் சிவகெங்கைப் பிரதானிகளது அன்பிற்கும் கௌரவிப்பிற்கும் உரியவராக இருந்தனர்[81] இவர்களது நட்பு நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி தங்களது கைக்கூலிகளாக மாற்றுவதற்கு முயன்றனர். கீழவளவு, அன்னூர் நாட்டுத் தலைவர்கள் கும்பெனித் தளபதி கரோலின் முயற்சிகளுக்கு இடந்தரவில்லை. ஆனால், மேலூர் சென்ற தளபதி இன்னிங்ஸ் என்பவன் சாம பேததான தண்டத்தைப் பயன்படுத்தி மேலூர் கள்ளர்களிடம் விசுவாசப் பிரமாணத்தைப்

80. Military Consultation's 1801.
81..........................do.....................

பெற்று வந்தான்.[82] அடுத்து கும்பெனியாரது பிரதிநிதியான **வில்லியம் பிளாக்பர்ன் புதுக்கோட்டையில்** விஜயரகுநாத தொண்டமானை சந்தித்துப் பேசினான். கும்பெனியாருக்கு தொண்டு செய்வதையே இலட்சியமாகக் கொண்ட இந்தக் கள்ளர், சிவகெங்கைக்கு எதிராக அனைத்து உதவிகளையும் வழங்குவதாக வாக்குறுதி வழங்கினார்.[83] திருநெல்வேலித் தளபதி மக்களே **எட்டையபுரம்** சென்று எந்தக் காரணத்தினைக் கொண்டும் சிவகெங்கைப் பிரதானிகளுடன் எவ்வித தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது என எச்சரித்து வந்தார்.

இவ்விதம் கூட்டுக்கொள்ளை நடத்தச் செல்லும் திருடர்கள் கொள்ளையிடப் போகும் சீமானது வீட்டு நாயின் வாயைக் கட்டுவது போல, சிவகெங்கைச் சீமையைச் சுற்றியுள்ள பாளையக்காரர்களைக் கும்பெனியார் தங்களது ராஜதந்திரத்தினால், நிர்ப்பந்தமான கட்டுக்களைக் கொண்டு பிணைத்தனர்.

அடுத்த கட்டமாகத் **தளபதி அக்கினியூ** தனது போரினைச் **சிவகெங்கைச் சீமையில்** தொடங்கினான். முதலில் வடக்கேயுள்ள **பிரான்மலை திருப்பத்தூர் கோட்டை** அடுத்து **அரண்மனை சிறுவயல்**, அப்புறம் **காளையார்கோவில் கோட்டை**, இந்த நடவடிக்கைகளை எல்லாம் நன்கு அறிந்த சிவகெங்கைப் பிரதானிகளைத், தங்களது நடவடிக்கைகளை விரைவு படுத்தியதுடன் காளையார்கோவில் போருக்கான ஆயத்தங்களில் முனைந்து நின்றனர். வழியெங்கும் அக்கினியூவின் படைகளைத் துவம்சம் செய்யவும் ஏற்பாடுகள் செய்தனர்.

82..........................do.....................
83. Military consultation 1801.

# 17. சூலை மாதத்துச் சூறாவளி

**சிவகெங்கைச் சீமை** நிலவரங்களை நன்கு அறிந்த **மீனங்குடி முத்துக்கருப்பத் தேவரும், சித்திரங்குடி சேர்வைக்காரரும்** முறையே **இராமநாதபுரம், முதுகளத்தூர்** பகுதிகளில் தொடர்ந்து பரங்கியரின் நிலைகளைத் தாக்குவதில் ஈடுபட்டனர். கும்பெனியார் சிவகெங்கைச் சீமை குடிமக்கள், சிவகெங்கைப் பிரதானிகளது தொடர்பைத் துண்டித்துக் கொள்ளாவிட்டால், அவர்களுக்கு[84] மரண தண்டனை வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்த வாசகம் சிவகெங்கைச் சீமை மக்களையும் கொதிப்படையச் செய்தது. அதேசமயம் சிவகெங்கைப் பிரத்தானிகள் கும்பெனியாருக்கு எதிராக அனைத்துப் பிரிவு மக்களும் ஒன்று திரளவேண்டும் என **திருச்சிராப்பள்ளிக் கோட்டையிலும், ஸ்ரீரங்கம் நகரிலும்** வெளியிட்டிருந்த விளம்பரத்தின் நகல்[85] ஒன்று **முதுகளத்தூர் சீமையின்** பல பகுதிகளிலும் பொதுமக்களது பார்வைக்கு சுற்றுக்கு அனுப்பப்பட்டதையும் மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் படிக்க அல்லது கேட்டு புதிய தெம்பு பெற்றனர்.

இதோ அந்த விளம்பர வாசகம்.

84. Governor Agnew proclamation dated 03.06.1807.

யார் இந்த அறிவிப்பைப் பார்த்தாலும் அக்கறையுடன் படியுங்கள்.

"பிராமணர்களாக இருந்தாலும் சரி, அல்லது செட்டியார், வைசியர், சூத்திரர், முஸ்லீம்களாக இருந்தாலும் சரி" நாவலந்தீவு எனப்படும் இந்த நாட்டில் அனைத்து சமூகத்தினருக்கும் இந்த அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருந்தது.

"மாட்சிமை தாங்கிய நவாப் முகம்மது அலிகான் முட்டாள்தனமாகப் பரங்கிகளுக்கு இடங்கொடுத்துவிட்டு மூளியை போலாகிவிட்டார். பரங்கிகளும், அவருக்குச் செலுத்திவந்த விசுவாசத்திற்கு மாற்றமாகவும், மோசமாகவும் இந்த நாட்டு அரசைத் தமதாக்கிக் கொண்டனர்.

இங்குள்ள மக்களை நாயினும் கேடாக மதித்து, இந்த நாட்டில் தங்களது அதிகாரத்தை நிலைநாட்டி வருகின்றனர். உங்களிடையே ஒற்றுமையில்லை. நேய மனப்பான்மை இல்லை. பரங்கிகளது அந்தரங்கத்தை அறியாத நீங்கள், உங்களுக்குள் ஒத்துப் போகாமல் இந்த நாட்டை அவர்களிடத்தில் ஒப்புவித்து விட்டீர்கள். அவர்கள் அதிகாரம் செலுத்தும் சீமைகளில் குடிமக்களை ஆண்டிகளாக்கி விட்டனர். அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அரிசி, வெல்லம் போல அருமையாகிவிட்டது. இந்த அவல நிலையை நேரடியாக அனுபவித்தாலும், இதனைப் புரிந்து கொள்ளும் பக்குவம் இல்லை.

"மனிதன் ஆயிரம் ஆண்டுகளுக்கு வாழ்ந்தாலும் ஒருநாள் அவன் மரணமடைவது உறுதி. அவனது புகழும் சூரியனும்-சந்திரனும் இருக்கும்வரை நிலைத்து இருப்பது நிச்சயம்.

"ஆதலால், எதிர்காலத்தில் ஒவ்வொருவரும் தங்களது பாரம்பரிய உரிமைகளை அனுபவித்தல் வேண்டும். குறிப்பாக ஆற்காட்டு சுபாவை, மாட்சிமை தங்கிய நவாபும், கர்நாடகத்தை

வேதய்யா, ராமண்ணாவும், வடுகநாத நாயக்கர் மைந்தர் திருமலை நாயக்கரும், தஞ்சாவூரில் தங்களது தன்னாட்சியை, தமது நாட்டுக்குரிய மரபுகளுக்குக் குந்தகம் ஏற்படாமல் பெறுதல் வேண்டும். அப்பொழுதுதான் அனைத்து ஏழை எளிய மக்களும் நிம்மதியடைவார்கள்.

"ஆனால், உங்களில் யாராவது இழிந்த பிறவிகளான நாய்களைப் போன்றவர்கள் பரங்கியர்களது ஆணைகளுக்குப் பணிந்து நடந்து விடுதல், அவர்களது.....[86] வெட்டப்படும். இத்தகைய இழிகுலத்தார் பரங்கியருடன் இணைந்து இந்த நாட்டை அடிமைப்படுத்தி இருப்பதை நாம் அனைவரும் அறிந்தது.

"ஆதலால், நீங்கள் பிராமணர்கள், வைசியர், செட்டியார், சூத்திரர், இஸ்லாமியர் ஆகிய அனைவரும் மீசை வைத்துள்ள அனைத்து ஆண் மக்களும் - பொதுப்பணியிலோ, பட்டாளத்துச் சேவையிலோ அல்லது சுபேதார், ஜமேதார், நாயக், சிராங் ஆகிய பணிகளில் பரங்கியரிடம் பணியாற்றுபவர்களும், ஆயுதம் தாங்கிப் போராடும் வல்லமை வாய்ந்த அனைவரும் தங்களது ஆண்மைத் திறமையை முதன்முறையாக நிருபித்துக் காட்டுங்கள். நீங்கள் பரங்கிகளை எங்கு கண்டாலும் அழித்து ஒழியுங்கள்.

"மாறாகத் தொடர்ந்து அதே இழி பிறப்புகளிடம் பணியாற்றினால், உங்கள் மரணத்திற்கு பின்னர் மறுமை இன்பம் கிடையாது. இந்த உண்மையை அறிந்தவன் நான். ஆதலால், இதில் நான் தீவிரமாக இருக்கிறேன். இதனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் கழிசடைகள். அவர்களுக்கு அறுசுவை உணவுகள் கிடைக்காமல் போகட்டும். அவர்களது மனைவிகள் மாற்றானது பெண்டுகளாகப் போகட்டும். அவர்களது மக்களும் இழிபிறப்பாளர்களாகப் போகட்டும். பரங்கிகளது இரத்தக் கலப்பில்லாத அனைவரும் உடனே ஒன்றுபடுங்கள்.

---

86. குறிப்பிட இயலாச் சொல் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.
Revenue Sundries vol 26 (16.06.1801 pp.441-70.

"இந்த அறிவிப்பைப் படிக்கின்றவர்கள், கேள்விப்படுகின்றவர்கள், இதற்கு நகல் எடுத்து தங்களது நண்பர்களுக்கு அனுப்பி வையுங்கள். பொது இடங்களில் ஒட்டி பிரசித்தம் செய்யுங்கள்.

"இவ்விதம் செய்யாதவர்கள் - பஞ்சமா பாதகங்களைச் செய்த குற்றத்திற்கும் கங்கைக் கரையில் பசுவதை செய்த பாவத்திற்கும் உரிய தண்டனையைப் பெறுவார்களாக.

"இந்த வேண்டுகோளை மதிக்காத இஸ்லாமியர் விலக்கப்பட்ட பன்றியின் இரத்தத்தைப் பருகிய பாதகர்களாகப் போகட்டும்!

"இந்த அறிவிப்பை இங்கிருந்து அகற்றியவர்கள் பஞ்சமா பாதகங்களுக்கும் கூடுதலான பாவத்தைப் புரிந்தவர்களாகட்டும்! இதனைப் படிப்பவர்கள் இந்த வேண்டுகோள் நகலை வரைந்து வைத்துக் கொள்ளுங்கள்.

இவண்,<br>
பேரரசர்களுக்குப் பணியாளனும்<br>
இழிபிறப்பான பரங்கிகளுக்கு பரம<br>
விரோதியுமான மருது பாண்டியர்.

நீண்ட கைத்தறித்துணி ஒன்றில் பிரதி செய்யப்பட்ட சிவகெங்கைப் பிரதானிகளின் இந்த வேண்டுகோள் நகல் ஒன்று எப்படியோ சித்திரங்குடி சேர்வைக்காரரது கையில் கிடைத்தது. இதனை முதுகளத்தூர் பகுதியில் உள்ள சிக்கல், ஆப்பனூர், கடலாடி, சாயல்குடி, பெருநாழி, பரளச்சி ஆகிய ஊர்களுக்கும், கமுதிப் பகுதியில் உள்ள பேரையூர், பள்ளிமடம், மண்டலமாணிக்கம், பாப்பான்குளம், பெத்தனேந்தல் ஆகிய ஊர்களுக்கும் அனுப்பி வைத்து ஆங்காங்கு ஊர்ப் பொதுவிடத்தில் ஒருநாள் முழுவதும் தொங்கவிடப்பட்டது. அத்துடன் அந்த ஊர்மக்களில் பெரும் பகுதியினர், தற்குறியினராக இருந்ததால், எழுத்ப் படிக்கத் தெரிந்த ஒருவர் அந்த ஊர் மக்களைத் திரட்டி வைத்து அவர்களுக்கு அந்த விளம்பரத்தைப் படித்துக் காண்பித்தார். அந்த விளம்பரம் இவ்விதம் எல்லா ஊர்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டுப் பத்திரமாகச் சித்திரங்குடி சேர்வைக்காரரது கைக்குத் திரும்பி வந்தது.

இந்த வேண்டுகோள் புதுமையானதாக இருந்தது. அத்துடன் அந்தப்பகுதி மக்கள், வெஞ்சினங்கொண்டு கும்பெனியாரை அழிப்பதற்கு வீரசபதம் மேற்கொள்ளவும்

சித்திரங்குடி சேர்வைக்காரருக்கும் ஒத்துழைப்பு நல்குவதற்கும் உதவியாக இருந்தது. எதிர்காலத்தில் ஒவ்வொருவரும் தத்தமது பாரம்பரிய உரிமைகளை அனுபவித்தல் வேண்டும்.

"பரங்கிகளது இரத்தக் கலப்பில்லாத அனைவரும் உடனே ஒற்றுமைப்படுங்கள்"

"மீசை வைத்துள்ள அனைத்து ஆண் மக்களும், ஆயுதம் தாங்கிப் போராடும் வல்லமை பெற்ற அனைவரும், தங்களது ஆண்மைத் திறமையை முதன்முறையாக நிரூபித்துக் காட்டுங்கள்".

அந்த வேண்டுகோளில் இடம்பெற்று இருந்த இந்த வாசகங்கள் அவர்களது இதயங்களில் இடம் பிடித்துக் கொண்டன. போரெனில் புகழும், புனைகழல் மறவர்கள் அல்லவா? மறவர் சீமையின் மானத்தைக் காக்க, மூத்த குடிமகனான சேதுபதி மன்னரைச் சிறையினின்றும் விடுவிக்க, புதிய ஆளவந்தார்களான கும்பெனியாரது கொட்டத்தை அடக்கி அவர்களை மறவர் சீமையில் இருந்து துரத்தியடிக்க இதுவரை மக்கள் கிளர்ச்சியில் ஈடுபடாது ஒதுங்கி இருந்த மக்களும் துணிந்து முன்வந்தனர். சித்திரங்குடி சேர்வைக்காரரது அணியில் திரண்டனர். **பரமக்குடி, பார்த்திபனூர், உளக்குடி, நயினார்கோவில்** ஆகிய ஊர்களில் அறுவடைக்கு முதிர்ச்சி பெற்று நின்ற கதிர்மணிகள் காணாமல் மறைந்துவிட்டன. அல்லது நெருப்பு வைத்து அழிக்கப்பட்டன[87]. இதன்மூலம் கும்பெனியார்களுக்கு குடிமக்கள் செலுத்த வேண்டிய "கிஸ்தி" கிடைக்காமல் போய்விடும் அல்லவா?

கிளர்ச்சிக்காரர்களுடன் முதுகளத்தூர் சென்ற சித்திரங்குடி சேர்வைக்காரரது மனத்தில் கும்பெனியாரது கோரச் செயல்கள் பற்றிய சிந்தனை அசுரவடிவாக உருவெடுத்தது. ஏராளமாக ஆயுதங்கள், முதுகளத்தூர் கச்சேரியில் சேமித்து வைக்கப்பட்டு இருப்பதாக தகவல், அவருக்கு கிடைத்ததுதான் தாமதம், அவரது அணியினரும்

87. Military Consultations 1801.

பகல்நேரத்தில் திரண்டு வந்தனர். அவரது சமிஞ்கை கிடைத்ததும் துப்பாக்கி குண்டுகள், சரசரவென ஆயுதங்களும், வெடிமருந்துகளும் ராணுவ உடைகளும் இருப்பு வைக்கப்பட்டிருந்த அறைகளுக்கு துளைத்துச் சென்றன.

சில நிமிடங்களில் செந்தீயின் நாக்குகள் முதுகளத்தூர் கச்சேரிக் கட்டிடம் முழுவதும் பரந்து பரவிச் சென்று பெரும் சேதத்தை விளைவித்தது. கச்சேரிக்குள் கடமையாற்றிக் கொண்டிருந்த சிப்பாய்களும், சேவகர்களும் பயந்து வெளியே தங்களது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ள ஓடி வந்தனர். இந்தப் பேரழிவு நிகழ **சித்திரங்குடி சேர்வைக்காருக்கு** உதவும்கரமாக விளங்கியவர் முதுகளத்தூர் **முத்து இருளப்ப சேர்வைக்காரர்** என்ற பெருமகனார் எனத் தெரியவருகிறது. தொடர்ந்து இவரும் இவரது அணியினரும் ஏற்கனவே, சொத்துக்களைக் கொள்ளை கொண்டு, பேரிழப்பை ஏற்படுத்தி வந்தனர். இதனால், பீதியடைந்த நிர்வாகம் இராணுவ அணிகளை மேலும், மேலும் தொடர்ந்து அனுப்பி வைக்குமாறு அவலக்குரல் நிறைந்த அறிக்கைகளை அனுப்பி வந்தது.[88]

இந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு அன்று மாலையில் சித்திரங்குடி சேர்வைக்காரரும் அவரது அணியினரும் தெற்கே **ஆப்பனூர்** புறப்பட்டுச் சென்றனர். அன்று இரவு அங்கு நடந்த நாட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கும்பெனியாருக்கு எதிரான கிளர்ச்சியினைக் கூர்மைப்படுத்தி நிறைவு செய்ய அனைத்து நாட்டுத் தலைவர்களிடமும் கேட்டுக் கொள்ள மறவர் சீமையை ஆக்கிரமித்துள்ள பரங்கியரது ஆயுத பலத்திற்கு அஞ்சாமல் அவர்களை எதிர்த்துத் தாக்குதல் நடத்தவேண்டும் என்பது சித்திரங்குடி சேர்வைக்காரரது தூண்டுதலும் வற்புறுத்தலுமாக இருந்தது. அன்றைக்கு நூறாண்டுகளுக்கு முன்னர் மதுரை மன்னரது எழுபத்திரண்டு பாளையக்காரர்களைக் கொண்ட படை சிறைப்பிடிக்க முயன்றபோது, அவரது மைத்துனரும் **போகலூர்க் கோட்டைத்** தளபதியுமான **வன்னியத்தேவர்** தமது "நாடுகலக்கி" என்ற குதிரை

88. Military Consultations 1801.

மீது சுற்றிவந்து சேதுநாடு முழுவதும் இரவுபகல் என்று பாராமல் மறக்குடி மக்களைத் திரட்டியதைப் போன்று, **சித்திரங்குடி சேர்வைக்காரரும்** இப்பொழுது அதே வீர உணர்வுடன் ராஜ விசுவாசத்துடன் பிறந்த மண்ணின் மீது கொண்ட மாளாத பாசத்தினால் பசி, தாகம், ஊன், உறக்கம் அனைத்தையும் மறந்து மந்திர தந்திர மகேந்திர ஜாலத்தில் வல்ல மாயாவியைப் போல மூன்று ஆண்டுகளாக அலைந்து திரிந்து வந்தார். அவரது மூச்சும், பேச்சும் ஒரே இலக்கை-கும்பெனியார் எதிர்ப்பைக் கொண்டதாக இருந்தது. குடிமக்கள் அனைவரும் கும்பெனியாருக்கு எதிராக ஒரே தலைமையில் கிளர்ந்து எழுந்து போராடினர். கும்பெனியாரையும் அவர்களது குள்ளநரித்தந்திரத்தையும் வெற்றிகொண்டு அழித்துவிட முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை குடிமக்களிடம் ஆழமாக ஏற்படுத்திவிட்டால் போதுமானது என்பது அவரது திட்டம்.[89]

அடுத்து சித்திரங்குடி சேர்வைக்காரரது அணியொன்று மேற்கே **திருச்சுழியில்** பகுதிக்கு விரைந்தது. அங்கு ஆயத்த நிலையில் இருந்து கும்பெனி வீரர்களையும் சேவகர்களையும் மோதினர். திருச்சுழியில் **உடையார்பட்டி, தமிழ்பாடி** ஆகிய ஊர்களில் இந்த மோதல்கள் நிகழ்ந்தன. இந்தத் தாக்குதலினால் மிகவும் பாதிக்கப்பட்ட **பழமானேரி** அமில்தார் **இராமநாதபுரம்** கலெக்டரிடம் அவசர உதவி கோரினார்.[90] அப்பொழுது கும்பெனியாரது துருப்புகள் தளபதி **ஷெப்பேர்டு தலைமையில் காடல்குடி, குளத்தூர்**, பாளையங்களில் கிளர்ச்சிக்காரர்களை அடக்குவதில் ஈடுபட்டு இருந்தால் பழமானேரிக்கு உதவிப் படைகள் வரவில்லை.[91] என்றாலும், கிளர்ச்சிக்காரர்களது கண்ணோட்டம் **கமுதிக் கோட்டையின்** மீது சென்றது.

**முதுகளத்தூர் பகுதியில்** சித்திரங்குடி சேர்வைக்காரர் தலைமையில் கும்பெனியாருக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த விடுதலை இயக்கத்தின் பகுதியாக கமுதிக்கோட்டை ஏற்கனவே இருமுறை தாக்கப்பட்டது. கிளர்ச்சிக்காரர்களது தரப்பில் மிகுந்த

---

89. பழனேரி அமில்தார் அறிக்கை.
90. Military Consultations 1801.
91. ..................... do.....................

சேதமும் தோல்வியும் ஏற்பட்டன. இப்பொழுது மூன்றாவது முறையாக கிளர்ச்சிக்காரர்கள் முழுமூச்சுடன் சிவகெங்கைச் சீமைப் பிரதானி வெள்ளை மருது இந்தத் தாக்குதலில் பங்குகொண்டது கிளர்ச்சிக்காரர்களுக்கு புதிய தெம்பை அளித்தது.

தாக்குதலின் போக்கு 21.7.1801ம் தேதி முதல் கடுமையாகியது. தலைமைப் பொறுப்பை **மீனங்குடி முத்து கருப்பத்தேவரிடம்** ஒப்படைத்துவிட்டு அவசரப் பணியாக வெள்ளை மருது சிவகெங்கை திரும்பினார். அங்கு நிலைகொண்டு இருந்த **இராமநாதபுரம்** கோட்டையைச் சார்ந்த மறவர்களையும், கிழக்கு இந்தியக் கும்பெனியின் மூன்றாவது ரெஜிமென்டின் முதல் அணியும் கிளர்ச்சிக்காரர்களது தாக்குதலை சமாளிக்க முடியாமல் திணறினர். 19-8-1801ம் தேதியன்று கோட்டைத் தளபதி கொத்தளத்திற்கு வந்து நின்று கொண்டு வெள்ளைக் கொடியைக் காண்பித்துச் சமாதானம் கோரினான்.[92] கிளர்ச்சிக்காரர்களிடம் மகிழ்ச்சி கொப்பளித்தது. ஆனால், அவர்களிடம் ஒரு முகமான முடிவு ஏற்படவில்லை. முற்றுகை வெற்றிபெற்றது என்ற முடிவில், சிலர் தாக்குதலுக்குத் தலைமை வகித்த தலைவர்களது ஒப்புதல் இல்லாமல், தாக்குலிலிருந்து பின்வாங்கி பழமானேரி நோக்கிச் சென்றனர். அங்கிருந்து சென்று **திருச்சுழியில்** கோட்டையைக் கைப்பற்றினர்.[93] இன்னும் சிலர் வெள்ளைத் தளபதியின் சமாதானக் கோரிக்கையைப் புறக்கணித்து அவர்களிடம் சரணடையுமாறு கூச்சலிட்டனர். நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை. முற்றுகை தொடர்ந்தது.

ஏற்கனவே, **இராமநாதபுரம்** சென்றடைந்த ஓலை வாசகத்தின் அவசரத்தை உணர்ந்த இராமநாதபுரம் கலெக்டர் அங்கிருந்து அறுநூறு சுதேசி சிப்பாய்களைக் **கமுதிக்கோட்டைக்கு** விரைந்து செல்லுமாறு பணித்ததுடன் **நாகலாபுரத்தில்** இருந்து ஐநூறு எட்டப்பனது ஆட்களையும் நன்கு வெடிக்கும் திறன்கொண்ட இரண்டு பேய் வாய்ப்பீரங்கிகளையும் **கமுதிக்கு** அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தார். இரண்டே நாட்களில் **தளபதி மக்காலே**

92. Military Condsultations 1801
93. Military Condsultations vol 285 A pp 6850-57

முற்றுப்பெறும் தருணம் வந்துவிட்டது.

கமுதிக்கோட்டை வாசலுக்கு கிழக்கே கண்ணுக்கு எட்டிய தொலைவு வரை, அந்த வீர மறவர்களது உடல்கள் சிதறிக் கிடந்தன. குரங்கு கையில் பட்ட பூமாலையின் இதழ்கள் போல, தன் மானமும் வீரத் தகைமையும் பொருந்தப்பெற்ற இந்தத் தீரர்கள் தங்களது முந்தையோர் வழிநின்று மண்ணை, மண்ணின் மணத்தை, மானத்தைக் காக்கப் போராடி விழுப்புண்பட்டு வீழ்ந்து மாய்ந்தவர்கள் அணி அணியாக மதுரையிலிருந்து புறப்பட்டு வந்த திருமலை நாயக்கர் பெரும்படையை புறமுதுகிட்டு ஓடச் செய்தவர்கள். **சொக்கநாத நாயக்கர்** ஆட்சியில் வலுச்சண்டைக்கு வந்த வடுகர் சேனையைச் சிதறி ஓடச் செய்தவர்கள், **ராணி மங்கம்மாளது தளபதிஅச்சய்யாவின்** கடல்போல் ஆர்ப்பரித்து வந்த படைகளைத் துவம்சம் செய்தவர்கள், தஞ்சையில் இருந்த **சரபோசி, துல்ஜாஜி** மன்னர்கள் தலைமை தாங்கி வந்த படைகளைப் பதம்பார்த்து உயிர்தப்பி ஓடுமாறு விரட்டியத்த அந்த உத்தம மறவர்களது வழித்தோன்றல்கள்தான் இவர்களும். அவர்கள் பற்றிப்பிடித்த வெற்றிக்கொடியை இவர்களால் எட்டிப் பிடிக்க இயலாமல் போய்விட்டதே!

வீரவுணர்வுகள் இவர்களை உந்தி எழச் செய்யவில்லையா? இவர்களது இதயங்களில் இழைந்து நின்ற நாட்டுப்பற்றும் போர்க்குணமும் நலிவுற்றுவிட்டனா? நாடு காக்கப் போராடிய அவர்களது சாதனை தோல்வியுற்றனவே!

முந்தைய வரலாறுகூறும் போர்களுக்கும் தற்பொழுதைய போருக்கும் ஆயுதம், உத்தி ஆகியவைகளில் வேற்றுமை பல. இரும்பு வேலும், வாளும் மட்டும்தான் அன்றைய போர்களில் முடிவுகளை குருதி வெள்ளத்தில் வரைந்தன. ஆனால், இப்பொழுது அக்கினியை மழைபோலச் சொரியும் துப்பாக்கி, பீரங்கிக் குண்டுகளே வெற்றிகளை நிர்ணயித்தன. அதற்கு மேலாக எட்டப்பர்களது கைவரிசை

தொண்டமான்களாகிய கழிசடைகள்! மேலும், வெற்றி என்பது காற்றாடிகளில் பொருத்தியுள்ள கோழி உருவங்கள். அவை காற்றின் திசையை மாறி மாறிக் காட்டுவதுபோல! பரங்கியரே பாரதத்தைக் காலமெல்லாம் ஆட்டிப்படைத்து விடுவார்களா?

அந்தப் பரங்கியரைப் பொருதி அழித்து வரலாறு படைக்க முயன்ற மறவர் சீமை வல்லுநர்கள், தாயைவிட்டுப் பிரிந்த கோழிக் குஞ்சுகளாகவல்லவா சிதறிக் கிடந்தனர். மரணமுற்ற அவர்களது கரங்கள், வலுவுடன் பற்றி இருந்த கொடுவாளும் நெடுவேலும், அவர்கள் இறக்கும்போது அவர்களது இதயங்களில் பொருந்தி நின்ற வீரபிரதிக்ஞையை வெளியிடுவது போல காட்சியளித்தது.

**கமுதி** கோட்டை மேட்டிலிருந்து வடகிழக்கே **தவசிக்குறிச்சி** வரை பரந்து காணப்பட்ட பெருவெளியில் மறவர் சீமை வீரர்கள் வழங்கிய இந்த உயிர் காணிக்கைகள் சிறு சிறு பிணக் குவியல்களாக ஆங்காங்கு காணப்பட்டன என்றாலும், இந்தப் போரில் எத்தனைபேர் தியாகிகள் ஆனார்கள் என்பதற்கான சரியான புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை. கிடைத்துள்ள ஒரே ஆவணத்தின்படி[94] கோட்டை முற்றுகைப் போரை பொறுப்பேற்று நடத்திய ஏழு சேர்வைக்காரர்களும் **அபிராமம் வழியில்** பின்வாங்கிச் சென்றபோது போரிட்ட போராளிகள் நானூறு பேர் மட்டும் நமது வீர வணக்கத்திற்குரிய தியாகிகள் என்று தெரிய வருகிறது.

**கமுதிப் போரில்** எஞ்சிய சிறு அணியினர், சிறிதும் சளைக்காமல், அவர்களது முந்தைய திட்டப்படி **இராமநாதபுரம்** கோட்டையைத் தாக்குவது என்ற முடிவை செயல்படுத்த முனைந்தனர். **சிக்கல்** வரை இவர்களைத் தொடர்ந்து வந்த கொலைகாரன் **மில்லரது** கூலிப்படையினைத் துரத்தியடித்துவிட்டு இராமநாதபுரம் கோட்டையை நோக்கி வந்தனர். கர்னல் மில்லரும் அவனது கூலிப்படையினரும் அவர்களைச் சிக்கல் வரை பின்தொடர்ந்து சென்று இழப்புகளை ஏற்படுத்தினர். ஓடும் முயல்களைத் துரத்துவது

94. Military Consultation's vol 256 pp 6854-56.

**ஓநாய்க்கு எளிதுதானே!**

மயிலப்பன் சேர்வைக்காரரும், அவரது கூட்டாளிகளும் சிக்கலில் இருந்து பரமக்குடிக்கு எதிர்க்கரையில் கிழக்கே அமைந்துள்ள எமனேசுவரம் வந்து சேர்ந்த பொழுது ஊர் அடங்கி விட்டது. அவர்கள் கன்னியப்பபிள்ளை மடத்தில் வழங்கிய கம்புமாவில் தாயரிக்கப்பட்ட அடையை மென்று தின்றனர். அவர்களது உள்ளம்போல வயிறு நிறையவில்லை. என்றாலும், அந்த அடையைத் தின்றபிறகு அவர்களது குதிரைகளுக்கு கொள்ளு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டுச் சேர்வைக்காரரும் நான்கு வீரர்கள் மட்டும் வைகையாற்று மணலுக்குச் சென்று துண்டுகளை விரித்துப் படுத்தனர். மற்றவர்கள் மடத்திலேயே தங்கிக் கொண்டனர்.

நடுச்சாம நேரம். கிழகக்கு வானில் பின்னிலவு எழுந்து வந்து கொண்டிருந்தது. உறக்கம் கொள்ளாத மயிலப்பன் சேர்வைக்காரரது சிந்தனையில் எத்தனையோ எண்ணங்கள். சந்திரனது மங்கலான ஒளியில் காட்சிதரும் மரங்கள், வீடுகள் ஆகியவைகளின் தெளிவற்ற உருவங்களைப்போல.

தான்பிறந்த மண்ணிலேயே முளைத்த ஆனை நெருஞ்சி முட்களைப்போல கமுதிப்போரில் சித்திரங்குடி நாட்டார்கள் ஆப்பனூர் மறவர்களுடன் இணைந்து கும்பெனிக்கு ஆதரவாகச் செயல்பட்டது. போரின் உக்கிரமான நிலையில் கும்பெனியின் உதவிக்கு வந்த இராமநாதபுரம் மறவர் அணியைக் கண்டு கிளர்ச்சிக்காரர்கள் அவர்களை எதிர்த்துப் போரிடத் தயக்கம் காட்டியது. ஒரு சில நிமிடங்கள் நீடித்த கிளர்ச்சிக்காரர்களது தயக்கத்தால் போரின் கதி மாறியது.

வெற்றியை எதிர்பார்த்து இருந்த வேளையில் தாங்க முடியாத பெருந்தோல்வி. கடந்த ஐந்து ஆண்டுகளாக நாளையும் கிழமையையும் மறந்து பிறந்த மண்ணின் மீது கொண்ட பாசத்தையும்

மறவர் சீமை மக்களது மூத்தகுடிகளான சேதுபதி மன்னர் மீது கொண்ட விசுவாசமும் இரண்டு கண்களாகக் கொண்டு செயல்பட்டு, மக்களைத் திரட்டி மகத்தான இலட்சிய நோக்கு வழிநடத்திய தன்னலமற்ற பணிக்கு கிடைத்த பரிசு இதுதானா?

மூன்றாண்டுகளாக மனைவியின் முகத்தைக் கூடப்பார்த்து ஆறுதல் சொல்ல முடியாமல் சீமையெங்கும் கண்மாய், வாய்க்கால், காடு, மேடு என அலைந்து கொண்டே காலத்தைக் கழிக்கும் எனக்கு....

இப்படி எத்தனையோ சிந்தனைகள் ஒன்றைத் தொட்டு ஒன்றாக ஊர்ந்து வந்து உள்ளத்தைப் பிய்த்துக் கொண்டிருந்தன. காலை நேரத் தொழுகைக்காக அண்மையில இருந்த பள்ளிவாசலில் இருந்து வந்த பாங்கு ஒலி சேர்வைக்காரரது சிந்தனையைக் கலைத்து காலைநேரம் புலருவதை அறிவுறுத்தியது.

அடுத்தடுத்து நன்கு உறக்கிக் கொண்டிருந்த தனது தோழர்களை உறக்கம் தெளியுமாறு செய்து கன்னியப்ப பிள்ளை மடத்திற்குச் சென்றார். சிறிது நேரத்தில் குதிரைகளையும் உஷார்படுத்தி அடுத்த பயணத்திற்கு ஆயத்தம் செய்தனர்.

# 18. காளையார் கோவில் போர்

இந்த அணி **இளையான்குடி, மங்கலம்** வழியாக **காளையார்கோவில்** சென்றடைந்தபொழுது உச்சிவேளை நெருங்கிக் கொண்டிருந்தது. வெயிலின் கொடுமையைப் பொருட்படுத்தாமல் காளையார்கோவில் கோட்டைக்கு வெளியில் நூற்றுக்கணக்கான **சிவகெங்கைக்** கிளர்ச்சிக்காரர்கள் கார்காலத்துச் சிற்றெறும்புக் கூட்டம் போல மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர். **மயிலப்பன்** சேர்வைக்காரருக்கு மிகுந்த தெம்பை அளித்தது. அன்று காலைவரை, அவரை ஆட்கொண்டிருந்த குழப்பமான சிந்தனைகள் பறந்தோடி விட்டன. சிவகெங்கைக் கிளர்ச்சிக்காரர்கள், விரைவில் காளையார்கோவில் கோட்டையில் கும்பெனியார் தாக்குதலை முறியடிக்கும் வகையில் பலவிதமான முன்னேற்பாடுகளில் முனைந்து இருந்தனர்.

கொத்தளங்களில் ஆயுதக் குவிப்பு கோட்டைச் சுவர்களைச் செப்பனிடுதல், பீரங்கிக்காரர்களுக்கான கருமருந்து தயாரித்தல், **சோழபுரம், ஒக்கூர்** பாசறையில் இருந்து கிழக்கு நோக்கி வரும் கும்பெனிப் படைகளை **அழகாபுரி, முத்தூர்,**

**கொல்லங்குடி, கீரனூர்** ஆகிய ஊர்களில் வழிமறித்து அழிப்பதற்கான ஏற்பாடுகளில் **சிவகெங்கைச் சீமை** கிளர்ச்சிக்காரர்கள் ஈடுபட்டு இருந்தனர். அமைதியும், ஆன்மீகச் சிந்தனைகளையும் பின்னணியாகக் கொண்டிருந்த அந்த ஊரில் பரபரப்பாகவும், அவசர கதியிலும் காணப்பட்டது. 25.06.1772ல் சிவகெங்கை மன்னர் **முத்துவடுகநாத பெரிய உடையாத் தேவரை**, இதே ஊரில் போரில் கொன்ற கும்பெனியாரை, இப்பொழுது நடக்கவிருக்கும் போரில் அவர்களது ஆணவத்தை அழித்து மறவர் சீமையின் மானத்தை நிலைநாட்டி விடலாம் என்ற நம்பிக்கை அவர்களது நடவடிக்கைகளில் பிரதிபலித்தது.

**மயிலப்பன் சேர்வைக்காரர்** அணியினர் கோவிலுக்குச் சென்று **காளைநாத சுவாமியைத்** தரிசித்தனர். பின்னர் உடன்வந்தவர்களை ஓய்வு கொள்ளச் செய்து விட்டு மயிலப்பன் சேர்வைக்காரர் மட்டும் கோயிலின் தெற்குப் பகுதியில் நீராழியை அடுத்த மண்டபத்திற்கு சென்று அங்கு இருந்த மருது சேர்வைக்காரர்களைச் சந்தித்தார். **கமுதிக் கோட்டைப்** போரில் வெற்றி நழுவிச் சென்றதையும், அதன் பின்னர் நடந்த நிகழ்வுகளையும் மருது சேர்வைக்காரர்களிடம் மயிலப்பன் விவரமாக எடுத்துரைத்தார். அவைகளை மிகுந்த சிரத்தையுடன் கேட்டறிந்த பிறகு இன்னும் இரண்டொரு வாரங்களில் கும்பெனியார் **காளையார்கோவிலில்** அவர்களது முழு பலத்தையும் பயன்படுத்தி மறவர் சீமைக் கிளர்ச்சியை நசுக்கத் திட்டமிட்டு இருப்பதையும் தெரிவித்த **சின்னமருது சேர்வைக்காரர்** மேலும் தொடர்ந்து சொன்னார்.

"இன்னும் சில நாட்களில் இங்கு நடக்க இருப்பது இரண்டாவது பாரதப் போர். இந்த காளையார் கோவில் வரலாற்றில், இது தமிழ்நாட்டில் குருக்ஷேத்திரமாக விளங்கப் போகிறது. அதர்மத்தை, ஏகாதிபத்தியவாதிகளின் அக்கிரமத்தை, அழித்து ஒரு முடிவிற்கு கொண்டு வருவது மட்டுமல்லாமல், நாம் பிறந்து வளர்ந்த நம்மைச் சுமந்து வருகின்ற இந்தப் புனித மண்ணுக்கு நாம் செலுத்தவேண்டிய

காணிக்கையை, நமது உதிரமாக, உயிராக அளிக்க வேண்டிய வாய்ப்பு. மதுரைக் கோட்டையை முற்றுகையிட்ட ஆங்கிலப் பெரும் படையையும், **ஆற்காட்டு நவாபின்** படையையும் ஒன்றரை ஆண்டுகாலம் எதிர்த்து வீராவேசமாகப் போர் புரிந்து இறுதியில் காட்டிக் கொடுக்கப்பட்டு தூக்கில் தொங்கிய நமது மண்ணைச் சேர்ந்த கான்சாகிபுவின் தியாகம், இதே காளையார்கோவில் போரில் வெள்ளையர் குண்டிற்குப் பலியான **முத்துவடுகநாதத் தேவர்** இன்னும் இதுவரை கடந்த ஐந்து ஆண்டுகளாக ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக தங்களது அரிய வாழ்வை, உயிரை அர்ப்பணித்த நூற்றுக்கணக்கான தியாகிகளது இலட்சியம் நிறைவேறும் நாள் இது.

"எதிரிகள் லஞ்ச லாவண்யங்களால் சேர்ந்துள்ள பெருங்கூட்டம். பெரும் அளவிலான ஆயுதங்கள். இந்த கௌரவப் படைகளுக்கு எதிரே பாண்டவர்களைப் போல **இராமநாதபுரம் சிவகெங்கைச் சீமை** நாட்டுப்பற்று மிக்க நீள் புகழ் மறவர்கள், எதிர் அமைத்து வருகின்றனர். இவர்களுக்கு **நெல்லை, மதுரை, திண்டுக்கல் சீமை** மக்கள், தலைவர்கள் ஒத்துழைப்புக் கொடுத்து வருகின்றனர்.

"நாங்கள் என்ன செய்ய வேண்டும். இந்தப்புதிய பாரதப் போரில் எங்களது பங்கு என்ன?

மயிலப்பன் சேர்வைக்காரர் இடைமறித்து வினவினார். போரில் எங்களது பங்கு என்ன?

"எங்களது அணியில் இணைந்து இதுவரை கடமையாற்றியது போல இனியும் இந்தப் போரிலும் உங்களை ஏகாதிபத்திய எதிர்ப்புக்கு அர்ப்பணித்தல் வேண்டும். எங்களது கணக்குப்படி இங்கு நடக்கவிருக்கும் போருக்கு இங்குள்ள வீரர்களும் குடிமக்களும் போதுமானவர்கள். எங்களது அணிக்குப் பின்புலமாக நீங்களும்

உங்களது வீரர்களும் இந்தக் கோட்டைக்குத் தெற்கே மறவர் மங்கலத்தில் நிலைகொள்ள வேண்டும். இன்னும் ஒருவாரகால அவகாசத்தில் மீனங்குடி முத்துக்கருப்பத் தேவரையும் அவரது அணியுடன் கிழக்கே புலியடிதர்மம் அருகே நிலைகொள்ளுமாறு செய்து இருக்கிறேன். சண்டையின்பொழுது, உங்களது உதவி தேவைப்படுமானால், காளையார்கோவில் கோபுர உச்சியில் இளஞ்சிவப்புக் கொடியை ஏற்றுவோம். அப்பொழுது நீங்கள் விரைந்து வந்து எங்களுடன் போரில் பங்கு கொள்ள வேண்டும்" சின்னமருது சேர்வைக்காரர் திட்டத்தைத் தெரிவித்தார்.

"மிகுந்த மகிழ்ச்சி, இன்று மாலையிலேயே எங்களது சீமைக்குத் திரும்ப உரிய ஏற்பாடு செய்கிறேன். இறுதி வெற்றி நமக்குத்தான். ஆக்ரோஷத்துடன் மயிலப்பன் சேர்வைக்காரர் கனத்த குரலில் சொன்னார். "நன்றி" என்று கூறிய சின்னமருது சேர்வைக்காரரது உதடுகளில் புன்னகை மலர்ந்து பளிச்சிட்டது.

அப்பொழுது அங்கு பெரிய மருது சேர்வைக்காரரும், மீனங்கு முத்துக்கருப்பத் தேவரும் வந்து சேர்ந்தனர். "என்ன சேர்வைக்காரரே, நீங்கள் எப்பொழுது இங்கு வந்தீர்கள். நலம்தானே!

இருவரும் மயிலப்பன் சேர்வைக்காரரை நலம் விசாரித்தனர். அப்பொழுது உச்சி காலப்பூஜைக்கான மணியோசை ஒலித்ததுடன் கோயில் நாதசுர இசையும் அடுத்தடுத்து ஒலித்தது.

"வாருங்கள் நாம் சன்னதிக்குச் சென்று சாமி தரிசனம் செய்துவிட்டு, சாப்பிடச் செல்வோம்" என சின்னமருது சேர்வைக்காரர் சொன்னதும், நால்வரும் சன்னதி நோக்கிச் சென்றனர்.

அந்த நான்கு பேர்களின் முகத்தில் நடைபெறவிருக்கும் போர் பற்றிய கவலையின் கோடுகள் படர்ந்து இருந்தன.

கிழக்கே கதிரவன் தனது முழுமையான வெண்கதிர்களை இன்னும் மேற்குப் பகுதியில் விரித்துப் பரப்பவில்லை. காளையார் கோவிலுக்கு நேர் தெற்கே உள்ள மறவர் மங்கலத்திற்கும் காளையார் கோவிலுக்கும் இடைப்பட்ட சுமார் ஒரு கல் தொலைவில் உள்ள பரந்த வெளியில் முதல் நாள் மாலையில் வந்து சேர்ந்த இராமநாதபுரம் சீமை மறவர்கள் ஆறுதலாக அமர்ந்து இருந்தனர்.

அவர்களிடையே, அங்கும் இங்குமாக உலவிக் கொண்டிருந்த மயிலப்பன் சேர்வைக்காரர், அடிக்கடி காளையார் கோவில் திசையைக் கூர்ந்து நோக்கியவாறு காணப்பட்டார். சிறிது நேரத்தில் பீரங்கிகள் வெடிக்கும் சத்தம் போரிடும் வீரர்களது ஆரவாரம் ஆகியவை மென்மையாகக் கேட்கத் தொடங்கியது.

மயிலப்பன் சேர்வைக்காரர் தனது தோழர்களை ஆயத்தமாக இருக்குமாறு அழைப்பு விடுத்தார்.

தரையில் அமர்ந்து ஆறுதலாக இருந்த வீரர்கள் அனைவரும் எழுந்து நின்று போருக்குப் புறப்படும் வகையில் தங்களது உடைகளைச் சரிப்படுத்திக் கொண்டு அவர்களது ஆயுதங்களுடன் தயாராக நிற்கத்

தொடங்கினர்.

அப்பொழுது வடக்கேயிருந்து போர்வீரன் ஒருவன் குதிரையில் வேகமாக வந்து **மயிலப்பன் சேர்வைக்காரர்** நின்று கொண்டிருந்த பகுதியில் குதிரையை நிறுத்தி,

"பரங்கிப் படைகளுடன் போர் தொடங்கி விட்டது. கொல்லங்குடி, முத்தூர் வழியாக இரண்டு அணிகளும் அரண்மனை சிறுவயல் வழியாக இன்னொரு அணியுமாக மூன்று பிரிவுகளாக எதிரிகள் காளையார்கோவில் கோட்டையைத் தாக்கத் தொடங்கி விட்டனர். நீங்கள் அனைவரும் ஆயத்தமாக இருக்குமாறு சேர்வைக்காரர்கள் தெரிவிக்கச் சொன்னார்கள், என்று குதிரையில் இருந்தவாறு சொல்லிய குதிரைவீரன் வேகமாகக் குதிரையைத் திருப்பிக்கொண்டு காளையார்கோவிலுக்கு விரைந்து சென்றான்.

அணித்தலைவர்களான சில சேர்வைக்காரர்களை மயிலப்பன் அழைத்தார். அவரும் மயிலப்பன் சேர்வைக்காரரது அடுத்த கட்டளையை எதிர்பார்த்து நின்றனர்.

"நமது எதிரிகளை அழித்து ஒழித்து நமது மறவர் சீமையின் மானத்தைக் காக்கும் நேரம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. தலைமுறை தலைமுறையாக நமது மக்கள் நமது பூமித் தாய்க்குச் செலுத்திவந்த, இரத்த காணிக்கை, உயிர்த்தியாகம் ஆகிய நேர்த்திக் கடன்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் செலுத்துவதற்கு ஆயத்தமாக இருங்கள்.

"நாம் இந்த இறுதிப்போரில் வெற்றி பெற்றால் நாம் கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும், நமது புனிதக்கடமை நிறைவேறும். நமது பூமி மானமும், வீரமும் விஞ்சிய மறவர் சீமையாக விளங்கும்.... இன்னும் சிறிது நேரத்தில் நம்மை அழைக்கும் வகையில் காளையார்கோவில் கோபுரத்தில் சிவப்புக்கொடி ஏற்றப்படும். அதனைக்கண்டவுடன் நாம் அங்கே விரைந்து சென்று போரில் கலந்து

கொள்வோம். அங்கே கோட்டையை நெருங்கியவுடன் நாம் இரு பிரிவாகச் சென்று கோட்டையின் வாசல் பகுதியில் நேரடியாக பரங்கிகளை பொருதி அழிப்போம்..... இப்பொழுது நாம் **காளையார்கோவில்** கோபுரத்தில் சிவப்பாக கொடி பறக்க விடப்படுவதை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்து இருப்போம்!

**மயிலப்பன் சேர்வைக்காரரும்** அவரது போர் மறவர்களுடைய பார்வை வடக்கே நோக்கியவாறு இருந்தது.

நேரம் கடந்து சென்று கொண்டிருந்தது. காளையார்கோவில் பகுதியில் பீரங்கிகள் வெடிக்கும் ஒலி பலமாகவும், தெளிவாகவும் கேட்டது. போரின் ஆரவாரம் அதிகரிப்பதும் கேட்டது. ஆனால் கோயில் கோபுரத்தில் சிவப்புக் கொடி ஏற்றப்பட்டதாகத் தெரியவில்லை.

மயிலப்பனும் அவரது நண்பர்களும் வடக்கே பார்த்துப் பார்த்து கண்கள் பூத்து விட்டன.

ஏறத்தாழ வானின் உச்சியை நோக்கிச் சூரியன் உயர்ந்து சென்று கொண்டிருந்தான்.

போரின் நிலை என்ன? மயிலப்பன் சேர்வைக்காருக்கு ஒரே குழப்பம். என்ன செய்யலாம்? ஒரு வீரனைக் குதிரையில் சென்று காளையார்கோவிலுக்குக் கிழக்கேயுள்ள குடியிருப்பு வரை சென்று பார்த்து செய்திகளை அறிந்து வருமாறு அனுப்பி வைத்தார். அடுத்த ஒரு நாழிகை நேரத்தில் அந்த குதிரை வீரன் மயிலப்பன் சேர்வைக்காரரிடம் திரும்பி வந்தான். அவன் தெரிவித்த செய்தி மயிலப்பன் சேர்வைக்காரரது சிந்தனையை நிலைகுலையச் செய்தது. என்றாலும், இனியும் வீணாக **மறவமங்கலத்தில்** தாமதிப்பது அவசியமற்றதுடன் ஆபத்தானது கூட என்பதை அவரது உள்ளுணர்வு தெரிவித்தது.

அந்த உச்சி நேர வெய்யிலில் மயிலப்பன் சேர்வைக்காரரும் அவரது தோழர்களும் மேற்கே **தாயமங்கலம்** நோக்கி விரைவாகப் பின்வாங்கிச் சென்றனர்.

# 19. குழம்பிய நிலையில் மயிலப்பன்

அன்று நடந்த **காளையார்கோவில்** கோட்டைப்போர் தென்னிந்திய விடுதலை இயக்கத்திற்கு மிகப்பெரிய தோல்வியாக அமைந்துவிட்டது. முதல்நாள் இரவே **சோழபுரத்திலும் ஒக்கூரிலிருந்தும்** புறப்பட்ட **கர்னல் அக்கினியூ** தலைமையிலான பரங்கிப் படைகளைப் **பெரிய மருது சேர்வைக்காரரும், சின்னமருது சேர்வைக்காரரும்** முறையே **கொல்லங்குடி** அருகிலும், **முத்தூர்** அருகிலும் புற்றீசல்கள் போல் அடுத்தடுத்து வந்த பரங்கி அணிகள் சிவகெங்கைச் சீமை கிளர்ச்சியாளர்களைத் திக்குமுக்காடிச் செய்தது என்றாலும், மனந்தளராத கிளர்ச்சிக்காரர்கள் அந்த நடு இரவு கும்மிருட்டில் பத்திரமாகப் பின்வாங்கி காளையார்கோவில் கோட்டையின் தென்பகுதிக்கு விரைந்து வந்து தற்காப்பு அணிகளுடன் சேர்ந்து கொண்டனர். நிச்சயமாகப் பரங்கிகளது கணக்கை அன்று காலையில் தீர்த்துவிடலாம் என்ற திடநம்பிக்கையில்.

ஆனால், மனித சிந்தனைகளுக்கு இயைந்தவாறு மனித வாழ்க்கையின் நிகழ்வுகள் பெரும்பாலும் செயல்வடிவம் பெறுவது இல்லை. நினைப்பதெல்லாம் அப்படியே நடந்துவிட்டால் வாழ்க்கை

சுவர்க்கமாகவல்லவா மாறிவிடும்.

அன்று வைகறைப் பொழுதில், பரங்கிகளது முன்னேற்றத்தைத் தடைப்படுத்துவது போல **காளையார் கோவில்** மேற்கு மதிலில் ஏற்றப்பட்டிருந்த பீரங்கிக் குண்டுகள் அக்கினி மழையாகப் பொழிந்து கொண்டிருந்தன. காளையார்கோவில் கோட்டை வாசலில் இருந்து கோட்டையின் மேற்குச் சுவருக்கும் அப்பால்வரை குழுமி அணி வகுத்து நின்ற கிளர்ச்சிக்காரர்களது படை ஆவேசத்தினால் துடித்துக் கொண்டிருந்தது.

கோட்டை வாசலுக்கு வரஇயலாதவாறு பரங்கிகளது இரு அணிகளையும் மடக்கி அழித்துவிட வேண்டும் என்பது அவர்களது திட்டம். ஆனால், பரங்கியரது மூன்றாவது அணி ஒன்று வடக்கே **அரண்மனை சிறுவயல்** பாதையில் **கர்னல் ஷெப்பர்டு** தலைமையில் எதிர்பாராதவிதமாகக் கோட்டைவாசலை நோக்கி முன்னேறி வந்து (கிழக்கில்) கொண்டிருந்தது. கிளர்ச்சிப் படையினர் பரங்கியரது கிடுக்கித் தாக்குதலுக்கு உட்படும் வகையில், சிறிது நேரம் கிளர்ச்சிக்காரரது அணிகளில் குழப்பம். முடிவில் மேற்கிலும் கிழக்கிலுமாகப் பரங்கியரை எதிர்த்துப் போரிடுவது என முடிவு செய்யப்பட்டது. இதைத்தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை.

உச்சிப் பொழுதுவரை கடுமையான தாக்குதல், எதிர்த்தாக்குதல் கிளர்ச்சிக்காரர்களது நிலை வீழ்ந்தது. ஏராளமான வீரர்களது எண்ணிக்கையில் மட்டுமல்லாமல் வெடிமருந்து திறன், அதற்குமேலாக சிறந்த போர்ப்பயிற்சியும் பெற்று இருந்த பரங்கிப்படைகளுக்கு எதிரே கிளர்ச்சிக்காரர்களது நாட்டுணர்வும், அந்நிய ஏகாதிபத்திய எதிர்ப்பு இலட்சியமும் உந்து சக்தியாக அமைந்த இந்தப்போர் ஒருநாள் பொழுதுகூட நீடிக்கவில்லை. பரங்கிகளுக்கு ஈடுகொடுக்க இயலாத நூற்றுக்கணக்கான வீரமறவர்கள் தங்களாலான கடமையை நிறைவேற்றிய மனநிறைவில், தங்களது உயிர்க்காணிக்கையைத் தாங்கள் பிறந்த மண்ணிற்கு

செலுத்தியவர்களாக அதே மண்ணில் சாய்ந்து மடிந்தனர். மேலும், வீணாக உயிரிழப்பைத் தவிர்க்கும் வகையில் போரினைத் தலைமை தாங்கிய மருது சேர்வைக்காரர்களும், அவர்களது நண்பர்களும் மேற்குப்புறமாகப் பின்வாங்கி பின்னே வடக்கே உள்ள **அரண்மனை சிறுவயல்** காட்டிற்குள் நுழைந்துவிட்டனர். இவர்களிடம் எவ்விதம் எங்கு தொடர்பு கொள்வது? சிவகெங்கைச் சீமையின் வீரவரலாறு நாட்டுணர்வு கொண்ட இந்த நல்லவர்களது தியாகத்தினால் புதுப்பிக்கப்பட்டு விட்டது!

சங்ககாலத்திற்குப் பின்னர், கானப்பேர்எயில் என்ற **காளையார்கோவில்** வரலாற்றுப் புகழையும் பெருமையையும், மீண்டும் பெற்றது. ஆனால், அப்பொழுது முதல் போற்றிக்காக்கப்பட்ட மறவர்களது பிறந்த மண்ணின் மீதான சுதந்திரம் அவனியில் யாருக்கும் அஞ்சாது, இரும்பு நெஞ்சத்துடன் ஏறு நடையுடன் திகழ்ந்த சுயேச்சையான வாழ்க்கை எல்லாமே அழிந்துவிட்டதே!

தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்விவிட்டது. ஆனால் தருமம் மறுபடியும் வெற்றி பெறத்தான் செய்யும். வெற்றி கிட்டுமா எப்பொழுது?

பலமுறை வெற்றியின் நிழல்கள் படிந்தபொழுது அது அந்திநேர வெய்யில் மறைந்தது போலல்லவா விரைவில் மறைந்து விட்டது. மீண்டும் அதனைப் பெற முடியுமா?

**மறவர் மங்கலத்திலிருந்து திரும்பிய மயிலப்பன் சேர்வைக்காரர் சூடியூர் சத்திரத்திற்கு** வந்து சேர்ந்து மூன்று நாட்களாகி விட்டன. தன்னந்தனியாகச் சத்திரத்தில் பின்புற அறையில் தனிமையாக அடைபட்டுக் கிடந்தார். மரண காயமுற்ற வேங்கைப் புலிபோல அன்ன ஆகாரம் இல்லாமல் படுத்து இருந்தது அவரது உடல்தான். இயக்க எதுவும் இல்லை. ஆனால், அவரது சிந்தனைகள், எல்லையற்ற வானக்கடலில் அலைந்து மிதந்து

சஞ்சரிக்கும் கோடைகால மேகங்கள் போல பரவித் தொடர்ந்து கொண்டிருந்தன.

தமது நடவடிக்கைகள் பற்றிய சுய விமர்சனம், சிவகெங்கைச் சேர்வைக்காரர்கள் மற்றும், மீனங்குடி **முத்துக்கருப்பத் தேவர்** ஆகியோரது தலைமையில் ஏற்பட்ட தாமதம், தயக்கம், போர்த்திறன், தோல்விக்கான ஆதாரங்கள் - இப்படி எத்தனையோ சிந்தனைகள்.

**சித்திரங்குடி** சேர்வைக்காரர் தனது கூட்டாளிள் அனைவரையும் **முதுகளத்தூர், கமுதி** நாடுகளில் உள்ள தங்களது ஊர்களுக்கு அனுப்பிப் பொறுமையுடன் செய்திவரும் வரை காத்திருங்கள்,என்று கூறினார். அவர் மட்டும் தனிமையில் அந்தச் சத்திரத்தில் இருந்து வந்தார்.

பத்து நாட்களாகி விட்டன. மெதுவாகச் செய்திகள் கிடைத்தன. பரங்கியரும் அவருக்கு தொங்கு சதைகளான **சிவகெங்கைச் சீமை** கைக்கூலிகளும் **காளையார்கோவிலை** அடுத்துள்ள காட்டில் மருது சேர்வைக்காரர்களையும் அவரது தோழர்களையும் தேடிப்பிடிக்கும் பணியில் ஈடுபட்டு இருக்கின்றனர் என்று. அடுத்து **இராமநாதபுரம்** பகுதியில் இருந்து காளையார்கோவில் போருக்குச் சென்ற மீனங்குடி முத்துக்கருப்பத் தேவரைப் பிடிக்க **நயினார்கோவில்** பகுதிக்கும், அவரைப் பிடிக்க **மானாமதுரைப் பகுதிக்கும்** பரங்கி அணிகள் சென்று கொண்டிருக்கின்றன என்று.

ஆம், இவை எதிர்பார்த்ததுதான். எதிரிகளது கை எதிர்பாராத அளவிற்கு ஓங்கி விட்டது. அவர்களது ஆட்ட(ம்) - பாட்ட(ம்) தொடரத்தானே செய்யும்?

இனியும் **சூடியூர்** சத்திரத்தில் பத்திரமாக இருக்க முடியுமா? வேறு எங்கு செல்லலாம்? என்ன செய்யலாம்?

இந்த வினாக்களை தமக்குள்ளே எழுப்பிக் கொண்ட மயிலப்பன் சேர்வைக்காரர், அவைகளுக்கு விடை காண முடியாமல் தவித்துக் கொண்டு இருந்தார்.

நாட்கள் விரைவாக ஓடி நழுவி மறைந்தன. **காளையார்கோவில்** கோட்டைப் போர் முடிந்து அதற்குள்ளாக மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. **சூடியூர்** சத்திரத்தில் தொடர்ந்து நிலைத்து இருக்க முடியாத **மயிலப்பன் சேர்வைக்காரர்** கண்மாய்க்கரை வாய்க்கால், வரப்பு, காடு, மேடு, இரவு, பகல் என அவர் இந்த மூன்று மாதங்களில் **முதுகளத்தூர், கமுதி, சாயல்குடி** பகுதிகளில் இரவும் பகலும் சுற்றிச் சுற்றி வந்தார்.

தேசாந்திரி, சேதுயாத்திரைப்பயணி, மறமானியம் கிராமங்களில் பாகவதம் படிக்கும் பௌராணிகர் ஆகியோரைப் போன்று மாற்று உடைகளில்,

ஆம்! மாற்றுடையில்தான்! கும்பெனியாரது ஏவல் நாய்களின் கண்களில் படாமல் இருப்பதற்காக! மறவர் சீமையின் விடுதலை இயக்க சூத்திரதாரியாக விளங்கிய மயிலப்பனை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்துக் கும்பெனியாரிடம் ஒப்படைத்தால் ஓராயிரம் வெள்ளிப்பணம் என **தளபதி அக்கினியூ** விளம்பரப்படுத்தி இருந்தான். இந்த இழி செயலை முடித்து அந்தக் கைக்கூலியைப் பெறுவதற்கும் சிலர் கச்சை கட்டிக் கொண்டு திரிந்தனர். அமுதத்தை அளித்த கடல்தானே ஆலகால விஷத்தையும் அளித்தது.

அப்பொழுது மயிலப்பன் சேர்வைக்காரருக்கு ஒருநாள் பொழுதை ஒரு இடத்தில் கழிப்பது என்பது ஒரு யுகம், போலத் தோன்றியது. இப்படியே கொலை, கொள்ளை நடத்திய குற்றவாளியைப் போல எத்தனை நாட்களுக்கு ஒளிந்து பயந்து மறைந்து வாழ்வது? இந்த வாழ்க்கை தேவைதானா? இந்த இக்கட்டான நிலையை எப்படிச் சமாளித்து இயல்பு நிலைக்கு

வருவது? இது முடியுமா? **மயிலப்பன் சேர்வைக்காரரது** சிந்தனை இப்படியே வளர்ந்து கொண்டே வந்தன. இருண்ட வானில் திரண்டு நின்று ஒளிரும் விண்மீன்கள் எத்தனை என விரல்விட்டு எண்ணிவிட முடியுமா? இதற்கிடையில் விடுதலைஇயக்கத் தலைவர்கள் கும்பெனியாரால் பிடிக்கப்பட்டு கொடூரமான முறையில் கொல்லப்பட்ட செய்திகளும் ஆங்காங்கு மக்கள் பேசிக் கொண்டு இருந்ததும் அவரது காதுகளில் விழுந்தன.

**காளையார்கோவில்** போரின் தோல்வியைத் தாங்கியவாறு, **அரண்மனை சிறுவயல், ஒக்கூர்** காடுகளில் அலைந்து திரிந்த சிவகெங்கைப் பிரதானிகள் **மருது பாண்டியரைச்** சுட்டுக் காயப்படுத்தி கைது செய்த கும்பெனிக்கூலிகள் அவர்களை 24.10.1801ம் தேதியன்று **திருப்பத்தூர் கோட்டையில்** தூக்கில் போட்டு தியாகிகளாக்கினர்.

அவர்களது ஆதரவாளர்கள், உறவினர்கள் ஆகியோரையும் ஆங்காங்கே அவர்களைப் பிடித்த இடங்களிலேயே தூக்கிலிட்டு கொன்றனர். இவர்களது உதவிக்கு ஓடி வந்த **பாஞ்சாலங்குறிச்சி ஊமை குமாரசுவாமியையும்**, பாஞ்சாலங்குறிச்சிக்கு கொண்டு சென்று அங்குள்ள இடிந்த கோட்டைவாயிலில் வைத்துச சிரச் சேரம் செய்தனர்.

கும்பெனியாருக்கு எதிராக இராமநாதபுரம், சிவகெங்கை சீமைகளில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக, நாட்டுப்பற்றுடனும் அந்நிய எதிர்ப்பு உந்துதலுடனும் ஆவேசமாக, அணிதிரண்டு போராடிய அனைத்து மறவர்களுமே வீரமரணம் எய்திவிட்டனர். ஒரு சிலர் கும்பெனியாரது இராமநாதபுரம், **பாளையங்கோட்டை** சிறைகளில் அடைக்கப்பட்டு இருந்தனர். அவர்களின் முன்னணித் தலைவர்கள் இருவர் மட்டுமே கும்பெனியார் கைகளில்அகப்படாமல் இருந்து வந்தனர். அவர்களில் ஒருவரான **மீனங்குடி முத்துக்கருப்பத் தேவரை சாயல்குடியை** அடுத்த

**குதிரைமொழிக் காட்டில்** இருப்பதை அறிந்து அவரைச் சுற்றி சூழ்ந்து பிடித்து இராமநாதபுரம் கோட்டைச் சிறையில்அடைத்தனர்.

இப்பொழுது எஞ்சி இருப்பது **மயிலப்பன் சேர்வைக்காரர்** மட்டுமே!

சேதுபதி மன்னரது விசுவாசமிக்க இந்தத் தளபதிக்கு மறவர்சீமை எங்கும் எவ்வளவு செல்வாக்கு இருந்தது? அவரது கம்பீரமான தோற்றத்திலும், எளிய இனிய பேச்சிலும் மயங்கிய இளைஞர்களது அணிகள் எங்கே? கரையில் எரியப்பட்ட கண்மாய்க் கெளுத்தி மீன்போல அவரது சுவாசம் படபடத்தது.

என்ன செய்யலாம்? என்ன செய்யலாம்? இதே வினாக்கள் மாறி மாறி அவரது உள்ளத்தில் எதிரொலித்துக் கொண்டு இருந்தது. **கடுகுசந்தை** கிராமத்தின் முகப்பில் தேசாந்திரி உடையில் அமர்ந்து தூரத்தில் உள்ள காட்டுப் பாதையை நோக்கியவாறு இருந்தார்.

அண்மைக்காலத்தில் பெய்த அடைமழை காரணமாக துளிர்ந்து தழைத்த பசுமையான தோற்றத்தில் காட்டுவாகை, வேலா, வேம்பு மரங்கள் காட்சி அளித்தன. வறண்டும் காய்ந்தும் கிடந்த தரிசு நிலங்களையும் பசுமை வண்ணம் தீட்டப்பட்டதுபோல ஆதாளை, அவுரி, தும்பை ஆடாதொடை செடிகள் பூவும் கொத்துமாகப் பொலிந்து அழகு சேர்த்தன. விரைவில் அவை பெரிதாகிக் காய்த்துப் பழுத்துக் கன்னிப் பெண்ணைப்போல காட்சி அளிக்கும் அல்லவா!

இயற்கை எதிர்காலத்தை நோக்கி விரைந்து செல்கிறது. ஆனால் மனித மனம் மட்டும் கடந்த காலத்தில் குத்திட்டு நிற்கிறது. **மயிலப்பன் சேர்வைக்காரரது** சிந்தனைமட்டும் வரலாறு படைத்த மறவர் சீமை விடுதலை இயக்க நிகழ்ச்சிகளில் ஊன்றி நின்றது. ஆனால், அதேசமயம் பழமையை மறந்து அடுத்துச் செய்ய வேண்டியது என்ன என்பதையும் இதுவரை மக்களுக்காகச்

சிந்தித்ததை செயல்பட்டதை மறந்து தன்னைப்பற்றி மட்டும் ஒரு அவசர முடிவிற்கு வர அவரது உள்ளுணர்வு உணர்த்தியது. ஏனெனில் அவரைப் பிடித்துக் கொடுக்க எட்டப்பன், தொண்டைமான் போன்ற கும்பெனியாரது அடிவருடிகள், அவரது நிழலைப்போல பின் தொடர்ந்து கொண்டு இருக்கின்றனர் அல்லவா? ஆம்! அடுதது என்ன செய்ய வேண்டும்? இந்த வினாவிற்கு விடை காண வேண்டும். இது நான் யோசித்து செய்யும் முடிவு சரியானதாக இருக்குமா? குழப்பமான எனது உள்ளத்தில் தெளிவான விடை கிடைக்குமா? வேறு நண்பர்கள் யாரிடமாவது கலந்து யோசித்தால் பயனுள்ளதாக இருக்குமே!

வங்க மாநில நிர்வாகி சுராஜ் - உத்தௌலாவைக் காட்டிக் கொடுத்த மீர்காசிம், மகத்தான மைசூர் மன்னர் திப்புசுல்த்தானைக் காட்டிக் கொடுத்த பூர்ணய்யா, மதுரை நாயகமாக விளங்கிய மாவீரன் கம்மந்தான் கான்சாகிபுவைப் பிடித்துக கொடுத்து திவான் சீனிவாசராவ், பாஞ்சைப் பாளையக்காரர் கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்த புதுக்கோட்டை தொண்டைமான் என நமது நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்ட நல்லோர்கள் அனைவரையும் அழித்து ஒழிக்க உதவிய அதே துரோகிகளின் வாரிசுகள் மயிலப்பன் சேர்வைக்காரரையும் கும்பெனியாரிடம் பிடித்துக் கொடுக்க பெரும் பேராசையுடன் முயன்று வந்தனர்.

அவரது தலைக்கு கும்பெனி தளபதி அக்கினியூ அறிவித்து இருந்த ஆயிரம் வெள்ளிப்பணங்கள் கிடைக்குமல்லவா? சேச்சே! இப்படியும் மனிதர்களா? அதிலும் தமிழகத்தில் மறவர் சீமையிலா? மானமும் வீரமும் விஞ்சிய மறவர்களது நிலை இந்த அளவிற்கு தாழ்ந்து விட்டதா?

மதுரை மண்டலத்தைக் கைப்பற்ற விரைந்து வந்த கன்னடப்படைகளை வீராவேசத்துடன் எதிர்த்து அழித்து தமிழ்நாட்டில் தன்மானத்தைக் காத்த திருமலை சேதுபதியின் வலதுகரமாக விளங்கிய மறவரது வழித்தோன்றலா இவர்கள்? மறவர் சீமையைக் கைப்பற்ற பல படையெடுப்புகளை மேற்கொண்ட தஞ்சை மராத்திய மன்னர் படைகளை புறமுதுகிட்டு ஓடச் செய்த கிழவன் ரகுநாத சேதுபதியின் சிறப்புமிகு மறவர்களது வழித்தோன்றலா இவர்கள்

# 20. ஆங்கிலேயர்களின் அட்டூழியம்

**காளையார்கோவில்** கோட்டைப் போரின் முடிவு கும்பெனியார் எதிர்பாராத நிலையில் மிகப் பெரிய வெற்றியாக அமைந்துவிட்டது. தென்பாண்டி நாட்டில் அவர்களது அதிகார மமதைக்கு எதிராக, அவர்களது ஆணவத்தை தொலைக்கும் வகையில் எந்த நிகழ்வுகளும் ஏற்பட வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. வடக்கே **திண்டுக்கல்** சீமையை அடுத்து **சிவகெங்கைச்** சீமை, **சேதுபதிச்** சீமை, **திருநெல்வேலிச்** சீமை ஆகிய தென்பாண்டி நாட்டு அந்நிய எதிர்ப்புப் பாசறைகளில் இருந்து கும்பெனியாருக்கு எதிராக ஒரு சிறு முணுமுணுப்பு கூட எழுவதற்கு இயலாத சூழ்நிலை.

ஆதலால், கும்பெனியார் இந்தப் பகுதிகளில் மீண்டும் அவர்களுக்கு எதிரான கிளர்ச்சிகள் உருவாவதைத் தவிர்க்கும் பொருட்டு மிகவும் தீவிரமான நடவடிக்கைகளில் முழு மூச்சுடன் இறங்கினர். முதலாவதாக இந்தப் பகுதிகளில் ஆங்காங்கு முந்தைய **பாளையக்காரர்களாலும், சிவகெங்கை** மன்னர், **இராமநாதபுரம்** சேதுபதி மன்னர் ஆகியோரது பாதுகாப்பு அரண்களாக விளங்கிய கோட்டைகளையும், கொத்தளங்களையும், அழித்து ஒழிப்பது

என்பது.

இரண்டாவதாக இந்தப் பாயைக்காரர்கள் மற்றும் மன்னர்களது குடிமக்களது உயிர்க் கருவியாக விளங்கிய வளரி, வாள், ஈட்டி, குத்து ஈட்டி, வேல் நாட்டுத் துப்பாக்கி ஆகிய ஆயுதங்களைப் பறித்து சேகரித்து அழிப்பது.

இறுதியாக இதுவரை, கி.பி.1799 முதல் 1801 வரை கும்பெனியாருக்கு எதிராக நாடு தழுவிய முறையில் மக்கள் கிளர்ச்சிகளை ஊக்குவித்துக் கும்பெனியாருடனும் அவர்களது விசுவாமிக்க ஊழியர்களுடனும் ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்டு கும்பெனியாரது உயிருக்கும் உடமைகளுக்கும் அழிமானம், ஏற்படுத்தி முழுமையாக தங்களது மீட்சியில் தோல்வியுற்றுத் தன்னந்தனியாகத் தலைமறைவு வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள **மீனங்குடி முத்துக்கருப்பத் தேவர்** மற்றும் **சித்திரங்குடி மயிலப்பன் சேர்வைக்காரர்** ஆகியோர்களைப் பிடித்து தண்டிக்க வேண்டும் என்பது.

இந்த இலக்குகளை எய்துவதற்காக அன்றைய கும்பெனியாரது நிர்வாகம் முழுமூச்சுடன் செயல்பட்டது.. இராமநாதபுரம் சீமையிலுள்ள சிறப்பான கோட்டைகள்.

[95]**அனுமந்தக்குடி, ஆறுமுகம்கோட்டை, இராமநாதபுரம்** கோட்டை, **காமன்கோட்டை, திருச்சுழி, கமுதிக்கோட்டை முதல்நாடு கோட்டை, முஷ்டக்குரிச்சிக்கோட்டை பந்தல்குடிக்கோட்டை** ஆகியவைகளின் சுற்று மதில்களும், கொத்தளங்களும், இடிக்கப்பட்டு, தரைமட்டமாக்கப்பட்டன. இதனைப்போன்றே **சிவகெங்கைச் சீமையில்** உள்ள **பிரான்மலைக்கோட்டை, திருப்பத்தூர் கோட்டை, காளையார்கோவில் கோட்டை, உருவாட்டிக் கோட்டை, மானாமதுரைக் கோட்டை** ஆகியவைகளும் தகர்த்தெறியப்பட்டன.

95. Madurai District Recerds vol - 1146 (01.09.1803) p-34

**கமுதி திருப்பத்தூர்** ஆகிய ஊர்களில் அந்த கோட்டைகளின் பகுதிகள் இன்னும் பரிதாபமான நிலையில் நின்று கொண்டு கடந்து சென்ற பழமையின் வேதனை விளிம்புகளை நினைவூட்டுவதாக உள்ளன. அழிமானங்கள் தொடர்ந்து வந்த நிலையிலேயே பட்டி தொட்டிகளில் எல்லாம் மக்களது குடியிருப்புகளைக் கும்பெனியாரது அணிகளும், கூலிப்படைகளும் சூழ்ந்துகொண்டு, வீடுதோறும் சோதனை செய்து ஆங்காங்கு அந்த மக்கள் பத்திரப்படுத்தி வைத்திருந்த ஆயுதங்களைப் பறிமுதல் செய்து குவித்தனர். கும்பெனியாரது ஆவணங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட ஆயுதங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த பட்டியலை மேலெழுந்தவாரியாக பார்க்கும்பொழுது அன்றைய இக்கட்டான சூழ்நிலையிலும் **இராமநாதபுரம், சிவகெங்கை, திருநெல்வேலி** மக்கள் கும்பெனியாரை மீண்டும் ஒரு வாய்ப்பு ஏற்பட்டால் அழித்து ஒழிக்கும் வகையில், எஞ்சியுள்ள ஆயுதங்களையும் மிகுந்த சிரத்தையுடன் பாதுகாத்து வைத்திருந்தனர் என்பதை நாம் எளிதில் அறியமுடிகிறது.

## பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்களின் விவரம்[96]

| ஆயுதவகை | நெல்லை சீமை | சிவகங்கை சீமை | இராமநாதபுரம் சீமை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. மாஸ்கட் | 1602 | 1050 | 459 | 3111 |
| 2. மஸ்ஸில்லோடிங் துப்பாக்கி | 686 | - | 570 | 1256 |
| 3. கைத்துப்பாக்கிகள் | 815 | - | 19 | 834 |
| 4. வால்ப்ஸ் | 152 | - | 40 | 192 |
| 5. ஜிஞ்சாலி(பீரங்கி) | 3 | - | 6 | 9 |
| 6. நீண்டஈட்டிகள் | 2300 | - | 1900 | 4200 |
| | 5558 | 1050 | 2992 | 9600 |

| ஆயுதவகை | நெல்லை சீமை | சிவகங்கை சீமை | இராமநாதபுரம் சீமை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. மஸ்கட் | 2438 | 1050 | 459 | 3111 |
| 2. பீரங்கிகள் 16 | - | - | 570 | 1256 |
| 3. மாட்சலாக் | 979 | - | 19 | 834 |
| 4. கைத்துப்பாக்கி | 126 | - | 40 | 192 |
| 5. மஸ்கட் | | - | 6 | 9 |
| (மாட்ச்லாக்குடல்) | 221 | - | 1900 | 4200 |
| 6. சருகார் | 235 | 1050 | 2992 | 9600 |
| 7. ஜிஞ்சாலி | 16 | | | |
| 8. ஈட்டிகள் | 3183 | | | |
| 9. ஈட்டி முனைகள் | 703 | | | |
| 10. ஈட்டித்தடி | 112 | | | |
| 11. துப்பாக்கிசனியன் | 426 | | | |
| 12. கைத்துப்பாக்கி (குழாய்கள்) | 27 | | | |

96. Madurai District Records vol. 1139 (16.01.1802) p.27.

## 31.3.1802ஆம் தேதி அறிக்கைப்படி[97]

| | | | | |
|---|---|---|---|---|
| 1. துப்பாக்கியும், துப்பாக்கி குழாய்களும் | 4143 | 2096 | 1848 | 8094 |
| 2. மாட்சீலாக் | 1281 | 1229 | 2517 | 5027 |
| 3. வேல், ஈட்டிகள் | 4730 | 3640 | 5409 | 13779 |
| 4. கைத்துப்பாக்கிள் | 450 | 42 | 101 | 593 |
| 5. வாள் | 2090 | 652 | 856 | 3596 |
| 6. குத்துவாள் | 1304 | 441 | 630 | 2375 |
| 7. ஜிங்காய் | 17 | 17 | * | 45 |
| 8. ஸரோசர் | 268 | 90 | 227 | 585 |
| 9. கைத்துப்பாக்கிச் சனியன் | 645 | 91 | 180 | 916 |
| மொத்தம் | 14,934 | 8298 | 11780 | 35012 |

97. Madurai District Records vol. 1140 (31.03.1802) p.199.

இந்த ஆயுதங்களை கும்பெனியாருக்கு எதிராக மீண்டும் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு மக்களுக்குக் கிட்டுவதாக இல்லை என்பது வேதனை தருவதாகும். இங்ஙனம் மக்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட இந்த ஆயுதங்கள் அனைத்தும் இராமநாதபுரம் மதுரை **பாளையங்கோட்டை, திண்டுக்கல்** ஆகிய ஊர்களில் நிலைகொண்டிருந்த கும்பெனியாரது இராணுவப் பாசறைகளுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்த பொறுப்பான இராணுவ அலுவலர்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டனர்[98].

[99]திருநெல்வேலிச் சீமையிலுள்ள கோட்டைகளுக்கும் ஏற்பட்ட அழிமானங்கள் பற்றிய செய்திகள் கும்பெனியாரது ஆவணங்களில் காணப்பெறுகின்றன. குறிப்பாக பிரம்மதேசம் **கங்கைகொண்டான், சங்கரநயினார் கோவில், ஆழ்வார் திருநகரி களக்காடு** பகுதிகளில் இருந்த 28 கோட்டைகள் அழிக்கப்பட்டதற்கும் குறிப்பாக **பாஞ்சாலக்குறிச்சிக் கோட்டையை** எந்தக் காரணத்தைக் கொண்டும், எப்பொழுதும் யாரும் அதனை மீண்டும் பரங்கியருக்கு எதிராக பயன்படுத்தக்கூடாது என்ற நோக்கத்திற்காகவும் அந்த கோட்டையின் பாளையக்காரர்களை அவமானப்படுத்த வேண்டும் என்பதற்காகவும், அந்த கோட்டையை இடித்துக் கோட்டை இருந்த பகுதியில் கழுதைகளை ஏரில் பூட்டி எள்ளை விதைத்து எருக்கலைச் செடியை நட்டதற்கும் விவரங்கள் உள்ளன. இந்த கோட்டையை இடித்து அழிப்பதற்கு அறுநூறு ஆட்களை நியமித்து இருந்தனர். அரணை அடையாளம் தெரியாதவாறு அழித்துப் போட்டதுடன் அந்தப் பெயரை அலுவலக ஆவணங்களில் இருந்து அகற்றினர்.

[100]மேலும் மதுரைச் சீமை மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட ஆயுதங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகப் பதிவுகளில் காணப்பெறவில்லை. என்றாலும் அந்த சீமையின் பிரதான நகரங்களான **வத்தலக்குண்டு, நத்தம், பெரியகுளம், வேடசந்தூர், பழநி, தாராபுரம்** தாசில்தார்கள் எராளமான ஆயுதங்களை பறிமுதல் செய்து அழித்த செய்தி, கும்பெனியாரது

98. Madurai District Records vol. 1178 (A) 17.05.1802 p. 354 gbid p (1142).
99. .......................do..........................vol 1140 (28.05.1802).
100.........................do.........................vol 128 p39, 42, 61, 68.

ஆவணங்களில் காணப்பெறுகின்றன.

இங்ஙனம் தமிழர்களின் மான உணர்வினுக்கும், வீரச்செயல்களுக்கும், இருப்பிடமாக தமிழக கோட்டைகளும், தமிழ் மக்களது ஆயுதங்களும் கர்ணனிடமிருந்து பறிக்கப்பட்ட கவச குண்டலங்களைப் போல அகற்றப்பட்டதனால் மக்களது போர்க்குணமும், ஆற்றலும், நாளடைவில் மங்கி மறைவதற்கு ஏதுவாக அமைந்தன. இதனைத்தான் கும்பெனியாரும் எதிர்பார்த்திருந்தனர்.

இத்தகைய நடவடிக்கைகளைக் கும்பெனியார் மேற்கொண்டு இருந்தபோதும் உள்ளூர் மக்களைப் பற்றிய அச்சமும், பீதியும் அவர்களிடம் இருந்துகொண்டே வந்தது. இதனை குறிப்பிடும் நிகழ்ச்சி பற்றிய குறிப்புகளும், அவர்களது ஆவணங்களில் காணப்படுகின்றன. திருநெல்வேலி நெல்லையப்ப சுவாமிக்கு ஆண்டுதோறும் ஆனித்திங்களில் திருமஞ்சன விழா நடைபெறுவது நாம் அறிந்ததே. அந்த ஆண்டு நடைபெறும் விழாவில் ஏராளமான மக்கள் பக்தியுடன் கலந்து கொள்வார்கள் என்ற செய்தியை முன்கூட்டியே அறிந்த கலெக்டர் லூஷிங்டன் திருநெல்வேலி இராணுவத் தளபதி ஷெப்பர்டுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்[101]. அந்த கடிதத்தின் வாசகமாவது.......

"திருநெல்வேலி நகரில் நடக்கும் விழாவிற்காக வந்து கூடுகின்ற நூற்றுக்கணக்கான மக்களை விழாவின்பொழுது, ஆங்காங்கு போதுமான சிப்பாய்களை நிறுத்தி வைத்து, அந்த மக்களது நடமாட்டத்தை கண்ணும், கருத்துமாக கண்காணித்து வருதல் வேண்டும். மற்றும் கோயில்விழா முடிந்த உடனேயே கூடியிருந்த மக்களை உடனடியாக கலைந்து செல்லுமாறு செய்தல் வேண்டும்". இந்த கூட்டத்தினர் கும்பெனியாரது எதிர்ப்பு உணர்வுடன் நடந்து கொண்டு கும்பெனியாரது சிப்பாய்களையும், சொத்துக்களையும் அழிப்பதில் முனைந்துவிட்டால் என்ன செய்வது என்ற பயம் கலெக்டர்

101. gbid (11.07.1802) p-56.

**லூஸிங்டனுக்கு** ஏற்பட்டிருக்க வேண்டும். இதன் பிரதிபலிப்புதான் மேலே கண்ட கடித வாசகமாக அமைந்துள்ளது.

அடுத்து **இராமநாதபுரம் சிவகெங்கை** கிளர்ச்சிகளில் ஈடுபட்ட கும்பெனியாரது இராணுவ வலிமைக்கு பெரும் சவாலாக விளங்கிய. மக்கள் தலைவர்களான **சித்திரங்குடி மயிலப்பன் சேர்வைக்காரரையும் முத்துக்கருபபத் தேவரையும்** தேடிப்பிடிக்கும் பணியும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. மீனங்குடி முத்துக்கருப்பத் தேவரையும், அவரது ஆட்களையும் **சாயல்குடி காட்டில்** வளைத்துப் பிடித்தனர் என்றும், இதற்கு இராமாதபுரம் சீமையின் பட்டத்திற்கான உரிமை கோரி வந்த இராணி மங்களேஸ்வரி நாச்சியார் உதவினார் என்பது தெரியவருகிறது. கும்பெனியாரது கரங்களுக்குச் சிக்கி விடாமல் தப்பித்து வந்த சித்திரங்குடி சேர்வைக்காரரரை உயிரோடு பிடிப்பதற்குப் பல முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொண்டனர். அழிந்த கண்மாயில் கச்சா வலையினால் மீன்களைப் பிடிப்பது எளிதான செயல் அல்லவா? மக்களிடமிருந்து அதிகார வலிமையினால் தனிமைப் படுத்தப்பட்ட கோயில்கள், மடங்கள், சத்திரங்கள் ஆகிய இடங்களுக்கு வந்து செல்லும் பக்தர்கள், பயணிகள் கூட்டத்தினால் **சித்திரங்குடி சேர்வைக்காரர்** மாறுடையில் இருப்பார் என்பது கும்பெனியார் கணிப்பு. இதனை உறுதிபடுத்தும் சம்பவம் ஒன்று நிகழ்ந்ததை அவரது ஆவணங்களே எடுத்துக் கூறுகின்றன.[102]

இந்த ஆவணத்தின்படி கும்பெனி அலவலரான **தாராபுரம்** தாசில்தார் **பழனிமலைக்கு** தைப்பூசத் திருவிழாவிற்குச் செல்லும் பக்தர்களின் கூட்டத்தைக் கண்காணித்து வந்ததுடன் அவருக்கு அளிக்கப்பட்டிருந்த விவரங்களைச் சரிபார்த்து அதற்குப் பொருத்தமாக இருந்த பக்தர் ஒருவரை **சித்திரங்குடி** மயிலப்பன் சேர்வைக்காரர் என்று உறுதிசெய்துகொண்டு, அந்த பக்தரை மேல் விசாரணைக்காகப் **பழனியில்** உள்ள தாசில்தாருக்கு பாதுகாப்புடன் அனுப்பி வைத்தார். அந்த நபரினை விசாரணை செய்ததுடன் அவரது தலைமுடியையும் தாடியையும் பிய்த்துப் போட முயன்றபோது தான்

102. Madurai Disrict Records vol 1221 (10.01.1802) p-71

அந்த நபரின் பெயர் **அய்யாவையன்** என்பதும், **சித்திரங்குடி சேர்வைக்காரர்** அல்ல என்பதும், அறிந்து அவரை திருப்பி அனுப்பி விட்டார். அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்ற பழமொழிக்குப் பொருத்தமாக இந்த நிகழ்ச்சி சுட்டிக் காண்பிக்கிறது. இன்னும் இதனைப்போன்று எத்தனை இடங்களில், எத்தனை பேர்களைச் சித்திரங்குடி சேர்வைக்காரர் எனத் தவறுதலாகப் பிடித்து வைத்து வீணாண முயற்சியில் கும்பெனியார் ஈடுபட்டனரோ? இவ்விதம் தாராபுரத்திலும், பழனியிலும் கும்பெனி அலுவலர்கள் சித்திரங்குடி சேர்வைக்காரரைத் தேடி வலைவீசி கொண்டிருநதபோது, அவர் கமுதி, பாப்பான்குளம் பகுதிகளில் அலைந்து திரிந்து கொண்டிருந்தார். அப்போது, அவருக்கு ஏற்பட்டிருந்த வேதனையும், விரக்தியும் இங்கு குறிப்பிடத்தக்க தன்று.

# 21. மயிலப்பனைத் தேடி

கும்பெனியார் காளையார்கோவில் கோட்டைப் போரில் வெற்றி பெற்றதன் விளைவாக, அவர்களுக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடிய விடுதலை வீரர்கள் இயக்கத்தை முழுவதுமாக வெற்றி கொண்டனர், என்று குறிப்பிட வேண்டும். இராமநாதபுரம் சிவகெங்கை மறவர்களுக்கு ஆதரவாக கும்பெனியாருடன் மோத வந்த மதுரை, திண்டுக்கல், சீமைக் கிளர்ச்சிக்காரர்களது கைகளும, ஒய்ந்து விட்டன. அதனை முன்னின்று நடத்திய அந்தச் சீமைத் தலைவர்களையும் கும்பெனித் தளபதிகள் கைப்பற்றினர்.

இவர்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கர்வகள் நத்தம், சேடப்பட்டி, கீழவளவு, சும்மணப்பட்டி, தட்டப்பட்டி, கிராமங்களில் கள்ளர் இனத் தலைவர்கள் மற்றும் நத்தம் கோபால், கோபாலமணியக்காரர், நத்தம் வெங்கிடாசலம் பிள்ளை நத்தத்திலும் கள்ளர் தலைவர் சேதுபதியைத் தம்மனப்பட்டியிலும் தூக்கிலிடப்பட்டுக் கொன்றனர். மற்றும் திண்டுக்கல் சீமையைச் சேர்ந்த விருப்பாட்சி லெட்சுமண நாயக்கர் நாயக்கர் தாணிப்பட்டி, பொம்மக்கவுண்டர், பெரியகோட்டை வெள்ளைக்கவுண்டர், பூசாரிப்பட்டி சந்திரன்

**சேர்வைக்காரர், பழனி பாளைய வெள்ளையன் சேர்வைக்காரர், சின்ன வலையப்பட்டி கட்டையன் சேர்வைக்காரர், காமாட்சி பட்டிவயிரவன் சேர்வைக்காரர்** ஆகியோர். இவர்கள் அனைவரும் பழனியிலும், சத்திரப்பட்டியிலும் பொது இடங்களில் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டனர். இன்னும் மேலே குறிப்பிட்ட லெட்சுமண நாயக்கர் மகன் **ராமராஜ், சிந்தாலபட்டி நல்லப்ப கவுண்டர், நண்டுகதிர் நாயக்கர், முண்டவண்டி நஞ்சையன்** சேர்வைக்காரர் ஆகியவர்களுக்கு ஜென்ம தண்டனை வழங்கப்பட்டு தூரக் கிழக்கில் உள்ள கும்பெனியாரது தீவுகளுக்கு நாடு கடத்தப்பட்டனர்.

பிறந்த மண்ணின் மாண்பைக் காப்பதற்காக, இறைவனால் படைக்கப்பட்ட நீர், காற்று, ஆகாயம் போல, எத்தனையோ கோடிக்கணக்கான ஆண்டுகளாக இந்தப் புனித மண்ணும் அதில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் மானிட சமூகத்திற்கு நன்றிக் கடனாகத் தங்களது வாழ்க்கையையே அர்ப்பணித்த சிறந்த அந்த மக்கள் தலைவர்கள் அனைவரும் மடிந்து விட்டனர். பரங்கிகள் ஐயாயிரம் கல்தொலைவிற்கு அப்பால் உள்ள நாட்டில் இருந்து வாணிபம் செய்து பிழைக்க வந்தவர்கள். இந்த நாட்டின் அரசியலைத் தங்களது வாணிப வளர்ச்சிக்காக வளைத்து.ஆக்கிரமித்தனர். நாளடைவில் இங்குள்ள இழி பிறவிகளது சுயநலத்தைத் தங்களது ஏகாதிபத்திய இலக்குவிற்குச் சாதகமாய் பயன்படுத்தி இந்த நாட்டை அடிமைப்படுத்தி இந்த நாட்டின் புதிய ஆளவந்தார்களாகி விட்டனர்.

இப்பொழுது, அவர்கள் இந்த நாட்டின் பாரம்பரிய தொழில்களான நெசவு, விவசாயம் போன்ற சமுதாய வளர்ச்சிக்கு இன்றியமையாத கிராமப்புறத் தொழில்களை நசித்துவிடச் செய்ததுடன், இந்த நாட்டின் பரம்பரை ஆட்சியாளர்களான **இராமநாதபுரம், சிவகெங்கை, தஞ்சாவூர்** மன்னர்களையும் அவர்களது நிர்வாகப் பொறுப்பில் இருந்த பாளையக்காரர்களையும் நீக்கி, அவர்களது குடிமக்களைத் தங்களது அடிமைகளாக மாற்றினர்.

சற்றும் மனிதாபிமானமில்லாத முறையில் அவர்களது இரத்தத்தை உறிஞ்சிப் பணமாக மாற்றி தங்களது கருவூலங்களை நிறைத்தனர்.

இந்தக் கொடுமைகளை எதிர்த்துப் போராடி பாளையக்காரர்களையும், மன்னர்களையும் தங்களது வெடிமருந்து ஆயுதங்களின் வலிமையால் ஈவு இரக்கமின்றி கொடுமையான முறையில் அழித்து ஒழித்தனர். "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்ற தொன்மையான முடியாட்சி முறையை ஒழித்து ஏகாதிபத்திய அடிமைச் சங்கிலியால் இணைத்தனர்.

வெள்ளைப் பரங்கியரது ஏகாதிபத்தியக் கனவைக் குலைக்க நடந்த புதிய பாரதப்போரின் கடைசி அங்கம்தான் நடந்து முடிந்த **காளையார் கோவில்** கோட்டைப்போர். இந்த நாட்டின் மரபு வழியிலான போர் முறைகளுக்கு வெள்ளைப் பரங்கிகள் கொடுத்த கடைசி மரண அடியாக அந்தப் போரின் முடிவு அமைந்தது. வாள், வளரி, வேல் ஆகியவைகளையே கையாண்டு தமிழர்களது ஆண்மையும் வீரமும் அக்கினி மழை பொழிந்த கும்பெனியாரது பேய்வாய்ப் பீரங்கிகளுக்கு முன்னர் பொல பொலவென மங்கி, மழுங்கி மறைந்து விட்டன.

ஏற்கனவே நடந்த போரில். சிவகங்கை மன்னர் **முத்துவடுகநாதத் தேவர்** வீரமரணமுற்று இந்திய விடுதலைப் போரின் முதல் தியாகியானார். அடுத்து வெள்ளையரை எதிர்த்த **இராமநாதபுரம் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி** சிறைப் பிடிக்கப்பட்டு **திருச்சிக்** கோட்டையில் பாதுகாப்புக் கைதியாக அடைக்கப்பட்டு இருந்தார். அவர்களது பிரதிநிதிகளாக இந்தப் பாரதப் போரை நடத்திய சிவகங்கை மருதுபாண்டியர்களும் மீனங்குடி முத்துக்கருப்பத் தேவரும் **சித்திரங்குடி** மயிலப்பன் சேர்வைக்காரரும் தோல்வியைத் தழுவினர். ஓடுகின்ற முயல்களைத் துரத்துகின்ற ஓநாய் போல இந்தத் தலைவர்களை கும்பெனித் **தளபதி அக்கினியூ** துரத்திப் பிடிக்க இரவும் பகலுமாக அவனது கூலிகளையும் அடி

வருடிகளையும் ஏவி விட்டான்.

**காளையார் கோவிலுக்கும் அரண்மனை சிறுவயலுக்கும்** இடைப்பட்ட அடர்த்தியான காட்டுப் பகுதியை இந்த இழி பிறவிகள் கைக்கூலி பெறுவதற்காக அலசினர். அவர்களது இந்த முயற்சியில் மருது சேர்வைக்காரர்களது அமைச்சரான **கட்டையன் சேர்வைக்காரர்** சிவகங்கைச் சீமையின் இறுதி மன்னர் **விஜயரகுநாத வேங்கன்** பெரிய **உடையாத் தேவர்** ஆகியோர் முதலில் சிக்கினர். இவர்களை அடுத்துப் பிடிக்கப்பட்ட **சின்னமருது சேர்வைக்காரரது** மகன் **சிவத்ததம்பி, காடல்குடி** பாளையக்காரரான **கீர்த்திவீர குஞ்ச நாயக்கர்** ஆகியோர் பிடிக்கப்பட்டு கண்டிரமாணிக்கத்தில் தூக்கில் ஏற்றப்பட்டனர். இன்னும் ஏராளமான விடுதலை இயக்க வீரர்கள் பிடிக்கப்பட்டு அந்தக் காட்டில் ஓங்கி வளர்ந்த மரக் கிளைகளுக்கிடையில் தூக்கில் தொங்கவிடப்பட்டனர்.

இன்னும் பரங்கிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டவர்களை அவர்களது பிறந்த மண்ணில் இருந்து வாழ்நாள் எல்லாம் அந்த மண்ணைப் பற்றியும் அந்த மண்ணில் உள்ள அவர்களது உற்றார் உறவினர்களையும் நினைத்து, நினைத்து உள்ளம் உருகி வேதனைப்படுவதற்காக இலங்கை **திரிகோணமலையிலும், மலேயா நாட்டு பினாங்கு தீவிலும்** அடைத்து வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்தனர். இந்தக் கொடுமைகள் தொடர்ந்தன.

# 22. பிரியா விடை

**தூத்துக்குடி** துறைமுகம் கி.பி.1802ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4ஆம் தேதி முற்பகல் நேரம் கடல் அலைகள் கதிரவனின் வெம்மைக்குத் தாளாமல் அப்படியும் இப்படியுமாக அலைந்து கொண்டிருந்தன. துறைமுகத்தின் சிறுசிறு படகுகளுக்கு அப்பால், கரையிலிருந்து ஒரு கல் தொலைவில் ஒரு பெரிய பாய் மரக்கப்பல் நங்கூரமிடப்பட்டு நின்று கொண்டிருந்தது.

அந்தக் கப்பலுக்குள் கொண்டு போய்ச் சேர்ப்பதற்காகப் பலவிதமான தலைச்சுமைகளுடன் கூலியாட்கள் கரையில் நின்று கொண்டிருந்த படகிற்கு சென்று கொண்டிருந்தனர். பின்னர் அந்தச் சுமைகள் அந்தப் பெரிய பாய்மரக்கப்பலுககு எடுததுச் செல்லப்பட்டன. தேவையான மாவு, அரிசி, பருப்பு, உப்பு மற்றும் குடிநீர் ஆகியவைகள் தான் அந்தச் சுமைகள். அன்று புறப்படுவதாக இருந்த பயணிகளுக்குத் தேவையான பொருள்களாகத்தான் அவை இருக்க வேண்டும் என்பதை யாரும் உணர்ந்து கொள்வார்கள்.

மாலை நேரம் நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் ஒரு சிறு கூட்டமாக மக்கள் அங்கு திரண்டு வந்து கப்பலை வேடிக்கை

பார்ப்பவர்களைப்போல குழுமி நின்றனர். அப்படி அந்தக் கப்பலில் புதுமையாக என்ன இருந்தன? அல்லது அந்தக் கப்பலில் பயணம் செய்ய இருப்பவர்கள் முக்கியமானவர்களா?

சிறிது நேரத்தில் கும்பெனியாரின் சிப்பாய்களது பாதுகாப்பில் இரண்டு இரண்டு பேர்களாக கைகள் விலங்கிடப்பட்டு வரிசை வரிசையாக சிலர் வந்து கொண்டிருந்தனர். இவர்களைக் காண்பதற்குத் தான் இந்தக் கூட்டம் காத்துக் கொண்டிருந்ததா? அவர்கள் யார்? அவர்கள் வேறுயாருமல்ல கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக **இராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல், மதுரை, நெல்லைச் சீ**மைகளில் கும்பெனியாரின் கொடுமைகளுக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய வீரமறவர்கள்தான் அவர்கள். அவர்கள் சார்ந்திருநத கிளர்ச்சிக்கார அணியினர் அனைவரும் காளையார்கோவில் கோட்டைப் போருக்கு பிறகு முழுவதுமாக பிடிக்கப்பட்டு ஆங்காங்கு தூக்கிலிடப்பட்டனர். அவர்களில் எஞ்சியிருந்த எழுபத்திரண்டு வீர மறவர்களைக் கும்பெனி நிர்வாகம் நாடு கடத்த உத்தரவிடடது. மலேசியா தீபகற்பத்திலுள்ள **பினாங்கு** தீவில்தான் இனிமேல் அவர்கள் வாழ வேண்டிய சிறைக்கூடம், வாழ்நாள் முழுவதும் அவர்கள் பாதுகாப்புக் கைதிகளாக அங்குதான் இருக்க வேண்டும். நாட்டின் நலனிற்காக மக்களது எதிர்கால வாழ்விற்காக அன்னிய ஏகாதிபத்தியத்தின் கொள்ளைக்கு இந்தப் புனித மண்ணில் இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காக "இதந்தரு மனையின்" நீங்கி இடர்மிகு போராட்டங்களை நடத்தி அந்தப் புனிதர்களைக் கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்களுக்கு வழங்கும் தண்டனை போல இந்த மக்கள் தலைவர்களுக்குக் கும்பெனித் துறைத்தனம் வழங்கிய பரிசு அது.

கூட்டதிலிருந்தவர்கள் தத்தம் பகுதியைச் சேர்ந்தவர்களும் தங்களது உறவினர்களும், அந்தக் கூட்டத்தில் இருக்கின்றனரா? என்று தெரிந்து கொள்வதற்காகவும் அப்படியிருந்தால் அவர்களை கடைசியாக ஒரு முறை பார்த்து இறுதியாக பிரியாவிடை கொடுத்து

அனுப்புவதற்காக ஆவலுடன் அந்தக் கூட்டத்தினர் காத்திருந்தனர். அந்தக் கூட்டத்திற்கு இடையில் காவிநிறத் துண்டை தலையில் அணிந்தவாறு **சித்திரங்குடி சேர்வைக்காரரும்** கூட்டத்தினருடன் நின்று கொண்டு இருந்தார். கப்பலுக்குள் முதலில் அழைத்துச் செல்லப் பட்டவர்களில் முதன்மையாக சிவகங்கை மன்னர் வேங்கன் **பெரிய உடையாத் தேவரும்** அடுத்து **இராசசிங்க மங்கலம் ஜெகநாத ஐயனும்** காணப்பட்டனர். அடுத்து **சின்ன மருது சேர்வைக்காரரின்** மகன் **குமாரசாமி, வாராப்பூர்** பாளையக்காரர் பொம்மைய நாயக்கர் அவர்களைத் தொடர்ந்து ஏனைய அறுபத்தி எட்டு பேரும் சிறிய படகுகள் மூலமாக அந்த பாய்மரக்கப்பலுக்கு சென்றதைச் சித்திரங்குடி சேர்வைக்காரர் வேதனையால் விம்மிய நெஞ்சத்துடன் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தார். அவர்களில் நாலைந்து பேர்கள் மட்டும் அவருக்குத் தெரிந்தவர்களாக இருந்தனர். எனினும் அவர்கள் நாட்டிற்காகத் தம்மைப்போல வாழ்க்கையை அர்ப்பணித்த நல்லவர்கள் அல்லவா என்று அவர் நினைக்கும் பொழுது அவரது உணர்ச்சிகளை மீறி அவரது கண்களில் நீர் வழிந்தன.

சிறிது நேரத்தில் பாய்கள் அனைத்தும் இறக்கிவிடப்பட்டு காற்றின் உந்துதலில் பிரம்மாண்டமான அந்த பாய் மரக்கப்பல் மெதுவாக கிழக்கு நோக்கி பயணத்தைத் தொடர்ந்தபோது அந்தி நேரமங்கலான ஒளியில் அதன் தோற்றம் மெதுவாக மறைந்து கொண்டிருந்தது. வேதனை நிறைந்த உள்ளத்துடன் குழுமியிருந்த கூட்டத்தினர் தங்களது தோழர்களையும் உறவினர்களையும் ஒருவாறு கடைசியாகக் கண்டு கொண்ட திருப்தியுடன் கலைந்து செல்ல ஆரம்பித்தனர்.

**சித்திரங்குடி சேர்வைக்காரர்** நான்கு நாட்களுக்குப் பிறகு **தூத்துக்குடியிலிருந்து** இராமநாதபுரம் வரும் வழியில் **சூரங்குடி** சத்திரத்தில் தங்கியிருந்தார். இராமநாதபுரம் சீமையிலிருந்து திருநெல்வேலி செல்லும் வழிப்போக்கர்களை விசாரித்து இராமநாதபுரம் சீமை நிலைமைகளை அறிந்து கொள்வதில் மிகவும்

உன்னிப்பாக ஈடுபட்டிருந்தார். அவர் எதிர்பார்த்தபடி ஆறுதலான செய்தி எதுவும் கிடைக்கவில்லை. மாறாகக் கும்பெனியாரது அணிகள் கிராமங்களில் செய்து வந்த வெறித்தனம் பற்றிய விபரங்கள் தான் அவருக்குக் கிடைத்தது. அவரது மன வேதனையை மிகுதியாகக் கிளறி விட்டது.

அடுத்த நாள் காலையில் வழிப்போக்கர் உடையில் தெற்கு நோக்கி புறப்பட்டுச் சென்றார். **பெருநாழி, பரளாச்சி, தோப்பிலாக்கரை** வழியாக அன்று இரவு **பள்ளிமடம் கிராமத்தில்** உள்ள மடத்திற்கு போய்ச் சேர்ந்தார். கி.பி.10ஆம் நூற்றாண்டில் சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் ஏற்பட்ட போரில் சோழ இளவரசன் ஒருவன் கொல்லப்பட்டான். அவனது சடலம் அங்கு அடக்கம் செய்யப்பட்ட பள்ளிப்படைக் கோயிலுடன் காட்சியளித்துக் கொண்டிருந்தது. அந்தப் பழமையான சிற்றூர் மிகவும் அமைதியுடன் உறங்கிக் கொண்டு இருந்தது. நேரம் தாழ்த்தி முன்சாம நேரத்தில் அங்கு சென்ற மயிலப்பன் சேர்வைக்காரருக்கு குடிப்பதற்கு மட்டும் ஒரு செம்பு குடிநீர் கிடைத்தது. பயணக் களைப்பினால் நன்கு உறங்கி மறுநாள் காலையில் விழித்திருந்த **மயிலப்பன் சேர்வைக்காரர்** மனத்தில் ஒரு புதிய சிந்தனை தொட்டு நின்றது.

அதுவரை சேதுநாட்டு மன்னரையும், மக்களையும் பற்றியே சிந்தித்து வந்த அவருக்கு **இராமநாதபுரம்** கோட்டையில் சிறைவைக்கப்பட்டுள்ள தனது மனைவியைப் பற்றிய சிந்தனைதான் அது.

ஏற்கனவே **திருச்சிக் கோட்டையில் சிறை** வைக்கப்பட்டிருந்த **முத்துராமலிங்க சேதுபதி** மன்னரைச் சிறையிலிருந்து மீட்டிக்கொண்டு வருவதற்கு முயன்ற பொழுது அவர் கையாண்ட யுத்திகளும் முயற்சிகளும் இப்பொழுது அவருக்கு நினைவுக்கு வந்தது. அதைப் போன்றே இராமநாதபுரம் கோட்டையிலுள்ள தனது மனைவியைக் கும்பெனியாரின் காவலிலிருந்து தந்திரமாகத் தப்ப

வைப்பதற்கு முயற்சி செய்தால் என்ன என்ற உள் உணர்வு அவரது உள்ளத்தில் எழுந்தது. இந்தத் திட்டத்தை எவ்விதம் நிறைவேற்றுவது? ஒரு சிறிய அணியினராக தமது பழைய தோழர்கள் சிலரைத் திரட்டிச் சென்று இரவில் கோட்டை வாசலில் காவல் வீரர்களுக்கும், சிறை அலுவர்களுக்கு, கையூட்டு வழங்குவதா? அல்லது திடீரென பயங்கரமாக அவர்களைத் தாக்கி தமது மனைவியை மீட்டு வருவதா....? இந்த இரண்டில் எதனை மேற்கொள்வது அதனை எப்படித் திறமையாக செய்து முடிப்பது?

இந்தச் சிந்தனையிலேயே நாள் முழுவதையும் செலவழித்த **மயிலப்பன் சேர்வைக்காரருக்கு** இருப்புக் கொள்ளவில்லை. அன்று மாலை வேளையில் வடக்கே **திருச்சுழியலை** நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்.

பங்குனி மாத பகல் வெயிலில் பயணத்திற்கு சிரமமான சூழல் என்றாலும் மயிலப்பன் சேர்வைக்காரர் திருச்சுழியல் சத்திரத்திலிருந்து வழிநடையாக **நரிக்குடி** போய்ச் சேர்ந்தார். அங்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் சேதுபதி மன்னரால் அமைக்கப்பட்டிருந்த அன்ன சத்திரம் அண்மைக்காலம் வரை சிவகங்கைப் பிரதானிகள் மருது சேர்வைக்காரர்களால் நன்கு பராமரிக்கப்பட்டு வந்தது. ஆனால் **இராமநாதபுரம், சிவகங்கைச் சீ**மைகளை முழுமையாக அண்மையில் கும்பெனியார் கைப்பற்றி இருந்ததால் இந்த சத்திரத்தின் நிர்வாகம் சீர்குலைந்திருந்தது. அத்துடன் அங்கு தங்கிச் செல்லும் பயணிகளது எண்ணிக்கையும் குறைந்து இருந்தது என்றாலும் அங்கு வழங்கப்பட்ட கம்மங்கூழையும், பருப்புத் துவையலையும் ஏனைய வழிப் போக்கர்களைப் போல மயிலப்பன் சேர்வைக்காரரும் உண்டு அங்கு தங்கியிருந்தார். ஆனால் அவரின் உள்ளத்தில் எத்தனையோ விதமான சிந்தனைகள் விரிந்து பெரிதாகியும் மீண்டும் சுருங்கும் கொல்லம்பட்டறை துருத்தியைப் போல புதிய புதிய சிந்தனைகளும் திட்டங்களும் அவரது மனதில் தோன்றி மறைந்த வண்ணம் இருந்தன.

சாய்ந்த பிறகு வீடு திரும்பி வந்ததால் யாரும் அங்கு அவரை இனம் கண்டு கொள்ள இயலவில்லை. இதற்கிடையில் ராமுக் கோனார் ஒரு ஆளைச் **சித்திரங்குடிக்கு** அனுப்பி வைத்து அங்குள்ள நிலைமையை ரகசியமாக தெரிந்து வருமாறு அனுப்பி வைத்தார். அந்த நபர் இரண்டு நாட்களில் திரும்பி வந்து சித்திரங்குடி கிராமம் அமைதியாக இருப்பதாகவும் அங்கு ஏற்கனவே பலமுறை கும்பெனிச் சிப்பாய்கள் வந்து அவரைத் தேடிச் சென்ற செய்தியைத் தெரிவித்ததுடன் **இராமநாதபுரம்** கோட்டைச் சிறையிலிருநது விடுதலைபெற்ற அவரது மனைவியும் தமக்கையும் ஆகிய இருவரும் தற்போது சித்திரங்குடியிலுள்ள அவரது வீட்டில் இருப்பதாகவும், அவரது மனைவிக்கு ஏதோ சுகவீனம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிந்து வந்த செய்தியை ராமுக் கோனாரிடம் அந்த ஆள் தெரிவித்தார். இதுபற்றி இரணடு மூன்று நாட்களாக மயிலப்பன் சேர்வைக்காரரும் ராமுக் கோனாரும் மேய்ச்சலுக்கு ஆட்டுக் கிடைகளை ஓட்டிச் செல்லும் பொழுது கலந்து யோசித்தனர்.

சித்திரங்குடிக்குச் சென்று இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. சுகவீனமுள்ள மனைவியைப் பார்த்து வருவதா? வேண்டாமா? அவ்விதம் சென்றால் அங்கு அவருக்கு ஆபத்து எதுவும் ஏற்படுமா? அப்படி ஏற்பட்டால் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள அவர் என்ன செய்யலாம்? என்பன போன்ற கேள்விகளுக்கு அவர்கள் இருவரும் விடைகாண முயன்றனர். முடிவு மயிலப்பன் சேர்வைக்காரர் இரவு நேரத்தில் சித்திரங்குடிக்குச் சென்று வீட்டிலுள்ளவர்களை ரகசியமாக சந்தித்துவிட்டு திரும்ப வருவது என்பது.

அப்பொழுது மழைக்காலம் முடிந்து கோடைகாலம் தொடங்கியிருந்ததால் சித்திரங்குடிக்கும் மணலூருக்கும் இடைப்பற்ற **காட்டாற்றில்** முழங்காலளவு மட்டும் தண்ணீர் மெதுவாக ஓடிக்கொண்டிருந்தது. இந்த மனலூர் அகத்தார் இருப்பிலிருந்து கிழக்கே **முதுகளத்தூர்** செல்லும் ஒற்றையடிப் பாதையில் அமைந்திருந்தது. ஒரு நாள் அதிகாலை வேளையில்

அகத்தாரிருப்பிருலிருந்து புறப்பட்ட மயிலப்பன் சேர்வைக்காரர் உச்சி வேளையில் **மணலூர்** சென்றடைந்தார். அந்த கிராமத்திற்கு வெளியே அமைந்து இருந்த சிவன் கோவிலில் தங்கியிருந்து இரவு நேரம் வருவதற்காக காத்திருந்தார். பல ஆண்டுகளுக்கு முன்னர், அவர் சிறுவனாக இருக்கும்பொழுது அவனது தாயாரும் வேறு சில பெண்களுமாக அங்கு வந்து அங்குங்ளள சுவாமிக்கு வழிபாடுகள் நடத்திய பிறகு கோயில் அர்ச்சகர் அவருக்கு மயிலப்பன் என்று பெயர் சூட்டி அவளது வாயில்கருப்புக் கட்டி துண்டு ஒன்றைப் போட்டு விழுங்கச் சொன்னதும் அப்பொழுது அவரது நினைவிற்கு வந்தது. அப்பொழுது இருந்ததை இன்னும் சொல்லப்போனால் மயிலப்பன் என்ற அன்று புதிதாகச் சூட்டப்பெற்ற பெயர் முருகக்கடவுளைக் குறிப்பதாக இருந்தாலும் உண்மையில் அந்த ஊரில் சில காலத்திற்கு முன்னால் மிகுந்த புகழுடன் வாழ்ந்த ஒரு நல்ல மனிதரது நினைவாகத்தான் சூட்டப்பட்டது. அந்தப் பெயருக்கு ஏற்ப, அந்த நல்ல மனிதரைப் போல, இப்பொழுது தாமும் மிகப் பெரிய வீரனாக மக்களுக்குப் பலவகையிலும் உதவி வந்த பரோபகாரியாக, மக்களால் பெரிதும் புகழ்ந்து சொல்லப்படுகிற பெருமனிதராக இருக்கிறோமா என்று கூட அவர் தமக்குள் எண்ணிப் பார்த்துக் கொண்டார். இனிமேலாவது.... என்று அவர் எண்ணியபோது அவருக்குள் சிரிப்பு தோன்றி மறைந்தது.

நடுச்சாமத்திற்கு, இரண்டு நாழிகை இருக்கும் வேளையில் மயிலப்பன் **சித்திரங்குடி** கிராமத்திற்குள் மிகவும் எச்சரிக்கையாகச் சென்று அவரது வீட்டுக் கதவை மெதுவாகத் திறந்தார். மாடத்தில் இருந்த ஆமணக்கு எண்ணை அகல் விளக்கின் மங்கிய ஒளியில் அவரது மனைவி கட்டிலில் படுத்து இருப்பதும் அவர் அருகே அவரது மாமனாரும் தமக்கையும் அமர்ந்து ஏதோ மருந்து புகட்டிக் கொண்டு இருப்பதும் தெரிந்தது. அவரை அறியாமலேயே அவரது கண்களில் நீர் நிறைந்தன. மெதுவாக மனைவியின் கட்டில் அருகே சென்று "அபிராமி" உனக்கு என்ன நோய்? எப்படி இருக்கிறாய்?

ஆதுரம் மிக்க கண்களுடன் தனது கணவனை அவரால் பார்க்க முடிந்ததேயொழிய பேசும் நிலையில் அபிராமி இல்லை. உடனிருந்த அவரது தமக்கை "தம்பி; இப்பொழுதாவது வந்து சேர்ந்தாயே; அதுபோதும் அவள் இனி தேறி விடுவாள்" என்ற தொடக்கத்துடன் அபிராமிக்கு **இராமநாதபுரம்** கோட்டைச்சிறையில் இருக்கும் பொழுது ஏற்பட்ட உடல்நலிவையும் கடந்த பத்து நாட்களாக இங்கு வீட்டிற்கு வந்த பிறகு நிலைமை மோசமாகி விடடதையும் விவரித்துச் சொன்னார்.

சேதுபதி மன்னருக்காகப் படைக்கலம் ஏந்திப் போரிட்ட பொழுது, ஏற்படாத அச்சமும் வேதனையும் சேர்வைக்காரரது இதயத்தைக் கவ்வியது. தனது பொதுநலச் சேவைக்கும், போராட்ட வாழ்விற்கும் பக்க துணையாக இத்துணை ஆண்டுகாலமும் இருந்து வந்து ஊக்குவித்து வந்தவள் அல்லவா அபிராமி என அவர் எண்ணிப் பார்க்கும்போது இந்த உலகம் ஒரு துளி அளவு கூட ஒளியில்லாத இருண்ட சூன்யமாகத் தோன்றியது. கட்டிலில் போர்வையினால் மூடப்பட்டு, படுக்கையோடு படுக்கையாக ஒட்டி உலர்ந்து கிடந்த அபிராமியைப் பார்க்கும்பொழுது, சேர்வைக்காரரது வாழ்க்கையில் என்றுமே உணர்ந்திராத வேதனையால் விம்மும் நெஞ்சத்துடன் நிலைகுலைந்து நின்றார்.

அப்பொழுது, திடீரென பதினான்கு முரடர்கள் அங்கு நுழைந்து மயிலப்பன் சேர்வைக்காரரைத் தள்ளிவிட்டு தரையில் கிடத்தி அவரைக் கயிற்றால் பிணைத்தனர். ஓ எவ்வளவு தான் முயன்றும் அவர்களது அழுத்தமான பிடியிலிருந்து மீளமுடியாமல் தவித்தார். அவரது தமக்கையார் போட்ட கூச்சலைக் கேட்டு அக்கம் பக்கத்திலுள்ள எவரும் உதவிக்கு ஓடிவரவில்லை.

'அடப்பாவிகளா! கைக்கூலி பெறுவதற்குத்தானே என்னைப் பிடித்து இருக்கிறீர்கள்' அந்தப் பணத்தை நான் தருகிறேன். என்னை விட்டு விடுங்கள்! என அந்த முரடர்களிடம் சொன்னார்.

பரங்கிகளது ஆசை வார்த்தைகளால் வெறியூட்டப்பட்ட அந்தக் கயவர்கள் கேளாக்காதினராக இருந்தனர். சில நொடிகளில் மயிலப்பன் சேர்வைக்காரரை அங்கிருந்து முரட்டுத்தனமாகத் தள்ளியவாறு வெளியே இழுத்துச் சென்றனர். அப்பொழுது மயிலப்பன் சேர்வைக்காரர், ஒருமுறை தமது தமக்கையையும், மனைவி அபிராமியையும் உற்றுப் பார்த்தார். அதுதான் அவர்களுடைய கடைசி சந்திப்பு என்பதை அந்தப்பார்வை உணர்த்தி இருக்க வேண்டும்.

ஏற்கனவே போட்ட கூச்சலினால் அயர்ந்து போய் இருந்த பீதியினாலும், பயத்தினாலும் நடுங்கிய அபிராமியின் கண்களை இமைகள் மூடின. இனிமேல் அவள் தனது கணவனைப் பார்க்க இயலாதுதானே.

அந்த சோக நாடகக் காட்சியின் உச்சக்கட்டமாக அபிராமியின் மரணம் அமைந்துவிட்டது.

# 23. பொறியில் அகப்பட்ட புலி

**சிக்கல் சத்திரம்.**

இராமநாதபுரத்திற்குத் தெற்கே **கன்னியாகுமரி** செல்லும் சேதுப்பாதையில் இருப்பது சேதுபதி மன்னரது இந்தச் சத்திரம். ஊருக்கு வெளியே மனித சந்தடி இல்லாத சூழலில் இந்தக் கட்டிடத்தின் ஒரு பகுதியைச் சிக்கல் வட்டார அமில்தாரது அலுவலகமாக மாற்றப்பட்டிருந்தது. கடந்த இரு நாட்களாக கைகளிலும், கால்களிலும் விலங்கிடப் பட்டவராக **சித்திரங்குடி சேர்வைக்காரர்** ஒரு அறையில் அமர்ந்து இருந்தார். அவரது மனக் கண்களில் முதல் நாள் நடந்த நிகழ்ச்சிகள் அவரது வேதனையை விசிறி விட்டுக் கொண்டிருந்தது.

உலகம் எவ்வளவு மோசமாக மாறிவிட்டது! முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் முத்துராமலிங்க **விஜயரெகுநாத சேதுபதி** பதினொன்று வயது இளைஞனாக இருக்கும்போது, சேதுபதிச் சீமையை முதன் முறையாக **ஆற்காட்டு நவாப்** கைப்பற்றி ஆட்சி நடத்திய பொழுது அந்த ஆட்சிக்கு உறுதுணையாக இருந்து வந்த கும்பெனிப் படைகளையும் கும்பெனி அலுவலர்களையும் மூர்க்கத்தனத்துடன் **ஆப்பனூர்** நாட்டு மக்கள் நாட்டுப் பற்றுடன் மிகவும் உக்கிரமாகவும்

தாக்கி அழித்த பல நிகழ்ச்சிகள் வரலாற்றில் பதிவு பெற்றுள்ளன. **ஆப்பனூர்** நாட்டு கிராமங்களுக்குள் அவர்கள் அடி எடுத்து வைக்காமலேயே அஞ்சி ஓடினர்.

ஆனால், நேற்று முன்தினம் அதே ஆப்பனூர் நாட்டு **சித்திரங்குடியைச்** சேர்ந்த கழிசடைகள், எதிர்பாராத வகையில் அவரது வீட்டில் புகுந்து அவரைத் தாக்கிப் பிணைத்து சிக்கலில் உள்ள கம்பெனி அமில்தாரிடம் ஒப்படைத்துவிட்டனர். கும்பெனியார் அவரது தலைக்கு விலையாக வைத்திருந்த ஆயிரம் சக்கரம் வெள்ளிப்பணத்தை கைக்கூலியாகப் பெறுவதற்கு, அவர் அப்பொழுது வைத்திருந்த ஐநூறு சக்கரப்பணத்தையும் இருபுஜங்களிலும் அணிந்து இருந்த பொன்னாலான வாகு வலயங்களை (காப்புகளை) பற்றிக் கொண்டு தம்மை விட்டுவிடுமாறு கெஞ்சிக் கேட்டும் அந்த முரட்டு முண்டங்கள் இணங்கவில்லையே.

இந்த அக்கிரமச் செயலுக்கு மூலகாரணமாக அமைந்தவர் அவரது மாமனார் **தவசித்தேவர்.** மனைவியின் தகப்பனார் என்று எண்ணிப்பார்க்கும்போது அவரால் இந்த உலகில் ஒருவருக்கொருவர் உறவு பாராட்டிப் .பழகி வாழ்ந்து வருவது எல்லாம் பொய்மையானதுதானா? தமது மனைவியை அன்று மனச்சஞ்சலத்துடன் உற்றுப் பார்த்து வருத்தப்பட்டுக் கொண்டிருக்கையில், அங்கிருந்து நழுவிச் சென்ற அவர், வீதியில் அவரது வீட்டைக் கண்காணித்துவந்த அந்த முரடர்களிடம் அவர் அங்கு ரகசியமாக வந்திருப்பதைத் தெரிவித்துத் துப்புக் கொடுத்தவரே அவர்தானே! ஏன் அப்படி அவர் நடந்து கொண்டார்? ஏன்?.... ஒரு வேளை கும்பெனியார் அவருக்குக் கொடுத்து வந்த தொல்லைகளில் இருந்து நிரந்தரமாக விடுபட்டுக் கொள்வதற்காக இருக்குமா? அல்லது கும்பெனியாரது வெள்ளிப்பணத்தைப் பெறுவதற்கு அவரும் ஆசைப்பட்டாரா? சேச்சே! தனது மகளது தாலிக்கயிற்றை அறுத்து எறியப்படுவதை எந்தத் தந்தையாவது விரும்புவாரா? அதிலும் ஒரு

மறவன் அவரது செயல் மறக்குலத்திற்கே மாற்ற முடியாத களங்கம்.

சேதுபதிச் சீமையில் ஒரு பழக்கம் உண்டு. மறவர் இன மக்களில், மரக்கலக்கிளை அல்லது மரக்காகிளையைச் சேர்ந்த மறவர்கள் மூச்சை அடக்கி கடலில் முத்துக்குளிப்பதில் தேர்ந்து இருந்தனர். கடலுக்கு முத்து குளிக்கச் செல்லும்பொழுது அவர்களது உதவிக்காக தமது மாமன் (மனைவியின் தகப்பன்) அல்லது மைத்துனன் (மனைவியின் உடன் பிறந்தவன்) ஆகியவர்களில் ஒருவரை உடன் அழைத்துச் செல்வர். அவர்கள் கடலுக்குள் மூழ்குவதற்கு முன்னர், அவர்களைப் பிணைத்துள்ள கயிற்றின் நுனியை மாமன் அல்லது மைத்துனனிடம் கொடுத்துவிட்டு கடலுக்குள் குதித்து விடுவர். சரியாக குறிப்பிட்ட வினாடிகள் ஆனவுடன் அந்தக் கயிற்றுடன் கடல் அடியில் நின்று முத்து சேகரிப்பவரை உடனே கடலுக்கு மேலே கயிற்றை இழுத்து தூக்கிவிடுவார்கள். அவ்விதம் உரிய நேரத்தில் அவரை கடலுக்கு மேலே தூக்கத் தவறிவிட்டால், அவர் மூச்சடைத்து கடலுக்கடியில் இறந்து விடுவார்.

இவ்வளவு ஆபத்தான பணிக்கு இத்தகைய உறவினர்களை மட்டும் நம்பிச் செயல்படுவார்கள். முத்துக்குளிப்பவரின் மனைவி அவளது தந்தைக்கு மகளாக, தமையனுக்குத் தங்கையாக இருப்பதால் அவளது தாலியைக் காப்பாற்றுவது அவர்களது தவிர்க்க முடியாத அவசரக் கடமையாகி விடுகிறது. ஆனால் இங்கே **சித்திரங்குடி**யில் ஒரு தந்தை (தவசித்தேவர்) தமது அருமை மகளின் தாலிக்கயிற்றை அறுத்து எறியும் இழிச்செயலில் ஈடுபட்டுவிட்டான். இதனை சேர்வைக்காரர் நினைத்துப் பார்த்த பொழுது எந்தச் சமாதானத்தையும் இதற்கு ஈடாக கொள்ள முடியவில்லை. மேலும் இந்தத் துரோகி **தவசித்தேவர்** அழைத்து வந்த கைக்கூலிகளது கும்பலில் **மயிலப்பன்** சேர்வைக்காரரது பால்ய சிநேகிதர்களும் அடங்கி இருந்தனர்....... என்றாலும் மனைவியைக் கடைசி முறையாகக் கண்டு கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைத்ததினால் ஏற்பட்ட ஒரு ஆறுதல்.

அவரது மன்னர் **முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியைக்** கும்பெனியார் கைது செய்து **திருச்சிக் கோட்டையிலும்**, பின்னர் சென்னைக் கோட்டையிலும் அடைத்த பிறகு அவரது பட்ட மகிஷி **ராஜேஸ்வரி நாச்சியாரையும்** அவரது ஒரே மகள் **சிவகாமி நாச்சியாரையும்** சந்திக்க முடியாமலேயே பின்னர் சென்னையில் உயிர் துறந்தார். அந்த வகையில் **மயிலப்பன் சேர்வைக்காரருக்கு** மனைவியைக் கடைசியாகப் பார்க்க முடிந்ததே! ஏனெனில் அவரது மரணம் கும்பெனியாரது கைகளில் எற்படுவது நிச்சயம். நாளை அல்லது நாளை மறுநாள் அல்லது அடுத்த சில நாட்கள் உறுதி.

ஆனால் ஓரிரு கவலைகள் மட்டும் அவரது உள்ளத்தை அழுத்திக் கொண்டிருந்தன. **கமுதிக் கோட்டையில்** நிகழ்ந்த போர்களில் வீரமரணம் எய்தாமல் கும்பெனியாரின் கைதியாக அவர்களது ஆயுதங்களால் குற்றவாளிபோல மரணத்தைத் தழுவப்போகிறோமோ என்பது. மற்றொன்று, மறவர் சீமை மக்களிடம் தமக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி அவர்களைப் பலமுறை அணிதிரளச் செய்து ராஜவிசுவாசத்துடனும் நாட்டுப் பற்றுடனும் வெள்ளையரது ஆட்சிக்கு எதிராகப் போராடச் செய்தும், அதனால் மக்களுக்குப் பல இழப்புகள் ஏற்பட்டபோதிலும், அவரது முயற்சிகள் வெற்றிபெறாமல் விழலுக்கு இறைந்த நீர் போலாகிவிட்டதே! சேதுபதி மன்னரை இனிமேல் யார் முனைந்து போராடி மீட்டி வந்து **இராமலிங்க விலாசம்** - அரண்மனை அரியாசனத்தில் அமரச் செய்வார்கள்? காலம் என்பது கறங்குபோல் சுழன்று வருவது அல்லவா? வீரத்தையும் மானத்தையும் இழந்து இழிநிலை அடைந்துள்ள இந்த மறவர் சீமை மக்கள் மீண்டும் வீறு கொண்டு எழுவார்கள். வாளையும், வேலையும் விட்டெறிந்துவிட்டு வெள்ளையர்களுக்கு எதிராக வெடிமருந்தையும், துப்பாக்கியையும், பீரங்கியையும் பயன்படுத்தி இந்தச் சீமையிலிருந்து வெகுண்டு ஓடச் செய்வார்கள்! ஆம் அந்த நாள் வரத்தான் போகிறது.....

இப்படிக் கவலைப்பட்டுத் தமக்குத்தாமே ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தவாறு மயிலப்பன் சேர்வைக்காரர் அவரை அறியாமலேயே அயர்ந்து உறங்கிவிட்டார். பல நாட்களாக ஊர் சுற்றிய பயணக் களைப்பு மாலை நேரத்தில் அங்குவந்த அமில்தாரின் வில்லைச் சேவகன் ஒருவன், அந்த அறையை எட்டிப் பார்த்துவிட்டு, "என்ன சேர்வைக்காரர் முடங்கிக் கிடக்கிறார். நல்ல உறக்கம் நன்றாக உறங்குங்கள் இன்னும் எத்தனை நாளைக்கு உறங்கப் போகிறீர்கள்! இன்று இராமநாதபுரம் கோட்டையிலிருந்து கலெக்டரது உத்தரவு வந்துவிடும் என்று ஏளனமாகச் சொல்லிச் சென்றது அவரது காதுகளில் மென்மையாக ஒலித்தது. கண்ணை விழித்துப் பார்த்தபொழுது மாலைப்பொழுது மயங்கி மறைந்து கொண்டிருந்தது. அந்த ஒளியில் அவரது அருகே ஒரு சட்டியில் கம்பங்கூழும் சிறிய பானை ஒன்றில் குடிநீரும் ஏற்கனவே பகல் உணவாக வைக்கப்பட்டிருந்தது தெரிந்தது.

பசி, தாகம், எல்லாம் எப்பொழுதோ எங்கேயோ சென்று மறைந்து விட்டனவே!

அவர் மீண்டும் கண்களை மூடி உறக்கத்தில் ஆழ்ந்தார்.

உறக்கம் மனிதனுக்கு இறைவன் வழங்கிய இணையற்ற அருட்கொடை, எவ்வித வேறுபாடும் இல்லாமல் வழங்கிய அற்புத சஞ்சீவி.

அன்றாட வாழ்க்கையில், இணையும் இன்ப, துன்ப உணர்வுகள் மிகுந்த மனித ஜீவியத்திற்கு குந்தகம் ஏற்படாது செய்யும் தெய்வீகக் குளிகை?

# 24. பாளையங்கோட்டைச் சிறை

**சென்னை** கோட்டையிலிருந்தும் **திருச்சியிலிருந்தும் மதுரை** வழியாக **திருவாங்கூர்** செல்லும் பெருவழியில் அமைந்துள்ள ஆங்கிலேயரின் இராணுவப் பாசறை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரைத் **தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளிக்** கோட்டைக்கு அடுத்தபடியாக பலத்த பாதுகாப்பு நிலையமாக இந்தக் கோட்டையைப் பராமரித்து வந்தனர். **மதுரை, திருநெல்வேலி** மறவர் சீமைகளில் கிளர்ந்து எழுந்த மக்கள்கிளர்ச்சிகளை நசுக்கி ஒடுக்குவதற்கு இங்கிருந்து இராணுவ அணிகள் தான் பயன்படுத்தப்பட்டன. கும்பெனியாரது இந்தக் கோட்டையில் **சித்திரங்குடி மயிலப்பன் சேர்வைக்காரர்** சிறை வைக்கப்பட்டு இருந்தார்.

இராமநாதபுரம் கோட்டையிலிருந்து அவர் இங்கு கொண்டுவரப்பட்டு இரண்டு வாரங்களுக்கு மேலாகி விட்டது. "கடிநாய் எனப் பெயரிட்டு நாயைக் கொன்றுவிடு" என ஆங்கிலப் பழமொழி ஒன்று உண்டு. அதன் அடிப்படையில்தான் சித்திரங்குடி சேர்வைக்காரரைக் கொன்று அழிப்பதற்கு முன்னர், "அவரை கொள்ளைக்காரன், திருடன், குடிமக்களைத் துன்புறுத்திய கொடியவன் என்று பெயர் சூட்டி உறுதி செய்வதற்கு ஒரு

நாடகத்தைத் தயாரித்து வந்தனர். மக்களைத் திரட்டி, அன்னிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய மக்களது தலைவர் என மக்கள் நம்பி வருவதைப் பொய்யாக்கி, அவர் ஒரு குற்றவாளி, சமூகத்துரோகி என்று பெயர் சூட்டுவதற்குப் படாத பாடுபட்டனர். இராமநாதபுரம் சீமை கலெக்டராக இருந்த லூஷிங்டன், ராஜ ரிஷியான விஷ்வாமித்திரருக்கு எதிராக கச்சை கட்டிக்கொண்டு நின்ற வசிஸ்டரைப் போன்று கமுதி, முதுகுளத்தூர் பகுதிகளில் அழுக்குகளைத் தின்று உயிர்வாழும் குளத்து மீன்களைப் போல கும்பெனியாரது சில்லரை உதவிகளைக் கொண்டு ஜீவித்துவரும் சில அடிவருடிகளைச் சாட்சிகளாகச் சேர்த்து சித்திரங்குடி சேர்வைக்காரருக்கு எதிராக வழக்குத் தொடுத்து தண்டனை பெற்றுக் கொடுக்க பெருமுயற்சி செய்துவந்தார். இந்தச் சீமையின் சமயச் சிறுபான்மையினரான, முஸ்லீம்களும் கிறிஸ்தவர்களும் கலெக்டரது திட்டத்தில் கலந்து கொள்ள மறுத்துவிட்டனர். அவரது உத்திரவைத் தலையில் ஏற்றுத் தோப்புக்கரணம் போடும் பத்தொன்பது நபர்களைக் கண்டுபிடித்து, அவர்களது பெயர்களை இணைத்து குற்றப்பத்திரிக்கையைக் கவர்னருக்கு அனுப்பி வைத்தார்.

இந்த விசாரணையை நடத்தி வழக்கில் தீர்ப்புக் கூறுவதற்காக நடுவர் குழு ஒன்றை நியமிக்க கவர்னர் உத்தரவிட்டார். அந்த நடுவர்கள் யார் தெரியுமா? ஆங்கிலேயரது குற்றவியல் சட்டம் பயின்றவர்களா? அல்ல அந்தக் கால கட்டத்தில் ஆங்கில குற்றவியல் நடைமுறைகளும் இந்திய தண்டனைச் சட்டமும் அமுலுக்குக் கொண்டு வரப்படாத காலம்! ஆதலால் முதுகளத்தூர் மக்கள் கிளர்ச்சியை ஒடுக்கப் பயன்படுத்தப்பட்ட ராணுவத் தளபதிகள் அந்தக் கிளர்ச்சியின் மாபெரும் வீரன் மயிலப்பன் சேர்வைக்காரரை விசாரித்து "நீதிவழங்கும் நீதிவான்களாக நியமிக்கப்பட்டனர். பாளையங்கோட்டை குதிரைப்படை அணியின் தலைவர் 'மேஜர்' பர்ரோஸ், இந்த நடுவர் மன்றத்தின் தலைவர் இவருக்கு உதவ இரு உறுப்பினர்கள் இந்த மன்றத்திற்கு நியமனம் செய்யப்பட்டனர். பாளைங்கோட்டை பட்டாளத்தின் மூன்றாவது அணித்தலைவர்

**லெப்டினன்ட் கோவலஸீம்,** முதலாவது அணியின் தளபதி **கேப்டன் ஓஹாடிராட்டரும்** இந்தக் குழுவில் இரு உறுப்பினர்கள். அதாவது குற்றம் சுமத்தப்பட்ட குற்றவாளியை விசாரித்துத் தண்டனை வழங்குபவரும் கும்பெனி அரசின் அலுவலர்கள், அவர்களுக்கு எதிராக எவ்விதம் தீர்ப்புச் சொல்லுவார்கள்?

இதில் இன்னொரு செய்தி என்னவென்றால் குற்றப்பத்திரிக்கையைத் தயாரித்த கலெக்டர் **லூசிங்கிடனே** அந்த நடுவர் குழு இப்படித்தான் தண்டனை வழங்க வேண்டுமென்று குழுவிற்கு தனியாகப் பரிந்துரை அனுப்பியது ஆகும். அந்தக் கடிதத்தில் மனித சமுதாயத்தின் இலட்சியங்களை எய்துவதற்கு போராடிய தியாகிகளைக் காலமெல்லாம் சுட்டிக்காண்பிக்க வரலாறு தவறுவதில்லை. அதனால் நமது முன்னோர்கள் இந்த நாட்டின் நலனுக்காக எத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். எவ்வித தியாகங்களை அவர்களது கண்ணீர் காணிக்கைகளாகச் சமர்ப்பித்தனர் என்பது வரலாற்றில் பதிவு பெற்றுள்ளது. அதே சமயம் இந்தப் புனித வேள்விக்கு இடையூறாக இருந்த மனிதப்பதர்களின் பெயர்களும் அந்தப் பொன்னேட்டில் கருமை நிறப் பக்கங்களில் குறிக்கப்பட்டுள்ளன. இந்த வகையில்தான் **சித்திரங்குடி மயிலப்பன் சேர்வைக்காரரது** மகத்தான வாழ்க்கையைத், தியாகத்தைச் சிறுமைப்படுத்துவதற்காக பயன்பட்டு பொய்சாட்சியம் சொல்லிய புல்லர்களை நாமும் தெரிந்துகொள்வோம்.

# 24.போராட்டத்திற்குப் பரிசு

1802ம் வருடம் ஜூலை மாதம்:

அன்றும், **பாளையங்கோட்டை** தலைமை தளபதியின் அலுவலகம் சற்று விறுவிறுப்பாக இயங்கியது. முற்பகலில் ராணுவ வீரர்களது அணியொன்று வந்து கோட்டை வாசலில விசாலமான நழைவு வாயிலில் இருந்து தலைமைத் தளபதி அலுவலகம் வரை அணி வகுத்து நின்றது. அடுத்து, இன்னொரு சிறிய அணியினர் வந்து அந்தக் கட்டிடத்தின் உட்பகுதியில் பாதுகாப்புப் பணிக்காக நிறுத்தப்பட்டனர். சிறிது நேரத்தில் விசாரணைக்கைத் **மயிலப்பன் சேர்வைக்காரர்**, வழக்கம்போல இரும்பு விலங்குகள், . சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு விசாரணை மன்றமாக பயன்படுத்தப்பட்ட அந்த அலுவலகக் கூடத்தில் நிறுத்தப்பட்டார். அங்கு நிசப்தம் நிலவியது.[103]

பாளையங்கோட்டை ராணுவதளம், கோடை வெயிலின் வெப்பத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் கட்டாந்தரையாகக் காணப்பட்ட அந்த பூமி சூரிய வெப்பத்தை ஈர்த்துக் கொள்ள முடியாமல் எதிரொளித்தது. அந்தக் கனல் கொப்பளிக்கும் சூழலில் அமைந்த

103. Madurai District Records Vol.1139 - Page 89 - 93

ராணுவ தளத்தின் அறையொன்றில் கும்பெனியாரின் பரமவிரோதி **மயிலப்பன்** மூன்று மாதங்களுக்கு மேலாக கடுமையான பாதுகாப்பிற்கிடையில் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இவர் இத்தனை காலமாக எதிர்பார்த்த குற்ற விசாரணை அங்கே தொடங்கியது. அங்குள்ள விசாலமான அலுவலகக்கட்டிடம் விசாரணை மன்றமாக மாற்றப்பட்டு இருந்தது. கூடத்தின் உள்ளும் புறமும் சீருடையில் ராணுவ வீரர்கள் பலர் நின்று கொண்டிருந்தனர். மேடையில் அடுத்தடுத்து மூன்று தளபதிகள். ஆம்! அவர்கள் தான் நீதிவான்களாக நியமனம் பெற்று இருந்தவர்கள் அமர்ந்து இருந்தனர். அது ஒரு நீதிமன்றம் என்பதைவிட ஒரு ராணுவ மன்றம் என்பதுதான் பொருத்தமாக இருக்கும். கைகளிலும், கால்களிலும், இரும்பு விலங்குகள் பூட்டப்பட்ட நிலையில் மக்கள் தலைவர் மயிலப்பன் சேர்வைக்காரர், கொடிய குற்றங்களான கொலை, கொள்ளையில் ஈடுபட்ட குற்றவாளி போல, கொண்டு வந்து நிறுத்தப்பட்டார். அவருக்கு எதிர்ப்புறம் அமைக்கப்பட்டிருந்த பெட்டி போன்ற அமைப்பில் கும்பெனியாரின் குதிரைப் படைத்தளபதி ஷெப்பர்டு வந்து நின்று நடுவர் இருக்கையில் அமர்ந்து இருந்த தளபதிகளுக்கு மரியாதை செய்துவிட்டு ராணுவத் தளபதி என்ற முறையில் மிடுக்காக நின்றார்.

நடுவர்களில் ஒருவர் "இங்குள்ள இந்தக் குற்றவாளியைப் பற்றித் தெரிந்ததைச் சொல்லலாம் என்றார்.

கும்பெனியாரது முதல் சாட்சியாக மேஜர் ஷெப்பர்டு வாக்குமூலம் கொடுத்தார். குற்றவாளியான **மயிலப்பன் சேர்வைக்காரர்** கடந்த 1799ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தனது ஆட்களுடன் **முதுகளத்தூர், அபிராமம், கமுதி** ஆகிய ஊர்களில் உள்ள கும்பெனியாரது கச்சேரிகளைத் தாக்கியும், சிப்பாய்களைக் காயப்படுத்தியும், கும்பெனி உடைமைகளையும், சொத்துக்களையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளார்; இந்த அடாவடிச் செயலுக்கு

எவ்வித நியாமும் கிடையாது. மீண்டும கி.பி.1801 பிப்ரவரி மாதம் **பாஞ்சாலக்குறிச்சி, சிவகெங்கைக்** கிளர்ச்சிக்காரர்களது சட்ட விரோதமான நடவடிக்கைகளில் இவரும் இணைந்து நின்றதுடன் இரண்டாவது முறையாகக் **கமுதிக்** கச்சேரியைத் தாக்கியதுடன் அமைதியான குடிமக்களைக் கும்பெனியாருக்கு எதிராக தூண்டிவிட்டதுடன் குடிமக்களது பணத்தைப் பறித்ததாகவும், மக்களது குடியிருப்புகளைத் தீக்கிரையாக்கியதாகவும் சொன்னார்.

அத்துடன் கி.பி.1801ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கும் அக்டோபர் மாதத்திற்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் கும்பெனிப் போர் வீரர்களை எதிர்த்துப் போரிட்டதுடன் கும்பெனியாரது சொத்துக்களை அழித்து பெரும் இழப்பீடுகளை ஏற்படுத்தியதாகவும், இதனால் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்கு நியமனம் பெற்ற **கர்னல் அக்கினியூ** வெளியிட்ட பொது மன்னிப்பு வழங்கப்பட்டவர்கள் பெயர்ப்பட்டியலில் மயிலப்பன் பெயர் விடுபட்டு இருப்பதையும், அவரது தலைக்கு கும்பெனியார் விலை வைத்து அறிவிப்பு கொடுத்து இருப்பதையும் அவரது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுச சொன்னார்.

இரண்டாவது சாட்சியமாக அபிராமம் கிராமம் முனனால் **பேஷ்காரர் ஆறாயிரம் பிள்ளை** விசாரிக்கப்பட்டார். அவர் தமது வாக்குமூலத்தில் கைதியை, அபிராமம் கிராமத்தில் 1801ம் வருடம் மே மாதம் முதன்முதலாகப் பார்த்ததாகவும், அவரும் அவரது ஆட்களும் என்னைப் பிடித்தவுடன் மற்றவர்கள் அங்கிருந்து தப்பி ஓடினர். இந்தக் கைதி, இன்னொரு சேவகரும் ஒரு குதிரையில் சென்று அவர்களை மடக்கிப் பிடித்தனர். பிறகு என்னைக் கொன்று போடும்படி அந்த சேவகருக்கு உத்தரவிட்டார். சில நாட்களுக்கு முன்னர் எனது உறவினரான **முத்தையாபிள்ளை** இவரைச் சேர்ந்த சில ஆட்களைக் கொன்று போட்டதே இதற்குக் காரணம். அப்பொழுது மேலும் நான்கு பேர் வந்து என்னை கட்டிப் பிடித்துத் தூக்கினர். என்னை விட்டு

விடும்படியும், அவர்களுக்கு வேண்டும்பொழுது சிறிது பணம் கொடுப்பதாகவும் சொன்னார். இவர் அவரிடம் 500 சக்கரம் கேட்டதற்கு அப்பொழுதே 100 சக்கரம் அவரிடம் கொடுத்ததாகவும், அவருடன் இருந்த பிராமணர்க்கு 10 பக்கோடா பணமும் சேவகர்களுக்கு 40 சக்கரமும் கொடுத்ததாகவும் சொன்னார். அவர்கள் அவரின் விடுதலைக்கு சிபாரிசு செய்வதற்காக.

அடுத்த சாட்சியாக **கமுதியைச்** சேர்ந்த **அர்த்த தேவர் சேர்வைக்காரர்** சாட்சியம் சொன்னார். அபிராமம் அருகில் உள்ள **கொண்டிசேரி**யில் மார்ச்சு மாதம் 1801ம் வருடம் தங்கி இருந்தபொழுது மயிலப்பனது ஆட்கள் வந்து அவர்களில் எட்டு சேவர்கள் என்னைப் பிடித்து தூக்கி மயிலப்பன் சேர்வைக்காரர் முன்கொண்டு போய் நிறுத்தினர். அவர் என்னை அபிராமத்திற்கு கொண்டு செல்லுமாறு கட்டளையிட்டார். அபிராமத்தில் என்னைக் கிளர்ச்சியில் சேர்ந்து கொள்ளுமாறு வற்புறுத்தினார். நான் இணங்காததால் என்னை விடுவித்துவிடுமாறு சொன்னதுடன் இன்னும் இரு நாட்களில் எனது ஆட்களுடன் வந்து சேர்ந்து கொள்ளாவிட்டால் எங்களைக் கொன்றுவிடுவதாகவும், எங்களது கிராமத்தைத் தீ வைத்து கொளுத்தி விடுவதாகவும் பயமுறுத்தியதைத் தெரிவித்தார்.

குறுக்கு விசாரணையின் பொழுது கி.பி.1801 மார்ச்சு மாதம் மயிலப்பன் **கமுதி**க்கு வந்து இருப்பது தெரிந்து நானும் எனது குடும்பத்தினரும் எங்கள் வீட்டில் இருந்தோம். குதிரையில் வந்த மயிலப்பன் உடன் வந்த ஐம்பது பேர் எனது வீட்டைத் தாக்கினர். இருபது பேர் என்னை அடித்தனர். பெண்டுகளையும், குழந்தைகளையும் ஒன்றும் செய்ய வேண்டாம் என கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். பிறகு மயிலப்பன் பேட்டைக்குச் சென்றவுடன் என்னையும் அங்கு அழைத்துச் சென்றனர். பேட்டை கொள்ளையிடப்பட்டது. அங்கு பணியில் இருந்த சேவகர்கள் ஓடி விட்டனர். அந்த நேரத்தில் நானும் தப்பி வந்து விட்டேன்.

அடுத்த சாட்சி கமுதிக் கச்சேரியில் ஷராப் பணியில் இருந்த **சுப்பன் செட்டி** கி.பி.1801ம் ஆண்டு மார்ச்சு மாதம் முன் பகுதியில் கமுதிக்கு மயிலப்பன் ஐம்பது ஆட்களுடன் வந்திருந்தார். அவர்களில் நானகுபேர் வந்து என்னை தேவர் அழைத்து வரச் சொன்னதாகவும், சொன்னார். நான் அவர்களுடன் மயிலப்பன் இருக்கும் இடத்திற்குச் சென்றேன். அவர் கும்பெனியாரது பணம் எங்கு வைக்கப்பட்டிருக்கிறது எனக் கேட்டார். அங்கு இல்லை என்றும், அவைகளை **இராமநாதபுரத்திற்கு** எடுத்துச் சென்று விட்டனர் எனக் கூறினேன். என்னை **அபிராமத்திற்கு** அழைத்து வருமாறும் அங்கு என்னைக் கொன்று விடும்படி உத்தரவிட்டார். அவர் அபிராமம் சென்றவுடன் என்னைப் பிடித்து வைத்திருந்த சேவகர்கள் 200 சக்கரம் பணம் கொடுத்தால் என்னை விடுதலை செய்வதாகச் சொன்னார்கள். அவர்களை எனது வீட்டிற்கு அழைத்துச் சென்று 200 சக்கரம் மதிப்புள்ள நகைகளைக் கொடுத்ததும் என்னை விடுவித்தனர்.

அடுத்து கொடுமலூர் கிராமத்தைச் சேர்ந்த **குமாரசாமி** சாட்சிக் கூண்டில் நின்று சாட்சி சொன்னார். கடந்த வருடம் மார்ச் மாதம் மயிலப்பன் சேர்வைக்காரரும் அவரது ஆட்களும் **கொடுமலூர்** கிராமத்தைச் சூழ்ந்து கும்பெனியாருக்குச் சொந்தமான நெற்களஞ்சியத்தைக் கொள்ளையிட்டும, நெல்லை அவர்களே சூறை போட்டுக் கொண்டதாகவும் அவரது ஆட்கள் ஊர் மக்களிடம் நூறு சக்கரம் பணம் கொடுக்குமாறு வலியுறுத்தியதாகவும் அவர்கள் வசூலித்து 30 சக்கரம் மட்டும் கொடுத்ததற்காக அவர்களை உதைத்ததாகவும் கூறினார். பின்னர் மீண்டும் ஆகஸ்டு மாதத்தில் நூறு ஆட்களுடன் வந்த மயிலப்பன் சாட்சியைப் பிடித்து அடித்ததாகவும், அவர்களது ஆட்களைத் தன்னைக் கொல்லுமாறு உத்திரவிட்டதாகவும் சொன்னார்கள். அவர்கள் ஈட்டிகளைக் காட்டி பயமுறுத்தினர் என்றும் தன்னைக் கொல்லவில்லை என்றும் சொன்னான்.

**மணலூர் கிராமத்தைச் சேர்ந்த கணக்குப்பிள்ளை குமாரவேலு**

என்பவர் தமது சாட்சியத்தில் 1801ம் வருடம் மார்ச்சு மாதம் கைதியாக உள்ள மயிலப்பனும் இருபது ஆட்களும் மணலூர் கிராமத்தைச் சூழ்ந்து, அவரையும், அவரது தகப்பனாரையும் பிடித்து அவர்களிடத்தில் 500 சக்கரம் பணம் கோரியதாகவும், அந்தத் தொகை கிடைக்காததால், அவர்களைப் புளியமர விளாரிகளால் அடித்ததாகவும் சொன்னார். மேலும், அவர்களைக் கொடுமலூருக்கு கொண்டு வரும்படி மயிலப்பன் உத்திரவிட்டபொழுது, தொகையை அன்று மாலையில் கொடுப்பதாகச் சொன்னதின்பேரில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் தெரிவித்தார். மீண்டும் ஆகஸ்டு மாதத்தில் அவர்களது ஊருக்கு அண்மையில் உள்ள பெருங்கரையில் இருந்து கொண்டு அவரது தகப்னாரிடம் சில சேவகர்களை அனுப்பி வைத்ததாகவும், அவர்களுடன் ஏழுகலம் நெல்லுடன் சென்று அவரது தந்தை மயிலப்பனிடம் அந்த நெல்லைக் கொடுத்து திரும்பியதாகவும் சொன்னார்.

முதுகளத்தூர் அம்பலகாரர் முத்தையா பிள்ளை பின்னர் விசாரிக்கப்பட்டார். அவரது வாக்குமூலத்தில் ஏப்ரல் 1801ல் ஒருநாள் பொழுதடைந்த நேரம் மயிலப்பனும், சிங்கன் செட்டியும் முதுகுளத்தூர் கச்சேரிக்கு வந்து சிப்பாய்களது ஆயுதங்களைப் பறித்தனர். அப்பொழுது மரக்காணன். அம்பலக்காரருக்குத் தொடையிலும், காவல்காரருக்கு கையிலும் காயம் ஏற்பட்டது என்று அதனைக் கண்டு பயந்து ஓடியதாகவும் சொன்னார். நான்கு நாட்கள் கழித்து மீண்டும் ஒரு குழுவினர் அங்கு வந்து அமில்தாரிடம் பணம் கேட்டதாகவும் அவர் கொடுக்க மறுத்து அவர்களுடன் சண்டை போட்டதாகவும், அப்பொழுது உமையாரின் ஆள் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் சற்று தொலைவில் நினறு கொண்டு இருந்ததால், அந்தக் கூட்டத்தில் மயிலப்பன் இருந்தாரா என்பது தனக்குத் தெரியாது என்றும் சொன்னார்.

1801ம் வருடம் ஜூன் மாதத்தில அமில்தார் ஆப்பனூரில் இருந்துகொண்டு அவரை அழைத்து வர ஆட்களை

அனுப்பியதாகவும், அவரும் இன்னொரு அம்பலக்காரர் **பெரியய்யா** தேவரும் உடனே அங்கு சென்றதாகவும் சொன்னார் அப்பொழுது கிடைத்த செய்தி, மயிலப்பனும் இன்னும் நூற்று ஐம்பது பேர்களும் **முதுகளத்தூர்** சென்று இருப்பதாகவும், அவர்கள் சில அம்பலகாரர்களைப் பிடித்து நானூறு அல்லது இருநூறு சக்கரம் பணம் கொடுக்கும்படி சொன்னதுடன் ஏராளமான அளவு அரிசியைப் பறித்துக் கொண்டு போய்விட்டதாக. இதற்குப் பிறகு அவர்கள் முதுகளத்தூருக்குச் சென்றபொழுது கிளர்ச்சிக்காரர்கள் **கமுதிக்குச்** சென்றுவிட்டனர். நாலைந்து நாட்களுக்குப் பிறகு சிவகெங்கை சேர்வைக்காரரது மருமகன் **பெரிய கருப்பத் தேவர்** மற்றும் இரண்டு, மூன்று நாட்டுத்தலைவர்களும் ஐந்நூறு பேர்களும் அவரது கிராமத்திற்கு வந்து மூன்று நாட்கள் அங்கு தங்கி இருந்தனர். பிறகு **மயிலப்பனும்** அங்கு வந்து சேர்ந்து கொண்டார். மயிலப்பன் அங்கு வருவதற்கு முன்னால், பிற தலைவர்கள் எங்களது வீடுகளை இடித்துத் தள்ளும்படி உத்திரவிட்டனர். ஆனால், மயிலப்பன் வந்து அவர்களது போக்கை நிறுத்தியதுடன் அமில்தாரரையும் உழைக்கும் திறன் கொண்டவர்களையும் அழைத்து வருமாறும் 100 சக்கரம் பணம் எடுத்து வருமாறும் ஆணையிட்டார்.

அவர்கள் 100 சக்கரம் பணம் வசூலித்து முகையதீன் மூலம் சாட்சியிடம் கொடுத்தனர். ஏழு எட்டு நாட்களுக்குப் பிறகு, இராமநாதபுரம் பட்டத்திற்கு உரியவராகச் சொல்லிக் கொள்பவர் இருநூறு ஆட்களுடன் அங்கு வந்தார். சிவகெங்கை ராஜா, அங்குள்ள வெள்ளாளர் அனைவரையும் கொன்றுவிட உத்திரவிட்டுள்ளார் என்று சொன்னார். ஒருவர் கொல்லப்பட்டார் எஞ்சியிருந்தவர் பீதியினால் நடுங்கிக் கொண்டிருந்தனர். சாட்சி அவர்களிடம் சரணடைந்து விடுவது நல்லது என எண்ணியவாறு வந்தபொழுது **சுப்பிரமணிய பிள்ளையினால்** பிடிக்கப்பட்டு **மயிலப்பனிடம்** ஒப்படைக்கப்பட்டார். **பெரிய மருது**விற்கு துணையாகச் செல்லும்படியாக, அதன்படி **காடல்குடி** கிராமத்திற்கு இருந்த பெரிய மருது முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அப்பொழுது மருது தம்மிடம் ஏன் அவர் முன்னதாக வரவில்லை எனக் கேட்டார். அதற்கு சாட்சி தாம் 1700 கலம் நெல்லும் 100 சக்கரமும் சேகரிப்பதில் முனைந்து இருந்ததாகப் பதில் சொன்னார். அந்தத் தொகை மயிலப்பனிடம் கொடுக்கப்பட்டதாகச் சொன்னார். உடனே மருது அவரை விடுதலை செய்தார். அதன்பிறகு தான் மயிலப்பனைச் சந்திக்கவில்லை என்று தெரிவித்தார். அத்துடன் விசாரணை மன்றம் கலைந்தது.

அடுத்தநாள் 10.06.1802

நீராவி கிராமத்தைச் சேர்ந்த பெரிய ஐயா அடுத்த சாட்சியாக விசாரிக்கப்பட்டு வாக்குமூலம் கொடுத்தார்.

1801ம் ஆண்டு ஜூன் மாதத்தில் எதிரியை மேலப்பெருங்கரை கிராமத்தின் அருகே சந்தித்தேன். அப்பொழுது அவர், தனது ஊர் கிராம மக்கள் எதிரியிடம் 200 சக்கரம் பணம் கொடுப்பதாக ஒப்புக் கொண்டுள்ளபோது அவர் 150 சக்கரம் மட்டும கொடுத்து இருப்பதால் மீதித் தொகையையும உடனே கொடுத்து விடும்படி சொன்னார். சாட்சிக்காக அந்த ஊர் மக்கள் தலையிட்டு மீதப் பணத்தை அவர் கொடுத்துவிடுவார் என வாக்குறுதி அளிக்கப்பட்டவுடன் சாட்சி விடுதலை செய்யப்பட்டார்.

அடுத்து முதுகளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த கண்ணையா என்பவர் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

நீராவி கிராமம் பெரிய ஐயா வாக்களித்த பணத்தை சாட்சிதான் பொறுப்பு என்று மயிலப்பன் தெரிவித்தும் அந்தக் கிராம மக்கள் அப்பொழுது பணத்தைக் கொண்டுவந்து அவரிடம் கொடுத்தனர் என்று சொன்னார்.

முதுகளத்தூர் கிராம மரக்காணம் அம்பலக்காரர் அடுத்த

சாட்சியாக விசாரிக்கப்பட்டார். தனது வாக்குமூலத்தில் எதிரியைத் தனக்குத் தெரியும் என்றும், கி.பி.1799ம் ஆண்டு ஏப்ரல் - மே மாதத்தில் காலை ஆறு அல்லது ஏழு மணிக்கு அவரும் கச்சேரி ஷராப்பும் மேனேஜரும் மூன்று அல்லது நான்கு சிப்பாய்களும் கச்சேரியில் இருக்கும்போது திடீரென்று தாக்கப்பட்டோம் என்றும், அவரது கைகளில் வலது கையில் இரு வெட்டுக் காயம் ஏற்பட்டது என்றும், அதனை ஏற்படுத்தியவர் இந்த எதிரிதான் எனச் சொன்னார். சிங்கன் செட்டி கச்சேரியில் இருந்த துப்பாக்கிகளைப் பறித்துச் சென்றார் என்றும், அப்பொழுது இன்னொருவர் வேல்கம்பினால் அவரைக் குத்தியதாகவும் தெரிவித்தார்.

கி.பி.1801ம் ஆண்டு நிகழ்ச்சிகள் பற்றிக் கோர்ட்டார் கேட்டதற்கு, சாட்சி பதில் சொல்லுகையில், அங்கேமே-ஜூன் மாதத்தில் நடந்த நிகழ்ச்சிகள் தெரியும். அவரது ஆட்களும் வந்து முதுகளத்தூர் கச்சேரிக்குத் தீ வைத்தனர் என்றும், இருவரது தலைகளை வெட்டிப் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன என்றும், சாட்சி அங்கிருந்து ஓடிவிட்டதாகவும் சொன்னார்.

அடுத்து அபிராமத்தைச் சேர்ந்த வெங்கடாசலம் விசாரிக்கப்பட்டார். இவர் கி.பி.1799ம் வருடம் ஒருநாள் இரவு முதுகளத்தூர் கச்சேரி தாக்கப்பட்டது, அபிராமம் கச்சேரியும் தாக்கப்பட்டதில் ஈட்டிக்காயம் பெற்ற கும்பெனியாரது இரு சிப்பாய்களில் ஒருவர் இறந்து போனார் என்றும், கச்சேரியில் உள்ள துப்பாக்கிகள் எடுத்துச் செல்லப்பட்டன என்றும், இந்தத் தாக்குதலுக்கு மயிலப்பன் தலைமை தாங்கினார் எனச் சொல்லப்பட்டது என்றும் தெரிவித்தார். தொடர்ந்து அவர் சாட்சியம் அளிக்கையில் மீண்டும் ஒரு மாதம் கழித்து அபிராமத்திற்கு வந்தார் 500 பேர்களுடன். அவரது ஆட்களுக்குத் தினப்படி கொடுப்பதற்காக ஊர்மக்கள், அவரிடம் 30 கலம் நெல்லும் நான்கு செம்மறி ஆடுகளும் கொடுத்தனர். அங்கு சேமித்து வைக்கப்பட்டிருந்த நெல்லை அவர்கள் சூறையாடாமல் இருப்பதற்காக. அபிராமம் வட்டத்தில்

கும்பெனியார்கள் பல ஊர்களில் தங்களுக்குச் சொந்தமான தானியக் கிடங்குகள் கொள்ளையிடப்பட்டு அவரைச் சேர்ந்தவர்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்டு வந்த நேரம்.

1801 ஏப்ரல் மாதக் கடைசி அல்லது மே மாதத் தொடக்கத்தில், முன்னூறு ஆட்களுடன் வந்து **அபிராமம்** கச்சேரியைத் தாக்கினர். சாட்சியும் மற்றும் ஊர் மக்களும் பயந்து ஊரைவிட்டு ஓடினோம். குதிரையில் துரத்தி வந்த **மயிலப்பன், ஆறாயிரம் பிள்ளை**யையும், **காதர் மீரான்** அம்பலக்காரரையுமே பிடித்துச் சென்றார். சில நிமிடங்களில் **ஆர்த்திதேவனும்** பிடித்து வரப்பெற்று மயிலப்பன் முன் நிறுத்தப்பட்டார். இந்த மூன்று பேரும் தன்னந்தனியாக நிறுத்தப்படடனர். அப்பொழுது சேவகர்கள் கிராமத்தைக் கொள்ளையிட்டு அவர்களது படிப்பணத்திற்கு ஏற்பாடு செய்தனர். அடுத்து ஆர்த்த தேவர் விடுதலை செய்யப்பட்டார். ஆறாயிரம்பிள்ளை குடும்பப் பெண்கள் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரும் விடுதலை செய்யப்பட்டார்.

அன்று மாலை மயிலப்பனைக் கிராமத்தில் விட்டு விட்டு மற்றவர்கள் மட்டும் சென்றனர். தான் செல்லும் இடத்திற்கு காதாமீரானைக் கொண்டுவரும்படி உத்திரவு பிறப்பித்துவிட்டு, ஆனால் அவர் கொண்டு செல்லப்படும் வழியில் காதர்மீரான் சேர்வைக்காரர் கேட்டுக் கொண்டபடி அவர் விடுதலை செய்யப்பட்டார். அப்பொழுது அவர் கொடுத்த வாக்குறுதிப்படி அடுத்தநாள் காலையில் 500 சக்கரம் பணம் வசூலித்துக் கொடுத்தார். கூடுதலாகப் பணம் கொண்டு வராததற்காக உதை விழுந்தது. இரவில் மயிலப்பன் அங்கு வந்தார். நீங்கள் வாக்களித்தபடி பதினைந்து நாட்களாகத் தொகையைக் கொடுக்கவில்லை. அதனால் உங்கள் ஊருக்குத் தீயிடப் போகிறேன் என்று பயமுறுத்திய சிறிது நேரத்தில் கச்சேரிக்கு நெருப்பு வைக்கப்பட்டது. தீயில் நான்கு குழந்தைகள் கருகிச் செத்தன. வயது வந்தவர்கள் சிரமப்பட்டுத் தப்பினர்.

பிறகு **சித்திரங்குடி உடையணன் சேர்வைக்காரர்** அடுத்த சாட்சியாக விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

ஜூன் 1801ல் காலை நேரத்தில் எதிரியும் அவரைச் சேர்ந்த எழுபது எண்பது பேர்களும் கடலாடி கிராமத்தைச் சூழ்ந்துகொண்டு தன்னை மயிலப்பனிடம் பிடித்துச் சென்றனர் என்றும், அவர் சொன்னதாகத் தெரிவித்தார். என்னிடம் 500 சக்கரம் பணம் கொடுக்கும்படியும், சொன்னதாகத் தெரிவித்தார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னதும், அவரை உதைக்குமாறு உத்திரவிட்டார் என்றும், பிறகு நூறு சக்கரம் பணம் கொடுத்த பிறகு விடுதலை செய்யப்பட்டதாகவும், அதற்குப்பிறகு அவரைச் சந்திக்க வில்லை என்றும் தெரிவித்தார். இவரைத் தொடர்ந்து கடலாடி **முத்துச்சாமி அம்பலக்காரர்** என்பவர் சாட்சியம் அளித்தார்.

முதுகளத்தூர் கச்சேரி எரிக்கப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு **மயிலப்பன் சேர்வைக்காரர்** தனக்கு ஓலையொன்று அனுப்பியதாகவும், அதில் 500 சக்கரம் பணமும், 50 கலம் அரிசியும், 50 செம்மறி ஆடுகளும் அனுப்பி வைக்கும்படியும், தவறினால் கடலாடி கிராமம் எரித்து சாம்பலாக்கப்படும் என எழுதி இருந்ததாகச் சொன்னார். இது தன்னால் பூர்த்தி செய்ய முடியாத கோரிக்கை. அடுத்தநாள் மாலையில் இருநூறு ஆட்களுடன் மயிலப்பன் வந்தார். தனது கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படிகேட்டார். பணம் இல்லாததால் என்னையும் இன்னும் மூன்று பேர்களையும் அடித்து உதைக்குமாறு ஆணையிட்டார். கும்பெனியாரது நெல் எங்கு வைக்கப்பட்டு இருக்கிறது எனறு கேட்டார். அவை இராமநாதபுரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டன. நாலைந்து நாட்கள் கழித்து நானூறு ஆட்களுடன் வந்து அவர்களுக்கு இரண்டு நாட்கள் படி கொடுக்க வேண்டும் எனக் கோரப்பட்டது. கிராமத்தினர் 10 கோழிகள், சில கைத்தறித் துணி மடிகளையும் கொடுத்தோம்.

மேலும், எதிரி, மிகவும் சிறந்த முறையில் ஆடையும், அணிமணிகளும் அணிந்து காணப்பட்டனர் எனவும் கூறினார்.

இவர்களைத் தவிர சித்திரங்குடி உடையார், பேரையூர் **ரெங்கசாமி நாயக்கர், முதுகளத்தூர் வேலுமுக்கந்தன், கிடாத்திருக்கை முத்துச்சாமி, கடலாடி கருப்பநாதன்** ஆகிய ஐந்து அனாமதேயங்களும் இந்த வழக்கில் சாட்சியங்களாக வந்து பொய்ச் சாட்சி சொன்னார்கள்[104]. முதுகளத்தூர் கமுதிக்குமாக அலைய வேண்டியிருந்ததால் அவர்களது தொழில் விவசாயம் போன்றவைகளும் பாதிக்கப்பட்டன. என்ன செய்வது....? ஒப்புக்கொண்டபடி சாட்சியம் சொல்ல வேண்டுமல்லவா? உரலில் கையை நுழைத்துவிட்டால் உலக்கைக்கு தப்ப முடியாதல்லவா?

சாட்சிகள் அப்படியே பொய்சாட்சியம் சொன்னார்கள். அரச மரத்தடியில் அமர்ந்து போதித்தவருக்கு ஞானோதயம் ஏற்பட்டது என்பது வரலாறு. மறவர்சீமை கண்மாய் கரையில் நிலைத்து நிற்கும் அரசு மரப் பொந்துகளில் வளர்ந்த கிளிக்குஞ்சுகள் கூட நன்கு பேசும் என்பது உண்மை அல்லவா? இத்தகைய அரசு மரக் கிளிகள் போல் சாட்சிகள், உதவி கலெக்டர் **மில்லர்** சொல்லிக் கொடுத்ததை அப்படியே சரியான வாக்குமூலங்களாக சொன்னார்கள். இதில் உதவி கலெக்டர் மில்லருக்கு மிகுந்த மகிழ்ச்சி நடுவர்கள் மயிலப்பனை குறுக்கு விசாரணை செய்யுமாறு பணித்தார்கள். அந்த கழிசடைகளை சிறிது நேரம் கூட ஏறிட்டுப் பார்ப்பதற்கு மனமில்லாத மயிலப்பன் சேர்வைக்காரர் நடுவரது சொல்லுக்குப் பதிலளிக்காமல் மௌனமாக இருந்தார்......

**பாளையங்கோட்டையின்** வாசல் முகப்பிற்கு நேர் எதிரில் உள்ள கோட்டைத் தளபதியின் அலுவலகக் கட்டிடத்தில் கும்பெனி வீரர்கள் நீண்ட கத்திகள் இணைத்த துப்பாக்கிகளைப் பிடித்தபடி பாதுகாப்புப் பணியில் வரிசையாக நின்று கொண்டிருந்தனர். கோட்டையின் பின் பகுதியில் உள்ள சிறைக்கூடத்தில் இருந்து

104. இந்த சாட்சிகள் வாக்குமூலத்துடன் அரசு தரப்பு விசாரணை முடிவுற்று மறுநாள் (12-06-1802) எதிரியின் தரப்புவிசாரணை தொடங்குவதாக அறிவிக்கப்பட்டது. மறுநாள் காலையில் வழக்குமன்றம் கூடிய பொழுது மயிலப்பன் சேர்வைக்காரர் மீதான குற்றச்சாடுகள் அவருக்கு வாசித்துக் காட்டப்பட்டு அவரது தரப்பில் சொல்ல வேண்டிய திருப்பின் சொல்லிக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது.

மயிலப்பன் சேர்வைக்காரரைக் கும்பெனி வீரர்கள் அழைத்து வந்தனர். வழக்கம்போல் அவரது இரு முன்கைகளும் சிறிய சங்கிலியினால் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டு இருந்தன. அவரது கால்களில் இரும்பு விலங்குகள் பூட்டப்பட்டு அந்த விலங்குகளில் இணைக்கப்பட்டிருந்த சங்கிலியின் மறு நுனி அவரது கழுத்தில் போடப்பட்டிருந்த இரும்பு வளையத்துடன் இணைக்கப்பட்டு சற்று தொய்வாக அவரது மார்பு, வயிற்றுக்கு நேரே தொங்கிக் கொண்டிருந்தது. அதாவது அவரது விலங்கு பூட்டப்பட்ட கால்களை மெதுவாக நகர்த்தி நடப்பதற்கு ஏதுவாக அந்தச் சங்கிலி தொங்கவிடப்பட்டிருந்தது.

சிறு குழந்தை தத்தி, தத்தித் நடந்து வருவது போல மயிலப்பன் சேர்வைக்காரர் மெதுவாக அந்த அலுவலகக் கட்டிடத்தின் கூடத்திற்கு வந்து சேர்ந்தார். சில நிமிடங்களில் கும்பெனி வீரர்கள் தங்களது துப்பாக்கிகளுடன் விறைப்பாக நின்று, அப்பொழுது அங்கு அந்த மூன்று ராணுவத் தளபதிகளுக்கு ராணுவ முறைப்படி மரியாதை செய்தனர். அவர்கள் அந்தக் கூடத்தின் நடுவில் போடப்பட்டு இருந்த இருக்கைகளில் அமர்ந்தவுடன் குற்றவாளிக் கூண்டில் மயிலப்பனை நிற்குமாறு செய்தனர்.

விசாரணை தொடங்கியது. இராமநாதபுரம் உதவிக் கலெக்டர் மில்லர் மயிலப்பன் சேர்வைக்காரர் மீதான குற்றச்சாட்டுகளை பட்டியலிட்டு நடுவர்களுக்குத் தெரிவித்தார். அடுத்து அந்தக் குற்றச்சாட்டுகளை மெய்ப்பித்துச் சொல்வதற்காக, கமுதி, முதுகளத்தூரைச் சேர்ந்த பொய்சாட்சிகள் வாக்குமூலம் வழங்குமாறு செய்தார்.

இந்த சாட்சிகளின் வாக்குமூலங்களை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த மயிலப்பன் அவர்களது வாக்குமூலங்களுக்கு எதிராக எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை. அடுத்து நடுவர்கள் மயிலப்பன் சேர்வைக்காரர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு உரிய

பதிலினைத் தெரிவிக்குமாறு பணித்தனர். சேர்வைக்காரரும் எவ்விதத் தயக்கமுமின்றி தனது வாக்கு மூலத்தை அளிக்கத் தொடங்கினார்.

## மயிலப்பன் சேர்வைக்காரரின் மரண வாக்குமூலம்

நானும் எனது தோழர் சிங்கன் செட்டியுடன் சேர்ந்து முதுகளத்தூர் கச்சேரியைத் தாக்கினோம். எங்களுக்கு உதவியாக ஒன்பது சேர்வைக்காரரும் முன்னூறு போர்களும் இந்தத் தாக்குதலில் கலந்து கொண்டனர். பிறகு நாங்கள் **அபிராமம்** கச்சேரிக்குச் சென்ற பொழுது அங்கிருந்த சிப்பாய்கள் எங்களைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். அவர்களிடமிருந்த துப்பாக்கிகளைப் பறித்தோம். அப்பொழுது ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். பிறகு நாங்கள் கமுதி சென்றோம். கச்சேரியின் காவலில் இருந்த சிப்பாய்களிடமிருந்த துப்பாக்கிகளைக் கைப்பற்றினோம். இந்த நிகழ்ச்சியின் பொழுது, எங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து எங்களுடன் மோதிய தாசில்தாரைப் பிடித்து அங்கு கட்டிப்போட்டோம். அவருக்காகப் பரிந்து வந்து எங்களுடன் மோதிய அவரது மருமகனுக்கு வயிற்றில் காயம் ஏற்பட்டது. நானும் அங்கிருந்தவர்களும், அவருடைய காயத்திற்கு மருந்து தடவி கட்டுப் போட்டு அவரது வீட்டிற்கு அனுப்பி வைத்தோம். பின்னர் அங்கு சேர்வைக்காரர்களும் தேவர்மார்களும் கொண்ட ஒரு பொதுக்கூட்டம் ஒன்றையும் நடத்தி நமது கிளர்ச்சியின் உள்ளார்ந்த நோக்கம் பற்றி அவர்களுக்கு விளக்கிச் சொன்னோம்.

இதற்கு முன்னர் **கமுதி** கச்சேரிக்கு அடுத்துள்ள பொட்டலில் சேகரம் பட்டறையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த கும்பெனியாரது தானியங்களைச் சூறைபோட்டோம். அனைத்து மக்களும் அதனை அள்ளிக்கொண்டு சென்றனர். இதனைபோலவே அன்று முற்பகலில் அபிராமம் சென்று இருந்தபொழுது அங்கிருந்த கும்பெனியாரது துணிக்கிடங்கையும் சூறையிட்டோம். கிளர்ச்சிக்காரர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்குத் தேவையான துணிகளையும் எடுத்துக்

கொண்டனர். நீங்களும் உங்களது கூலிப்படையினரும் முதுகளத்தூர் பகுதிக்கு இந்த கிளர்ச்சிகள் நடைபெற்ற பிறகு இருபத்தைந்து நாட்களுக்குப் பிறகுதான், வரமுடிந்தது. இடைப்பட்ட காலத்தில் எங்களது கிளர்ச்சி எல்லாத் திக்குகளிலும் பரவியது. 'புதுவெள்ளம் புகுந்தது போல' எங்களது திட்டம் சிறப்பாக குடிமக்களால் அப்படியே கைக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள பரங்கியரது சேகரம் பட்டறை, களஞ்சியம் மற்றும் அவர்களது பொருட்கள் அனைத்தும் கொள்ளையிடப்பட்டன.

மேலும் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் ஆற்காடு நவாப்பிடம் கும்பெனியாரும் இணைந்து இராமநாதபுரம் மீது படையெடுத்து பதினொன்று வயது சிறுவனான எங்களது சேதுபதி மன்னரைக் கைது செய்து ஒன்பதாண்டுகள் கழித்து விடுதலை செய்த பிறகு, மீண்டும் அவரைக் கைது செய்து சிறையில் அடைத்த பொழுது குடிமக்கள் எவ்வித எதிர்ப்பும் காண்பிக்கத் தவறியதற்கு எங்களிடம் தலைக்கு ஐந்து பணம் அபராதம் வசூலித்தனர். அத்தகைய நிலை ஏற்படுமோ என்ற அச்சமும் இருந்ததும் ஒரு வேளை எங்களது கிளர்ச்சியைக் கும்பெனியார் அடக்கி, அதன் காரணமாக சேதுபதி மன்னர் நாடு திரும்பாமல் போய் விட்டால் நாங்கள் என்ன செய்வது. பக்கத்துப் பாளையங்களுக்குள் புகுந்து மறைந்து விடுவது என்றும் அல்லது கிராமங்களை விட்டு வெளியேறி விடுவதென்றும் முடிவு செய்தோம்.

"அப்புறம் என்ன நடந்தது?"

கும்பெனியாரது நடுவர் மயிலப்பனைப் பார்த்து கேட்டார். "மயிலப்பன் சேர்வைக்காரரும் தமது வாக்குமூலத்தைத் தொடர்ந்தார்.

"சிவகெங்கைச் சேர்வைக்காரரது மகன் தலைமையில் சிவகங்கை அணி ஒன்றை அழைத்துக் கொண்டு இராமநாதபுரம் கலெக்டர் கமுதி வருவதாக தகவல் கிடைத்தது. இதைப்பற்றி நானும் மற்ற சேர்வைக்காரர்களும் கலந்து பேசினோம். அவர்களுடன்

பொருதுவதைத் தவிர்ப்பது என முடிவு செய்யப்பட்டது. சேர்வைக்காரர்களும், தேவர்மார்களும் கிராமங்களுக்குத் திரும்பிச் சென்றனர். நாங்கள் கமுதிக்கு வட கிழக்கே உள்ள கீழக்குளம் காட்டிற்குள் கூட்டாளிகளுடன் சென்றோம்.

ஆனால் விரைவில் கும்பெனி பட்டாளமும் சிவகங்கை சீமை சேவகர்களும் இந்தக் காட்டைச் சூழ்ந்து தாக்கினர். எங்களது கூட்டாளிகளில் முப்பதுபேர் கொல்லப்பட்டனர். அவர்களில் எங்களது சிங்கன்செட்டியும் ஒருவர். மேலும் நாற்பது பேர்களைச் சிறைப்பிடித்தனர். நானும், என்னுடன் எஞ்சியிருந்த முப்பது பேர்களும் கிழக்கே காக்கூர் நோக்கிச் சென்று விட்டோம். அப்பொழுது அங்கு கிடைத்த செய்தி கலெக்டர் கிளர்ச்சியில் ஈடுபட்ட அனைவருக்கும் பொதுமன்னிப்பை அளித்து விட்டதாகவும் ஆதலால் தங்களின் இயல்பான தொழில்முறைகளில் ஈடுபடலாம் என தெரிவித்திருப்பது தெரியவந்தது.

நானும் எனது கிராமத்திற்கு புறப்பட்டுச் செல்லும்போது வழியில் இளஞ்செம்பூர் பண்டாரத்தேவனைச் சந்தித்தேன். அவர் சொன்னார். கலெக்டர் ஒரு பிரகடனம் வெளியிட்டு இருப்பதாகவும் அதில் கிளர்ச்சியில் ஈடுபட்ட அனைத்துக் குடிமக்களுக்கும் என்னைத் தவிர பொதுமன்னிப்பு வழங்குவதாகவும் தெரிவித்தார். இந்த நிலையில் பத்திரமாக ஊர் திரும்ப முடியாது என்பதை உணர்ந்த நான் காடல்குடிக்கும் பின்னர் பிள்ளையார் குளத்திற்கும் சென்றேன். மீண்டும் காடல்குடி சாலைவழியாக வெள்ளக்கோயிலுக்கும் மண்டலமாணிக்கத்திற்கும் சென்றேன். அங்கு ஆறு நாட்களை கழித்துவிட்டு ஆடுமேய்க்கும் இடையரது மாற்று உடையில் கமுதியைச் சுற்றிக் கொண்டு நெட்டூருக்கும் பின்னர் தொண்டி வழியாக சோழ சீமைக்கும் சென்றேன். வெள்ளாண்குண்டு கிராமத்தில் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் தங்கியிருந்து விவசாயக் கூலியாக வேலைபார்த்து வாழ்ந்து வந்தேன்.

இவைகளைச் சிரத்தையுடன் கேட்டு மயிலப்பன் சேர்வைக்காரரது வாக்குமூலத்தைக் காகிதத்தில் பதிவு செய்து கொண்டு வந்த நீதிபதியான ராணுவத் தளபதி "மிகவும் சுவாரசியமாக இருக்கிறது" என்று சொல்லிவிட்டு தனது இருக்கையை விட்டு எழுந்தார்.

மதிய உணவு வேளை கடந்துவிட்டதால் விசாரணையை அடுத்த நாளைக்கு ஒத்தி போட்டு உத்தரவிட்டார்.

"அங்கு நான் வாழ்ந்த வாழ்க்கை எனக்கு சலிப்பூட்டியது. எனது எண்ணங்கள் எப்பொழுதும் முதுகளத்தூர் பகுதியிலேயே சுழன்று கொண்டிருந்தது. ஒருநாள் வெள்ளான்குண்டு கிராமத்தை விட்டு ஊருக்குப் புறப்பட்டேன் வழியில் சிவகங்கைச் சீமையில் உள்ள நெட்டூரில் தங்கினேன். நான் அங்கு வந்து இருப்பதை அடைப்பசேர்வைக்காரர் மூலம் அறிந்த வெள்ளை மருது எனக்குச் செய்தி அனுப்பி வைத்தார். தொடர்ந்து தங்கி இருக்குமாறும் எனது சாப்பாட்டிற்கு பத்து கலம் நெல்லும் அனுப்பி வைத்தார். பின்னர் அவர் என்னை சூடியூர் சத்திரத்தில் சந்தித்தார். அமைதியாக அங்கு தங்கியிருக்குமாறு சொன்னதுடன் எனது நடவடிக்கைகளை ஊக்குவித்து உற்சாகப்படுத்தினர். ஜூலை 1799 முதல் பாஞ்சாலங்குறிச்சி கிளர்ச்சிகள் தொடங்கும் வரை அங்கு தங்கியிருந்தேன். பாஞ்சாலக்குறிச்சியிலிருந்து ஒரு அதிகாரியும் ஒரு ராஜகுடும்பத்தினரும் வந்து சந்தித்தனர். பின்னர் கட்டபொம்மநாயக்கரது பாளையத்தில் உள்ள நாகராஜமணியக்காரரும் வந்து சந்தித்தார். அவர்களைச் சிவகங்கைச் சேர்வைக்காரர் வெள்ளை மருதுவின் வக்கீலாக அவரது மகன் உடையணன் வந்து சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பினைத் தொடர்ந்து வெள்ளை மருது சேர்வைக்காரர் சிவத்த தம்பி வசம் நூறு வீரர்களை அனுப்பி வைத்தனர். ஆயுதபாணிகளான அவர்களிடம் பதினைந்து மஸ்கட் துப்பாக்கி,

எண்பத்து ஐந்து ஈட்டிகள் இருந்தன. அத்துடன் பத்து எறி ஈட்டிகளும், இருபது ஈட்டிகளும், இருபத்து ஒரு பொதி வெடிமருந்தும், பதினாயிரம் தோட்டாக்களும் அவர்களுடன் பாஞ்சாலங்குறிச்சிக்கு அனுப்பப்பட்டன. நானும் உடன் சென்றேன். வெள்ளை மருதுசேர்வைக்காரர் கட்டளைப்படி இந்த அணிக்கு அவரது மருமகன் **ஆளஞ்சாத்தேவர்** தலைமை ஏற்று வந்தார். சிவத்த தம்பியுடன் அடைப்பம் **பிச்சணன்** சேர்வையும் உடன் வந்தார். எங்களுக்கு **கட்டபொம்மு நாயக்கர்** அன்பளிப்பு வழங்கிச் சிறப்புச் செய்தார். எனக்கும் பட்டுத்துண்டும் பொன்னாலான இருகாப்புகளும், பொன்னாலான ஒரு கழுத்துச் சங்கிலியும், ஒரு குதிரையும் கொடுத்தார். பிறகு இருநூறு ஆட்களை என்னுடன் அனுப்பி வைத்து **இராமநாதபுரம்** சீமையில் கும்பெனியாருக்கு எதிராக கிளர்ச்சிகளை முடுக்கிவிடுமாறு சொன்னார். அவர்களில் நூறுபேர் சிவகங்கையைச் சேர்ந்தவர்கள். ஐம்பதுபேர் **காடல்குடி பாளையத்துக்காரர்கள்** ஐம்பது பேர் **பாஞ்சாலக்குறிச்சியார்**. நாங்கள் **கமுதிக்குச்** சென்றோம். கடைவீதியைச் சூறையாடினோம். பிறகு **அபிராமம்** சென்றோம். **காதர்மீரான்** அம்பலத்தைத் தேடி ஏற்கனவே இவர் **கிருதுமால்** நதிப்போக்கு தடைப்படுத்தப்பட்டதை கலெக்டருக்கு தகவல் கொடுத்ததற்காக **சின்னமருது சேர்வைக்காரரும் சிவத்த தம்பியும்** அவரைக் கொன்று போட வேண்டும் என ஆணைபிறப்பித்து இருந்தனர். அவர் பிடிக்கப்பட்டார். அவரை கொல்வதற்கு முயன்றனர். நான் தலையிட்டு, அவரை விடுவிக்குமாறு செய்தேன். சின்னமருது சேர்வைக்காரருக்கு என்மீது மிகுந்த கோபம் ஏற்பட்டது. என்னைக் கொன்றுவிடும்படி சொல்லிவிட்டார். அவரது கட்டளைப்படி அம்பலக்காரரை கொல்லாமல் விட்டதும் **அபிராமத்தைத்** தீயிட்டு கொளுத்துவதற்கு நான் உடன்பட்டு உதவவில்லையென்பதும் இதற்குரிய காரணமாகும்.

நாங்கள் அடுத்து **கொடுமலூர்** சென்றோம். அங்குள்ள கும்பெனியாரது சேகரம்பட்டறையில் உள்ள நெல்லை சூறையாடினோம். அங்கேயே சமையலுக்கும் ஏற்பாடு செய்துவிட்டு

அன்று தங்கினோம். அடுத்தநாள் காலையில், **தளபதி மில்லர்** மறவர் பட்டாளத்துடன் **நாகலாபுரத்தில்** இருந்து **கமுதி** வந்து சேர்ந்து இருப்பதாகத் தகவல் கிடைத்தது. அடுத்து அவர் கொடுமலூர் வருவது உறுதியானதால் நாங்கள் சிவகங்கைச் சீமையைச் சேர்ந்த புதுக்குடிக்கு போய்விட்டோம். அங்கிருந்து ஆனந்தூருக்குச் சென்றேன். இராமநாதபுரம் சீமையின் வடக்குப் பகுதிகளில் கிளர்ச்சிகளைத் தூண்டிவிடுவதற்காக.

நான் **ஆனந்தூரில்** இருக்கும்பொழுது எனக்கு **சின்னமருது** சேர்வைக்காரர் கட்டளை அனுப்பி இருந்தார். பத்துநாட்களில் அந்தப் பகுதியில் கிளர்ச்சிகளைத் தூண்டிவிட்டு மக்களைத் திரட்டுமாறும் அந்தப் பகுதியில் இருபது நாட்கள் இருந்தபொழுது எனக்கு உடல் அசௌகரியம் ஏற்பட்டது. அப்பொழுது **புளியால்** கிராமத்தில் இருந்தேன். உடல்நிலை சீரடைய மூன்று மாதங்களாகி விட்டன. அப்பொழுது சிவகங்கை சேர்வைக்காரரிடமிருந்து செய்தி வந்தது. இராமநாதபுரம் சேதுபதி பட்டத்திற்கு உரிமை கொண்டாடும் **மீனங்குடி முத்துக்கருப்பத் தேவர்** கமுதிக் கோட்டைப் போரில் ஈடுபட்டு இருப்பதாகவும் அவருக்கு உதவியாக அங்கே போக வேண்டும் என நானும் **வெள்ளைமருது சேர்வைக்காரரும் கமுதிக்** கோட்டைக்குச் சென்று அவரைச் சந்தித்தோம். எனது செலவினங்களுக்கு மீனங்குடித்தேவர் பணம் கொடுத்தார். என்னுடன் பத்து வீரர்களை அனுப்பி எங்களை கீழக்கரைக்குச் சென்று அப்துல்காதர் மரக்காயர் மற்றும் சில வியாபாரிகளைப் பிடித்து வருமாறும் அந்த ஊரைக் கொள்ளையிடுமாறும் வெள்ளை மருது ஆணையிட்டார். நாங்கள் கீழக்கரை சென்றோம். ஆனால் அந்த நபர்களைப் பிடிக்க முடியவில்லை. அவர்கள் அப்பொழுது அங்கு இல்லை. அவர்களது உறவினர் சிலரையும் பிடித்துக் கொண்டு **கமுதி** திரும்பினோம்.

அந்தச் சூழ்நிலையில் வெள்ளை மருது சேர்வைக்காரருக்கு

கிடைத்த தகவல் கும்பெனி **தளபதி அக்கினியூ** பட்டாளத்துடன் வருவதாக இருப்பதால் உடனே சின்னமருது திரும்பி வரவேண்டும், என்பது உடனே சின்னமருது சேர்வைக்காரரும், மீனங்குடி தேவரும் சிலருடன் வெள்ளை மருதுவைச் சந்திக்க **முத்தூர்** புறப்பட்டுச் சென்றனர்.

எனது உறவினர் ஒருவரது இறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள **சித்திரங்குடி** சென்று வந்தேன். கும்பெனி பட்டாளம் **தளபதி பீட்டர்** தலைமையில் **கமுதி** வந்து கொண்டு இருப்பதாகச் செய்தி கேட்டு திரும்பினேன். **முத்துக்கருப்பத் தேவருடன்** சேர்ந்து கொண்டேன். **அபிராமத்தை** அடுத்து **சின்னமருது சேர்வைக்காரரை** சந்திக்க மீனங்குடித்தேவர் **காளையார்கோவில்** சென்றுவிட்டதால் நான் இருபத்தைந்து நாட்கள் **மீனங்குடியில் முத்துக்கருப்பத்தேவரது** சகோதரருடன் தங்கி இருந்தேன். சிவகங்கையில் இருந்து செய்திகளை எதிர்பார்த்து கடைசியாக காளையார்கோவில் கோட்டைப் போரில் தோல்வி பற்றிய செய்தி கிடைத்தது. அதற்குப் பிறகு அங்கிருந்து புறப்பட்டேன். பல இடங்களிலும் தலைமறைவாகச் சுற்றி வந்தேன். எந்த ஊரிலும் தங்க இயலாத சூழ்நிலையில் முதுகளத்தூர், **அபிராமம், பாப்பான்குளம்** பகுதிகளில் எனக்கு சோர்வும் சலிப்பும் மிகுதியாகிவிட்டது. அடுத்தடுத்து ஏமாற்றங்கள் எனது நம்பிக்கைகளை மன உறுதியைக் குலைத்துவிட்டன. கும்பெனியாரது ஆயுத வலிமையும், குள்ளநரித்துரோகமும் மக்களைப் பிரித்துக் கிளர்ச்சியை நசுக்கி என்னைத் தனிமைப்படுத்தி விட்டபிறகு, நான் மட்டும் ஊர் ஊராக அலைந்து திரிவதனால் ஏற்படப்போவது ஒன்றுமில்லை. கலெக்டரையோ அல்லது அமில்தாரையோ என்னிடத்தில் உள்ள பொருட்களுடன் சந்தித்து நிலைமையை எடுத்துக்கூறினால் என்ன என்று யோசித்தேன். எதற்கும் வீட்டிற்குச் சென்று மனைவி, மாமனாருடன் கலந்து ஆலோசித்து முடிவு செய்யலாம் என **சித்திரங்குடி** சென்றேன்.

இந்தச் சமயத்தில் விசாரணை நடுவராக இருந்த

வெள்ளைத்தளபதி ஒருவர் **சித்திரங்குடி** சேர்வைக்காரரிடம் ஒரு கேள்வி கேட்டார்.

"இதுவரை நீர் சொல்லிய விவரங்களில் இருந்து நீர் கடமைப்பற்றும், பொறுப்பும் உள்ள பிரஜையாக இல்லாமல் எவ்வித சொந்த பாதிப்பும் இல்லாத வகையில் எப்பொழுதும் மக்களைத் தூண்டிவிட்டு கும்பெனி அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியில் முனைந்து நின்று மக்களிடம் அலுவலர்களுக்கு எதிராக வெறுப்பை வளர்த்து வந்துள்ளீர். இதற்கு விளக்கம் சொல்ல முடியுமா?

**சித்திரங்குடி சேர்வைக்காரர்** சிறை வாழ்க்கையின் காரணமாக மிகுந்த பலவீனமுற்று இருந்தார். அடுத்து தமது கடந்தகால நிகழ்ச்சிகளை, நினைவுபடுத்தி வாக்குமூலம் வழங்கும்போது, அவரது உள்ளம் அந்த நிகழ்ச்சிகள் பற்றிய நினைவினால் மேலும் பாதிக்கப்பட்டு மிகுந்த சோர்வுடன் காணப்பட்டார் என்றாலும் சில வினாடிகளில் தமது சோர்வு, களைப்பு ஆகியவைகளைப் புறக்கணித்து மீண்டும் புதிய தெம்புடன் பதில் அளித்தார்.

"நான் செல்வாக்குள்ள பாளையக்காரர்கள் அல்ல. மக்களது புரட்சிக்கு தலைமை தாங்கக்கூடிய தகுதி எனக்கு இல்லை. நான் ஒரு விவசாயிதான். தன்னுடைய தலைவரது கட்டளைக்குப் பணிந்து செயல்படுவது ஒரு போர் வீரனது கடமையாதலால் தாம் அந்தச் சூழ்நிலையில் செயல்பட்டதாகவும், கடமையை நிறைவேற்றியதற்குத் தண்டனை என்றால் அது தனது விதிவசம் என்று ஏற்றுக் கொள்வதாகக் குறிப்பிட்டார்.[104A]

மேலும், மயிலப்பன் சேர்வைக்காரரது வாக்குமூலத்தை கேட்பதற்கு பொறுமை இல்லாத கும்பெனி நடுவர் ஒருவர், அவரை இடைமறித்து கேள்வியொன்றைக் கேட்டார்.

104 A. Military Consultations Vol.299 (14-06-1802)P.P.4425-26

"உம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மறுத்து உமது தரப்பில் சொல்லிக்கொள்ள ஏதேனும் விரும்புகிறீரா?

மயிலப்பன் சேர்வைக்காரர் "ஏதும் இல்லை" என பதில் அளித்தது கும்பெனியாரது இந்த நீதி விசாரணை என்ற நாடகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

"தீர்ப்புரை ஒருவாரத்தில் வழங்கப்படும்" என நீதி மன்றத் தலைமை நடுவர் சொன்னதுடன், அன்றைய விசாரணை முடிவுபெற்று, நடுவர்கள் மூவரும் எழுந்து அவர்களது அறைக்குச் சென்றனர்.

## ஒருவாரம் கழிந்தது, ஒரு நாள் காலையில்

நடுவர்களான ராணுவத் தளபதிகள் மூவரும் அங்கிருந்த ராணுவ வீரர்களை மரியாதையை ஏற்றுக் கொண்டவர்களாக விசாரணை இருந்த இருக்கைகளில் அமர்ந்தனர். ஒருமுறை அவர்களது கடைக்கண் பார்வை மயிலப்பன் சேர்வைக்காரர் மீது பட்டுத் திரும்பியது. மயிலப்பன் முகத்தில் எவ்வித மாற்றமும் இல்லாமல் அவர்களைக் கூர்ந்து பார்த்தவாறு நின்று கொண்டு இருந்தார். நடுவர்களில் ஒருவர் ஒரு கோப்பு ஒன்றை மற்ற இருவர்களுக்கும் படிக்குமாறு கொடுத்தார். அதனை முழுவதுமாகப் படித்து முடித்த இருவரும் அவர்களது ஒப்புதலை தெரிவிக்கும் வகையில் அந்தக் கோப்பில் கையெழுத்துப் போட்டுவிட்டு, தலைமை நடுவரான தளபதி பர்ரோஷிடம் கொடுத்தனர். அவரும் அந்தக் கோப்பில் கையெழுத்திட்டார். பின்னர் ஆங்கிலத்தில் வரையப்பட்டு இருந்த அந்த தீர்ப்புரையைப் படித்தார். அந்தத் தீர்ப்புரையின் தமிழ் சுருக்கம்.

“விசாரணைக் கைதியாக எங்கள் முன் நிறுத்தப்பட்டுள்ள இராமநாதபுரம் சீமையைச் சேர்ந்த **சித்திரங்குடி மயிலப்பன் சேர்வைக்காரர்** கடந்த 24.4.1799ந் தேதி முதல் முதுகளத்தூர், கமுதி வட்டாரங்களில் நமது

சர்க்கார் கச்சேரிகள், தானியக் களஞ்சியங்கள் சேகரம் பட்டறை கைத்தறித் துணி கிட்டங்கிகளை எவ்விதம் காரணமும் இல்லாமல், அவருக்குச் சொந்த பாதிப்பும் இல்லாத நிலையில், அவரும் அவரது தோழர்களும் அவைகளைத் தாக்கிக் கொள்ளையிட்டும், தீவைத்துக் கொளுத்தியும், சர்க்காருக்கும் பொதுமக்களுக்கும் ஏராளமான இழப்பீடுகளுகளை ஏற்படுத்தி உள்ளனர். மற்றும் சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்டச் சென்ற கும்பெனியாரது வீரர்களை எதிர்த்துப் போரிட்டும் உயிர்ச் சேதமும் ஏற்படுத்தியுள்ளார்கள். இவரது அத்துமீறிய அராஜகச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், இந்த நாட்டில் நீதியையும், தர்மத்தையும் நிலை நிறுத்துவதற்காகவும், நமது கும்பெனி அரசாங்கம் இந்தக் கொடிய அரசாங்க விரோதிக்கு மரண தண்டனை வழங்கி தூக்கில் போடும்படி உத்திரவிடுகிறது.

மதராஸ் மாநில கவர்னரது ஒப்பம் பெற்று, விரைவில் இந்த தண்டனை நிறைவேற்றப்படும்.

கும்பெனி அரசாங்கத்திற்காக நடுவர்கள்:

**தளபதி பர்ரோஷ்**

**தளபதி ஓஹாரா டிராட்டர்**

**தளபதி நோயில்ஸ்**

நடுவர் குழுத்தலைவர் ஆங்கிலத்தில் வரையப்பட்டு வாசிக்கப்பெற்ற இந்த தீர்ப்புரையின் சுருக்கத்தை கும்பெனி அலுவலரான **துபாஷ்** ஒருவர் மேலேகண்டவாறு தமிழில் உரக்கச் சொன்னார். தனது மரண தண்டனை பற்றிய இந்த தீர்ப்புரையைக் கேட்ட மயிலப்பன் சேர்வைக்காரரது தோற்றத்தில் முகபாவத்தில் எவ்வித மாற்றமும் தென்படவில்லை. இதனை நடுவர்களும் புரிந்து கொண்டு இருக்க வேண்டும். இந்த மரணச்சீட்டு சம்பந்தமான

ஆவணங்களிலும் கையெழுத்திட்ட நடுவர்கள் தங்களது இருக்கைகளில் இருந்து எழுந்து வெளியே சென்றனர். கும்பெனியாரின் இந்தக் கபட நாடகம் இப்பொழுதாவது முடிந்ததே என்ற மனநிறைவு **மயிலப்பன் சேர்வைக்காரருக்கு** ஏற்பட்டு இருக்க வேண்டும். எப்பொழுதும் தனது கைகளையும், கால்களையும் அழுத்தி, இரவும் பகலும் இடர்ப்பாடுகளை ஏற்படுத்தி வந்த சிறை வாசத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டதல்லவா? ஆனால், இந்த கும்பெனியாரது சட்டமும், நீதியும் இடத்திற்கு இடம் மாறுபடும் போல் அல்லவா தோன்றுகிறது!

**புதுக்கோட்டைக்காளாப்பூர் காட்டில்** கைது செய்யப்பட்ட **பாஞ்சாலக்குறிச்சி** பாளையக்காரர் வீரபாண்டிய கட்டபொம்மனைக் **கயத்தாற்றிக்கு** கொண்டு வந்து, **திருநெல்வேலிச் சீமை** பாளையக்காரர்களது முன்னிலையில் அரை மணி நேரம் "நீதி விசாரணை" என்ற நாடகத்தை நடத்தி அப்பொழுதே (15.10.1798) அவரை அங்கு தூக்கில் இட்டுக் கொன்று ஆங்கிலேயரது சட்டத்தையும் நீதியையும் நிலை நிறுத்தினானே **தளபதி பானர்மேன்.**

**காளையார்கோவில்** கோட்டைப் போரில் வெற்றிபெற்ற கும்பெனியார் சிவகெங்கைச் சீமை பிரதானிகளான மருது பாண்டியர்களை **ஒக்கூர்** காட்டில் துரத்திப் பிடித்து அவர்களை மூன்றே நாட்களில் **திருப்பத்தூர் கோட்டையில்** 24.10.1801ல் தூக்கில் ஏற்றி மகிழ்ந்தான் **தளபதி அக்கினியூ.**

இவர்களுக்கெல்லாம் முன்னதாக 7.2.1795ல் சூழ்ச்சியினால் **இராமநாதபுரம்** அரண்மனையைக் கைப்பற்றி, கும்பெனியாரது பரமவிரோதியான இராமநாதபுரம் **முத்துராமலிங்க சேதுபதி** மன்னரைக் கைது செய்து, அவரைப் பதவி நீக்கம் செய்து இராமநாதபுர சமஸ்தானத்தை கும்பெனியாரது உடமையாக்கி, அந்த மன்னனைச் சிறையிலிட்டு, விசாரணை எதுவும் இல்லாமல் சென்னைக் கோட்டையில் அடைந்து வைத்து வேதனைப்படுத்தி வருகின்றனர்

அல்லவா[105]

இந்த நிகழ்வுகளுக்குப் பின்னரும், விடுதலைக்குப் போராடிய நாட்டுப் பற்றாளர்களது உயிரைப் பலிகொண்ட கும்பெனியாரது அட்டூழியங்கள், செய்கைகள் செய்திகளாகவே அமைந்து காணப்படுகின்றன.

இந்தச் செய்கைக்கள் கும்பெனியாரது நீதியும் சட்டமும் ஊருக்கு, ஊர் ஆளுக்கு ஆள் வேறுபடுவது ஏன்? அவர்களது நீதியும் சட்டமும் இடத்திற்கு, இடம் மாறுபடுவதில் இருந்து அவர்களது நீதி விசாரணையும், சட்டமும் சூழ்நிலைகளுக்கு ஏற்றாற்போல் அப்போதைக்கப்பொழுது அந்த மக்களை ஏமாற்றுவதற்காக கையாண்ட பிரம்மாஸ்திரம் என்பதைத்தான் வரலாறு விளக்குகிறது. விளக்கமாக இருக்கிறது.

மயிலப்பன் சேர்வைக்காரரரைப் பொறுத்த வரையில், இது எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆறுமாதங்களுக்கு முன்னர் சித்திரங்குடியில், அவரைத் துரோகிகள், எதிர்பாராத நிலையில் தாக்கி மலைக்கழுகு ஆட்டுக்குட்டியைத் தனது வலிய கால்களாலும் அவைகளில் உள்ள கூர்மையான நகங்களினாலும் குத்தி, அழுத்தி தூக்கிச் செல்வது போல, குண்டுக்கட்டாகப் பிணித்து, சிக்கல் அமில்தாரிடம் ஒப்படைத்தபொழுதே தனது வீரவாழ்க்கையை ராஜவிசுவாசப் பணியை, நாட்டு விடுதலைக்கான பல போராட்டங்களில், அழிந்துவிடாத அவரது உடலும், உயிரும் மாய்ந்து 3மாதம் முற்றுப்பெறும் தருணம் வந்து விட்டது என்றே முடிவு செய்தார். அவரது கைகளையும், கால்களையும் ஒருமுறை உற்று நோக்கினார். எஃகினைப் போன்ற உறுதியும், ஆற்றலும் இன்னும் இருக்கிறது. அவரது உள்ளத்திலும் உயர்ந்து வளர்ந்து நின்ற ராஜ விசுவாசத்திலும் நாட்டுப்பற்றிலும், எவ்விதக் குறைபாடும் இல்லை....... அப்புறம் எண்ணியது ஏன் நடக்கவில்லை? அது...... அது...... காலத்தின் கருவிலே கனியாத கனி! அதுதான் விதி

105. இந்த மன்னர் சென்னைக் கோட்டையிலேயே இருபத்தி நான்கு ஆண்டு கால சிறை வாழ்க்கையில் மரணமடைந்து வீரத் தியாகியானார்.

எனப்படுவதா? அதனை இன்றுதான் கும்பெனியார் அதிகாரப் பூர்வமாக அறிவித்து உறுதிப்படுத்தி விட்டனர். எப்படியும், இன்னும் இரு வாரங்களுக்குள் சென்னையில் இருந்து கும்பெனி கவர்னரது ஒப்புதல் உத்திரவு வந்துவிடும் என்பது உறுதி.

விசாரணை மன்றத்தில் இருந்து திரும்ப அழைத்து வரப்பெற்று சிறைக்கூடத்தில் அடைக்கப்பெற்ற **மயிலப்பன் சேர்வைக்காரர்** சிந்தனையில் சிலிர்த்து நின்ற எண்ணங்கள். எவ்விதக் குழப்பங்கள் இல்லாத தெளிவான கருத்துக்கள்.

இந்தக் கருத்தோட்டத்தில் அவரை அழுத்தி வந்தது ஒரே ஒரு குறை மட்டும்தான். அதாவது அவரது ஆழ்ந்த ராஜவிசுவாசத்திற்கும், மரியாதைக்குரிய **முத்துராமலிங்க சேதுபதி** மன்னரை மீண்டும் சந்திக்க முடியாமல் இறந்துவிடப் போகிறோமே என்ற ஒரே கவலைதான். அந்த வாய்ப்பு கிடைக்குமானால், வரலாற்றுப் புகழ்மிக்க சேதுநாட்டை இராமபிரானது பாதுகைகளை வைத்து வழிபாடு செய்து அயோத்தியை ஆட்சி செய்த பரதனைப்போல, புனித வாழ்க்கையை மேற்கொண்டு ஆட்சி செய்த மரபினரது புனித பூமியை, வல்லூறுக் கூட்டங்கள் போல வந்து தங்களை வெடிமருந்து ஆயுத வலிமையினால் ஆக்கிரமித்துள்ள வெள்ளைப் பரங்கிகளை, வேரோடு கிள்ளி எறிவதற்கு முயன்று வந்த வேளையில் இந்த மரணம் வந்துவிட்டது என்பதை மட்டும் அவரிடம் வேதனையுடன் தெரிவித்து விட்டிருப்பேன்.

பிறந்த மண்ணையும் அந்த மண்ணின் மகிமையையும் போற்றிக் காக்கும் இந்தப் புனிதப் போரில் இரண்டு ஆண்டுகளாக மறவர் சீமையின் மூலை முடுக்களில் எல்லாம் நூற்றுக்கணக்கான வீர இளைஞர்களைக் காவு கொண்ட சுதந்திர பலிபீடத்தில் அவர்கள் கொட்டிய குருதி இன்னும் உறைந்து கிடக்கிறது. காய்ந்து மறைந்து விடவில்லை. அந்தப் போருக்கு இன்னும் முடிவு ஏற்படவில்லை.

மன்னரது விடுதலைக்காகப் போராடிய நாட்டுப் பற்றுள்ள மக்கள் இன்னும் ஓய்ந்து விடவில்லை. ஆனால் இதற்குள்ளாக இந்த அடிமைக்கு முடிவு வந்துவிட்டதே என்பது எனது கவலை என்பதை மன்னரிடம் தெரிவித்துவிட்டால் நிம்மதியுடன் செத்து விடுவேன்.....

இத்தகைய எண்ணச் சுழல்கள், அவரது இதயத்தில் இருள்போல கவிழ்ந்து கொண்டிருந்தது. துப்பாக்கி வேட்டுக்களை மக்கள் ஆரவாரம், போர்க்குரல் அவரது செவிகளில் மென்மையாக ஒலித்துக் கொண்டிருந்தன. சோர்வும், களைப்பும் அவரை உறக்கத்தில் சொக்க வைத்தது. எத்தனையோ நாட்கள் - இரவிலும், பகலிலும் கிட்டதாத உறக்கம்! நீண்ட உறக்கம்.

இது என்ன பெருங்கூட்டம். இது இராமநாதபுரம் அரண்மனை வளாகம் அல்லவா? சேதுபதி மன்னர் கொலுவீற்று இருக்கும் அரசன் மண்டபம் **இராமலிங்க விலாசம்** அரண்மனையேதான். தசரா திருவிழாக் காட்சிபோல் அல்லவா தெரிகிறது. அரண்மனை வாசலில் வாழை மரங்கள் இருபுறமும் நிறுத்தப்பட்டு இருப்பதுடன் தென்னை, பனை, தாழைக்காய் குலைகளுடன் மங்களகரமான காட்சி அளிக்கிறது.

இராமலிங்க விலாசத்தின் உள்ளும், புறமும் கூடியுள்ள மக்களது முகங்களில் வெள்ளைத்தனைய மகிழ்ச்சிப் பெருக்கு, ஆசார வாசலில் இருந்து கொலு மண்டபம் வரை விரிக்கப்பட்டுள்ள சிவப்புக் கம்பளத்தின் இருமருங்கிலும் சமஸ்த்தான அலுவலர்களும் சேவகர்களும், வரிசையாக சீருடைகளில் நிற்கின்றனர். அவர்கள் யாருடைய வருகையையோ ஆவலுடன் எதிர்பார்த்து நிற்பதாகத் தோன்றுகிறதே. அவர் யாராக இருக்கும்?

அதோ எதிர்பார்க்கப்பட்டவர் வருகிறார். ஒரே பரபரப்பு. அரண்மனை நாதசுரக் குழுவின் மங்கல இசை. இராமநாதபுரம் சொக்கநாதர் கோயில் தேவதாசிகள் சதிராடிய வண்ணம், ரோஜா மலர்

இதழ்களைச் சொரிந்து வரவேற்றவண்ணம் முன்னே வருகின்றனர். அவர்களை அடுத்து கட்டியக்காரர்கள் சீருடையில், கையில் பொன்னாலான தடிகளைப் பிடித்தவாறு சேதுபதி மன்னரது விருதாவளிகளை உரக்கச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

இந்த அற்புதக் காட்சியைக் கண்டு களிப்பதற்காகத்தானே இத்தனை ஆண்டுகளுக்கும் மக்களைத் திரட்டி கும்பெனியாருடன் மோதலில் ஈடுபட்டு வந்தது. விதந்தரு கோடி இன்னல் விழைந்து எம்மை வாட்டி வருத்தியது. எனது முயற்சிகள் போராட்டங்கள் - விழலுக்கு இறைத்த நீராகிவிட்டதே என்று நொந்து கொண்டிருக்கும்பொழுது எனது கனவுகள் - நம்பிக்கைகள் மெய்யாகிவிட்டன! இறுதியில் கும்பெனியாருக்கு நல்ல புத்தி வந்து இருக்கிறது.

இதோ சேதுபதி மன்னர் அரசவையில் மக்களது ஆரவாரம் பண்டிதர்களது வேத கோஷங்களுக்கிடையில் அமர்ந்தார். அரச குடும்பத்தினர் ஒவ்வொருவராக வந்து மன்னரை சாஷ்டாங்கமாக தரையில் விழுந்து வணங்கி எழுந்து நிற்கின்றனர். அடுத்து முதுகளத்தூர், கமுதி வட்டார நாட்டுத்தலைவர்கள். அதோ மீனங்குடி முத்துக்கருப்புத் தேவர் கூட வந்து இருக்கிறார். அடுத்து மன்னர் அங்கும், இங்கும் பார்த்து பிரதானியாரிடம் யாரைப் பற்றியோ விசாரிக்கின்றார். ஒரு வேளை......... என்னைப் பற்றிக் கேட்டிருப்பாரோ! என்ன? நாமும் சென்று மன்னரைச் சேவித்தால் என்ன? என்னால் முடியவில்லையே? ஏன்? என்ன காரணம்?........

"மயிலப்பன் சேர்வைக்காரரே!" என்று அழைப்பது கேட்டது கண்களை நன்கு விழித்துப் பார்த்தார். சிறை அலுவலர்தான் நின்று கொண்டு "அபிராமம் புறப்பட வேண்டும்" என்று சொல்லி கை விலங்குகளை மட்டும் கழற்றி விட்டார். இராமநாதபுரம் அரண்மனை சேதுபதி மன்னர் - அனைத்தும். ஆம்! அனைத்தும் கனவு. சேர்வைக்காரருக்கு ஏமாற்றம் சோர்வு!

பிறந்த மண்ணைப் பெரிதும் நேசித்தவர்கள் புழு, பூச்சிகள் போல உணர்ச்சிகளையும், உள்ளத்தில் ஆசைகளையும் அடக்கியவாறு ஊமைகளைப் போல வாழும் அப்பாவி மக்களுக்காக பரிந்து உழைத்தவர்கள், இன்னும் பிறவியின் பெரும் பயனாக அன்பு, பாசமும் கொண்டு அந்தப் பாமர மக்களுக்காகப் போராடியவர்கள் மாய்க்கப் பெற்றனர். அல்லது மடிந்து விழும்படி செய்யப்பட்டனர்.

**மதுரை** ஆளுநராகப் பதவியேற்று மதுரைச் சீமை நிர்வாகத்திற்கும் மக்களுக்கும் பல அரிய தொண்டுகளைச் செய்த மாவீரன் **கம்மந்தான் கான்சாகிப்**, நன்றி உணர்வில்லாத நவாப் **முகம்மது அலியின்** ஆணையின்படி வெள்ளையர்கள் வஞ்சகமாக அவரைப் பிடித்து 16.10.1764ல் மதுரையில் தூக்கில் தொங்கவிட்டனர்.

தங்களது ஆணைக்குக் கீழ்படியாமலும் கப்பத் தொகையைச் செலுத்தாத பாஞ்சைப் பாளையக்காரர் **வீரபாண்டி கட்டபொம்மனையும்** கயத்தாறு தூக்கு மரத்தில் ஏற்றி அவரது கடை மூச்சைக் குடித்தனர்.

ஆங்கிலேயரின் சிம்ம சொப்பனமாக விளங்கிய மைசூர் மன்னர் திப்பு சுல்த்தானுடன் மூன்றாவது மைசூர் போரில் சமரச உடன்படிக்கை செய்து கொண்டிருந்த பொழுதும், கைக்கூலிகளின் உதவி கொண்டு திடீரெனத் தாக்கி ஸ்ரீரங்கபட்டணம் கோட்டைப் போரில் 4.5.1799 தேதியன்று கொன்றனர்.

மன்னர் திப்பு சுல்த்தானது தியாக வாழ்வு வீணாகிவிடக்கூடாது என்பதற்காக கர்நாடக மக்களைத் திரட்டி, கர்நாடக மாநிலத்திலிருந்து ஆக்கிரமிப்பாளர்களை ஆங்கிலேயர்களை அடித்து விரட்டப் பாடுபட்ட மக்கள் தலைவன் தூந்தியாவாக் என்ற மாலிக் ஜஹான்சாவை கெப்பல் என்ற இடத்தில் பெரும்படையுடன் மோதிக்

கொன்றனர்.

இன்னும் சேது நாட்டின் வடபகுதியான சிவகங்கைச் சீமை பிரதானிகளான மருதுபாண்டிய மாவீரர்களை, **காளையார்கோவில்** கோட்டைப் போரில் தோற்கடித்ததுடன் அவர்களை கைது செய்து 24.10.1807ல் **திருப்பத்தூர் கோட்டையில்** தூக்கில் தொங்கவிட்டு வேடிக்கை பார்த்தனர். இந்த மகத்தான வீரர்களின் தியாகம் தொடர்ந்து வந்துள்ளது.

மறவர் சீமையின் மானங்காக்கப் புறப்பட்ட மக்களது இதயத்தில் இலங்கிய ராஜவிசுவாசத்தை - இணையற்ற போராயுதமாகக் கொண்டு கி.பி.1795க்கும் கி.பி.1802க்கும் இடைப்பட்ட எட்டு ஆண்டுகள் அல்லும் பகலும் கும்பெனியாரை சேது நாட்டின் புனித மண்ணில் இருந்து, கழனியில் இருந்து பறித்து எறியப்படும் களையைப் போல் தூக்கி எறிவதற்குப் பாடுபட்ட சேது நாட்டுச் சிங்கம் **சித்திரங்குடி மயிலப்பனுக்கும்** முடிவு வந்துற்றது.

சேதுபதி சீமையின் புதிய ஆளவந்தார்களான அந்நியர்கள் இப்பொழுது ஆறுதலாகப் பெரு மூச்சு விட்டிருப்பார்கள். இனிமேல் அவர்களை அவர்களது சொத்துக்களை அழிப்பதற்கு வேறு யாரும் இருக்கமாட்டார்கள் எனத் திண்ணமாக நம்பி இருப்பார்கள். இந்த நம்பிக்கை சுக்கு நூறாகச் சிதறடிக்கப்படும் என்பதை வரலாறு விரைவில் உணர்த்தும் என்பதும் உறுதி.

வாரணம் பொருத மார்பும், வரையெடுத்த தோளும், வாய்க்கப் பெற்ற இதிகாச புகழ் இராவணன் என்ன ஆனான். அவனது வழியில் தானே கம்சனும் இரணியனும் அழிந்து போனார்கள். சர்வ வல்லமையுள்ளவர்களாகத் தங்களைப் பிரகடனப்படுத்திக் கொண்ட ஆங்கிலக் கும்பெனியாரும் ஒரு நாள் அழிக்கப்படுவார்கள். அக்கிரமங்கள், அட்டுழியங்கள், அடக்குமுறைகள், மூலமாக இந்த நாட்டு பண்பாடு நாகரிகம், மரபு வழியிலான கைத்தொழில்கள்

அனைத்தையும் அழித்துச் சிதைத்து நாசமாக்கிய அடித்தளத்தில் தங்களது கொள்ளையான செல்வச் சுமைகளை அப்படியே விட்டு உயிர்தப்பினால் போதும் என அவர்கள் தங்களது நாட்டிற்கு விரைந்தோடும் நாள் வரத்தான் செய்யும்! கொடுமைகளையும், கொள்கைகளையும் அடக்குமுறைகளையும் எதிர்கொண்டு, துன்ப துயரங்களுக்கு ஆற்றாது அழுத அந்த அபலைகளின் கண்ணீர் பரங்கிகளது வெடிமருந்து ஆயுதங்களைவிட பெரும் சக்தி வாய்ந்தது அல்லவா!

தருமமும் தமிழும் தழைத்து வாழ ஆன்மீகமும் சமயப் பொறையும் நிலைத்திடச் செய்யும் சேது மன்னர்களது ஆட்சி, மீண்டும் இந்த புனித சேது மண்ணில் மலரத்தான் செய்யும்.

வண்டிச்சக்கரம் போன்ற வரலாற்றின் கால விளிம்புகள் மீண்டும், மீண்டும், மாறி, மாறி வந்துகொண்டே இருக்கும்.

நலிந்து சிதைந்த ஆசைகள். இடம்மாறி தடுமாறி விட்ட இலக்குகள், மனிதப் பிரயத்தனங்கள், விசுவரூபம் பெற்று மனிதகுலத்தின் சாதனைகளாக, மக்களது வேதனைகளை மறக்கச் செய்யும், மறுபிறவி பெறும் என்பது உறுதி.

"தருமத்தின் வாழ்வுதனைச் சூதுகவ்வும் தருமம் மறுபடியும் வெல்லும்" என்பது இயற்கை அல்லவா!

# 25. நிறைவு வரிகள்

அண்டம் குலுங்க சண்டைமாருதம் என வெடித்த முதுகளத்தூர் சீமை மக்கள் புரட்சி - இந்திய விடுதலை இயக்கத்திற்கே முன்னோடியாக வாய்த்த மக்கள் இயக்கம் - சிவகெங்கைச் சீமை **காளையார்கோவில்** கோட்டைப் போரின் பின்னடைவால் பாதிக்கப்பட்டு சிற்றெறும்பு விட்ட பெருமூச்சாய் சிதைந்து விட்டது.

மறவர் சீமையின் மக்கள் தலைவர்களான கமுதி சிங்கன் செட்டி, **பொட்டூர் மீனங்குடி கனகசபாபதி தேவர், ராஜசிங்கமங்கலம் ஜகந்நாத ஐயன், குமாரத்தேவன், திருக்கண்ணத் தேவன்** ஆகியோரது உடமைகளைப் பறித்து உயிர்களைக் குடித்த கும்பெனி ஓநாய்கள் இறுதியாக, **சித்திரங்குடி சேர்வைக்காரர்** என பாசத்துடன் அழைத்து வந்த மக்கள் தலைவனது உயிரையும் மாய்த்து, மறவர் சீமை விடுதலை இயக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

முந்தைய ஆண்டில் கும்பெனியாருடன் வீராவேசமாக மோதிய **மீனங்குடி கனகசபாபதி தேவர்** என்ற வீர இளைஞனைக் கொல்வதற்காக **அபிராமத்தில்**

நாட்டப்பெற்றுள்ள தூக்கு மரத்தில் மாபெரும் வீரத்தளபதி சித்திரங்குடி மயிலப்பன் சேர்வைக்காரர் என்று அழைக்கப்பட்ட பெரிய வெள்ளையத் தேவரையும் 06.08.1802ல்[106] தூக்கிலிட்டதுடன் மறவர் சீமையின் சுதந்திர மூச்சு நின்று விட்டது.

இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களது ஏகாதிபத்திய கொள்ளையருக்கு எதிராக மக்களைத் திரட்டி போராடிய மாபெரும் முதல் தளபதி சித்திரங்குடி மயிலப்பன் சேர்வைக்காரர் என்பதை நாடும், ஏடும் உணரச் செய்ய வேண்டியது நமது கடமை.

106. Military Consultation's vol 299B p 4557.

# வட்டார வழக்கச் சொற்கள் – விளக்கம்

**1. அமில்தார் :**

இது ஒரு பாரசீகச்சொல். ஆர்க்காட்டு நவாபின் தமிழக ஆட்சியில் அரசு அலுவலரைக் குறிக்கும் சொல். தாசில்தார் என்ற சொல்லின் பிரயோகம் போன்றது.

**2. ஆயக்கட்டு :**

இராமநாதபுரம் சீமையிலுள்ள கண்மாய்களின் உட்புறத்தில் அல்லது கண்மாய்க்கு வெளியே உள்ள கண்மாய் நீரினால் பாசனம் பெறும் நிலப்பகுதியின் பெயர். இது ஒரு பாரசீக மொழிச் சொல்லாகும்

**3. இராப்பிச்சை :**

பிச்சை எடுப்பவர்கள் பகல்நேரங்களில்தான் வீடு வீடாகச் சென்று பிச்சை கேட்பர். ஆனால் பகல்நேரங்களில் கிராமங்களில் உள்ள மக்கள் வயல் வரப்புகளில் பணிகளுக்குச் சென்றுவிடுவர். ஆதலால் கிராமங்களில் பிச்சை பெறுவதற்காக, பிச்சைக்காரர்கள் இரவில்தான் செல்வர். அவர்களை மக்கள் இராப்பிச்சை என அழைப்பர்..

**4. கச்சேரி:**

அயல்மொழிச்சொல், அரசு அலுவலகங்களைக் குறிப்பதாகும். யாழ்ப்பாணத்தில் ஒரு பகுதியைக் குறிப்பதற்கும். சாவகச் கச்சேரி என்று அழைக்கப் பெறுகிறது.

**5. கிட்டங்கி :**

வணிகர்கள் பயன்படுத்தும் சொல். வணிகப்பொருட்களின் சேமிப்பு கிடங்கினை குறிப்பதாகும். மண்டி, பேட்டை, என்ற சொற்களின் பொருளில் பயன்படுத்துவது. இதுவும் அயல்மொழிச்சொல்லாகும்.

**6. கிள்ளை இலை :**

இராமநாதபுரம் சீமை மறவர்களிடம் தொன்றுதொட்டு இருந்து வந்த வழக்கமாவது. மறவர்தலைவர் ஒருவர் எதிரியுடன் போர் செய்வதற்குமுடிவு செய்தவுடன் தமக்கு நெருங்கிய உறவினர்களுக்கும், தமது அதிகாரத்திற்கு உட்பட்ட நாட்டுத்தலைவர்களுக்கும் ஒரு கிள்ளை இலையில் கருவை மர முள்ளைக் கொண்டு குத்து, பிணைத்து அனுப்புவர் இது அவர்கள் போர் செய்வதற்கு புறப்பட்டு, வரவேண்டம் என்பதற்கான சங்கேதமாகும்.

**7. கெட்டா**

கெடா என்ற ஆங்கிலச் சொல்லின் மருஉ. யானைகள் மிகுதியாக உள்ள காடுகளில் அவைகளைப் பிடிப்பதற்காக பெரும் பள்ளங்களை அமைத்து, அதன்மீது உறுதியற்ற மரக்கிளைகளையும், கொண்டு அதன் மூடி வைப்பர். மிரண்டு ஓடும் யானைகள் அந்த பள்ளங்களில் விழுந்து சிக்கிக்கொள்ளும். பின்னர், அந்த காட்டு யானைகளை பழக்கப்பட்ட யானைகள் மூலம் பள்ளங்களிலிருந்து கயிற்றால் பிணித்து, வெளியே கொண்டு வருவர். யானைகளைப் பிடிக்கும் இந்த மறை கெட்டா என வழங்கப்படுகிறது.

**8. கையெழுத்து மறையும் நேரம் :**

கோடை காலத்தில் சூரியன் மறைந்து, இருள் பரவுவதற்கு முன்னர் உலகை கவி சூழ்ந்து கொள்ளும் மெல்லிய இருளினை குறிப்பதற்கு பயன்படுத்ததப்படும் சொல். அதாவது உள்ளங்களில் அமைந்துள்ள இயற்கையான கோட்டினை - ரேகையினை கண்டுகொள்ள முடியாத நேரம் இது.

**9. சக்கரம் :**

சேதுபதி மன்னர்களது ஆட்சியில் பொன்னாலான இந்த பணம் செலாவணியில் இருந்தது. இதன் வடிவம் வட்டமாக சக்கரம் என்று அழைத்து வந்தனர். திரவாங்கூர் மன்னரது ஆட்சியில் கேரளநாட்டில், சக்கரம் என்ற பெயரிலான சிறிய செப்புக் காசுகள் புழக்கத்தில் இருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

10. சம்பிரிதி :

சேதுபதி சீமையில் பணிபுரியும் நிர்வாக அலுவலரதுபெயர் பெரும்பாலும் பல கிராமங்களின் தொகுப்பான நிர்வாகத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலர் என்ற பணிக்கு இணையானது. இது ஒரு வடமொழிச் சொல்லாகும்

11. சுணக்கம்

காலங்கடந்து செயல்படுவதை தாமதம்என இப்பொழுது பயன்படுத்திவருகிறோம். ஆனால் இதற்கு நேரான நல்ல தமிழ்ச் சொல் சுணக்கம் என்பது ஆகும். இதன் வினைத் தொகை சுணங்குதல் ஆகும்.

12. சேகரம் பட்டறை :

இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களது ஆட்சியின் பொழுது, அரசு இறையாகக் குடிமக்களிடமிருந்து, பெறப்பட்ட தானியங்களை சேமித்து வைப்பதற்காக ஆங்காங்கே அமைக்கப்பட்ட, தானியங்களஞ்சியம் ஆகும். இது பெரும்பாலும் வைக்கோலினால் முரட்டுக் கயிராக திரிக்கப்பட்ட நீண்ட கயிற்றை வட்டவடிவில் ஒன்றின்மேல ஒன்றாக ஒரே மாதிரியாக அடுக்கப்பட்டு அதன் நடுப்பகுதியில் தானியங்களைக் கொட்டிச் சேமித்து வைக்கும் பட்டறைகளுக்கு இந்த பெயர் வழங்கப்பட்டது.

நடப்பு :

அன்றாட நடைமுறையை குறிக்கும் சொல்.

13. நிலம் தெளியும் நேரம் :

நாள் தோறும், கீழ்த்திசையில் ஆதவன்எழுவதற்கு முன்னர் ஏற்படும் ஒளிக் கலவையில் உலகை பற்றியிருந்த கார் இருள் விலகி அனைத்துப் பொருள்களையும், இனம் காணவும், நிலத்தில் உள்ளவைகளையும், உணரும் வகையில் ஏற்படும் வெளிச்சத்தை நிலம் தெளியும் காலமாக சேது நாட்டினர் குறிப்பிடுகின்றனர்.

14. பக்கோடா :

நமது நாட்டை ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியார் அடிமைப்படுத்தி அவர்களது நாடாக மாற்றிய பிறகு, அங்கே மக்களிடையே செலாவணியில் இருந்து வந்த முந்தைய மன்னர்களது ஆட்சியின் பொழுது இருந்த நாணயங்கள்

ஆகியவற்றை நீக்கிவிட்டு சென்னையில் உள்ள அவர்கள் நாணயச் சாலையில் தயாரிக்கப்பட்ட (Mint) பொன் நாணயத்தை செலாவணியில் ஈடுபடுத்தினர். இந்த நாணயத்தின் பெயர் பக்கோடா எனப்பட்டது. அன்றைய நாணய மதிப்பில் அந்த பணம் ரூபாய் மூன்றரைக்கு சமமாகக் கருதப்பட்டது. இந்தப் பணத்தின் ஒருபுறம் இந்து சமய கோவிலின் பகுதியான கோபுரம் அச்சடிக்கப்பட்டிருந்ததால், (Bagota) பக்கோடா பணம் எனவும் , மறுபுறம் நட்சத்திரத்தின் சின்னம் அச்சடிக்கப்பட்டிருந்ததால் ஸ்டார் பக்கோடா பணம் எனவும் வழங்கப்பட்டது.

**15. பேஷ்கார் :**

இது ஒரு பாரசீக மொழிச் சொல். இந்தச் சொல்லுக்கு இணையானதமிழ்ச்சொல் கண்காணிப்பாளர் என்பதாகும். ஆற்காடு நவாப்பின் ஆட்சிக் காலம் முதல் துமிழகத்தில் இந்தச் சொல் வழக்குப் பெற்றது என்றும் திருக்கோயில்களிலும், தர்ம சத்திரங்களிலும் இந்தச் சொல் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**16. மசண்டை :**

சூரிய அஸ்தமனத்தை முட்டி உலகை கவிந்துள்ள மெல்லிய வெளிச்சத்தை குறிப்பிடுவது. இதன் விரிவுதான் அந்தி மயங்கும் வேளை ஆகும்.

**17. மட்டம் :**

இளமை வயதினரைக் குறிக்கும் சொல் எடுத்துக்காடடாக வாலிப மட்டம் என்பதாகும்,

**18. மறியல் :**

அரச நிர்வாகத்தில் பயன்படுத்தப்படுத் சொல். குற்றம் இளைத்தவர்களை பிடித்துவந்து, விசாரணைக்காக காவலில் வைக்கப்படுவதை இந்த சொல் குறிக்கினிறது. ஆங்கிலச்சொல்லான Remand என்பதற்கு பொருத்தமான சொல்.

**19. மறமான்யம் :**

போரின் பொழுது அசாதாண துணிவுடனும், வீரத்துடனும், போரிட்டு, உயிர்த் துறந்தவர்களைப் போற்றும் வகையில் தமிழ் மன்னர்கள் அந்த வீரனின் குடும்பத்திற்கு வழங்கிய மான்யம் (உதவித்தொகை) மறமான்யம் என வழங்கப்பட்டது. இதனை உதிரப்பட்டி என்றும் சொல்லுவர். இத்தகைய அரசு விருது பெற்றவர்களின் வழியினருக்கு பிற்காலங்களில் ஊர்மக்கள் மதிப்பும் மரியாதையும் அளிப்பது வழக்கமாக இருந்தது.

**20. மிட்டாதார் :**

இதுவும் பாரசீக மொழிச்சொல். ஒரு குறிப்பிட்ட பகுதியின் பொறுப்பில் உள்ளவரை குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. மிராசுதார், நிலான்தார், ஜமீன்தார் போன்ற சொற்களைப் போன்று ஆர்க்காடு நவாப்பின் நிர்வாகத்தில் வழக்குப் பெற்றதாகும்.

**21. தேஷாந்திரி :**


வைணவ சமய சம்பிரதாயப்படி தேசங்கள் என்பது வைணவர்களுக்கே உரிய சிறந்த தலங்களைக் குறிப்பிடுவது ஆகும். குறிப்பாக வடக்கே உள்ள பதரி ஆஸ்ரமத்திலிருந்து தெற்கே வேணாநாடு என்று அழைக்கப்பட்ட திருவனந்தபுரம் வரையான 108 திருப்பதிகளில் ஒன்றைக் குறிப்பதாகும். தேஷாந்திரி என்ற வட சொல்லுக்கு இந்த திருத்தலங்ளுக்கெல்லாம் சென்று வருகின்ற பரம வைணவர் என்பது பொருள். கி.பி.11-ஆம் நூற்றாண்டில் திருப்புல்லாணியில் இருந்த திருப்புல்லாணி தாவிர் என்ற தேஷாந்திரி வடக்கே திருவேங்கடம் சென்று திருப்பதி பெருமானது ஆலயத்தின் மகா மண்டபத்தை திருப்பணி செய்தார் என்று அங்குள்ள கல்வெட்டு தெரிவிப்பதும், அதே தேஷாந்திரி தெற்கேயுள்ள திருநெல்வேலிச்சீமை ராஜேந்திர விண்ணகத்தில் உள்ள கனவிக்கு இனிய பெருமாளது திருக்கோயிலைத் திருப்பணி செய்திருப்பதையும், கல்வெட்டுக்களில் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## இந்த நூலின் வரைவிற்கு ஆதாரமாக அமைந்த நூல்களும், ஆவணங்களும்


1. குருகுகதாச பிள்ளை - திருநெல்வேலிச்சீமை சரித்திரம் (1932).
2. Rajaram Rao. T - Manual of Ramnad Samashthanam (1891).
3. Nelson. A - Manual of Madura Country (1861).
4. Francis. A - Gazetteer Madura (1909).
5. Rajayyan. Dr.K. - History of Madurai (1974).
6. pate . H.R - Gazetteer of Tinnalveli (1917).
7. Ramasamy. A - Gazetteer of Ramanathapuram (1862).
8. Kathirvelu. Dr.S - The Maravas (1972).
9. Eswari Prasad - History of Medeival India
10. Sathianathaiyer - History of Madura Nayakas - 1927.
11. Major. Vibart - History of Madras Military Engineers.
12. Col - Welsh - Military Reminiscenes - Vol II (1868).


### Records of Tamil Nadu Archives, Chennai


1. Madura District, Record - Vol.No - 1139, 1133, 1128, 1140, 1178(A) 1219, 1142, 1138, 1221, 1131, 1182, 1157.
2. Military Consultations - Vol - No - 74, 288 (A), 286, 285A, 284, 289, 1801.
4. Ramnad Collectorate -Vol - 95 A, 89, 98.
5. Madras Country Correspondence - Vol -21
6. Tinnelveli District Record - Vol - No. 357, 3579.
7. Revenue Consultations - Vol -26.
8. Revenue Sundries - Vol -26.




## கமுதிக்கோட்டை

சேதுநாட்டின் வலிமைமிக்க அரணாகிய இந்தக்கோட்டை கி.பி.18ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரெஞ்நாட்டு பொறியாளர்களது திட்டப்படி கட்டப்பட்டவை. மூன்று சுற்று மதில்களைக் கொண்ட இந்த கோட்டையின் தரைப்படத்தை (Ground Plane) ஆங்கிலத் தளபதி ஜார்ஜ் வெல்ஜ் என்பவர் கி.பி.1801ல் வரைந்து வெளியிட்டதின் பதிப்பு இந்தப் படம்.இதில் குறிக்கப்பட்டுள்ள அளவுகள் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறை பொறியாளர் திரு. நாராயணன் அவர்களால் அளவீடு செய்து குறிக்கப்பட்டவையாகும்.

# இணைப்பு - I

அந்நிய ஏகாதிபத்திய எதிர்ப்பு வேள்வியில் தங்களை காணிக்கையாகத் தந்த தியாகிகள் - பட்டியல் :-

| எண் | பெயர் | புகழுடம்பு பெற்ற இடம் | நாள் |
|---|---|---|---|
| 1. | சிங்கன் செட்டி | பழமானேரி | 10.08.1799 |
| 2. | முதுகளத்தூர்,கமுதி. நாட்டு சேர்வைக் காரர்கள் பெயர் அறியத் தக்கன அல்ல | கீழ்க்குளம் | 10.06.1799 |
| 3. | பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர் வீர பாண்டிய கட்டபொம்மு நாயக்கர் | கயத்தாறு | 16.10.1799 |
| 4. | மேற்படியாரது பிரதானி சுப்பிரமணியபிள்ளை | நாகலாபுரம் (கடைவீதிகணேசர் கோயில்பக்கமுள்ள வேப்பமரத்தில் தூக்கு) | |
| 5. | வீரபாண்டிய கட்ட பொம்மு நாயக்கரது சகோதரர் சவுந்திர பாண்டிய நாயக்கர் | பள்ளிமடம் கோபாலபுரத்தில் | - |
| 5-A | ஷேக் இபுறாஹிம் சாகிப் | கமுதி | 1801 |
| 6. | காடல்குடி பாளையக்காரர் கீர்த்தி வீர குஞ்சு நாயக்கர் | திருப்பத்தூர் கண்டிரமாணிக்கம் | 07.10.1801 |
| 7. | பாளையங்கோட்டை சிறையில் இருந்து தப்பி ஓடிய மாரிகுப்பன் | ஊத்துமலை | 19.02.1801 |

| எண் | பெயர் | புகழுடம்பு பெற்ற இடம் | நாள் |
|---|---|---|---|
| 8. | சிவகங்கை சீமை பிரதானி பெரியமருது பாண்டியர் | திருப்புத்தூர் கோட்டை | 24.10.1801 |
| 9. | சிவகங்கை சீமை பிரமானி சின்ன மருது பாண்டியர் | திருப்புத்தூர் கோட்டை | 24.10.1801 |
| 10. | மேற்படியார் மகன் சிவத்த தம்பி | காளையார்கோவில் | 15.20.1801 |
| 11. | மேற்படியாரது மகன் முத்துச்சாமி | - | - |
| 12. | மீனங்குடி முத்துக்கருப்பத் தேவரது தம்பிகனகசபாபதி தேவர் | அபிராமம் | 16.10.1801 |
| 13. | கள்ளர் தலைவர் சும்மணப்பட்டி (மேலூர் வட்டம்) சேதுபதி | சும்மணப்பட்டி | 17.10.1801 |
| 14. | மேலூர் வட்ட சேடபட்டி மணியக்காரர் (பெயர் தெரியவில்லை) | சேடப்பட்டி | 1.11.1801 |
| 15. | மேற்படியாரது மகன்(பெயர் தெரியவில்லை) | - | - |
| 16. | கோபாலமணியக்காரர் | நத்தம் | 2.11.1801 |
| 17. | வெங்கடாசலம் | நத்தம் | 2.11.1801 |
| 18. | வெள்ளைமருது சேர்வைக்காரர் மகன் உடையணன் | திருச்சுழியல் கோட்டை | 16.11.1801 |

| எண் | பெயர் | புகமுடம்பு பெற்ற இடம் | நாள் |
|---|---|---|---|
| 19. | சின்ன மருது சேர்வைக்காரர் மகன் சிவஞானம் | கமுதிக்கோட்டை | 16.11.1801 |
| 20. | வீரபாண்டிய கட்ட பொம்மு நாயக்கரது சகோதரர் ஊமைத்துரை என்ற குமாரசாமி | பாஞ்சாலங்குறிச்சி | 16.11.1801 |
| 21. | மேற்படியாரது சகோதரர் சிவத்தையா நாயக்கர் | - | - |
| 22. | விருப்பாட்சி பாளையக்காரர் | பழனி | 03.04.1801 |
| 23. | முதுகளத்தூர் கிளர்ச்சித் தலைவர் முத்தக்கருப்ப பிள்ளை | பாளையங்கோட்டை | - |
| 24. | பாண்டியன் பிள்ளை | உரளிக்கோட்டை | - |
| 25. | சருகனி சவரிமுத்து பிள்ளை | சருகனி | - |
| 26. | சாக்கோட்டை வீரப்பன் | சாக்கோட்டை | - |
| 27. | ராஜசிங்கமங்களம் குமாரத்தேவன் | - | - |
| 28. | ஜகந்நாத ஐயன் | பினாங் | |
| 29. | வாராப்பூர் பாளையக்காரர்பொம்மை நாயக்கர் | - | - |

| எண் | பெயர் | புகழுடம்பு பெற்ற இடம் | நாள் |
|---|---|---|---|
| 30. | சித்திரங்குடி மயிலப்பன் சேர்வைக்காரர் | அபிராமம் | 6.08.1802 |
| 31. | அறந்தாங்கி நாடிமுத்து நாயக்கர் | அறந்தாங்கி | - |
| 32. | மீனங்குடி முத்துக்கருப்பத் தேவர் | இராமநாதபுரம் | - |
| 33. | சங்கரப்பதி மணவாள நாயக்கர் | சங்கரப்பதிகோட்டை | - |
| 34. | கீழவளைவு ஆண்டன் | கீழவளைவு | 06.11.1801 |
| 35. | திருப்பூவணத்தில் தளபதி | திருப்பூவணம் | 01.06.1801 |
| 36. | தளபதி அக்னியூவின் சேணையை | திருப்பாச்சேத்தி | 08.06.1801 |
| 37. | தளபதி மேயர் தலைமையில் பரங்கிகள் நடத்திய போரில் வாரூர் அருகே தியாகியானவர்கள் | வாரூர் | 7.08.1801 |
| 38. | கமுதிக்கோட்டைப்போரில் தளபதி மில்லரையும்-அவரது அணியில் இருந்த எட்டையபுரம் கூலிகளையும் எதிர்த்துப் போராடித் தியாகிகள் ஆனவர்கள் | கமுதிஅருகில் | |
| 39. | மேற்படி போரைத் தொடர்ந்து நடந்த சண்டையில் பலியான தியாகிகள் (சேர்வைக்காரர் எழுவர்) பெயர் தெரியவில்லை அபிராமம் செல்லும் வழியில் நானூறு பேர். | அபிராமம் அருகில் | 27.08.1801 |

## இணைப்பு - II

இந்திய விடுதலை இயக்கத்தின் முன்னோடியான மறவர் சீமையின் மக்கள் கிளர்ச்சியில் ஆங்கிலேயரை எதிர்த்து போரிட்டு விழுப்புண் பட்டு மடிந்த வீரர்களின் போர்க்களங்களின் பட்டியல். (கி.பி.1799 - கி.பி.1801)

1. முதுகளத்தூர்
2. அபிராமம்
3. கமுதி
4. கிடாத்திருக்கை
5. கடம்போடை
6. குமாரக்குறிச்சி
7. கமுதிக்கோட்டை
8. ஆப்பனூர்
9. கீழக்குளம் காடு
10. பரளாட்சி
11. பெருநாழி
12. குண்டுகுளம்
13. கரிசல்குளம்
14. தமிழ்பாடி
15. திருச்சுழியல்
16. உடையார்பட்டி
17. பெருங்கரை
18. கொடுமலூர்
19. தெளிச்சாத்தநல்லூர்
20. சாலைக்கிராமம்
21. நெட்டூர்
22. ஆனந்தூர்
23. வீரசோழன்

## இணைப்பு - III

இந்திய விடுதலை இயக்கத்தின் முன்னோடியான மறவர் சீமையின் மக்கள் கிளர்ச்சியில் அணிதிரட்டுவதற்காக சித்திரங்குடி மயிலப்பன் சேர்வைக்காரர் சென்று வந்த ஊர்கள் :

**திருநெல்வேலி சீமை :**

1.பாஞ்சாலங்குறிச்சி 2. காடல்குடி 3.குளத்தூர்
4.வேம்பாறு 5.கழுமுடி 6.மேலமாந்தை.

**இராமநாதபுரம் சீமை :**

1.ஆ.புதுக்குளம் 2.சாயல்குடி 3.முதுகளத்தூர் 4.கீரனூர் 5.அபிராமம் 6.கமுதிப்பேட்டை 7.வெள்ளக்குளம் 8. திருச்சுழியல் 9.பள்ளிமடம் 10.இளஞ்செம்பூர் 11. கடலாடி 12.பிள்ளையார்குளம் 13.வில்லார்குளம் 14. மண்டலமாணிக்கம் 15.கடுகுசந்தை 16.சிக்கல் 17.பெருங்கரை 18. கொடுமலூர் 19.வீரசோழன் 20. புதுக்குடி 21.தெளிச்சாத்தநல்லூர் 22.செட்டிக்கோட்டை 23.சாலைக்கிராமம் 24.ஆனந்தூர் 25.புளியால் 26.பார்த்திபனூர் 27.தொண்டி 28.கொக்கூரணி 29.வேம்பாறு.

**சிவகங்கைச்சீமை :**

1.நெட்டூர் 2.சூடியூர் 3.சாலைக்கிராமம் 4.கட்டானூர்
5. காளையார்கோவில்.

இணைப்பு - IV

## இந்நூலில் இடம் பெற்றுள்ள, பெயர்ச் சொற்களின்பட்டியல். (ஆய்வாளர்களுக்கு பயன்படுவதற்காக).

### அ


அஞ்சுக்கோட்டை - 77, 79.
அபிராமம் - 10, 11, 14, 27, 33, 57, 58, 59, 63, 104, 105, 123, 174, 175, 181, 182, 186, 190, 192, 201, 205.
அபிராமி - 163
அரண்மனை சிறுவயல் - 111, 131, 135, 136, 139, 154.
அருப்புக்கோட்டை - 29
அப்துல் கனி சேர்வைக்காரர் - 94.
அறந்தாங்கி - 108.
அறுநூத்தி மங்கலம் - 77, 79, 82, 83.
அய்யாவையன் - 150
அல்லூர் நல்லந்துவனார் - 15
அழகாபுரி - 126
அய்யாவுத் தேவன் - 62
அளற்று நாடு - 26.
அனுமந்தகுடி - 110.
அன்வர்தீன் கான் - 16.


### ஆ


ஆப்பனூர் நாடு - 9, 14, 26, 27, 30, 35, 36, 104, 116, 118, 165, 166, 178.
ஆராய்ச்சி - 93.
ஆறாயிரம் பிள்ளை - 175, 182.
ஆறுமுகம் கோட்டை - 143.
ஆற்காட்டு நவாப் - 52, 53, 77, 128, 165, 187.
ஆர்த்திதேவன் - 176, 182.
ஆனந்தூர் - 75, 190, 192.
ஆளஞ்சாத்தேவர் - 56, 190.
ஆழ்வார் திருநகரி - 55, 147.
ஆனையூர் - 42.

**இ**

இராமநாதபுரம் சீமை - 12, 13, 15, 28, 29, 31, 33, 37, 45, 48, 52, 55, 57, 60, 69, 71, 74, 77, 79, 81, 82, 83, 84, 97, 100, 102, 104, 105, 106, 107, 112, 119, 120, 123, 129, 137, 139, 142, 144, 147, 149, 152, 153, 156, 159, 161, 169, 171, 177, 183, 185, 190, 191, 195, 201.
இராமநாதசுவாமி - 26.
இராமலிங்க விலாசம் - 23, 52, 168, 200.
இராமேஸ்வரம் - 2, 15, 88.
இராமானுஜர் - 78, 188.
இராஜசிங்க மங்கலம் - 73, 74, 75, 76, 77, 78, 79, 80, 82, 83.
இலட்சுமண நாயக்கர் - 151.
இபுராகிம் சாகிபு - 151.
இபுராகிம் சம்பூர் - 43.
இலங்கை - 55.
இளையான்குடி - 126.

**உ**

உக்கிரப்பெருவழுதி - 46.
உடையண்ணன் - 57, 189.
உலகனோடை - 42.
உடையார்பட்டி - 104, 119.
உப்பூரி குடிக்கிழார் - 15.
உம்தத்துல் உம்ரா - 19.
உடையாத் தேவர் - 19, 154.
உருவாட்டிக்கோட்டை - 143.
உளக்குடி - 117.

**ஊ**

ஊமைக்குமாரசாமி - 50, 54, 56, 96, 139.
ஊமைத்துரை - 55, 60, 68, 100.

**எ**

எட்டையாபுரம் - 18, 28, 30, 31, 50, 61, 70, 98, 111.
எட்டப்பன் - 120, 123, 140.

ஏ

ஏசுபிரான் - 84.
ஏழாயிரம் பண்ணை - 49, 50.

ஐ

ஐசக் பிள்ளை - 92, 93.

க

கங்கை கொண்டான் - 147.
கட்டனூர் - 65, 67.
கட்ட பொம்மு நாயக்கர் - 18, 50, 56, 69, 98, 100, 141, 189, 190.
கட்டையன் சேர்வைக்காரர்- 85, 140.
கள்ளக்குளம் - 42.
கமுதி - 11, 12, 14, 27, 30, 31, 35, 36, 37, 39, 41, 42, 44, 49, 51, 57, 58, 62, 69, 70, 71, 81, 84, 96, 102, 104, 103, 119, 120, 121, 122, 123, 126, 137, 138, 143, 168, 171, 174, 185, 186, 187.
கமுதை நாடு - 26, 33.
களக்காடு - 147.
கழுமுடி - 57.
கடலாடி - 43, 76, 116, 183.
கண்டிரா மாணிக்கம் - 154.
கரிசல் குளம் - 70.
கனகசபாபதித் தேவர் - 76, 205.
கருநீலக்குடி - 26.
கல்கத்தா - 22.
கயத்தாறு - 54, 55,70, 197.
கன்னிராஜபுரம் - 94.
கலெக்டர் பவுனி, ஜாக்சன் - 6, 23.
கலெக்டர் லூஸிங்டன் - 28, 32, 33, 35, 37, 49, 60, 64, 65, 66, 80, 106, 149, 171, 172.
காதர் மீரான் அம்பலன் - 58, 182,
காடல்குடி - 28, 43, 44, 50, 57, 62, 69, 102, 119, 154, 179, 188, 190.
காக்கூர் - 39, 188.

காட்டுப்பரமக்குடி - 72.
காளாப்பூர் - 50, 197.
காமன் கோட்டை - 33, 105, 143.
காட்டாறு - 161.
காயல்பட்டினம் - 92.
காளையார் கோவில் - 2, 44, 67, 97, 103, 111, 126, 127, 129, 130, 131, 132, 134, 135, 136, 142, 143, 151, 153, 156, 192, 197, 203, 205.
கான்சாகிப் - 18, 127, 141, 202.
கிடாத்திருக்கை - 26, 35.
கிடாரிப்பட்டி - 110.
கிருதுமால் - 58.
கீர்த்தி வீர குஞ்சு நாயக்கர் - 154.
கீரனூர் - 11, 126.
கீழக்கரை - 28.
கீழ்குளம் - 39, 41, 42, 49, 51, 87, 187.
கீழ்வளவு - 110.
குண்டு குளம் - 11, 42, 70.
குதிரை மொழிக்காடு - 139.
குத்தகை நாடு - 79, 81.
குமாரக்குறிச்சி - 35, 36, 40, 42.
குமாரத்தேவர் - 78, 79, 82, 205.
குமாரசாமி - 157, 177.
குளச்சல் - 16.
குளத்தூர் - 49, 50, 62, 119.
குலோத்துங்கன் - 47.
குனிய முத்தூர் - 110.
குண்டாறு - 37.
கேப்டன் ஓஹாடிராட்டர் - 171.
கொடுமலூர் - 59, 177, 178, 190.
கொல்லங்குடி - 126, 131, 134,
கொண்டிசேரி - 176.
கொக்கூரணி - 74.
கோட்டைப்பட்டினம் - 20.
கோலார்பட்டி - 49, 50.

கோபாலபுரம் - 29.
கோபால மணியக்காரர் - 151.
கோபால் - 151.

ச

சந்திரன் சேர்வைக்காரர் - 151.
சவுந்திர பாணிடியன் - 54.
சங்கர நயினார் கோவில் - 54, 147.
சந்தா சாசிப் - 122.
சத்திரப்பட்டி - 152.
சாயல்குடி - 60, 62, 116, 138, 139, 149,
சாலைக்கிராமம் - 73, 74, 75.
சிங்கன் செட்டி - 30, 36, 39, 41, 45, 51, 178, 186, 188, 205.
சித்திரங்குடி சேர்வைக்காரர்- 3, 24, 25, 26,27, 30, 35, 36, 37, 38, 39, 41, 42, 43, 45, 46, 47, 48, 49, 51, 52, 56, 57, 58, 59, 60, 63, 64, 69, 70, 71, 72, 76, 88, 90, 91, 93, 94, 96, 97, 102, 104, 112, 116, 117, 118, 119, 137, 149, 157, 165, 170, 193.
சின்ன மருது சேர்வைக்காரர் - 39, 42, 58, 59, 66, 68, 96, 102, 103, 127, 129, 134, 154, 191, 192.
சிவகங்கை உடையாத் தேவர் - 67.
சிவகாமி நாச்சியார் - 168.
சிவகங்கை - 39, 41, 42, 44, 47, 48, 49, 50, 53, 56, 57, 58, 60, 62, 64, 65, 68, 71, 84, 96, 97, 99, 106, 107, 109, 110, 112, 126, 127, 128, 139, 142, 144, 150, 152, 156, 159, 175, 188.
சிவகிரி - 18.
சிற்றூர் - 47.
சிவத்தையா - 54, 55, 56, 60.
சிவத்தத் தம்பி - 56, 57, 189, 190.
சீரங்கப்பட்டிணம் - 99.
சீரங்கம் - - 112, 202.
சுராஜ் உத்தெளலா - 141.
சுந்தரபாண்டியன் பட்டிணம் - 44.
சுப்பையா - 71.
சுப்ரமணியப்பிள்ளை - 54, 179.

சும்மணப்பட்டி - 151.
சுப்பன்செட்டி - 177.
சூடியூர் - 48, 136, 138, 189.
சூரங்குடி - 89, 90.
செங்குடி - 74.
செஞ்சி - 16.
செம்பி - 2.
செவ்வல்பட்டி - 90, 91.
செவ்வல்காடு - 62.
சேது அணை - 1.
சேடப்பட்டி - 151.
சோழபுரம் - 126, 134.

## த

தம்மனப்பட்டி - 126, 134.
தட்டப்பட்டி - 151.
தஞ்சை - 1, 16, 141, 152.
தமிழ்பாடி - 104, 119.
தவசிக் குறிச்சி - 123.
தவசித் தேவா - 166, 167.
தளபதி ஹெரான - 18.
தளபதி மக்காலே - 121.
தளபதி டிக்பர்ன் - 31, 33, 34, 35.
தளபதி கிரிம்ஸ் - 14.
தளபதி கிரிப்ஸின் - 36.
தளபதிஹெப்பர்டின் - 106.
தளபதிகரோலின் - 110.
தளபதி இன்னிங்ஸ் - 110.
தளபதி ஹெப்போர்டு - 119, 148, 174.
தளபதி அச்சய்யா - 122.
தளபதி மில்லர் - 64, 70, 71, 72, 73, 74, 75, 80, 82, 83, 102, 123, 184, 185.
தளபதி வெல்ஷ் - 100.
தளபதி கோவலஸீம் - 171.
தளபதி தூந்தியாவாக் - 50.

தளபதி கிரகாம் - 106.
தளபதி பர்ரோஷ் - 195, 196, 171.
தளபதி நோயில்ஸ் - 196.
தளபதி லாரன்ஸ் - 18.
தளபதி ஹெரான் - 18.
தாமோதரன் பிள்ளை - 20.
தாயமங்கலம் - 133.
தாராபுரம் - 147, 150.
திருப்பாச்சேத்தி - 106, 107.
திருவாடானை - 2, 67, 77, 83.
திருக்கண்ணத் தேவர் - 78, 79, 82.
திருக்கோஷ்டியூர் - 2, 78.
திருப்புத்தூர் - 2, 111, 139, 143, 197, 203.
திருச்சுழியல் - 2, 12, 44, 70, 103, 104, 106, 119, 120, 159
திரு உத்தர கோசமங்கை - 2.
திருச்சி - 2, 13, 21, 23, 24, 28, 33, 77, 112, 153, 158, 168, 170.
தில்லி சுல்த்தான் - 1, 15.
திருப்புல்லாணி - 21.
திருநெல்வேலி - 53, 142, 144, 170, 197.
திப்பு சுல்த்தான் - 99, 141.
திருப்புல்லணை - 2.
திண்டுக்கல் - 4, 48, 108,அ128, 142, 147, 151.
துல்காஜி - 122.
தூத்துக்குடி - 98.
தெளிச்சாத்த நல்லூர் - 73, 73.
தொண்டி - 44, 83, 97.
தொண்டைமான் - 16, 19, 50, 53, 54, 107, 140, 141
தோப்பிலாக்கரை - 158.

ந

நண்டு கதிர் நாயக்கர் - 151.
நரிக்குடி - 159, 160.
நத்தம் - 147, 151.
நல்ல முத்துப் பிள்ளை - 74.
நஞ்சையன் - 152.

நல்லப்ப கவுண்டர் - 152.
நாகலாபுரம் - 28, 29, 30, 49, 50, 62, 69, 71, 120.
நாட்டரசன் கோட்டை - 2.
நாகராஜ் மணியக்காரர் - 189.
நயினார் கோவில் - 74, 117, 137.
நாராயணபுரம் - 37.
நாலுகோட்டை - 108.
நெட்டூர் - 44. 47, 48, 49, 74, 188, 189.
நெல்லை - 48, 128, 156.
நெல்லூர் - 16, 28.

ப

பரமக்குடி - 71, 73, 74, 117.
பரத்தவயல் - 74.
பரளாச்சி - 70, 116, 158.
பருத்திக்குடிக்காடு - 26.
பசும்பூண்பாண்டியன் - 46.
பழையன் கோட்டை - 53.
பண்டாரத் தேவன் - 43.
பள்ளிமடம் - 11, 27, 30, 35, 70, 116, 121, 158.
படமாத்தூர் ஒய்யாத்தேவர் - 108.
பழனி - 147, 149, 150, 151, 152.
பழமானேரி - 104, 120.
பந்தல் குடிக் கோட்டை - 143.
பதினான்காம் லூயி - 7.
பாஞ்சாலக் குறிச்சி - 53, 54, 55, 56, 57, 61, 62, 67, 68, 69, 71, 79, 84, 88, 96, 98, 97, 101, 102, 107, 110, 139, 147, 175, 189, 190.
பாண்டுகுடி - 77, 79.
பாம்பூர் நாயக்கர் - 67.
பாப்பான் குளம் - 11, 42, 69, 116, 150, 192.
பாண்டியூர் - 1, 69.
பார்த்திபனூர் - 44, 117.
பாளையங்கோட்டை - 37, 50, 53, 54, 55, 60, 69, 80, 139, 171, 173, 184.
பிச்சண்ணன் - 56, 190.
பிசிராந்தையார் - 15.

பிரான்மலை - 111, 143.
பிரம்ம தேசம் - 147.
பிள்ளையார் குளம் - 43, 188.
பினாங்க - 156.
பீட்டர் - 192.
புதுக்குடி - 190.
புலியடிதர்மம் - 129.
புளியால் - 191.
பூத்தமல்லி - 50.
பூலித்தேவன் - 18.
பூர்ணய்யா - 141.
பெரிய குளம் - 147.
பெரிய மருது - 47, 48, 49, 56, 57, 62, 96, 129, 134, 179.
பெருநாழி - 29, 70, 116, 158.
பெத்தனேந்தல் - 116.
பெருங்கரை - 104, 178.
பெரிய உடையாத் தேவர் - 154, 157.
பெரிய வெள்ளையத் தேவர் - 206.
பேரையூர் - 11, 14, 27, 42, 91, 93, 94, 116.
பொம்மக்க கவுண்டர் - 151.
பொம்மைய நாயக்கர் - 157.
பொலியூர் நாடு - 26.
பொன் ஆத்தாள் - 88, 89.
போகலூர் - 118.
போர்த்துக்கீசியர் - 92.

ம

மங்கம்மாள் - 122.
மங்களேஸ்வரி நாச்சியார் - 77.
மயிலப்பன் - 13, 14, 44, 59, 60, 61, 62, 64, 65, 66, 67, 68, 71, 72, 73, 74, 75, 91, 92, 93, 94, 95, 126, 127, 130, 129, 131, 132, 136, 140, 143, 158, 159, 167, 168, 173, 179.
மறமான்யம் - 138.
மதுரை - 16, 147, 151, 156, 170, 202.
மண்டல மாணிக்கம் - 44, 62, 71, 116, 188.

மணலூர் - 162, 161, 177, 178.
மணியாச்சி - 50.
மறவர்மங்கலம் - 50.
மரக்காணன - 178, 180.
மாங்குடி மருதனார் - 15.
மாபூஸ்கான - 17.
மாவலி வானரிதிராயர் - 1, 15.
மானாமதுரை - 143.
மீர் காசிம் - 141.
மீனங்குடி - 76, 77, 78, 79, 192.
முகம்மது அலி - 2, 13, 17, 18, 19, 20.
முதுகளத்தூர் - 5, 9, 11, 12, 13, 14, 26, 27, 28, 29, 31, 32, 33, 35, 37, 39, 40, 41, 42, 43, 48, 59, 69, 78, 80, 82, 84, 96, 99, 102, 103, 104, 112, 117, 118, 119, 138, 161, 171, 174, 179, 180, 183, 184, 185, 189, 201.
முத்து இருளப்ப சேர்வைக்காரர் - 118.
முத்து ராமலிங்க சேதுபதி - 3, 20, 21, 23, 36, 74, 77, 80, 153, 158, 165, 168, 197, 199.
முஷ்டக்குறிச்சிக் கோட்டை - 143.
மூன்றாவது ஜார்ஸ் - 7.
முதலியார் மடம் - 57.
முத்துக் கருப்ப பிள்ளை - 30, 36, 43, 69.
முத்தையா பிள்ளை - 178.
முத்தூர் - 131, 134, 191.
முதல் நாடுகோட்டை - 143.
முத்துக் கருப்பத் தேவர் - 76, 77, 78, 79, 84, 112, 120, 129, 137, 139, 143, 149, 191, 192, 201.
முத்துச்சாமி அம்பலம் - 183, 184.
மேலமாந்தை - 50, 57, 62.
மேலூர் - 108, 110.

ர

ரகுநாத கிழவன் சேதுபதி - 77, 80, 141.
ராமசாமி நாயக்கர் - 90, 91.
ராணி மீனாட்சி - 17.

ராம்ராஜ் - 152.
ராமுக் கோனார் - 160.
ராஜேஸ்வரி நாச்சியார் - 168.
ரெங்கசாமி நாயக்கர் - 184.

வ

வத்தலக் குண்டு - 147.
வடதலை செம்பி நாடு - 26.
வரகுண பாண்டியன் - 73.
வன்னியத் தேவன் - 82, 119.
வட்டமங்கலம் - 67.
வரகுணவளநாடு - 83.
வயிரவன் சேர்வைக்காரர் - 152.
விக்ரம பாண்டியன் - 47.
வில்லார் குளம் - 48.
விருப்பாட்சி பாளையக்காரர் - 108.
வில்லியம் பிளாக்பர்ன் - 110.
வீர பாண்டியன் - 47, 53, 202.
வீரக்காளை - 88.
வீர சோழன் - 33.
வெங்கடாச்சலம் பிள்ளை - 151, 18
வெள்ளைக் கவுண்டர் - 151.
வெள்ளை மருது - 189, 191.
வெள்ளாங் குண்டு - 44, 45, 88, 189.
வெள்ளக் கோயில் - 188.
வெள்ளாங்குளம் - 30, 31, 51.
வெண்பா நாடு - 26.
வேம்பாறு - 92, 91.
வேடசந்தூர் - 147.
வேம்புநாடு - 26.
வேங்கை மார்பன் - 46.

ஜ

ஜெகநாதஐயன் - 78, 79, 82, 157.
ஜுல்பிகார் அலிகான் - 16.
ஜோசப் சுமித் - 19.



# Dr. S.M. கமால்

21 - ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம் - 623 501.

பிறந்த நாள் : 15-10-1928

பெற்றோர்: ஷேக்ஹூசைன் - காதர் அம்மாள்

B.A.; அமெரிக்கா தக்சான் பல்கலைக்கழகத்தின் "டாக்டர் பட்டம்"

இராமநாதபுரம் தமிழ்ச் சங்க நிறுவனர். 30 ஆண்டுகளாக பல இலக்கிய வரலாற்றுக் கருத்தாய்வரங்கங்களை நடத்தியவர்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் மற்றும் 12 இலக்கிய, வரலாற்று அமைப்புகளின் செயற்குழு, பொதுக்குழு மாநிலக் குழுக்களின் ஆயுள் உறுப்பினர்.

## நூலாசிரியர்

1. இராமநாதபுரம் மாவட்ட வரலாற்றுக் குறிப்புகள் (1984)
★ 2. விடுதலைப் போரில் சேதுபதி மன்னர் (1987)
★ 3. மாவீரர் மருது பாண்டியர் (1987)
4. முஸ்லீம்களும் தமிழகமும் (1990) - (சென்னை சீதக்காதி அறக்கட்டளை பரிசு)
5. மன்னர் பாஸ்கர சேதுபதி (1992)
★ 6. சேதுபதி மன்னர் செப்பேடுகள் (1994)
★ 7. சேதுபதியின் காதலி (1996)
★ தமிழக அரசின் பரிசும், பாராட்டும் பெற்ற நூல்கள்
8. சீர்மிகு சிவகங்கைச் சீமை (1997)
9. சேதுபதி மன்னரும் ராஜ நர்த்தகியும் (1998)
10. திறமையின் திரு உருவம் ராஜா தினகர் (1999)
11. செந்தமிழ் வள்ளல் சீதக்காதி (2000)

## பெற்ற விருதுகள்

"இமாம் சதக்கத்துல்லா அப்பா விருது - தமிழ்ப் பணிச்செம்மல்" - "சேது நாட்டு வரலாற்றுச் செம்மல் விருது - பாஸ்கர சேதுபதி விருது" - "சேவா ரத்னா விருது - தமிழ் மாமணி விருது" - "தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க விருது - வள்ளல் சீதக்காதி விருது" - "பசும்பொன் விருது"